T. 1179.

# INTRODUCTION.

Thousands of years ago, when the light of civilisation and culture had not as yet shed its lustre on the peoples of the West, when even Greek art and education were but in their infancy there was founded in Madura, in Southern India, a great society for fostering literature and poetry, which was in its scope and aims something akin to the French academy, founded in the seventeenth century by Cardinal Richdieu, the all powerful minister of Louis XIV of France. This society has been called, by later Tamil historians and writers as the 'First Tamil Sangam' to distinguish it from the two that followed. These three Sangams, which formed a 'Literary Tribunal,' a 'Supreme Court of Letters' and a 'Sovereign organ of opinion,' covering a period of more than ten thousand years had made it their purpose to develop and encourage Tamil poetry and Literature, and to preserve the pristine purity and sweetness of the Tamil Language from any contaminating influences. And well they had performed their noble and unselfish duty, for even to day there remain thousands of works, sublime and inimitable in their purity of thought and style, which were produced during this period of literary activity. It was certainly the golden age of Tamil poetry, which effected a lasting influence on the Tamil race.

The name Tamil, signifying 'sweet' is characteristic of the language. Indeed it is one of the most copious, and most polished of spoken languages. In

ancient times, India knew of only two languages—*Vada-molli* and *Ten-molli* *i. e.* the Northern speech and the Southern speech. The first named was Sanskrit with its dependent vernaculars, and the second Tamil with its cognate dialects. We may fairly regard the Tamil Language as the highest and most finished example of that family of Indian tongues that have no connection with Sanskrit, excepting that which is purely adventitious.

The later history of Tamil literature and poetry down to the present day shows a general and gradual decline, till with the introduction of Western thought in this land, the literature has been sadly neglected. Whether the Tamil Language, which, while less developed for the purposes of prose-diction, equals, if it does not surpass the Greek language in the immense scope it affords for the highest flights of poetry, deserves such treatment in their hands, is a matter upon which the general voice of mankind will have to give the verdict. When the history of the nation comes to be written, this attitude will lessen their fame and prestige. The position of a people as a nation depends to a great extent on their language. With it they fall or rise, sink or swim, perish or survive. The Tamilians form no exception to this rule. They live today because of their language, but mere living is not sufficient. They have to realise the fulness of life in all its beauty and richness by their study and cultivation of their national literature.

But even in these days of decline and neglect, the Tamil language and literature have not been without their champions. The author of this volume

belongs to that noble and heroic band of workers, who have strenuously worked for the cause of Tamil by printing old Tamil classics, writing out prose works, translating useful works from foreign languages, editing Tamil journals, and above all, by their deep seated devotion to the traditions of Tamilakam, the land of their ancient greatness and glory. The present work deals with the origin and history of the Tamil Language. It would be superfluous to mention what great resources of knowledge and intellect are required for such a task. No one, however, who reads this book will deny that the author has proved himself equal to the task. The vast treasures of solid and valuable information which he has accumulated within these pages and the scholarly manner in which he has handled his materials cannot but strike the most casual reader.

This volume is dedicated to **E. B. Denham Esq: M. A, (Oxon) C. C. S.** by the publisher in recognition of his services to Tamilakam by his securing the inclusion of Tamil in the syllabus for the Cambridge and London examinations; and as a humble token of gratitude for the interest which he always took in such works and for his kind appreciation of the author of this work.

**A. VeerasingamPillay.**

Navalar Kottam,
Jaffna,
23rd April, 1920.



E. B. DENHAM Esqr., C. C. S.,
DIRECTOR OF EDUCATION.

Dedicated

to

E. B. Denham Esq. M. A; C. C. S.

Director of Education

by

the publisher

A. Veerasingampillay

in recognition of his services

to

Tamilakam

and

as a token of gratitude

for

his kind regard for

and

appreciation

of

the author

the late, A Mootootambypillay.

# தென்மொழிவரலாறு

இது
யாழ்ப்பாணத்து, மானிப்பாய்,
**ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை**
அவர்களால் செய்து,

அவர் சகோதரன்
ஆ. வீரசிங்கம்பிள்ளையால்
வித்தியாகர்த்தராய் விளங்கும்
ஸ்ரீமான். இ. பி. டென்காம்துரை அவர்களுடைய
வித்தியாபிமானஞாபகசின்னமாகச்சமர்ப்பித்துப்
பிரகடனஞ்செய்யப்பட்டது

---

யாழ்ப்பாணம்
நாவலர் அச்சுக்கூடம்
**1920**
*All rights reserved.*

# முகவுரை.

தமிழ்மொழி ஒருகோடியே எண்பதுலட்சம் மக்களால் வழங்கப்படுவது. மொழியெனினும் பாஷையெனினும் ஒக்கும். பாஷைகள் உலகத்தில் ஆயிரக்கணக்காகவுள்ளன. அவை மூலபாஷையென்றும் பிராகிருதபாஷையென்றும், மிசிரபாஷையென்றும், அவப்பிரஞ்சம் என்றும் பலபகுதிப்படும். அவற்றுள் மூலபாஷைதான் வேறுபாஷையிற்றோன்றாது தன்பாற் பலபாஷைகளும் தோன்றுதற்குக் காரணமாகவுள்ளது. பிராகிருதம் ஒரு மூலபாஷையினின்றும் சிதைவாக வழங்குவது. மிசிரபாஷை இரண்டும் பலவும் ஆகிய மொழிகள் கலந்து ஒருமொழியாகி வழங்குவது. அவப்பிரஞ்சம் தனக்கு எழுத்துக்களும் இலக்கணமும் இன்றிக்கிடந்து வழங்குவது.

இவ்வகுப்பில் தமிழ்மொழி எதிலடங்குமெனின், மூலபாஷையில் அடங்குமென்க தமிழும் சமஸ்கிருதமாகிய வடமொழியும் ஆதியிற் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட மொழிகளாம். தமிழிலேயுள்ள அட்சரங்களுள் மூன்றுதவிர மற்றையெழுத்துக்களெல்லாம் வடமொழியிலும் உண்டன்றோ, ஆதலால் தமிழைத்தனிமொழியென்பது எவ்வாறெனின், அற்றன்று. ஒரு பாஷையிலுள்ள எழுத்துக்கள் பெரும்பாலும் மற்றப்பாஷைகளெல்லாவற்றிலும் உண்டன்றோ. வரிவடிவுமாத்திரம் பாஷைகள் தோறும் வேறுபட்டிருக்கும். ஒலிவடிவால் பெரும்பாலும் சமமேயாம். ஒவ்வொரு பாஷைக்கும் இரண்டு மூன்றே சிறப்பெழுத்துக்களாகவுள்ளன. மற்றையெழுத்துக்களெல்லாம் பொது. ஆதலால் எழுத்தொப்புமை ஒரு

மொழியிலிருந்து வந்தமைக்குக் காரணமாகாது. தமிழி லேயுள்ள எழுத்துக்கள் ஒன்றோடொன்று கூடிநிற்கும் முறையும் வேறு. வடமொழியிலேயுள்ள எழுத்துக்கள் தம்முள் ஒன்றோடொன்று கூடிநிற்கும் முறையும்வேறு. திணை பால் வேற்றுமைகளைக் குறிக்கும் குறிகளும் வேறு. இவை முதலிய ஏதுக்களாலும் தமிழ் தனிமொழியென் பது நன்கு துணியப்படும். தமிழிலே வடமொழிக்கலப்பு மிகவுண்டென்பது உண்மையே. பண்டைக்காலத்தில் நூலாசிரியர்களெல்லாம் வடமொழிச் சொற்களைப்பெரி தும் எடுத்துவழங்கினரில்லை. அகத்திய தொல்காப்பிய சூத்திரங்களை நோக்கும்பொழுது அக்காலத்தில் வடமொ ழிக்கலப்பு மிகச்சிறிதாம். என்பது நன்குபுலப்படும். அவற்றிற்குப்பின்னர் வந்த நூல்களிலே வடமொழிக்கலப் புக்காலந்தோறும் அதிகரிப்பனவாயிற்று. அவற்றுள்ளும் பிற்காலத்தார் செய்த நூல்களிலே வடமொழிச்சொற்கள் பரந்துகிடப்பது பிரத்தியட்சமாம். வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் அநேகசொற்களைத்தற் பவமாகவும் தற்சமமாகவும் எடுத்து வழங்குவாராயினர். வடமொழிச் சொற்களுக்குத் தமிழிலே பிரதிபதங்கள் உளவாகவும் அவற்றை எடுத்துவழங்காதுஎதுகைமோனை முதலிய தொடைநயங்கருதி அப்பதங்களையே எடுத்து வழங்குவாராயினர். இதுவே வடமொழிச்சொற்கள் தமி ழில்வந்துமிகுதியாகவழங்குதற்குக்காரணமாம் அதுநிற்க.

தமிழ்மொழி எந்தக்காலத்தே தோன்றிற்று என்று காலவரையறைசெய்தல் யாவருக்கும் அரிதாம். அது தமிழ்நிலத்துமக்கள் என்றுளரோ அன்றுளதாம். அது நெடுங்காலம் இலக்கணவரம்பு சிறந்தில்லாத ஒருமொழி யாகக்கிடந்தது. அதற்கு இலக்கணவரம்புசெய்தார் சிவ பெருமானென்பது "இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்

குரவர்" என்பதனுல் இனிது புலப்படும். வடமொழிக்கு ஆதியிலக்கணமாக மாகேசுவர சூத்திரத்தையும், தமிழுக்கு இசைநுணுக்கத்தையும் சிவபெருமான் இமையத்திலே கைலாசகிரியிலேயிருந்து அருளிச்செய்தார். இக்கருத்துப்பற்றியே வில்லிபுத்தூராழ்வார்பாரதத்தில் வரந்தருவாரும் தமிழ்வரலாற்றை ஒருவாறு கூறுமுகத்தான்.

"பொருப்பிலே பிறந்து தென்னன்புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்ருேர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்ருள்."

என்றுகூறினர். இங்கேபொருப்பென்றது இமையத்தையெனக்கொள்க அவ்விசைநுணுக்கத்தை ஆதாரமாகக்கொண்டு குமாரக்கடவுள் தம்பெயரால் ஓரிலக்கணஞ்செய்தருளினர். அதுவே அகஸ்தியர்வருதற்குமுன்னுள்ள இலக்கண நூல்போலும். அக்காலத்திலே தமிழ்இயல் இசை நாடகமென முப்பாற்பட்டிருந்ததாதல்வேண்டும். அதுபற்றியே அகஸ்தியர் முத்தமிழுக்கும் இலக்கணஞ்செய்வாராயினர். அதினின்றும் இயற்றமிழை வேறுபிரித்து அதற்குத்தொல்காப்பியர் முதலாயினேர் இலக்கணஞ்செய்தனர். இசைத்தமிழையும் நாடகத்தமிழையும் வேறுவேறுபிரித்து ஏனையோரும் நூல்செய்தனர்.

அகஸ்தியர் வருதற்குமுன்னே தமிழ்மக்கள் அற்பவாழ்க்கையையுடையராயிருந்தும்தமிழ்மொழியை இயல் இசை நாடகமென மூன்றுபகுதியினையுடையதாகப் பிரித்தமையைநோக்குமிடத்து அவர் தம்மளவில் நாகரிகத்தாற்குறைந்தாரல்லர் என்பது நன்கு துணியப்படும். சாதாரணவிஸ்வகாரணங்களுக்கு இயற்றமிழையும், மனம் விஷயங்களின் நீக்கிச் சாந்தப்பட்டு மகிழ்ச்சிகொண்டவிடத்து

உண்டாவதாகிய இசை நுகர்ச்சிக்குரியதாகிய இசைத் தமிழையும், ஆனந்தமேலீட்டினால் இசையோடுதொடர்புடையதாகிய கூத்தின் விகற்பங்களை விளக்கும் நாடகத் தமிழையும், வேறுவேறாகப் பிரித்து வழங்கிய தமிழ்மக்களது நுண்ணுணர்வு பெரிதும் வியக்கத்தக்கது.

தமிழும் சம்ஸ்கிருதமும் மூலபாஷைகள் என மேலே கூறப்பட்டன. சம்ஸ்கிருதத்திலிருந்து அனேகபாஷைகள் தோன்றினதுபோலத் தமிழிலிருந்தும் மலையாளம் தெலுங்கு கன்னடம் துளுவம் ஒட்டரம் சிங்களம் முதலிய அனேக பாஷைகள் தோன்றின. இயற்றமிழ் எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்னுமிவற்றை எடுத்துக் கூறுவது. அதற்குரிய பாக்கள், வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா என்பன. இசைத்தமிழ் இயற்றமிழெழுத்துக்களோடு மாத்திரையால் நீட்டப்படும் எழுத்துக்களுங்கொண்டு இசைவகை பண்வகைமுதலியன பெறச்செய்யப்படும் பாக்களையுடையது. கொச்சகம்முரி நிலை விருத்தம் முதலியன இசைத்தமிழுக்குரியன. நாடகத்தமிழ் பாவராக தாளங்களோடு கூடியது. அதற்குரிய பார்வரிப்பாட்டு முதலியன. முத்தமிழையும் ஒருவாறு தெரிக்கும் தமிழ்நூல் சிலப்பதிகாரம் ஒன்றே. அதற்கு முந்திய நூல்களெல்லாம் இறந்தனபோலும். இசைத் தமிழிலக்கியங்களுள்ளே தேவாரமும் திருவாசகமுமே இறவாதெஞ்சியுள்ளன. இயற்றமிழிலக்கியங்களுள்ளும் இறந்தனபலவேயாயினும், இறவாதொழிந்தன இக்காலத்தார்க்குப் போதிய அளவு உள.

தமிழ்நாட்டிலே அகஸ்தியர் வந்தகாலம்முதல் மூன்றுஞ்சங்கம் முடிந்தகாலம்வரையும் சேரசோழபாண்டியர்கள் என்னும் தமிழ்நாட்டு மூவேந்தருமே வழிவழியரசு செய்துவந்தார்கள். அதன்பின்னர் மூவேந்தரும் ஒருவ

ரோடொருவர் தம்முட்பகைவராகித் தமிழ்நாட்டுச் சாந்த நிலையைக்கலக்குவாராயினர். அதன்பின்னர் துருக்க அரசரும் படையெடுத்துவந்து தமிழ்நாட்டைக்கலக்குவாராயினர். அவர்காலத்திலே அனேக இந்துஸ்தான் சொற்கள் தமிழோடுவந்துகலப்பனவாயின. அதன்பின்னர் கன்னடதேசத்தரசர் தமிழ்நாட்டிற்றலைமைபெற்றார்கள். அக்காலத்தில் அனேக கன்னடச்சொற்களும்வந்து தமிழோடு கலந்தன. அக்காலத்திலே வரபதியாட்கொண்டானென்னும் தமிழரசன் நான்காஞ்சங்கந்தாபித்துத் தமிழை வளர்ப்பானாயினன். அச்சங்கத்திலேயே வில்லிபுத்தூரார் பாரதம் அரங்கேற்றப்பட்டது. இதனை

''எங்குமிவனிசைப்பிவருநாளில்யாமுரைத்தவிந்நாட்டிற் றோன்றி
கொங்கர்குலவரபதியாட்கொண்டானென்றொருவண்மைக்குரிசி
வெங்கலியின் மூழ்காமற்கருநடப்பேர் வெள்ளத்துவிழாமனான் காஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல் கலங்காமற்றலைகண் டானே''

என்னும் பாரதச்செய்யுளாலும் உணர்க. அதன்பின்னர் தெலுங்க அரசர்கள் சிலகாலம் தலைமைபெற்றார்கள். அவர் காலத்திலே அனேகதெலுங்குச்சொற்களும் வந்து கலப்பனவாயின. அதன்பின்னர் இற்றைக்கு நூற்றைம்பது வருஷங்களுக்குமுன்னர் தற்காலம் எம்மையாளும் ஆங்கில அரசர்காலம் தொடங்கிற்று. இவ்வரசோடு சிற்சில ஆங்கில பதங்களும் வந்து கலப்பனவாயின. இது நிற்க.

தமிழ்நாட்டிலே பன்னெடுங்காலமாக அநுஷ்டிக்கப்பட்டுவரும்சமயம் வைதிக சமயம். அதன்பின்னர் வேதபாகியசமயங்களாகிய சமணசமயமும் பௌத்தசமயமும் வந்துபுகுந்தன. அவையொருவாறு அருகிப்போக வைதிக சமயத்தில் ஒரு சாராராகிய வைஷ்ணவர்கள் தலையெடுத்து வைஷ்ணவத்தைப் பரப்பினார்கள். சமயவாதிகளால் இயற்றப்பட்ட தமிழ்நூல்கள் அனேகம். அவைகளும் தமிழ் இலக்கியங்களைப்பெருக்குவனவாயின.

தொடங்கிய காலவெல்லை காண்பதற்கரிதாய்ப்பன்னெடுங்காலமாக வழங்கிவரும் தமிழினது பூர்வ நிலையை

யும்மத்தியநிலையையும் இக்காலத்துநிலையையும் ஆராய்ந்து ஒரு நூல்செய்தல்வேண்டுமென்னும் பேரவா எமதுள்ளத்தே நெடுங்காலம் கிடந்தது ஆசை நாணமறியாதென்னும் பழமொழிப்படி, தமிழ்நாட்டிலே, கற்றுவல்ல பண்டித சிரோமணிகள் பலர் இருக்கவும், நிரம்பாத கல்வியறிவு சிறிதுடைய யாம் இப்பொருண்மேல் நூல்செய்யப்புகுந் தமையை நோக்கப் பெருநாணந்தருவதாயினும் கற்றூர் குற்றங்களைந்து குணம்கொள்வார் என்றுதுணிந்து முயன்றும். தமிழ்நாட்டிலே விளங்கிய நல்லிசைப் புலவர் எண்ணிலர். அவர்கள் செய்த நூல்களோ கணக்கில. அவர்களுடைய கல்வியாற்றலோ இக்காலத்தார் எளிதில் ஆராய்ந்து தெளியுந்தன்மைத்தன்று அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற்பாற் பொருண்மேலும் நூல்செய்வித்துச் சங்கங்கூட்டி யாராய்ந்த அரசர்களோ பல்லாயிரவர். அரசருள்ளும் பெரும்புலமைபடைத்தோர் ஆயிரவர். பண்டைத் தமிழாராய்ந்த சங்கங்களோ பன்னெடுங்காலமிருந்தன. புஸ்தகமண்டபங்களோ அனந்தம். தமிழ்ச்சொற்களுள்ளும் வழங்காதொழிந்தன எத்தனையோபல நடுவட்காலத்தாரால் வழங்கப்பட்ட சொற்களும் எத்தனையோ பல. பண்டைகாலத்தாராற் றழுவப்பட்ட சொற்களும் எத்தனையோ பல. இந்நிலைப்பட்ட தமிழினது வரலாற்றை ஒருநூலாகவமைத்து இயற்றுவதென்றூல்எம்போல்வார்க்கெளியதன்று. ஆயினும் இயன்றவாறு ஆராய்ந்து இந்நூலை இயற்றினேம்.

தமிழ்மொழியினது காலம் இலக்கணமில்லாதகாலம் குமாரமென்னும் இலக்கணகாலம் அகஸ்திய விலக்கணகாலம் முதற்சங்ககாலம் இடைச்சங்ககாலம் கடைச்சங்ககாலம் இடைக்காலம் நான்காஞ்சங்ககாலம் பின்னர்க்காலம் என வகுக்கப்படும். இந்தக்கிரமமாகவே இந்நூலை வகுத்தியற்றினேம்.

நாவலர்கோட்டம்,
யாழ்ப்பாணம்,
23–5–17

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

# தென்மொழிவரலாறு.

## தமிழ்நாடு.

### பூர்வ எல்லை.

தமிழ் வழங்கு நிலந் தமிழ்நாடெனப்படும். அது வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரியையும் கிழக்கும் மேற்கும் கடலையும் எல்லையாகவுடையது. தொல்காப்பியர் சகபாடியும் தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ் சொன்னவருமாகிய பனம்பாரனார் "வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறுநல்லுலகம்" என வடக்குந் தெற்கும் பிறநாடுகள் இருந்தமையால் வடக்கெல்லையுந் தெற்கெல்லையுங் கூறிக் கிழக்கினும் மேற்கினும் வேறுநாடின்மையாற் கிழக்கெல்லையும் மேற்கெல்லையுங் கூறுதொழிந்தார். தெற்கே பிறநாடிருந்தமை எவ்வாறு பெறப்பட்டதெனிற் கூறுதும்.

### கடல்கோண்டநாடுகள்.

குமரியென்றது குமரியாற்றை. அது தொல்காப்பியர் நூல்செய்த காலத்தேயிருந்தது. அதற்குத் தெற்கிலே ஏழ்தெங்கநாடு ஏழ்மதுரைநாடு ஏழ்முன்பாலைநாடு ஏழ்பின்பாலைநாடு ஏழ்குன்றநாடு ஏழ்குணகாரைநாடு ஏழ்குறும்பனைநாடு என்னும் நாற்பத்தொன்பது நாடுகளிருந்தன. பஃறுளியாறெனவோராறுமிருந்தது. அவ்வாறுள்ளிட்ட நாற்பத்தொன்பது நாடுகளும் குமரிநாடும் குமரியாற்றின் வடகரைவரையும் கடல்கொண்டழிந்தன. இது நிகழ்ந்தது தொல்காப்பியர் நூல்செய்தகாலத்துக்குப் பன்னெடுங்காலத்துக்குப்பின்னர். [கடல்கொண்ட செய்தி சிலப்பதிகாரம் வேனிற்காதை உரையினும் இறை

யனாகப்பொருளுரையினும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியவுரைகளினுங் காண்க.]

குமரியாறு கடல்கொண்டபின்னர் நூல்செய்தோர் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந் தமிழ் வரம்பறுத்த" என்று குமரியாற்றைக் குமரிப்பௌவமென வழங்குவாராயினர். [சிலப்பதிகாரம் வேனிற்காதை.]

## தமிழ்நிலத்துமொழி.

தமிழ்நாடு முன்னொருகாலத்திலே வேறுமொழி வழங்கிய நாடாகாதோவெனின், அற்றன்று. அது பூர்வந் தொட்டுத் தமிழே வழங்கிய நாடென்பது "செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல்கண்டு" என்பதனுற்றுணியப்படும். ஆயினும் தமிழ்நாட்டுப் பழங்குடிகள் அந்நாட்டு விசாலத்துக்குத் தக்கவாறு பரந்திருந்தார் அல்லர்.

## தமிழ்நாட்டுப்பகுதி.

தமிழ்நாடு செந்தமிழ்நாடென்றுங் கொடுந்தமிழ்நாடென்றும் அங்குவழங்குந் தமிழியல்பு நோக்கி இருபாற்படும். "குமரிவேங்கடங் குணகுடகடலா-மண்டிணிமருங்கிற்றண்டமிழ் வரைப்பிற்-செந்தமிழ் கொடுந்தமி ழென்றிருபகுதியின்" [சிலப்பதிகாரம்] அவற்றுள் ளே செந்தமிழ்நாடு நடுவாக அதனைச் சூழ்ந்த பன்னிரண்டுங் கொடுந்தமிழ்நாடெனப்படும். அவை "தென்பாண்டி குட்டங் குடங்கற்காவேண் பூழி, பன்றியருவா வதன் வடக்கு—நன்றாய, சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர், ஏதமில் பன்னிருநாட்டெண்" என்னும் வெண்பாவாலறியப்படும். இவற்றைச் சூழ்ந்த வேற்றுமொழி நிலங்கள் பதினேழு. அவை "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகம், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம்,

கங்க மகதங் கவுடங் கடாரங் கடுங் குசலம், தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே" என்பதனாலறியப்படும்.

## நிலப்பகுதி.

தமிழ்நாடு நிலவேறுபாட்டால் ஐந்து பகுப்பினதாகும். அவை மருதநிலம் முல்லைநிலம் குறிஞ்சிநிலம் நெய்தனிலம் பாலைநிலமெனப்படும் மருதநிலத்து மக்கள் உழவுத்தொழில்புரிந்து வாழ்பவர். முல்லைநிலத்துமக்கள் பசுமேய்த்து வாழும் இடையர். குறிஞ்சிநிலத்து மக்கள் தேனெடுத்துங் கிழங்ககழ்ந்தும் வாழுங் குறவர். நெய்தனிலத்து மக்கள் உப்பும் மீனும் படுத்துவாழும் பரதவர். பாலைநிலத்துமக்கள் மறத்தொழிலால் வாழும் மறவர்.

## மக்கள்தொழில்வாழ்க்கை.

ஒருபாஷையாளருடைய நாகரிகமெவ்வளவோ அவ்வளவே அப்பாஷையினது விரிவுமாம். ஆதியிலே தமிழ்மக்கள் அற்பவாழ்க்கையினராகவே யிருந்தாரென அநுமித்தல்வேண்டும். உழுதும் உழுவித்துமுண்போர் ஒருதிறமும், பசுக்காப்போர் ஒருதிறமும், மலைவாழ்வோர் ஒருதிறமும், காடுவாழ்வோர் ஒருதிறமும், நெய்தனிலைத்துமாக்கள் ஒருதிறமும், பாலைநிலைத்துமாக்கள் ஒருதிறமுமாக ஐந்துதிறப்பட்டு வாழ்ந்தார்கள்.

### அரசு.

அவ்வத்திறத்தினரும் இடங்கள்தோறும் ஒவ்வொருதலைவனையுடையராயிருந்தனர். உழவுத்தொழிலையுடையமருதநிலத்து மக்கள் தந்தலைவனை ஊரன் கிழவன் என வழங்குவர். அவனே அவர்க்குள் வரும் வழக்குக்களைத் தீர்த்து அடக்கி ஆள்பவன். முல்லைநிலத்துமக்கள் தலைவன் குறும்பொறைநாடன். குறிஞ்சிநிலத்து மக்கள் தலை

வன் வெற்பன். நெய்தனிலத்து மக்கள் தலைவன் துறைவன். பாலைநிலத்து மக்கள் தலைவன் மீளி.

## தெய்வவழிபாடு.

மருதநிலத்துமக்களுக்குக் கடவுள் மருதவேந்தன் (இந்திரன்). முல்லைநிலத்துமக்களுக்குக்கடவுள் விஷ்ணு. குறிஞ்சிநிலத்துமக்களுக்குக் கடவுள் முருகன். நெய்தனிலத்துமக்களுக்குக் கடவுள் திரையன் (வருணன்). பாலைநிலத்துமக்கள் கொற்றியை (துர்க்கை) வழிபடுவர். மருதன், மருதப்பன், கரியன், கறுப்பன், முருகன், திரையன், கொற்றியென்னும் பெயர்கள் இப்போதருகினவாயினும், இன்றுந் தமிழ்மக்கள் அவைகளைத் தாமிட்டு வழங்குவதுண்டு.

## எழுத்து.

ஆதியில் தமிழுக்கு வரிவடிவாகிய எழுத்துக்கள் உண்டென்பது எழுத்தென்னுந் தமிழ்ச்சொல்லாலினிது துணியப்படும். குமாரக்கடவுளால் ஓரிலக்கணநூல் குமாரமென்னும் பெயராற் செய்யப்பட்டதென்று கூறுவர். அக்காலத்தில் அவர்களுடைய இலக்கியநூல்கள் இவையென்று தெரியவில்லை.

## அகஸ்தியர்வரவு.

இப்படியிருக்குங் காலத்திலே அகஸ்தியமுனிவர் உத்தரத்தினின்றும் தென்னாட்டிடைச் சென்று பொதியத்தில் வசித்தனர். தென்னாட்டுக்கு வரும் வழியில் விந்தியமலை தடுக்க அதனைப் பாதலத்திலடக்கி இப்பால் வந்தனர். அகம்-மலை. அதனை அடக்கினமையால் அகஸ்தியரெனப்பட்டார்.

## வேளிர்வரவு.

அவர் தமிழ்நாட்டைத் திருத்தவெண்ணித் துவராவதியிலிருந்து பதினெண்மர் அரசரையும் பதினெண்

கோடி வேளிருள்ளிட்ட சனங்களையுங் கொணர்ந்து குடியேற்றினர். அவ்வரசர்கள் காடாயிருந்த இடங்களையெல்லாந் திருத்திச் சிறந்த நாடாக்கி அகஸ்தியர் கருத்தின்படி அரசியல் வகுத்து அரசுசெய்துவருவாராயினர்.

## அகஸ்தியம்.

அகஸ்தியர் தாம் புகுந்த தேசத்தைத் திருத்திய பின்னர் அத்தேசத்துக்குரிய தமிழ்மொழியையுந் திருத்த எண்ணி ஓரிலக்கணநூல் செய்து அதற்கு அகத்தியமெனப்பெயரிட்டனர். பன்னிருவர் மாணாக்கரைச் சேர்த்து அவர்க்கு அவ்விலக்கணத்தை உபதேசித்தனர். தமிழ் இயல் இசை நாடகமென முத்திறப்படும். அகத்தியம் முத்தமிழிலக்கணங்களையுமொருங்கடக்கிக் கூறுவது.

## அகத்தியத்துக்கு முதனூல்.

அகத்தியத்தில் முதனூல் இயலுக்குக் குமாரமும் இசைக்கும் நாடகத்துக்கும் இசைநுணுக்கமுமென்பர். அகத்தியர் குமாரத்தைக் குமாரக்கடவுளிடத்தும் இசைநுணுக்கத்தைச் சிவபெருமானிடத்தும் உபதேசம்பெற்றார் என்பர்.

## காய்சினவழுதி.

அதன்பின்னர்க் காய்சினவழுதியென்னும் பாண்டியன் கல்வியாலும் படைவலியாலும் செல்வத்தாலும் அரசியல் முறையாலும் சிறந்து விளங்கினன். அவன் குமரியாற்றின் தென்கீழ்த்திசையிலே ஒரு சிறந்த நகரமைத்து அதற்கு மதுரையெனப் பெயர் புனைந்து அங்கே தனது அரசிருக்கையையும் தமிழை வளர்க்கும் பொருட்டு ஒரு சங்கத்தையுந் தாபித்தான். அதுவே முதற்சங்கமாம்.

## முதற்சங்கம்.

அவ்வரசன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கன்மேலும் நூல்செய்வோர் அச்

சங்கத்தில் அரங்கேற்றல்வேண்டுமென்றும், கல்வியில்வல்லோர் சங்கத்தில் ஆசனம்பெறுவரென்றும், கற்ற பண்டிதர்களுக்கு மந்திரி முதலிய பதங்கள் கொடுக்கப்படுமென்றும், தமிழை வளர்ப்போர்க்கெல்லாம் இறையிலியும் சர்வமானியங்களும் விடப்படுமென்றும், தேசமெங்கும் பறைசாற்றினன்.

## பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை.

அதனால் தமிழாராய்ச்சி தேசமெங்கும் விருத்தியாயிற்று. பலவிடங்களிலும் பல்லாயிரம் புலவர் தோன்றிப் பல்லாயிரம் பரிபாடல் பாடிக்கொண்டுபோய் அரங்கேற்றினர். அப்படிப் பாடிய பரிபாடல்கள் எண்ணில்லாதன. முதுநாரை யென்றொரு நூலை யொருவர் செய்து சங்கமெல்லாமெச்ச வரங்கேற்றினர். முதுகுருகென்றொரு நூல் மற்றொருவராற் செய்து அரங்கேற்றப்பட்டது. களரியாவிரையெனப் பின்னருமொன்றரங்கேறிற்று. [இறையனார்] இப்படி அநேக நூல்கள் அக்காலத்திலே செய்து அரங்கேற்றப்பட்டன. முதுநாரை முதுகுருகென்பன இசைத்தமிழ்நூல்கள். அவை பெருநாரை பெருங்குருகெனவும்படும். [சிலப்] களரியாவிரையை அறநூலென்பர்.

## தலைச்சங்கப்புலவர்கள்.

தலைச்சங்கத்துப்புலவர்கள் அகத்தியனார், முரிஞ்சியூர்முடிநாகராயர், நிதியின்கிழவன் முதலிய ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர். பாடினோர் சங்கப்புலவருள்பட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர். அச்சங்கம் காய்சினவழுதி முதற் கடுங்கோனீறாக ஒருவர்பின்னொருவராய் எண்பத்தொன்பது பாண்டியரால் நடாத்தப்பட்டுவந்தது. அது நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடம் நடைபெற்றது. பரிபாடலென்பது பரிபாடலென்னும் பாவகையால் அந்நாலுக்காகியபெயர். பரிபாடல்

கள் எண்ணிலவாய்ப் பரந்தனவாயினும் அவையெல்லாம் இறந்தொழிந்தன. முதுநாரை முதுகுருகு களரியாவிரை என்னும் நூல்களும் இறந்தன. அவைதாமா அகத்திய மும் இறந்தது. அகத்தியத்தினும் ஒருசிலவன்றி ஏனைய சூத்திரங்களெல்லாம் ஒருங்கேயழிந்தன. அதிற் கூறப்பட்டன எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலும் சோதிடமும் காந்தருவமும் கூத்தும் பிறவுமென்பது நச்சினார்க்கினியர் உரையால் விளங்குகின்றது. அகத்தியத்துக்கு முந்திய நூல்கள் எழுத்துச் சொற் பொருள் யாப்புக்களையே யொருவாறு கூறுவனவாதல் வேண்டும். அகத்தியர் வந்தபின்னரே தமிழ்நாட்டில் முறையான அரசு தொடங்கினமையால் அகத்தியர் எழுத்துச் சொற் பொருள் யாப்புக்களை விரித்தும் வழக்கியல் அரசியல் அமைச்சியல் பார்ப்பனவியல்களையும் சோதிடம் முதலியவற்றையும் அந்நாட்டுக்கியைய வகுத்துஞ் செய்தனர்.

தலைச்சங்ககாலத்தில் அரசியலுக்கும் அமைச்சியலுக்கும் வழக்கியலுக்கும் பிரமாணநூல் அகத்தியமே. இலக்கண இலக்கியங்களுக்கும் அதுவே பிரமாணநூல். சோதிடம் வைத்தியம் முதலியவற்றிற்கும் அதுவே பிரமாண நூலாம்.

## தேசவிருத்தி.

அகத்தியர் வந்தபின்னர்ப் பலவகை நாகரிகங்களும் தோன்றி வளர்வனவாயின. அரசும் படையும் குடியும் சிறந்தன. ஆலயங்களும் அறங்களும் ஓங்கின. காருகசும் மியங்களும் விருத்தியாயின. சிற்பஞ் சோதிடம் மலிந்தன. வாணிகம் கலத்தினும் காலினும் மிக்கன. அவற்றால் தமிழ்மொழியிலும் சொற்கள் அதிகமாக வந்து சேர்வனவாயின. அரசியலினும் அமைச்சியலினும் அனேக

சொற்கள் ஆக்கிக்கொள்ளவும் வடமொழியிலிருந்து அனேக சொற்களை மொழிபெயர்த்துக்கொள்ளவும் அனேகசொற்களைத் தற்பவம் தற்சமமாக வாங்கவும் அவசியமாயிற்று. கடவுள் வழிபாட்டுக்கு அநேக சொற்களும், வடமொழியிலிருந்து கொள்ளவும் மொழிபெயர்க்கவும் அவசியமாயிற்று. சிற்பசோதிடங்களுக்கும் அனேகபதங்களை வாங்குவதும் மொழிபெயர்ப்பதும் இன்றியமையாதனவாயின. தமிழிலக்கண இலக்கியங்களுக்குஞ் சில சொற்கள் வேண்டப்பட்டன. அவ்வாறு செய்தாராயினும் எழுத்துக்களைமாத்திரம் வாங்காது உள்ள எழுத்துக்களைக் கொண்டே அச்சொற்களை அமைத்துக்கொண்டனர்.

## வடசொற்கள்.

அரசன் என்னும் பெயர் வடமொழி ராஜ் என்னும் தாதுவிற்றோன்றியது. இராசா என்பதும் அவ்வடியாகப் பிறந்தது. முன்னே கூறியபடி பூர்வ தமிழ்மக்கள் இராசாங்கத்தோடு கூடிய அரசனையுடையரல்லர். அகஸ்தியர் வந்தபின்னரே இராசாங்கம் அமைக்கப்பட்டது. அரசன் என்னும் பெயர் வழக்கும் அவர் வந்தபின்னர் உண்டாயதாம். முன்னே மக்களுட் சிறந்தோர்க்கு வழங்கிய அண்ணல், ஆண்டகை, இறை, இறைவன், எந்தல், ஓங்கல், குரிசில், கோ, கொற்றவன், கோமான், கோன், தலைவன், தோன்றல், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன், மன்னவன், மன்னன், மன், மீளி, முதல்வன், வேந்தன் என்னுஞ் சொற்கள் அரசர்க்கு ஆக்கிக்கொள்ளப்பட்டன. இவையெல்லாஞ் செந்தமிழ்ச் சொற்கள். அயன்றோள் வந்தோன் என்பது வாகுஜன் என்னும் வடமொழிச்சொல்லின் மொழிபெயர்ப்பு. அதிபன், அதிகாரணன், சக்கிரி, தராபதி, நரபதி, நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், மண்டலீகன் என்னும்

இவையெல்லாம் வடமொழிச் சொற்கள். வேந்தன் என்பது வெம்மை யென்னுமடியாகப் பிறந்த தமிழ்ச்சொல் விரும்பத்தக்கவன் என்பது அதன்பொருள். கோபாலன் கோவலன் என்றாயதுபோல புரபாலன் புரவலன் என வந்தது.

மற்றொருவரைப் பணியாதுலகாளும் இராசாங்கம் அகஸ்தியர் வருமுன்னரே தமிழ்மக்களுள்ளே இருந்ததாகத் தோன்றவில்லை. இருந்ததாயின் தமிழில் அப்பொருளையுடைய சொல்லுமுளதாம். அப்படிவருஞ் சொற்களைக் காண்கின்றிலம். சக்கிரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன் என்னுஞ் சொற்கள் வடமொழிச்சொற்கள். ஆதலால் அவ்வகை அரசு அகஸ்தியர் வந்தபின்னரே தமிழ்மக்களுள்ளே தொடங்கியதாதல்வேண்டும்.

## தமிழ் எண்.

அகஸ்தியர் வந்தபின்னரே தமிழிலே லக்ஷம் கோடி விந்தம் பதுமம் முதலிய பேரெண்களும் வடமொழியினின்றும் கொள்ளப்பட்டன. அதற்குமுன்னே நூறாயிரம் பத்துநூறாயிரம் நூறுநூறாயிரம் எனப் பேரெண்கள் வழங்குவனவாயின. நூறாயிரம் லக்ஷம். பத்துநூறாயிரம் பத்துலக்ஷம். நூறுநூறாயிரம் கோடி. கீழ்வாயெண்களாகிய கால், அரை, முக்கால், அரைக்கால், வீசம், மா, காணி, முந்திரி முதலியன தமிழெண்களே. அவ்வெண்களைக்குறிக்கும் இலக்கங்களும் தமிழ்மொழிக்கே உரியன. தமிழ் எண்களுள்ளே எட்டு என்பதை வடமொழியிலேயுள்ள அஷ்ட என்பதன்றிரிபெனக் கொள்வாருஞ் சிலருளர். அது பொருந்தாது. தொல்காப்பியத்திலே வடமொழியெண்களுக்கு இலக்கணஞ் சொல்லப்படவில்லை. இலக்கணங் கூறியதெல்லாம் தமிழ் எண்களுக்கேயாதலின் அக்கொள்கை பொருந்தாது. எண்பதென்னுமிடத்

தும் எவ்வெட்டு என்னுமிடத்தும் எட்டென்பது எண்ணெனவும் எ எனவும் திரியுமியல்பு தமிழுக்குரியதாம்.

## தமிழ் இலக்கங்கள்.

தமிழிலக்கங்களும் தமிழுக்கே உரியனவாம். அவ்விலக்கங்களையே வடமொழியாளரும், மிசிர (Egypt) தேசத்தாரும் பர்ப்பரதேசத்தாரும் (Arabia) ஐரோப்பியரும் தமிழரிடத்துப்பெற்றுத் தமது பாஷைகளுக்கும் இலக்கமாக்கிக் கொண்டார்கள். தமிழிலக்கங்களினது வடிவங்களையும் மேற்கூறிய பாஷையாளருடைய இலக்கங்களினது வடிவங்களையும் ஒப்புநோக்குமிடத்து அவ்வுண்மை இனிது புலப்படும். ஒன்பது என்பதன்பொருள் ஒன்று குறைந்த பத்து. அதனையுணர்த்தும் இலக்கம் இது கூ. அதன் பூர்வவடிவம்இது 01. அஃது இப்போது கூ 9 இப்படித் திரிந்துவிட்டது. சொல்லும் பொருளும் வரிவடிவும் ஒத்திருத்தலே அது தமிழிலக்கமென்பதை நாட்டும். ஒன்றுழிபத்து என்னும் பதப்பொருள் தரும் இலக்கப்பெயர் மற்றெப்பாஷைக்கண்ணுமில்லையென்றால் அதற்கு வேறு ஏதுக் கூறவேண்டா.

ஆதிகாலத்திலே தமிழ்நாட்டிலே கம்மியப்பொருள் காருகப்பொருள் மிளகு ஏலம் இலவங்கம் முதலிய சம்பாரப்பொருள்களின் மிகுதிநோக்கிப் பர்ப்பரதேசத்தாரும் ஏனைய யவனர்களும் தமிழ்நாட்டுக்கு வருவர். வந்து வாங்கிப் பொதிசெய்து மரக்கலங்களிலேற்றிச் செல்வர். அப்பொதிகளின்மேல் தமிழ்வணிகர் தம்பெயரும் இலக்கமுமிடுவர். அவ்விலக்கங்கள் வாய்ப்பும் வனப்புமுடையனவாயிருந்தமையால் அவற்றை அந்த யவன வணிகர் தாமுங்கொண்டு வழங்க அவ்வாயிலாக அத்தேசங்களிலும் வழங்குவனவாயின. இவ்வுண்மை சிலப்பதிகாரத்து [வம்பமாக்கள்] என்பதனால் அனுமிக்கப்படும். அதுநிற்க.

## பரியாயப் பெயர்கள்,

அகஸ்தியர் வந்தபின்னர் அவருடைய மாணாக்கரும் மற்றைப் புலவர்களும் செய்யுள் செய்யும்போது, முட்டுற்றவிடத்துப் பரியாயப் பெயர்களாக அநேக வடமொழிச் சொற்களைச் சேர்க்கத்தொடங்கினர். முகமென்பது தமிழுக்கும் வடமொழிக்குமுரிய பொதுச்சொல். அது போலக் காலம் உலகம் தெய்வம் என்பனவும் தமிழினும் வடமொழியினும் வழங்குஞ் சொற்களாம். அவை வடசொல்லன்றெனக் கூறுவர் நச்சினார்க்கினியர். [காலமுலகம் என்னுஞ் சூத்திரவுரையிற் காண்க.] முகத்துக்குத் தமிழிலே பரியாயப் பெயர்கள் ஆதியில் இல்லை. வதனம் ஆனனம் துண்டம் வத்திரம் என்னும் வடமொழிச்சொற்கள் நான்கும் பிற்காலத்திலே முகத்துக்குப் பரியாயப் பெயர்களாகத் தமிழ்ப்புலவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டன.

தமிழிலே ஒருபொருளுக்குப் பலபெயர்கள் பண்டைக்காலத்துமுள்ளனவேயாம். எழுதுதல், தெரித்தல், வரைதல், தீட்டுதல், பொறித்தல், கீறல், வரித்தல், இவை ஒருபொருண்மேல் வருந் தமிழ்ச்சொற்கள். ["தெரித்தலே வரைதலோடு தீட்டுதல் பொறித்தல்கீறல் - வரித்தலே யெழுதுதற்பேர்" என்பது நிகண்டு.] எழுதுதற்குப் போதிய பரியாயப்பெயர்கள் தமிழில் இருந்தமையால் வடமொழியிலிருந்து அப்பொருட்சொற்களை வாங்காராயினர்.

வேள்வியென்பது அகஸ்தியர் வருமுன்னே சாதாரணமாகத் தெய்வங்களுக்கிடும் பொங்கல் விழாவாயிருத்தல்வேண்டும். அகத்தியர் வந்தபின்னர் அப்பெயர் பல்வகையாகங்களுக்கும் பொதுப்பெயராயிற்று. யாகத்துக்குரிய எச்சம், கிரது, வேள்வி, இட்டி, யசனம், ஓமம்,

மகம், யூபம் என்னும் பெயர்களுள்ளே வேள்வியென்ப தொன்றுமே தமிழ்ச்சொல். மற்றைய பெயர்களெல்லாம் வடசொற்களேயாம். எச்சம் என்பது யஜ்ஞம் என்பதன் சிதைவு. இன்னும்,

ஒரு பாஷையின் கண்ணேயுள்ள சொல்வளங் கொண்டு அப்பாஷையாளரது விருத்தியும் நாகரிகமும் அளக்கப்படும். விருத்திப்பெருக்கால் செல்வமும், செல்வப் பெருக்கால் எல்லா நாகரிகங்களும் விருத்தியாவது நுண்ணறிவுடையார்க்கெல்லாம் பிரத்தியட்சமாம். நாகரிகம், உடை நடை ஊண் முதலிய உலகபோகங்களுக்கு மாத்திரமன்று: மனத்தின்கண்ணே கிடக்கும் கருத்துவகைச் சிறப்புக்குங் காரணமாம்.

காட்டில்வாழும் வேட்டுவமாக்கள் வழங்குஞ் சொற்கள் மிகச்சிலவினுஞ் சிலவேயாம். அவரினுங் குக்கிராமவாசிகள் வழங்குஞ்சொற்கள் அதிகம். அவரினும் பெருநாட்டில் வாழுமாந்தர் வழங்குஞ்சொற்கள் அதிகம். அவரினும் நகரவாசிகள் வழங்குஞ் சொற்கள் அதிகம். அவரினும் கற்றுவல்ல பண்டிதசிகாமணிகள் வழங்குஞ்சொற்களே பன்மடங்கதிகமாம்.

மற்றோரெல்லாம் ஒரு பொருளை ஒரு சொல்லால் வழங்கக், கற்றுவல்ல நாகரிகரும் பண்டிதசிகாமணிகளும் ஒன்றை இயற்சொல்லால் வழங்குதலேயன்றிப் புனைந்துரைவகையானும் அதற்குரிய பலவேறுபட்ட இயல்பெடுத்துரைக்குமுகத்தானும் பலபெயரிட்டும் வழங்குவர்.

மாந்தருக்குள்ள உலகபோகமும் மனோவிருத்தியும் விவேகமும் எவ்வளவாக விரியுமோ அவ்வளவாகச் சொற்களும் பெருகும் அதுபற்றியே காட்டு வேட்டுவமாக்கள் நுகர்வனவுங் கருதுவனவுஞ் சிலவாதலின் அவர் வழங்குஞ்சொற்களுஞ் சிலவாயின.

ஒரு பொருளுக்கு ஆதியில்வந்த பெயர் ஒன்றே. அது வழங்கலாறுகுறித்து வந்தது. பின்னர் அப்பொருளுக்குக் காலந்தோறும் அதன் அகத்தியல்பு புறத்தியல்புகளை நோக்கி ஆய்ந்தோர் பலபெயரிட்டு அப்பலபெயராலும் அதனை வழங்குவராயினர். ஒருபொருள்குறித்த பலசொல் எனினும் பரியாயமெனினும் ஒன்றே. இவ்வாறமைந்த சொற்கள் தமிழில் எண்ணிலவுள. மற்றைப்பாஷைக்கண்ணும் நாமாய்ந்தவரையில் அத்துணையில.

பரியாயம் ஒருபொருள் குறித்த பலசொல்லேயாயினும் அச்சொல்லெல்லாம் தனித்தனி ஒவ்வொருபொருளையுடையனவாய்ச் சம்பந்தவாற்றலாற் பிறிதுபொருளுணர்த்துவனவாம். ஆதலால் அவை ஒருபொருள்குறித்த பலசொல்லேயன்றி ஒருபொருட்சொற்களெனக் கொள்ளப்படா. ஒருபொருட் பன்மொழி இல்லென்றலேசொன்னூல்வல்லார் துணிபாம்.

புஷ்பத்திற்கு ஆதியிலிடப்பட்ட தமிழ்ப்பெயர் பூ அதற்குப் பின்னர்ப் போது என்றும், அலர் என்றும், மலர் என்றும், வீ என்றும் பலபெயர்கள் வழங்குவனவாயின. அற்றைப்போதில் மலரும் பூ போது எனப்பட்டது. அலரென்பது முறுக்கவிழும் பக்குவத்துப் புஷ்பம். மலரென்பது முற்றவிரிந்த பூ. வீ என்பது உதிரும்பக்குவத்து மலர். எனவே இச்சொல்லெல்லாம் பூவின் பெயராயினும் அவை ஒவ்வொருகாரணம் பற்றி வந்தனவேயாமென்பது நன்கு துணியப்படும்.

மற்றைப்பாஷையின் கண்ணேயுள்ள பரியாயங்களினும் தமிழின்கண்ணேயுள்ளன மிகப்பலவென்பது சிறிது காட்டுதும்.

குடைக்குத் தமிழிலேயுள்ள பரியாயம் குளிர், தொங்கல், கவிப்பு, பிச்சம், கவிகை, என்பன. வடமொ.

ழியிலே குடைக்குவரும் பெயர்கள் சத்திரம், ஆதபத்திரம், சத்திரி என்பன. தமிழ்மக்கள் தம்மிடத்துள்ள குளிர் முதலிய வைந்தனேடுமமையாது வடமொழியிலுள்ள ஆதபத்திரமுதலிய மூன்றையுமாதரிப்பாராய் எட்டுச்சொல்லையுந் தமது நிகண்டிற் சேர்த்துக்கொண்டார்கள். குளிர்வித்தலிற் குடை குளிரெனப்பட்டது; தூக்கங்களையுடைமையிற் றூங்கலெனப்பட்டது; கவிக்கப்படுதலிற் கவிப்பெனப்பட்டது; பிச்சமென்பது முடி. அதனையுடைமையாற் பிச்சமெனப்பட்டது; வளைந்து மூடலிற் கவிகையெனப்பட்டது. ஆதபம் வெய்யில்; அதினின்றும் காப்பது ஆதபத்திரம். சத்திரமென்பதன் பொருளுமதுவே

சாவின் பெயர் துஞ்சல், 'இறத்தல் முதலிய பதினேழு. அவற்றுள் துஞ்சல் என்பது நித்திரை செய்தல். சாதல் அதுபோலுதலின் துஞ்சல் என்னும் பெயர் கொள்வதாயிற்று. இஃதொப்புமைபற்றி வந்தது. இறத்தல் என்பது கடத்தல். சாதல் இவ்வுலகங் கடத்தலாதலின் இறத்தலெனப்பட்டது. இஃதுபசாரப்பொருள். இவ்வாறுவரும் பரியாயங்களும் அநந்தம்.

துஞ்சல் என்பது "செத்தானெனப் பெரும்பான்மை வழங்கப்பட்டன. தகுதிநோக்கித் துஞ்சினனெனச் சிறுபான்மை வழங்கப்பட்டு நிற்கும்" என்றலிற் றகுதி பற்றிய வழக்கென்பர் நச்சினார்க்கினியர். இவ்வாற்றால் தமிழிலேயுள்ள ஒருபொருள்குறித்த பலசொற்களைநோக்குமிடத்துப் பொருள்களினியல்பு பலவற்றையும் பண்டைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்தவர்களென்பதும் இனிது துணியப்படும்.

## தமிழ்ச்சொற்பகுதிகள்.

தமிழ்ச்சொற்களும் வடசொற்கள்போலத் தாதுக்களையுடையனவாம். தாதுவெனினும் பகுதியெனினும் ஒன்றே. தமிழ்ச்சொற்பகுதிகள் எல்லாச் சொற்களுக்கும் தெற்றெனக் காண்புதரிது. அதுபற்றியே தொல்காப்பியரும் "மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்று" என்றார். ஆயினும் நுண்ணிதாக ஆராயுமிடத்துப் புலப்படாமற் போகாது. சிலசொற்கள் வினையடியாகவும் சில சொற்கள் உரியடியாகவும் சிலசொற்கள் இடையடியாகவும் ஒருசில பெயரடியாகவும் பிறக்கும். அறு என்னும் வினையடியாக அறம் அறை அறுகு ஆறு=(வழி, நதி) அற்றம் முதலிய சொற்கள் பிறக்கும். அல்கு என்னும் வினையடி அகு என்றாகி அகம் என்றாயிற்று. அகன் என்பதும் அவ்வாறே. அடு என்னும் வினையடியாக ஆடு அடை அட்டை அடல் அடலை முதலியனவும், அண் என்னும் அடியாக அண்ணம் அண்ணன் அண்ணி அணை அண்மை அணவு அணுகல் அண்ணல் அணி முதலியனவும், அல் என்னும் அடியாக அலி அல்லல் அல்லாத்தல் அல்=(இரவு) அன்று அலது அல்லி அல்கைண்டம் அல்லோன் அன்றினர் முதலியனவும், அகல் என்னும் அடியாக அகன்றில் அகலுள் ஆல்=(மரம்) ஆன்றோர் அகன்றோர் அகல்=(விளக்கு) ஆலல் அகலர் அகலம் முதலியனவும், பகு என்னும் அடியாக பகல் பால் பகை பக்கு பகைவன் முதலியனவும், தொகு என்னும் அடியாக தொகை தொகுதி தொழுதி தோகை=(மயில்) தொக்கார் முதலியனவும், கொள் என்னும் அடியாக கோள் கொள்ளை கொளல் கொண்டி கோட்பு கோளை முதலியனவும், பெள் என்னும் அடியாக பெண் பெட்பு பேணல் முதலியனவும், கள் என்னும் அடியாக கள்வர் கள்ளர் கள்ளல் களவு கள்ளம் கள்ளாமை முதலியன

வும், வெம் என்னும் அடியாக வேந்தன் வேந்து வெம்மை முதலியனவும், வள் என்னும்(கூர்மைப்பொருளில்வரும்) அடியாக வாள் வாளி வாளை முதலியனவும், வள் என்னும் (ஈகைப்பொருளில் வரும்) அடியாக வள்ளல் வள்ளியோர் வள்ளுவர் வளம் வள்ளன்மை முதலியனவும், விடு என்னும் அடியாக வீடு விடை விடல் விடலை விடுப்பு விடவு விடர் விட்டில் விட்டேறு முதலியனவும், வெல் என்னும் அடியாக வேறல் என்பதும், கொல் என்னும் அடியாகக் கோறல் என்பதும், செல் என்னும் அடியாகச் சேறல் என்பதும், சொல் என்னும் அடியாகச் சோறும் என்பதும், இறு என்னும் அடியாக இறுதி ஈறு (வீட்டின்) இறப்பு முதலியனவும், இற என்னும் அடியாக (கட என்னும் பொருளில்) இறை இறையோன் முதலியனவும், மத் என்னும் அடியாக மத்தென்னும் ஓசையையுடைய மத்தளம் என்பதும், சல் என்னும் அடியாகச் சல் என்னும் ஓசையையுடைய சல்லரி என்பதும், கரடி என்னும் அடியாகக் கரடிபோல உறுமும் ஓசையையுடைய கரடிகை என்பதும், உண் என்னும் அடியாக உணவு உண்டி ஊண் ஊட்டி முதலியனவும், கண் என்னும் அடியாகக் காண்டல் காட்சி முதலியனவும். இடு என்னும் அடியாக இடு ஈடு இடை முதலியனவும், உறு என்னும் அடியாக ஊறு உறை=(கூடு) முதலியனவும், கட என்னும் அடியாகக் கடவுள் கடை=(முடிவு)கடவை கடப்பு முதலியனவும், கடு என்னும் அடியாகக் காடு கடுத்தல்=(கோபித்தல்) முதலியனவும், எடு என்னும் அடியாக எடை எடுத்தல் எடுப்பு முதலியனவும், தொடு என்னும் அடியாக தொடை தொடலை தோட்டம் முதலியனவும் பிறக்கும்.

## பூர்வ விவாக வழக்கம்.

ஓராடவனும் ஒருபெண்ணும் எதிர்ப்பட்டவிடத்து ஒருவரையொருவர் தாமே காதலித்துக் கூடிக் கூடிய

நாண் முதலாகக் கணவனும் மனைவியுமாகப் பிரியாது வாழ்வதே பூர்வ விவாக முறையாகத் தோன்றுகின்றது. அம்முறை அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னு நான்கு வருணத்தார்க்கு முரியதாயிருந்தது. பின்னர் அவர்கள் தாங்கொண்ட பெண்ணைப் பெண்டாட்டியல் லவென்று கூறி வரம்புகடந்து வேறு பெண்ணைக் கைக் கொண்டொழுகவுந் தலைப்பட்டார்கள். அங்ஙனங் கைவி டப்பட்ட பெண்கள் மானம்பற்றி உயிர்போக்கவுந் தலைப் பட்டார்கள். அதுபற்றியே கரணம்பிழைக்கின் மரணம் பயக்குமென்னும் பழமொழியும் வந்ததாம்.

அது கண்டு அகத்திடர் விவாகமுறைகளை வகுப்பா ராயினர். அது

"பொய்யும் வழுவுந் தோன்றியபின்னர்
ஐயர்யாத்தனர் கரணமென்ப"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாற் றுணியப்படும். விவாகமுறைகளை வகுத்தபோது பழைய வழக்கங்களை யுந் தழுவியே வகுத்தாரென்பதும் ஒருவாறு புலப்படுகி ன்றது. விவாகம் என்னும் வடசொல் தமிழிலே வரைவு என்பதற்குச் சமமாம். விவாகம் என்னுஞ் சொல் உரிமை யாக்கு என்னும் பொருள்படும் தாதுவிற் றோன்றியது. எனவே அதன்பொருள் உரிமையாக்கல். வரைவு என்ப தும் அப்பொருட் சொல்லே. கிழவோன் என்பதன் பொ ருள் உரியோன். அஃதாவது பெண்ணுக்குரியவன் என்ப தாம். கிழவி—ஆடவனுக்குரியவள். கிழமை=உரிமை.

தனிமையினெதிர்ப்பட்டுக் காதலித்துக் கூடிப் பின் னர்க் கைவிடுதலையும் அதனால் வருந் துன்பங்களையுங் கண்ட முனிவர், விவாகங் கொள்வோருங் கொடுப்போரு முடையதாய் அக்கினி சான்றாக மந்திரத்தோடு நடக்கற் பாலதென்று விதிப்பாராயினர். பெண்ணைக் கொடுத்தற்

குரியோர் தாயொடுபிறந்தாரும் தன்னையரும் தாயத்தாரும் ஆசானும் முதலியோருமாவர்.

பெண்ணை ஒருவருமறியாது கொண்டுபோகும் வழக்கத்தைத் தவிர்க்குமாறே கொடுப்போர் வேண்டுமென விதிக்கப்பட்டது. கொடுத்தலுஞ் சுற்றமுந் தீயுஞ் சான்றாக ஆசான் வேள்விசெய்து கொடுத்தல்வேண்டுமெனப்பட்டது. கொண்டவிடத்தும் முதனாட் சந்திரனுக்கும் இரண்டாநாட் கந்தருவர்க்கும் மூன்றாநாள் அக்கினிக்கும் கன்னிகையைச் சமர்ப்பித்து நான்காநாளே அவளைக்கூடல்வேண்டுமென விதிக்கப்பட்டது.

வேட்டல் விதியுளி தீவலஞ்செய்தல் என்னுஞ் சொற்கள் விவாகத்துக்கு வழங்கத்தொடங்கியதும் இவ்விவாகவிதி வகுக்கப்பட்ட பின்னரேயாம். சுற்றத்தாரைக் கூட்டி அவர் முன்பாக மணமுடித்தல் அவசியமாயினமையால் மணப்பந்தரிடுதலும் மங்கலவாத்தியம் முழக்குதலும் ஆடல் பாடல் முதலியனவும் இதன்பின்னர்த் தொடங்கினவேயாம். மணவோலையனுப்பும் வழக்கமும் மணமுழவென்னும் வழக்கும் இதன்பின்னர் வந்தனவேயாம். மன்றல் என்னுஞ் சொல் சுகந்தமாகிய மணத்தின் பரியாயப் பெயர். தலைவனுந் தலைவியும் தமியராய் எதிர்ப்பட்டு மோந்து கொண்டாடு முடன்பாடு பற்றி வந்த பெயர் போலும்.

அது நிற்க, அகஸ்தியர்காலத்திலே வழங்கிய சொற்கள் பல பிற்காலத்திலே வழக்கிறந்தன. அவர்காலத்திலே வழங்காத சொற்கள் பிற்காலத்திலே வழங்குவனவாயின. அவர் காலத்திலும் தொல்காப்பியர் காலத்திலும் சகர அகரத்தை முதலாகவுடைய தமிழ்ச்சொற்கள் வழங்கவில்லை. சட்டி சட்டம் சட்டுவம் சட்டை சந்திரன் சஞ்சலம் சல்லி சனி முதலியன தமிழ்ச்சொற்களல்ல.

இக்காலத்திலே என்னவென்றும் என்னையென்றும் வழங்குஞ் சொல் அகஸ்தியர்காலத்திலே எவன்என வழங்கிற்று. அது தொல்காப்பியர் காலத்தும் அவ்வாறே வழங்கிவந்ததென்பது "அகத்திணை மருங்கின்" என்னுஞ்சூத்திரத்தாற் பெறப்படும்.

எவன் என்னும் பெயர்ச் சொற்கும் எவன் என்னும் வினுவிடைச் சொல்லுக்கும் வேற்றுமை ஓசை வேறுபாடு அக்காலத்துண்டு. என்ன என்னும் பொருளில் வரும் போது எவன் என்பது எடுத்துச்சரிக்கப்படும். பெயராய் வரும் போது எவன் என்பது படுத்துச்சரிக்கப்படும்.

## அகஸ்தியர் சூத்திரம்.

அகஸ்தியர் செய்த இலக்கண நூற் சூத்திரங்களுள் இறவாதெஞ்சியுள்ளன சிலவேயென முன்னே கூறினும். அவற்றுள் ஒன்றை இங்கே காட்டுதும்.

"வயிரவூசியுமயன்வினையிரும்பும்
செயிரறுபொன்னைச்செம்மைசெய்யாணியும்
தமக்கமைகருவியுந் தாமாமவைபோ
லுரைத்திறமுணர்த்தலு முரையதுதொழிலே"

இச்சூத்திரத்தை நோக்குமிடத்து அகஸ்தியர் காலத்திலே வயிரத்தை வயிரவூசிகொண்டு வெட்டிப் பலவகைப் பட்டமிடுந் தொழிலும் பொன்னினுலே பலவகைப் பணிகளுஞ் செய்யுந் தொழிலும் இரும்பினுலே பலவகைப் படைக்கலங்களும் மற்றைய கருவிகளும் இயற்றுந் தொழிலும் நடைபெற்றுவந்தனவென்பதும் அதனுல் அக்காலத் தமிழர் நாகரிகத்தில் மற்றைத் தேசத்தாரினும் மிக்குயர்ந்து விளங்கினுரென்பதும் துணியக் கிடக்கின்றன. அகத்திய சூத்திரங்கள் இப்போதகப்படுவன மிகச் சிலவேயாயினும் அவற்றை நோக்குமிடத்து அவற்றுல் அநுமானிக்கக் கிடக்கும் அக்காலத்துக் காரியங்கள் அனேகம்.

"ஆலுமானுமோடுமொடுவுஞ்
சாலுமூன்றும் வேற்றுமைத்தனுவே
செய்வோன்காரணஞ் செயத்தகுகருவி
யெய்தியதொழின்முதலியையுடனதன்பொருள்"

என்பது அகத்தியசூத்திரம்.

இதனை வழிநூலார்,

"மூன்றுவதனுருபாலானோடொடு
கருவிகருத்தாவுடனிகழ்வதன்பொருள்"

எனச் சுருக்கினர்.

## தமிழ் என்னுஞ் சொல்.

தமிழ் என்னுஞ் சொல் தமிழ்ச்சொல்லே. அது வடமொழியிலே திராவிடம் திரவிடம் திரமிளம் என வழங்கப்படுகின்றது. ஒருமொழியிலிருந்து ஒருமொழிக்குச் சொற்களை வாங்கி வழங்கும்போது, தற்சமம் தற்பவம் சிதைவு என மூன்றுவகையால் வழங்குவர். அவற்றுள் சிதைவாவது, அவ்வப்பாஷை உச்சாரணரீதிக்கியையத் திரித்துக்கொள்ளப்படுவதாம். அவ்வாறே தமிழ் என்னுஞ் சொல்லும் வடமொழியிலே திரமிளம் என்றாய்ப் பின் திரவிடம் திராவிடம் என்றாயிற்று. இப்படியே மணலூர் வெண்ணெய் நல்லூர் என்பன மணலூரம் வேணுநல்லூரம் என வடமொழி மகாபாரதத்திலே வழங்கப்பட்டன. அதுவுமன்றி வடசொற்களெல்லாம் தாதுக்களுடையன. திராவிடமென்னுஞ் சொல்லுக்கோ! முறையான தாதுவில்லை. அது நன்குகற்றுவல்ல பண்டிதரெல்லார்க்கும் உடன்பாடேயாம். உலகத்திலேயுள்ள பாஷைகளுக்கெல்லாம் அவ்வப்பாஷையிலேயே பெயர் ஒன்றுளதாதல் யாவராலும் மறுக்கப்படாதவுண்மை. சம்ஸ்கிருதபாஷைக்குச் சம்ஸ்கிருதமெனப் பெயரிட்டவர்கள் பிறபாஷையாளராவரோ? அங்ஙனமாயின் ஒவ்வொரு பாஷை

யாளருமொவ்வொரு பெயரிட்டிருப்பார்கள். அங்ஙனம் பெயரிட்டிருப்பார்களாயின் ஒருபாஷைக்கு அனேகபெயர்களுளவாகும். அங்ஙனமாகாது எல்லாப்பாஷையாளரும் சம்ஸ்கிருத மென்னுமொரு பெயராலேயே அதனை வழங்குதலால் எல்லாப் பாஷைகளும் தத்தம் பெயராலேயே வழங்குவனவென்பது சித்தாந்தமாம். ஆதலால் தமிழ் என்னும் பெயர் தமிழ்ச்சொல்லேயாம். இவ்வுண்மையறியாதார் தமிழ் என்னுஞ்சொல் திராவிடம் என்னும் வடசொல்லினின்றும் வந்ததெனக் கூறுவர். அதனை மறுத்துப் பின்னொருசாரார் வடமொழி தென்மொழியிலிருந்துண்டாயதென்று கூறுவர். அங்ஙனங் கொள்வது தொல்லாசிரியர் கொள்கைக்கு மாறும். அகத்தியர் வருதற்குமுந்தி நிரம்பாமொழியாய்க்கிடந்த தமிழ் அக்காலத்தே வேதசாத்திரங்களாற் சிறந்து விளங்கிய வடமொழியை யீன்றதென்பது தம்பி தமையனையீன்றகதைபோலாம். அதிபுராதன நூலா யின்றுநின்று நிலவுந் தொல்காப்பியத்தின் கண்ணும் வடமொழியாக்க விதி கூறப்பட்டது. வடமொழி தென்மொழிக்கு வேண்டும்போதெல்லாம் சொல்லும் பொருளும் நூலும் கொடுத்துதவும் பெரும் பண்டாரமாகவும் அஃதுணராது வடமொழிக்குத் தாய்மொழி தென்மொழியென்பது ஆராயாதார் கூற்றும்.

தமிழும் வடமொழியைப்போலச் சிவபெருமானுல் முதனூல் செய்யப்பெற்றமொழியாம். ஆதலின் தமிழும் வடமொழியைப்போலத் தெய்வத்தன்மை பொருந்திய மொழியாம்.

## மகேசுவர சூத்திரம்.

மகேசுவர சூத்திரத்தைச் சிவபெருமான் தமது டமருகத்தினின்றுந் தொனிப்பித்தருளினுர். அதனை வட

மொழியில் மகேசுவரசூத்திரம் என்றும் தமிழில் இசை நுணுக்கம் என்றும் கூறுவார்கள். இவ்வுண்மை

"தனிநடங்குயிற்றும் சம்பு நம்பெருமான்
றமருகப் பறைக்கண் அ இ உ ணு வென்
றமர்தருசூத்திரமாதியீரேழ்பெற
வடமொழிக்கியல்பாணினியாமுனிக்குத்
திடமுற நன்குதெரித்தமைபோல
விந்தமும்வேலையும் வீறுபோய்க்குன்றக்
கந்தமென்கமலக்கரத்தினை விதிர்த்த
வருந்தவக்கொள்கையகத்தியமுநிக்குத்
திருந்திசை நுணுக்கச் செந்தமிழியலினைச்
செப்பினன்" எனவரும் தாண்டவராயசுவாமிகள்

வாக்காற் பெறப்படும்.

மகேசுவரசூத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு இந்திரன் ஓரிலக்கணஞ்செய்தான். அஃது ஐந்திரமெனப்படும் இசைநுணுக்கத்தைக்கொண்டு குமாரக்கடவுள் தமிழில் குமரமென்னும் இலக்கணத்தைச் செய்து அகஸ்தியருக்கு உபதேசித்தார். அதனை ஆதாரமாகக்கொண்டு அகஸ்தியர் அகத்தியமெனப் பெயரிய தமிழ் இலக்கணத்தைச் செய்தார். தலைச்சங்கத்தின் வரலாறு மேல் வரும் ஆசிரியப்பாக் கூற்றாலுணரப்படும்.

"வேங்கடங்குமரிதீம்புனற்பௌவத்
தின்நான்கெல்லையினிருந்தமிழ்பயின்ற
செந்நாப்புலவர்செய்தியீண்டுரைப்பி
னுடகக்குடுமிமாடக்கூடலின்
முன்னர்ச்சங்கக்கன்மாப்பலகையிற்
றிரிபுரமெரித்த விரிசடைக்கடவுண்
மன்றன்மராத்தார்க்குன்றெறியிளஞ்சேய்
திண்டிறற்புலமைக்குண்டிகைக்குறுமுனி

புவிபுகழ்மருதங்கவினியமுரிஞ்சிப்
பதிமுடிநாகனிதியின்கிழவ
னினையர்நானூற்றுநாற்பத்தொன்பதின்ம
ரனையர்நாலுன்காயிர நூற்றொடு
நாற்பத்தொன்பதின்மர்பார்க்கிற்செந்தமிழோர்
புரிந்தனசெய்யுட்பெரும்பரிபாடலு
முதுமைபடுத்தநாரையுங்குருகுங்
கதியுறச்செய்தகளரியாவிரையு
மாங்கவரிருந்ததுமத்தொகையாகு
மீங்கிவர் தம்மையிரீஇயபாண்டியர்கள்
காய்சினவழுதிமுதற்கடுங்கோனீறு
யேசிலாவகையெண்பத்தொன்மதின்மர்
கவியரங்கேறினரெழுவராகு
மகத்துவமுடையவகத்தியமிலக்கணம்"

## தொல்காப்பியர்

தலைச்சங்கம். இவ்வாறு நடைபெற்றுவருங்காலத்தில் அகஸ்தியர் மாணுக்கருள் ஒருவரும் ஜமதக்கினிமுனிவர் புத்திரருமாகிய தொல்காப்பியர் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்தையும் அடக்கி ஒரு வழிநூல் செய்தார். அது கற்பவர்க்கு எளிதாகச் சுருக்கமும் விளக்கமுமுறச் செய்யப்பட்டது. அகத்தியம் போலப் பரந்ததன்று. தொல்காப்பியர் ஐந்திர வியாகரணமுங் கற்றவராதலின் அந்த ரீதியாகத் தாம் செய்த இலக்கணத்தையுஞ் செய்தார். அந்நூலை அகத்தியர்க்குக் காட்ட, அவர் அதங்கோட்டாசிரியருக்குக் காட்டுகவென்ன, அதங்கோட்டாசிரியர் அதனைப் பரிசோதித்து உத்தம நூலெனப் பாராட்டினர். அதன்பின்னர்ச் சங்கத்திலே நிலந்தருதிருவிற்பாண்டியன் சமுகத்திலே யாவருமொப்பவரங்கேற்றினர்.

தொல்காப்பியம் 1612சூத்திரங்களுடையது. அஃது இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர் என்னும் ஆசிரியர்களால் உரையெழுதப் பெற்றது. இளம்பூரணர் உரை எழுத்ததிகாரத்துக்கும், சேனாவரையர் உரை சொல்லதிகாரத்துக்கும், நச்சினார்க்கினியர் உரை எழுத்துச் சொல் பொருளதிகாரங்களுக்கும், கல்லாடர் உரை ஒருபகுதிக்கும் இருக்கின்றன.

## காக்கைபாடினியார்.

அகஸ்தியர் மாணாக்கர் பன்னிருவருள் இவரும் ஒருவராவர். இவர் யாப்பிலக்கணத்தை வேறுபிரித்துச் செய்தவர். இவரும் பனம்பாரனாரைப்போலக் குமரியாற்றைத் தெற்கெல்லையாகக் கூறுவர். இளங் காக்கைபாடினியார் என இன்னும் ஒருவர் பிற்றைநாளில் விளங்கினர். அவர் செய்த நூலில் "வடதிசைமருங்கில் வடுகுவரம்பாகத்—தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும்" எனத் தென்றிசையையும் கடல் எல்லையாகக் கூறினர். இவர் குமரியாறுள்ள காலத்தாரல்லர் என்பது நச்சினார்க்கினியருக்கும் உடன்பாடாம்.

இரண்டாஞ் சங்கமிருந்த கபாடபுரம் திருச்செந்தூருக்குத் தென்மேற்றிசையிலிருந்ததென்பர்.

நிலந்தருதிருவிற் பாண்டியன்காலத்திலேயே தலைச்சங்கமிருந்த தென்மதுரையும் அதனைச்சேர்ந்த நாற்பத்தொன்பது நாடுகளும் கடல்வாய்ப்பட்டழிந்தன. அந்த ஊழியோடு நதிகளும் பெரும்பதிகளும் பொருள்நிதிகளும் கலாநிதிகளும் எத்துணையோ பரிபாடல்களும்போய் மாண்டன. சேதுபந்தனந் தேய்ந்து ஈழமண்டலம் வேறுபட்டதும் இவ்வூழிகாலத்தே போலும். முதற்சங்கத்துப் புலவர்களுள் ஒருவராய முடிநாகராயர் ஈழமண்டலத்தா

ரென்பது அவர் பெயராலும் இலங்கைச் சரித்திரத்தாலும் துணியப்படும்.

முதற்சங்கத்திலே அரங்கேறிய நூல்களுள்ளே பிற்காலத்திலே பெயர்தானுங் கேட்கப்படாதிறந்த நூல்கள் எத்தனையோ பல. அவற்றுள்ளே இரண்டாஞ் சங்கத்திலே வழங்கினவுஞ் சிலவேயாம். அவையும் இரண்டாஞ் சங்கமிருந்த கபாடபுரத்தோடழிந்தன. இரண்டாஞ் சங்கத்தார்க்கு ஆதார நூலாயது தொல்காப்பிய மொன்றுமேயாம்.

## இடைச் சங்கம்

இச்சங்கத்தினது வரலாறு மேல்வருஞ் செய்யுட் கூற்றுனறியத்தக்கது.

"வடுவறுகாட்சிநடுவட்சங்கத்
தகத்தியர்தொல்காப்பியத்தமிழ்முனிவ
ரிருந்தையூரிற்கருங்கோழிமோசியா
ரெள்ளாப்புலமைவெள்ளூர்க்காப்பிய
னிறவாவிசையிற்சிறுபாண்டரங்கன்
றேசிகமதுரையாசிரியன்மாறன்
றவரொப்பாயதுவரைக்கோமான்
றேருங்கவிபுனைகீரந்தையரிவ
ரொன்பதோடடுத்தவைம்பதின்மராகும்
தவலருங்கேள்வித்தன்மையருள்ளிட்
டிவர்மூவாயிரத்தெழுநூற்றுவரே
வையகம்பரவச்செய்தசெய்யுளும்
இருங்கலிகடிந்தபெருங்கலித்தொகையொடு
குருகுவெண்டாளிதெருள்வியாழமாலை
யந்நாளிலக்கணமகத்தியபதனொடு
பின்னாட்செய்தபிறங்குதொல்காப்பிய
மதிநலங்கவின்றமாபுராணம்

4

புதுநலங்கனிந்தபூதபுராணம்
வல்லிதினுணர்ந்தநல்லிசை நுணுக்கமுந்
தாவாக்காலந்தமிழ்பயின்றதுவு
மூவாயிரத்தோரெழுநூற்றியாண்டு
பரீஇயசங்கமிரீஇயபாண்டியர்கள்
வெண்டேர்ச்செழியன்முதலாவிறல்கெழு
திண்டேர்க்கொற்றமுடைத்திருமாறன்
முரசுடைத்தானைமூவாவந்த
மரசுநிலையிட்டோரைம்பத்தொன்பதின்ம
ரிவ்வகையரசரிற்கவியரங்கேறின
ரைவகையரசராயிடைச்சங்கம்
விண்ணகம்பரவுமேதகுகீர்த்திக்
கண்ணகன்பரப்பிற்கபாடபுரமென்ப

இடைச்சங்கம் முதற்சங்கமழிந்தபின்னர் நெடுங்காலத்தின்மேல் வெண்டேர்ச்செழியனுலே நாட்டப்பட்டது. அவன் முதலாக வழிமுறையிருந்து நடாத்திஞேர் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மர். இச்சங்கத்தில் விளங்கிய புலவர்கள் அகஸ்தியர், தொல்காப்பியர், கருங்கோழிமோசியார், வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், மதுரையாசிரியன்மாறன். துவரைக்கோமான். கீரந்தையார் முதலியோர். இச்சங்கத்தார் தொகை ஐம்பத்தொன்பது. இச்சங்கத்தார்க்கு நூல் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், இசைநுணுக்கம் என்பன. இச்சங்கத்தில் அரங்கேறிய நூல்கள் எண்ணிறந்தன. அவற்றுள்ளே பெருங்கலித்தொகை, குருகு, வெண்டாளி, வியாழமாலே ஏன்பன விசேடமானவை. இச்சங்க நிலே பெற்றகாலம் மூவாயிரத்தெழுநூறு வருடம்.

இசை நுணுக்கம் இசைத்தமிழுக்கிலக்கணம். அஃதிலக்கணமாக விளங்கிய காலத்தில் அநேக இசைப்பா

டல்கள் தோன்றின இச்சங்க காலத்திலே இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் ஆராயப்பட்டன.

இலக்கணவிலக்கிய நூல்கள் இயற்றமிழிலும், தோத்திரப்பாடலெல்லாம் இசைத்தமிழிலும், கூத்த நூலெல்லாம் நாடகத்தமிழிலும் இயற்றப்பட்டன.

அரிமர்த்தனபாண்டியன்காலத்திலே அவனுக்கு மந்திரியாயிருந்து பின்னர்ச் சிவயோகியாய் விளங்கிய மாணிக்கவாசகசுவாமிகள் செய்தருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் வெளிப்பட்டது இச்சங்க காலத்தின் கடைக் கூற்றிலேயாம் திருவாசகம் இசையின்பாலது. மாணிக்கவாசகசுவாமிகள் வடமொழிவேதப் பொருளையெல்லாம் தமிழ்நாடுய்யும்வண்ணம் தமிழிலே சாமவேதமாக வெளிப்படுத்தியருளினர்.

இடைச்சங்ககாலத்திலே குதிரையைச் சேவல் என்றும் எருமையேற்றைக் கண்டியென்றும் வழங்கினர். அவ்வழக்குப் பிற்றைநாள் வீழ்ந்தது.

## கடைச்சங்கம்.

கபாடபுரம் அழிந்தபோது இடைச்சங்கத்திற்கு உரிய புஸ்தகாலயங்களும் கடல்வாய்ப்பட்டு அழிந்தன. அரசனு மிருக்கையிழந்து வடக்கின்கட் சென்றிருந்து இப்போதுள்ள மதுரைநகரை அமைத்து, ஆலவாயிலவிர்சடைக் கடவுளுக்குமோராலயமெடுப்பித்து, அந்நகரிலேயிருந்தரசியற்றிவந்தான். தெற்கின்கண்ணேயிருந்தழிந்துபோய மதுரையை நோக்கி இம்மதுரை வடமதுரையெனவும் வழங்கப்படும்

முடத்திருமாறன் இம்மதுரையிலே கடைச்சங்கம் ஸ்தாபித்துத் தமிழாராய்வித்துவந்தான். அதனை அவன்.

முதல் நாற்பத்தொன்பதின்மர் பாண்டியர் வழி வழி வளர்த்து வருவாராயினர். அது நிலையுற்றிருந்த காலம் ஆயிரத்துத் தொழாயிரத்தைம்பது வருஷம். கடைச்சங்கத்திலிருந்த புலவர்கள் இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதனிளநாகர், கணக்காயர், நக்கீரர், கீரங்கொற்றர், தேனூர்கிழார், மணலூராசிரியர், நல்லூர்ப்புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார், செல்லூர் ஆசிரியர், முண்டம்பெருங்குமரர், நீலகண்டனார், சீத்தலைச்சாத்தனார், உப்பூரிகுடிகிழார், உருத்திரசன்மர், மருத்துவன்றாமோதரனார், கபிலர், பரணர், கல்லாடர் முதலிய நானூற்று நாற்பத்தொன்பதின்மர். அவர்களாற் செய்யப்பட்ட நூல்கள் முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, வரி, பதிற்றுப்பத்து, எழுபதுபரிபாடல், குறுங்கலி, இறையனாரகப்பொருள், வள்ளுவர்குறள், பாரதவெண்பா முதலியன. அவர்களுக்கு இலக்கணப் பிரமாண நூல்கள் அகத்தியமுந் தொல்காப்பியமுமாம். இடைச்சங்கத்தில் வழங்கிய நூல்களுள்ளே இவையிரண்டுமே கடைச்சங்கத்தார்க்கு அகப்பட்டன. மற்றைய நூல்களெல்லாம் சமுத்திரவாய்ப்பட்டழிந்த துண்மையே யாமென்பது அவை கடைச்சங்கத்தார்க்குப் பிரமாண நூலாகாமையினாலும் வலியுறுத்தப்படும்.

இங்ஙனம் நடைபெற்றுவந்த கடைச்சங்கம், உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியன் இறத்தலோடும் நிலைதளர்ந்தொடுங்கிற்று. அச்சங்கத்திலே சமணர்களும் சைவர்களும் வைஷ்ணவர்களுமிருந்து விளங்கினரென்பது அக்காலத்து நூல்களாலினிது விளங்கும். பலசமயிகள் மாத்திரமன்று, நான்கு வருணத்தாருமே சங்கப்புலவர்களாய் விளங்கினரென்பதும் நன்கு புலப்படுகின்றது. கடைச்சங்க வரலாற்றை மேல்வரும் ஆசிரியப்பாக் கூற்றானுணர்க:—

"பெருங்கடைச்சங்கமிருந்தோர்யாரெனிற்
சிறுமேதாவியார்சேந்தம்பூதனா
ரறிவுடையரனார்பெருங்குன்றூர்கிழார்
பாடல்சான்றவிளந்திருமாறன்
கூடலாசிரியர்நல்லந்துவனார்
பரவுதமிழ்மதுரைமருதனிளநாக
ரவிர்கணக்காயர்நவினக்கீரர்
கீரங்கொற்றர்கிளர்தேனூர்கிழா
ரோருங்கலைமணலூராசிரியர்
நல்லூர்ப்புளியங்காய்ப்பெருஞ்சேந்தர்
செல்லூராசிரியர்முண்டம்பெருங்குமரர்
முசுறியாசிரியர்நீலகண்டனா
ரசைவிரிகுன்றத்தாசிரியரன்றி
நாத்தலங்கனிக்குஞ் சீத்தலைச்சாத்தர்
முப்பானுணருமுப்பூரிகுடிகிழா
ருருத்திரசன்மர்மருத்துவராகிய
நாமநாற்கலைத்தாமோதரனார்
மாதவளனாரோடேழுமிளநாகர்
கடியுங்காமப்படியங்கொற்றனா
ரருஞ்செயலூர்வாழ்பெருஞ்சுவனாருடன்
புவிபுகழ்புலமைக்கபிலர்பரண
ரின்னாத்தடிந்தநன்னாகரன்றியு
மொல்காப்பெருமைத்தொல்காப்பியத்துக்
குரையிடையிட்டவிரகர்கல்லாடர்
பேர்மூலமுணருமாமூலர்தம்மொடு
விச்சைகற்றிடுநச்செள்ளையார்முதற்
றேனூற்றெடுப்பச்செந்தமிழ்பகர்ந்தோர்
நானூற்றுவர்முதனாற்பத்தொன்பதின்மர்
பீடுபெறவுலகிற்பாடியசெய்யுண்
முத்தொள்ளாயிரநற்றிணைநெடுந்தொகை

யகநானூறு புறநானூறு
குறுந்தொகைசிற்றிசைபேரிசைவரியோ
டறம்புகல்பதிற்றுப்பத்தைம்பதோடிருபான்
பெறும்பரிபாடலுங்குறுங்கலிநூற்றைம்
பதுமுதலாகியநவையறுங்கலைக
ளக்காலத்தவர்க்ககத்தியமதனொடு
மிக்காமிலக்கணமும்விளங்குதொல்காப்பிய
மெண்ணூற்கேள்வியரிருந்ததாயிரத்துத்
தொளாயிரத்தைம்பதுவருடமெனப
விடர்ப்படாதிவர்களைச்சங்கமிரீயினார்
முடத்திருமாறன்முதலாவுக்கிரப்
பெருவழுதியீறாப்பிறங்குபாண்டியர்கள்
நரபதிகளாகுநாற்பத்தொன்பதின்ம
ரிவருட்கவியரங்கேறினர்மூவர்
புவியிற்சங்கம்புகழ்வடமதுரை
யாதிமுச்சங்கத்தருந்தமிழ்க்கவிஞ
ரோதியசெய்யுளுலவாப்பெரும்பொருள்
வாளாக்கேட்குந்தோளாச்செவிக்குங்
கேட்டுந்தெரியாவேட்டைநெஞ்சினுக்கு
நுழையாவாதலினுழைபுலன்றன்னொடும்
விழைவார்க்குரைக்கவேண்டுவர்தெரிந்தே"

## தமிழ்நாட்டார் அறிந்ததேயங்கள்.

"சிங்களஞ்சோனகஞ்சாவகஞ்சீனந்துளுக்குடகம் [வங்கங்
கொங்கணங்கன்னடங்கொல்லந்தெலுங்கங்கலிங்கம்
கங்கமகதங்கவுடங்கடாரங்கடுங்குசலந்
தங்கும்புகழ்த்தமிழ்சூழ்பதினேழ்புவிதாமிவையே"

என்னுஞ் செய்யுளால் பண்டைத் தமிழ்மக்களுக்குத் தமது தமிழ்நாடுமாத்திரமன்று, அந்நியநாடுகளும் அநேகந் தெரிந்தனவேயாம். சிங்களநாடு தமிழ்நாட்டுக்குத்

தென்கீழ்த்திசையிலுள்ளது. சோனகம் என்பது ஆரியாவர்த்தத்துக்கு வடமேற்றிசையிலுள்ளதேசாந்தரம். சாவகம் என்பது தமிழ்நாட்டுக்குத் தென்கீழ்த் திசையிலே அதிதூரத்திலே சமுத்திரத்திலுள்ளதேசம். சீனம் வடகீழ்த்திசையில் அதிதூரத்திலேயுள்ள தேசாந்தரம். சோனகமெனினும் யவனமெனினும் ஒன்றே. ஆரியாவர்த்தத்துக்கு வடமேற்றிசையிலுள்ள தேசமெல்லாம் அக்காலத்தில் யவனர் அதிகாரத்திலிருந்தமையால் சோனகமென்னுமொருபெயர்கொண்டே தமிழரால் வழங்கப்பட்டன போலும். யவனர் வாணிகம்பற்றித் தமிழ்நாட்டிற்கு வருவதுந் தங்குவதும் போவதுமாயிருந்தனர். யவனர் நுண்ணிய சிற்பத்திலும் வல்லவர்கள். தமிழ்நாட்டினின்றும் பண்டமாற்றி மீள்வதோடு கல்வித்துறைகளிலும் பல கற்றுப்போவாராயினர்.

சீனரும் தமது தேயத்திலில்லாத பண்டங்களைத் தமிழ்நாட்டினின்றுங் கொண்டேகுவர். தமிழ்நாட்டிற் சுருங்கியபொருளைத் தமது நாட்டினின்றுங் கொண்டு வந்து விற்பர். அவர் கொண்டுவந்து விற்கும் பொருள் பட்டுங் கர்ப்பூரமுமாகும்.

தமிழர் இங்ஙனம் பல தேயத்தாரோடு பன்னெடுங் காலம் பயின்றாரேனும் அவர்களுடைய சொற்களையாயினும் பழக்க வழக்கங்களிற் சிலவற்றையாயினும் மேற்கொண்டாரில்லை. தமிழிலே வந்து வழங்குஞ் சீனச்சொல் ஒன்றேனுமில்லை.. (பீங்கானென்னுஞ்சொல் பிற்காலத்து வந்துவழங்குவது. அதுவும் ஐரோப்பியரால் வந்தது.) சீனக்காரம், சீனப்பட்டு, சீனமல்லிகை, சீனமிளகு, சீனமுத்து முதலிய சொற்கள் சீனதேசத்திலிருந்து தமிழ் நாட்டில் வந்த பண்டங்களையாயினும் சீனமென்னுமடை கொடுத்து வழங்கப்படுந் தமிழ்ச்சொற்களாம். பண்டைக்

காலத்துத் தமிழ்மக்கள் சீனச்சொற்களை மாத்திரமன்று மற்றைப்பாஷைச் சொற்களையும் வழங்காதொழிந்தார்கள். பறங்கிகள் இந்நாட்டில் அநேக பண்டங்களைக் கொண்டுவந்து விலைசெய்தாராயினும் அப்பொருளையெல்லாம் பறங்கியென்னுமடையிட்டுத் தமிழ்ப்பெயர்களால் வழங்குவாராயினர். பறங்கிச் சாம்பிராணி, பறங்கிக்கிழங்கு, பறங்கிக்கொடி, பறங்கிப்பாஷாணம் முதலியன அப்பண்டங்களாம்.

## பூர்வசமயநிலை.

மருத முல்லை குறிஞ்சி நெய்தல் பாலையென்னும் நிலங்களிலுள்ளார்க்கு லௌகிக நெறிக்குரிய இந்திரன் முதலிய திணைத்தெய்வ வழிபாடுண்டேயாயினும் வைதிகநெறிக்குரிய சிவவழிபாடுமுண்டென்பதும் நன்கு துணியப்படும். சிவதத்துவங்களெல்லாம் அக்காலத்தார் நன்காராய்ந்தவரென்பதுந் துணியப்படும். இறைவனொருவனுண்டென்றும், அவ்விறை வாக்கானும் மனத்தானும் இப்படியன் இவ்வண்ணத்தனென்றுணரப்படாத பரம்பொருளென்றும் துணிந்து அப்பரம்பொருளை எல்லாங் கடந்தவர் எனப் பொருள்தரும் கடவுள் எனப் பெயரிட்டு வழங்குவாராயினர். ஆதாரமின்றித் தனித்து விளங்குஞ் சுயஞ்சோதியெனக் கொண்டு கந்தழியென்றும் பெயரிட்டனர். தொல்காப்பியர்

"கொடிநிலைகந்தழிவள்ளியென்ற
வடுநீங்குசிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள்வாழ்த்தொடுகண்ணியவருமே"

என்னுஞ் சூத்திரத்திலே கடவுளைக் கந்தழியென்று கூறினர். அதற்கு நச்சினார்க்கினியர் "ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்தபொருள்" என உரை கூறுவர். இந்திரன் முதலிய தேவரொல்

லாம் ஒடுங்குங் காலத்துத் தம்மிடத்தடக்கித் தாமே முழுமுதலாகினிற்பதுபரம்பொருளொன்றுமே என்பதும், மற்றைத் தேவரெல்லாம் தோற்றமுமொடுக்கமுமுடைய ரென்பதும், பண்டைத் தமிழ்மக்கள் நன்ருக உணர்ந்த வுண்மைகளாம். தேவர்கள்பாற்பெறற்பாலவாய போகங் களை அவரை வழிபட்டுப் பெறுவார்கள். வேள்விகள் தேவர்களுக்குச் செய்யப்படுவன. போகங்களை அனுபவி த்த ஆன்மாக்கள் அப்போகங்களில் உவர்ப்புற்று வீடுகா தலிக்கும். அப்போது வானப்பிரஸ்தம் சந்நியாசங்கள் வாயிலாகச் சிவபரம்பொருளை வழிபட்டு வீடுபெறும். அருவாகிய பரசிவப்பொருள் தேவர்கள் துன்பத்தையும் மானுடர் துன்பத்தையும் நீக்குமாறு திருவுள்ளத்தில் முகிழ்த்த பெருங் கருணையினுலே உருவத் திருமேனி கொண்டருளுவரென்பதும் பண்டைத் தமிழ் மக்கள் கொண்டவுண்மையாம். பரசிவம் நிர்விகாரியென்பது சுரு தியன்றே, அவர் கருணைகொள்ளுமிடத்து விகாரியென் னுங் குற்றமுண்டாகாதோவெனின், ஆகாது. கருணை அவருக்கு இயல்பாகிய ஒருசக்தி. ஆதலால் அவர்கொ ண்டருளும் உருவத்திருமேனியெல்லாம் அருட்டிருமே னிகளேயாமெனக் கொள்ளல்வேண்டும். புறநானூற்றுக் காப்புச்செய்யுள்பாடிய பெருந்தேவனுர் இத்தத்துவமெ ல்லாம் நன்குணர்ந்தவரென்பது அச்செயுளாற் றுணியப் படும். அச்செய்யுள் வருமாறு:—

"கண்ணிகார்நறுங்கொன்றை காமர்
வண்ணமார்பிற்றருங்கொன்றை
யூர்திவால்வெள்ளேறேசிறந்த
சீர்கெழுகொடியுமவ்வேறென்ப
கறைமிடறணியலுமணிந்தன்றக்கறை
மறைநவிலந்தணர் நுவலவும்படுமே

பெண்ணுருவொருதிறனுகின்றவ்வுருத்
தன்னுளடக்கிக்கரக்கினுங்கரக்கும்
பிறைநுதல்வண்ணமாகின்றப்பிறை
பதினெண்கணனுமேத்தவும்படுமே
யெல்லாவுயிர்க்குமேமமாகிய
நீரறவறியாக்கரகத்துத்
தாழ்சடைப்பொலிந்தவருந்தவத்தோற்கே"

சிவபெருமான் இயற்கை யழகுடையவரென்பார், இயல்பிலே மாலையாகப் பூக்குங் கொன்றையை அவர்க்கு மாலையாக எடுத்துக் கூறினர். தருமத்தை வாகனமாகவுடையவரென்பார், தருமசொரூபியாகிய வெள்ளேற்றை எடுத்துக் கூறினர். அவருடைய தொழிலும் தருமமே என்பார், கொடியும் வெள்ளேறென்றெடுத்துக் கூறினர். உயிர்களை வருத்தவெழுந்த கொடிய ஆணவவிருளைக் கடிந்தவரென்பது போதரக், கறைமிடறென்றார். சுத்தநிர்க்குணசிவம் பெருங்கருணையினாலே சிவமுஞ் சத்தியுமாகி உலகத்தையெல்லாந் தோற்றுவித்தமை போதரப், பெண்ணுருவொருதிறனுகின்று என்றார். வருந்தியாற்றுது தம்மையடைந்தவர்க்குப் பேரின்பத்தைக் கொடுக்கும் பெருங்கருணைநிதியென்பது குறிப்பார் "பிறைநுதல்வண்ணமாகின்றப்பிறை பதினெண்கணனுமேத்தவும்படுமே"என்றார். இப்படியே சிவபெருமான் ஆன்மாக்களை உய்யக்கொண்டருளுமாறு கொள்ளும் அருட்டிருமேனியினது சாங்க உபாங்கங்களின் குறிப்பெல்லாம் பண்டைத் தமிழ்மக்கள் நாமறிந்ததிலும் அதிகமாக அறிந்தாராவர்.

இன்னும் தொல்காப்பியத்தில் ஓதற்பிரிவு கூறுமிடத்து ஞானசாத்திர ஆராய்ச்சியின்பொருட்டுப் பிரிவுக்குக் காலமும் சாஸ்திரங்களுங் குறிக்கப்பட்டிருத்தலின் பண்டைத் தமிழ்மக்கள் ஞானசாஸ்திரப் பயிற்சியுமுடையராயிருந்தாரெனத் துணியப்படும்.

"வேண்டியகல்வியாண்டுமூன்றிறவாது"

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதற்கு நச்சினார்க்கினியர் உரை:—துறவறத்தினைக் கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது. அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தைக் கடவாது. மூன்றுபதமாவன, அதுவென்றும் நீயென்றும் ஆனையென்றுங் கூறும் பதங்களாம். அவை பரமுஞ் சீவனும் அவ்விரண்டுமொன்றுதலும் ஆதலின் இம்மூன்றுபதத்தின்கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளையுணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறுணர்ந்துகொள்க. இது மூன்றுவருணத்தார்க்குங் கூறினர். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப்பொருளைக் கூறிய தமிழானும் உணர்தல் "உயர்ந்தோர்க்குரிய" என்பதனான் உணர்க.

மூன்றுபதமாவது தத்துவமசிமகாவாக்கியம். இம்மகாவாக்கியத்தை விளக்குவன வேதோபநிடதங்களும் ஆகமங்களுமாம்.

## தொல்காப்பியம்.

தொல்காப்பியர் செய்தமையால் தொல்காப்பியமெனப்பட்டது. இதுவே இப்போதுள்ள தமிழ்நூல்களுக்கெல்லாம் தாய்நூலாம். இதுபோலும் முதிய நூல் எப்பாஷைக்கண்ணுமில்லை. வேதவியாசர் வேதங்களை வகுத்தகாலத்துக்கு முந்தியது. தலைச்சங்கத் திறுதிக்காலத்திலே செய்யப்பட்டது. இடைச்சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் ஆதாரநூலாயிருந்ததுமன்றி இக்காலத்தார்க்கு நூலாகவுள்ளது. இடைச்சங்கம் நிலைபெற்ற காலம் 3700 வருடம் கடைச்சங்கமிருந்தவருடம் 1950 கடைச்சங்கம் அழிந்தபின்னர்க் கழிந்தவருடம் இதுகாறும் 1800. ஆகவே தொல்காப்பியம் 7000 வருடத்துக்கு முந்தியது என்பது நன்கு காட்டப்படும். முதற்சங்கத்து

நூலெல்லாம் அழிந்து பெயர்தாமுங் கேட்கப்படாதொழிந்துபோகத் தொல்காப்பியமாத்திரமிறவாது நங்காலத்திலுநின்று நிலவப்பெற்றது தமிழ்மாதும் தமிழ்நாடுஞ் செய்த புண்ணியமேயாம்.

இந்நூல் அகத்தியத்துக்கு வழிநூலாயினும் இதற்குப் பிற்படத் தோன்றிய இலக்கணநூல்களுக்கெல்லாம் முதனூலாம். இஃது இயல் இசை நாடகமென்னுமுத்தமிழுக்கும் இலக்கணங் கூறும் அகத்தியத்தைத் தழுவி இயற்றமிழை மாத்திரம் வேறுபிரித்து அதன் இலக்கணத்தை எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்று மூன்று பகுதியாற் கூறுவது. பொருளதிகாரத்தில் யாப்பும் அணியுங் கூறப்படுதலின் பஞ்சலக்கணமுங் கூறுவதுமாம்.

எழுத்ததிகாரம் சிறப்புப்பாயிரத்தை விட நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் என ஒன்பது பகுதியினையுடையது.

சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என ஒன்பதுபகுதியினையுடையது.

பொருளதிகாரமும் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியலென ஒன்பதுபகுதியினையுடையது. ஆகவே தொல்காப்பியம் மூன்றதிகாரமும் ஒவ்வோரதிகாரத்துக்கும் ஒன்பது பகுதியாக இருபத்தேழு பகுதியுமுடையது. எழுத்ததிகாரம் நானூற்றெண்பத்துமூன்றும், சொல்லதிகாரம் நானூற்றறுபத்து

மூன்றும், பொருளதிகாரம் அறுநூற்றறுபத்தாறுமாக 1612 சூத்திரங்களுடையது.

இந்நூலுக்கு உரைசெய்தவர்கள் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய கல்லாடரும் இளம்பூரணரும் சேனாவரையரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் என ஐவர்.

நூன்மரபாவது இந்நூலுக்கு முதற்காரணமாகிய எழுத்துக்களினது இலக்கணங் கூறும் இயல்.

மொழிமரபாவது எழுத்தாலாகு மொழியினது இலக்கணமுணர்த்தும் இயல்.

பிறப்பியலாவது எழுத்துக்களது பிறப்புணர்த்துமியல்

புணரியலாவது மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்குமுறைமை கூறும் இயல்.

தொகைமரபாவது இன்ன இன்ன வீற்றுமொழிகள் இன்னவாறு புணருமெனத் தொகுத்துத் தொகுத்துக் கூறுமியல்.

உருபியலாவது உருபுகளோடு பெயர் புணருமாறு உணர்த்தும் இயல்.

உயிர்மயங்கியலாவது, உயிரீறுநின்று வன்கணத்தோடுஞ் சிறுபான்மை மேனைக்கணங்களோடும் மயங்கிப் புணருமியல்புணர்த்தும் இயல்

புள்ளிமயங்கியலாவது, புள்ளியீறு வன்கணத்தோடுஞ் சிறுபான்மை மேனைக் கணத்தோடும் புணருமாறு கூறும் இயல்.

குற்றியலுகரப்புணரியலாவது, குற்றியலுகரவெழுத்துக்கள் புணருமாறு கூறும் இயல்.

இவ்வாறே எழுத்ததிகாரம் ஒன்பதியலால் எழுத்தி னிலக்கணமெல்லாம் எஞ்சாமற் கூறுவதாம். இவ்வதிகா ரத்துக்கு நச்சினார்க்கினியர் செய்தவுரை மிகச்சிறந்தது. இவ்வுரையால் அகஸ்தியர் காலத்தும் தொல்காப்பியர் காலத்தும் வழங்கிய சொற்கள் பல நச்சினார்க்கினியர்கா லத்துக்கு முன்னேதானே வழக்கிறந்தனவென்பது தெரி கின்றது.

எழுத்ததிகாரத்தில் முதற்சூத்திரத்தால் எழுத்து இன்ன தன்மையது எனக் கூறாது எழுத்துக்களது பெய ரும் தொகையும் முறையுங் கூறினார். பின்னர் வழிநூல் செய்தோர் "மொழிமுதற்காரணமாமணுத் திரளொலியெ ழுத்து" என முதற்கண் இலக்கணங் கூறினர். தொல்கா ப்பியர் அதனைப் பிறப்பியற்புறனடைச் சூத்திரமாகிய

"எல்லாவெழுத்தும்வெளிப்படக்கிளந்து
சொல்லியபள்ளியெழுதருவளியிற்
பிறப்பொடுவிடுவழியுறழ்ச்சிவாரத்
தகத்தெழுவளியிசையரிறபநாடி
யளபிற்கோடலந்தணர்மறைத்தே
யஃதிவணுவலாதெழுந்துபுறத்திசைக்கு
மெய்தெரிவளியிசையளபுநுவன்றிசினே"

என்னுஞ் சூத்திரத்தால் விரித்துக் கூறினர். இச்சூத் திரத்தால் இசைத்தமிழுக்குரிய எழுத்துக்களது ஓசை வேறுபாடுகளை யெடுத்துக் கூறாது இயற்றமிழுக்குரிய ஓசைவேறுபாடுகளை மாத்திரமே எடுத்துக் கூறினர் என் பது நன்கு விளங்குகின்றது.

எடுத்துச்சரிக்க ஒருபொருளும் படுத்துச்சரிக்க மற் றொருபொருளும் தருவரிவடிவில் எழுத்துவேறுபாடு சிறி துமில்லாத மொழியுமுண்டென்பது இவ்வதிகாரத்திற்

கூறப்படுகின்றது. தபு என்னுஞ்சொல் எடுத்துச்சரிக்கக் கொல் என்னும் பொருளும், படுத்துச்சரிக்க விடு என்னும் பொருளுந் தருவதாம். இதனை

"உப்பகாரமொன்றெனமொழிப
விருவயினிலையும்பொருட்டாகும்மே"

என்னுஞ் சூத்திரத்தானுமுரையானுமறிக. தொல்காப்பியர்காலத்தில் யகரம் ஆகாரத்தோடு கூடி யல்லது மொழிக்கு முதலாகாது. அஃது

"ஆவோடல்லதுயகரமுதலாது" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறியப்படும். அவருக்குப் பிற்காலத்தார் "அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்" எனச் சூத்திரஞ்செய்து யகரம் இவ்வாறுயிரோடும் மொழிக்கு முதலாமென்றனர்.

தொல்காப்பியர் சூத்திரஞ் செய்த காலத்திலே யவனர் யுகம் யூகம் யோகம் யௌவனம் என்னுஞ் சொற்கள் வடமொழியிலிருந்து வந்து தமிழில் அருகி வழங்கினவேனும், தமிழ்ச்சொல்லுக்கே இலக்கணஞ்செய்யப் புகுந்தாராதலின் அவற்றைத் தமிழ்ச்சொல் அல்லவென்றொதுக்குவாராயினர். பின்னர் நூல்செய்தோர் காலத்தில் வடசொற்கள் தமிழில் வந்து பெருகி வழங்கினமையால் அவற்றைத் தழுவுவாராயினர்.

தொல்காப்பியர்காலத்திலே ஒருமொழிக்கண்ணே ஞ் ந் ம் வ் என்னும் புள்ளிகளின் முன்னர் யகரம் மயங்கி வந்ததாகத் தெரிகின்றது. அவ்வழக்கு நச்சினார்க்கினியர் தங்காலத்துக்கு முன்னர் வீழ்ந்ததாகக் கூறுவர். உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என மயங்குதல் இக்காலத்துண்டேனும் அது இருமொழிக்கண் வருவது.

"ஞ ந ம வ வென்னும் புள்ளிமுன்னர்
யஃகானிற்றன் மெய்பெற்றன்றே"

என்னுஞ் சூத்திரமொருமொழிக்கண் வருமயக்கத்தைக் கூறியதாம்.

இவ்வதிகாரத்தால் இக்காலத்திலே சிதைந்து சொரூபந்தெரியாமல் வழங்குகின்ற சிலசொற்களினது பழைய வடிவங்கள் விளங்கக்கிடக்கின்றது.

பண்டைக்காலத்தில் அந்தாளி தெரிகின்றதென்பது அதோலைதெரிகின்றது அந்தா தெரிகின்றது என இக்காலத்தில் மருவி வழங்குகின்றது. அந்தோளி இந்தோளி எந்தோளி என்பன, அவ்விடம் இவ்விடம் எவ்விடம் என்னும்பொருள். இதனைச் "சுட்டுமுதலாகியவிகரவிறுதியும்" என்னுஞ்சூத்திரத்தானுமுரையானுமறிக.

ஊனென இக்காலத்துவழங்குஞ் சொல் தொல்காப்பியர்காலத்திலே ஊவெனவும் வழங்கிற்று அது னகரம் பெற்றே வழங்குவதாயிற்று.

இவ்வாறே மற்றைய அதிகாரங்களிலுமுள்ள நுட்பங்களுட் சிலவற்றை எடுத்துக்காட்டப்புகின் விரியும். தொல்காப்பியத்தைக் கிரமமாகக் கடைபோகக் கற்பவர்க்குளதாகும் கல்விப்பெருக்கமும் கல்விச்சுவையும் அதனானுளதாகுமின்பமும், பண்டைக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சிக்குக் கிடைக்குஞ் சாதனங்களும் அக்காலத்து ஆசாரம் அரசியல்முறை குடிசெய்முறை இவற்றின் சிறப்பும் மக்களுக்கு வகுக்கப்பட்ட ஆச்சிரமங்களின் பெருமையும் அளப்பரிதாம். து வாளா இலக்கண ன்று. இதனால் அறியக்கிடக்குங் கல்விப்புதையல் அளப்பரிது. இதனைத் தமிழ்மக்கள் யாவரும் பாடசாலையிற் கல்லாது போகினும் வீட்டில் தாமாகக் கற்றாயினும் பயன்கொள்ளக்கடவர்.

## தமிழர் ஆரியரே.

ஆரியதேசம் இமயமுதல் கன்னியாகுமரி வரையுமுள்ள தேசமாம். அதில் இமயமுதல் விந்தமலைவரைக்குமுள்ளபகுதி ஆரியாவர்த்தமெனப்படும். (மநு. 11. 22) ஆரியதேசமே ஆரியர்க்குப் பூர்வமுதலாக வுரிமையுள்ள தேசம். விந்தியமலைக்குத் தெற்கே குமரிவரையுமுள்ள பகுதி தக்ஷிணமெனப்படும் ஆரியர்கள் மிக நெருங்கிக் குடிகொண்டிருந்தமையால் உத்தரதேசம் ஆரியாவர்த்தமெனப்பட்டது. ஆவர்த்தம் என்பது குடிநெருங்கிய விடம். தக்ஷிணதேசத்திலே நருமதைக்கும் கோதாவிரிக்குமிடையேயுள்ள பிரதேசம் தண்டகாரணியமெனப்படும். இத்தண்டகாரணியத்துக்குத் தெற்கின்கண்ணே குமரிவரையுமுள்ளதேசம் தமிழகமெனப்படும். தமிழகம் இடையிடையே சிறிய கிராமங்களும் காடுகளு முடையதாயிருந்தது. தமிழகத்திலே அகத்தியர் வரும்போது குடிகளிருந்தார்களென்பது காஞ்சிப்புராணத்தால் நன்குதுணியப்படும். அதுமாத்திரமன்று, அவர் தாம்புகுந்த நாட்டிலுள்ளாரோடு பயிலும்போது அவர்கள் பாஷையையும் நன்காராய்ந்தவராதல்வேண்டுமன்றோ. அதனை ஆராயப் புகுந்து, அடைவுபிறழ்ந்தோ ஓதற்கெளிதாகாதோ கிடந்த பூர்வ இலக்கணத்தை மிக்க சிறப்பமைய விரித்து அகத்தியமெனத் தம்பெயராற் செய்தமையாலுந் துணியப்படும். வேற்றுநாட்டிற் புகுந்து அந்நாட்டாரால் நன்குமதிக்கப்பட விரும்பும் புலவர் அந்நாட்டுப் பாஷையைக் கற்று நூல்செய்தல் இயல்பு. வீரமாமுனி என்னும் பெஸ்கி, அவர்க்குப் பன்னெடுங்காலத்துக்குமுன் விளங்கிய யவனாசாரியர், போகர் என்னும் அந்நியதேசத்தார் இந்தியாவில் வந்ததும் நூல்செய்ததும் நோக்கத்தக்கன. இவர்கள் பெயர்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. அது

நிற்க, ஆரியர் ஆசியகண்டத்தின் மத்தியபிரதேசத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து பின்னர்ப் பிரிந்து பலதிசைகளிலுஞ் சென்று குடியேறிய ஒரு மனுஷக்கணமென்பது ஐரோப்பிய பண்டிதர் கொள்கை. ஆயினும் அப்பண்டிதர்களும் மத்திய ஆசியாவென வநுமானிக்கின்றார்களே யன்றித் திட்டமாகத் துணியவில்லை. (The ancestors of the Aryan races of Europe and Asia are believed by many to have had their seats in central Asia.—*Hints on English etymology—Charles Annandale M. A., LL. D.*)

சிருட்டியாதி சம்பவங்களைக் கிரமமாகவெடுத்துக் கூறும் மனுநூல் ஆரியர்க்குரியதேசமிதுவென்றும் அதற்கெல்லை இவையென்றும் அஃது ஆரியாவர்த்தமெனப்படுமென்றும் மிக்க திட்பநுட்பமாகக் கூறியிருக்கின்றமையால் ஐரோப்பிய பண்டிதரது வெள்ளனுமானத்திலும் மநுநூற்கூற்று மிக்க வலியுடைத்தன்றோ. பூர்வத்தில் ஆரியர் வேறிடத்திருந்து ஆரியாவர்த்தத்துக்கு வந்ததாகப் பிரபலநூல்களிற் கூறப்படவில்லை. ஆரியாவர்த்தமென்னுஞ்சொல் ஆரியர் நெருங்கிக் குடிகொண்ட விடமெனப் பொருள்தருவதென மேலேகூறப்பட்டது. இதனால் உத்தரம் குடிப்பெருக்கமும் தக்ஷிணம் குடிச்சுருக்கமுமுடையனவென்பது பெறப்படும். அதனால் உத்தரத்தில் ஆரியர் காலந்தோறும் பெருகினர். பெருகுந்தோறும் எல்லைகடந்து தென்னாட்டிலுஞ் சென்று குடிகொள்வாராயினர். ஒருகாலத்து மேருத் தாழ்ந்து தெற்குயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே. ஆண்டிருத்தற்குரியரெனத் தேவர்களால் வேண்டப்பட்டதும் அவ்வாறே பதினெண்கோடி வேளிருளிட்ட அருவாளரையுமுடன்கொண்டு அகத்தியனார் தென்னாட்டில் வந்து வதிந்தாரென்பதும் மேற்கூறியதை வலியுறுத்தும்.

தெற்கின்கண்ணே ஆதிதொட்டு வாழ்ந்த ஆரியர்க்குத் தமிழும் வடக்கின்கண்ணே வாழ்ந்த ஆரியர்க்குச் சம்ஸ்கிருதமும் சிவபிரானால் அருளிச்செய்யப்பட்டன. இவ்வுண்மை,

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" என்னுஞ் செய்யுளாற்றுணியப்படும்.

தமிழைத் தென்மொழியென்றும், சம்ஸ்கிருதத்தை வடமொழியென்றும் திசைபற்றி வழங்குவாராயினர். இதனால் பூர்வத்தில் இந்த இருமொழிகளுமே ஆரியதேசத்தில் வழங்கினவென்பதூஉம் துணியப்படும். கம்பர் "வடசொற்குந் தென்சொற்கும் வரம்பாகும் வேங்கடம்" எனக் கூறியது இதனை வலியுறுத்தும்.

இருபாஷையாளரும் ஆரியரேயாதலின் ஒத்த சரீரவடிவமும் ஒத்தகுணமும் ஒத்தகொள்கையும் ஒத்தபழக்கமும் ஒத்தவுடையுமுடையராய்ப் பண்டுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். இருவர்க்கும் வேதமொன்றே, புராணமொன்றே, மிருதியொன்றே, இதிகாசமொன்றே, சரியையொன்றே, கிரியையொன்றே, யோகமொன்றே, ஞானமொன்றே.

தமிழர் ஆரியரின் வேறாயின் இவையெல்லாமொத்திரா. மற்றெல்லாம் சார்பினால் ஒருவாறு ஒத்திருக்குமெனக் கொள்ளினும் சரீரவடிவமேனும் சிறிதும் ஒத்திராது. மலாயர், சீனர், காப்பிரியர் முதலிய மனுஷகணங்களிலே தமிழர் சேர்த்தெண்ணவும்படார். தமிழர் தாம் எக்கணத்திற் சேர்த்தெண்ணப்படத் தக்காரென்னிற் சுத்த ஆரியகணத்திலேயே சேர்த்தெண்ணப்படத் தக்காரென்பது வெள்ளிடைமலைபோற்றெள்ளிதாம்.

அநாரியர் என்றொரு வகுப்பாருளரன்றோ. அவ்வகுப்பிலே தமிழர் சேராரோவெனிற் சேரார். அநாரியரா

வார் தேகப்பொலிவால் ஆரியரோடொப்புடையரேனும் வேதபாகியராய் அநாசாரமுடையராய்க் கோமாமிசம் புசிப்பவராயுள்ளவர். (பௌதாயனர்) இவ்விலக்கணங்கள் சிறிதுமில்லாமையால் தமிழர் அநாரியரெனப் போகார். பூர்வத்தில் தமிழர் அநாரியராயிருந்து பின்னர் அகத்தியரால் ஆரியராக்கப்பட்டவராகாரோவெனில் வேதம் ஆரியருள்ளும் முதன்மூன்றுவருணத்தாருமே ஓதுமுரிமையுடையர். ஆதலின் அநாரியர் வேதம் ஓதுதற்குச் சிறிதும் அருகமில்லாதவரன்றோ, அவர்க்கு வேதநெறியை உபதேசித்தலுங் கூடாதன்றோ அன்னோர்பால் அகஸ்தியர் சென்றதும் சென்று வேதநெறியை உபதேசித்ததும் சிஷ்டாசாரத்துக்கும் சாத்திரத்துக்கும் விரோதமாமன்றோ. அகஸ்தியர் தென்னாட்டிற் புகுந்தது தமிழர் ஆரியரென்னுமுரிமைபற்றியேயாம். இதனாலுந் தமிழர் ஆரியரென்பது நன்கு துணியப்படும்.

தமிழரும் ஆரியரும் ஜாதியால் ஒருவரேயாயினும் பாஷையால் வேறாயினர். வேறாயினுஞ் சமயத்தாலும் ஆசாரத்தாலும் ஒருவரே.

மூரிமுழங்கொலி நீரானான் கண்டாய்
முழுத்தழல்போன்மேனிமுதல்வன் கண்டாய்
ஏரிநிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க்கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலையுறை யெம்மண்ணல் கண்டாய்
வாரிமதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

இத்தேவாரத்தால் இருவர்க்குஞ் சிவபெருமானே கடவுள் என்பதும் இனிது நாட்டப்படும்.

பூர்வத்திலே ஆரியரென்னும் பெயர் பரதகண்டத்திலே வைதிகநெறியுடையராயுள்ள மக்களுக்கெல்லாம் பொதுப்பெயராம். பின்னர் ஆரியாவர்த்தத்திலே ஆரியர் மிக்குப் பெருகிப் பொலிந்தமையால் ஆரியர் என்னும் பெயர் அவர்க்குச் சிறப்பாயிற்று. அவர் பேசுமொழியும் ஆரியமொழியென வழங்குவதாயிற்று. பின்னர் அம்மொழி நோக்கி அதுபேசுவார் ஆரியரெனப்பட்டனர். தெற்கின்கண்ணேயுள்ள ஆரியரும் அவர் பேசுந் தமிழ்மொழிநோக்கித் தமிழரெனப்பட்டனர். ஆரிய மொழியால் வழிபட்டார்க்கு ஆரியனும் தமிழால் வழிபட்டார்க்குத் தமிழனும் வெளிப்பட்டருள்புரியும் வேதமுதல்வனது இயல்பு இத்தேவாரத்தால் வெளியாகின்றது. அதுமாத்திரமன்று இருமொழியாளரும் வைதிகமாக்களென்பதும் அதனால் அவர்கள் ஆரியமாக்களென்பதும் ஒருதலை.

தந்தம் மொழிப்பெருமை நோக்கிப் பண்டிதருள் ஒருசிலர் எம் ஆரியமொழி சிறந்தது எம் தமிழ்மொழி சிறந்தது என்று ஒருவரோடொருவர் மாறுபட்டுப் பகைத்து நிற்றல் பண்டைக்காலத்துமுள்ளது. இவ்வுண்மை,

> "ஆரியநன்று தமிழ்தீதெனவுரைத்த
> காரியத்தாற்காலக்கோட்பட்டானைச்-சீரிய
> வங்கண்பொதியிற்கைத்தியனாரணையாற்
> செந்தமிழேதீர்க்கசுவாகா"

என நக்கீரர் பாடிய மந்திரச்செய்யுளால் நன்கு துணியப்படும்.

இன்னும் உத்தரத்தாரும் தக்கிணத்தாரும் தம்முட் பெண்கொள்ளுதலும் கொடுத்தலும் வழக்கமாகவுடையர்.

## பரிபாடல்.

தலைச்சங்கப் புலவர்களாற் செய்யப்பட்ட பரிபாடல்கள் எண்ணிறந்தன. அவையெல்லா மழிந்தொழிந்தன. கடைச்சங்கப் புலவர்களாற் பாடப்பட்ட பரிபாடல் எழுபது. பரிபாடல் என்பது ஒருவகைப்பா. அப்பாவாலமைந்த நூல்பரிபாடலெனப்பட்டது. அவ்வெழுபது பாக்களுள் எட்டு திருமாலுக்கும், முப்பத்தொன்று குமரவேளுக்கும், ஒன்று கடலுக்கும், இருபத்தாறு வையையாற்றுக்கும், நாலு மதுரைக்குமாகும்.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் கார்கோளுக் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்"

இவ்வெழுபது பரிபாடலில் இப்போதுள்ளன இருபதே மற்றையைம்பதும் இறந்தனபோலும். இதற்குப் பழைய உரையொன்றுண்டு.

## களரியாவிரை.

இது தலைச்சங்கப்புலவர்கள் இயற்றிய நூல்களுள் ஒன்று. இஃதோரிலக்கியநூல் இந்நூலைச் செய்தார் யாவரென்பது புலப்படவில்லை. இது நெடுங்காலத்துக்குமுன் அழிந்துபோன நூலாதல்வேண்டும்.

## முதுநாரை.

இதுவும் தலைச்சங்கத்தாராற் செய்யப்பட்ட நூல்களுளொன்று. இந்நூல் செய்தார் பெயர் புலப்படவில்லை. இதனைப் பெருநாரையென்றும் வழங்குவர். இஃது இசைத்தமிழ் நூல். இதுவும் நெடுங்காலத்துக்கு முன் இறந்துபோயிற்று.

## முதுகுருகு.

இது பெருங்குருகெனவும் வழங்கும். இது தலைச் சங்கத்துப் புலவர்களியற்றிய இசைத்தமிழ்நூல்களுளொன்று. இதுவும் நெடுங்காலத்துக்கு முன் அழிந்துபோயிற்று.

இதுகாறும் முதற்சங்கத்து நூல்களைப்பற்றி இயன்றவாறு கூறினும். அச்சங்கத்து நூல்களெல்லாம் முற்றாக அழிந்தொழிந்தன. அந்நூல்களின் பெயர்மாத்திரம் பிற்காலத்து நூல்களிற் கூறப்பட்டமையால் ஒருவாறு அழியாமற் கிடக்கின்றன. அவைபோக இனி இரண்டாஞ் சங்கத்து நூல்களைப்பற்றி அறிந்தவரையிற் கூறுவாம்.

## மாபுராணம்.

இஃதிறந்தொழிந்த நூல்களுளொன்று. இஃது இடைச்சங்ககாலத்திற் செய்யப்பட்ட நூல். இதுவுமச் சங்கத்தார்க்கு இலக்கணநூலாயிருந்தது. இவ்வுண்மை இடைச்சங்க வரலாறுகூறுஞ் செய்யுளில்,

> "அந்நாளிலக்கணமகத்தியமதனொடு
> பின்னாட்செய்தபிறங்குதொல்காப்பிய
> மதிநலங்கவின்றமாபுராணம்
> புதுநலங்கனிந்தபூதபுராணம்"

எனவருமடிகளானுமுணர்க. இந்நூல்செய்தார்யாவரென்பது புலப்படவில்லை. இது முத்தமிழிலக்கணமோ இயற்றமிழிலக்கணமோவென்பதும் புலப்படவில்லை. இந்நூற்சூத்திரமொன்று நச்சினார்க்கினியரெழுதிய தொல்காப்பியவுரையிலகப்பட்டது. அது

> "செய்யுட்களோசைசிதையுங்காலீரள பு
> மையப்பாடின்றியணையுமா—மைதீரொற்

றின்றியுஞ்செய்யுட்கெடினெற்றையுண்டாக்கு
குன்றாமேலொற்றளபுங் கொள்"

என்பது. இச்சூத்திரத்தால் மாபுராணம் முழுதும் வெண்பாவாலியன்றதுபோலும். நச்சினார்க்கினியர் கருத்தின்படி மாபுராணம் தொல்காப்பியத்துக்கு முந்தியது. இச்செய்யுளை நோக்கும்போது இதில் ஒன்றாவது வடமொழிச்சொல் பயிலவில்லை.

## பூத புராணம்

இது தொல்காப்பியத்துக்குச் சிறிது முந்திய நூலாயினும் இரண்டாஞ்சங்கத்துக்குரியதேயாம். எழுத்துக்கு மிசைக்கு மாதாரமாகிய பூதமுதலாகவெடுத்துக் கூறுதலின் பூதபுராணமெனப்பட்டது. இது மிக்க நுட்பம்வாய்ந்த இலக்கணநூலாதலினாற்போலும் "புதுநலங்கனிந்த பூதபுராணம்" எனக் கூறப்பட்டது. இந்நூல் செய்தார் பெயரும் புலப்படவில்லை.

## இசைநுணுக்கம்.

சிவபெருமான் ஆதிக்கண்ணே செய்த இசைநுணுக்கமும் வேறு இதுவும்வேறு. இவ்விசைநுணுக்கம் அகத்தியர்மாணக்கருள் ஒருவராகிய சிகண்டியாரால் செய்யப்பட்டது. இது வெண்பாவாலியற்றப்பட்டது. இஃதோதுவாருக்குக் கடினமான நூல்போலும் அதுபற்றியே ஆன்றோரொருவர் "வல்லிதினுணர்ந்த நல்லிசைநுணுக்கம்" என்றார். இஃது இடைச்சங்கத்தார்க்கு இசைத்தமிழ் நூலாயிருந்தது.

## பெருங்கலித்தொகை

இஃது இடைச்சங்கப் புலவர்களாற் றொகுக்கப்பட்டநூல். இதனை மிகவும் அருமையான நூலெனமுன்னோர்பாராட்டுவர். இதுவும் இறந்தநூல்களுளொன்றாம்.

## குருகு.

இதுவும் இடைச்சங்கப்புலவர் இயற்றிய ஒருநூல். முதுகுருகென்னும் நூல் தலைச்சங்கப்புலவர் இயற்றியது. அதுவும் வேறு. இதுவும் வேறு.

## வெண்டாளி.

இதுவும் இடைச்சங்கத்தார் செய்த நூல்களுள் ஒன்று. பெயர்மாத்திரமன்றி வேறியாதும் புலப்படவில்லை.

## வியாழமாலை

இதுவும் இடைச்சங்கத்தார் செய்த நூல்களுள் ஒன்று. இதன்வரலாறு யாதும் தெரியவில்லை. கலியும் குருகும் வெண்டாளியும் செய்யுளிலக்கியமென, சிலப்பதிகார உரைப்பாயிரங் கூறும். இதுவும் அதுவே கூறும். இவையே இடைச்சங்கத்தார் செய்த நூல்களுள் முக்கியமானவை.

## சம்பந்தர் தேவாரம்.

சீர்காழியிலே பிராமணகுலத்திலே சிவபாதவிருதயருக்குப் பகவதியாரிடத்திலே புத்திரராக அவதரித்தவர். மூன்றாண்டு நிரம்பியபோது உமாதேவியாரால் ஞானப்பாலூட்டப்பட்டவர். அன்றுமுதல் வேதத்துண்மைப்பொருளையெல்லாம் திருவாய்மலர்ந்தருளும்பொருட்டு, அற்புதமயமாகிய தேவாரங்களைப் பாடத் தொடங்கினவர். அதன் பின்னர் ஒத்தறுத்துப் பாடும்பொருட்டுச் சிவபெருமானது திருமுத்திரையிடப்பட்ட ஒரு பொற்றாளங் கையில் வந்திருக்கப் பெற்றவர். சர்வ சாத்திரங்களையும் ஓதாதுணர்ந்தவர். ஸ்தலங்கள்தோறுஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்யும்பொருட்டு ஏறுதற்கு முத்துச்சிவிகை பெற்றவர். பாம்புகடித்திறந்த பூம்பாவையென்னும் பெண்

ணினது எலும்பை முன்போலப் பெண்ணாக்கியது முதலிய அனேக அற்புதங்களைச் செய்தவர். கூன்பாண்டியனது கொடிய சுரந்தீர்த்து அதுவாயிலாகச் சமணர் தொடுத்த சமயவாதப்போரில் வென்று சமணசமயத்தை வேரறுத்து அப்பாண்டியனைச் சைவசமயப்பிரவேசஞ் செய்வித்தவர். இவ்வரும் பெருஞ் செயல்களையெல்லாம் பதினாறாண்டு நிரம்புமுன் செய்து தமிழ்நாட்டுக்கு உலககுருவாயினவர். பதினாறாண்டளவில் தந்தையாரது வேண்டுகோளுக்கிணங்கி மணம்புகுந்து, மணக் கோலத்தோடு திருப்பெருமணமென்னுஞ் சிவாலயத்திற் புகுந்து சிவசோதியிற் கலந்தவர். மணத்திற்காக அங்கே சென்றிருந்தார் யாவரும் அவருடன் சென்று அவர்பெற்ற பெரும்பேறே பெற்றார்கள்.

சம்பந்தருடைய பாடல்கள் பொருளால் மாத்திரமன்று, சந்தத்தாலும் யாப்பாலும் அற்புதமானவை. தற்காலத்துள்ள யாப்பிலக்கண நூல்களுக்கு அவருடைய பாடல்களுட் சில அதீதமானவையென்பது நுண்மையாய் நோக்குமிடத்துப் புலனாகும். சிற்சிலபாடல்களுக்கு உண்மைப்பொருள் காணவல்லாரு மிந்நாளில். இலர்.

சம்பந்தரைச் சுப்பிரமணியக்கடவுளது அமிசாவதாரமெனக் கொள்வாருமுளர். அவர் இவ்வுலகில் ஞானவிளக்கமின்றியிருந்தகாலம் மூன்றுவருஷம். நான்காம் வயசுமுதற் பதினாறாண்டிற் பூரணமாகுங்காறும் ஒப்புயர்வில்லாச் சிவஞானச்செல்வரர்கவே விளங்கினவர். அற்புதங்களினாலே சைவசமய ஸ்தாபனஞ் செய்தருளினமையினால் அவர் சைவசமயாசாரியருளொருவரரயினர்.

இனி அவர் இருந்த காலத்தைப் பலரும்பலவாறாகக் கூறுவர். இன்னகாலமென நிச்சயிப்பது எளிதன்று. ஆயி

னும் அவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரங்களிலே கூறப்பட்டுள்ள சில விஷயங்களைக்கொண்டும் அவர்கால த்தில் அவருடைய திருக் கூட்டத்தாரு ளொருவராய் விளங்கிய திருநாவுக்கரசுநாயனாரருளிச்செய்த தேவாரத் திலே கூறப்பட்ட சில ஏதுக்களைக்கொண்டும் பிறநூற் பிரமாணங்கொண்டும் நன்கு நிச்சயிக்கப்படும்.

சம்பந்தர் தேவாரத்திலே வேயுறுதோளிப் பதிகத் திலேயுள்ள "என்பொடுகொம்பொடாமை" என்னும் பாசு ரத்திலே வரும் "ஒன்பதொடொன்றொடேழு பதினெட் டொடாறு முடனாயநாட்களவைதாம்" என்பதன் பொ ருளை நிச்சயிப்பதனால் அவருடைய காலநிச்சயத்துக்கு ஓரதிப்பிரபல ஏதுப் பெறப்படும். சோதிடநூலிலே கூறப் பட்ட பிரயாணத்துக்கு ஆகாத நட்சத்திரங்கள் பன்னி ரண்டுமே இப்பாசுரத்திலே சுட்டப்பட்டன. அவை திரு வாதிரை, பரணி, கார்த்திகை, ஆயிலியம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை, மகம் என்னும் பன்னிரண்டுமாம். சம்பந்தர்காலத்திலே முதலா கக்கொண்டு எண்ணப்பட்ட நட்சத்திரம் கார்த்திகை. அயனசலனத்தினாலே தொளாயிரத்தெண்பத்தெட்டு வரு ஷமும் நான்குமாசமுமாகிய காலவட்டந்தோறும் ஒவ் வொருநட்சத்திரம் துருவம்பெறும். அஃதாவது நட்சத் திரதுருவகாலம் தொளாயிரத்து எண்பத்தெட்டு வருஷ மும் நான்குமாசமுமாமென்க. இங்ஙனம் துருவம்பெறும் நட்சத்திரமே அத்தொளாயிரத்து எண்பத்தெட்டு வருஷ காலத்துக்கும் முதல்நட்சத்திரமாகக் கொள்ளப்படும். சம்பந்தர் காலத்திலே துருவம்பெற்று நின்ற நட்சத்திரம் கார்த்திகை. கார்த்திகை முதற்கொண்டு ஒன்பதாம் நட் சத்திரம் பூரம். ஒன்று=கார்த்திகை. ஒன்றொடேழு=எட் டாம் நட்சத்திரம் மகம். ஏழு=ஏழாம் நட்சத்திரம் ஆயி லியம். பதினெட்டு=பதினெட்டாம்நட்சத்திரம் பூராடம்.

பதினெட்டொடாறு=பதினெட்டாம் நட்சத்திரம் முதல் ஆறும் நட்சத்திரம் பூரட்டாதி. உடனுயநாள்கள்=இவையோடு மற்றைய ஆறும் என்றவாறு. அது நிற்க, இப்போது துருவம் பெற்றிருக்கும் நட்சத்திரம் உத்தரட்டாதி. கார்த்திகைக்கும் உத்தரட்டாதிக்கும் இடையேயுள்ள பரணி அச்சுவினி ரேவதி என்னும் மூன்றுங் கடக்கப்பட்டன. ஒரு நட்சத்திரத்துக்குத் தொளாயிரத்து எண்பத்தெட்டு வருஷமாக மூன்றுக்குஞ் சென்ற வருஷத்தொகை இரண்டாயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நாலு. சம்பந்தர்காலத்திலே கார்த்திகையிலே சென்றன போக எஞ்சிநின்ற வருஷங்கள் ஐஞ்ஞூறாக இப்போது உத்தரட்டாதியிற் சென்றவருஷம் ஐஞ்ஞூற்றுக்கு மேலாயின. ஆகவே சம்பந்தர்காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதாக நிச்சயிக்கப்படும்.

திருநாவுக்கரசர் சம்பந்தருக்கு உத்தமநட்பினராய் விளங்கினவரென்பது பெரியபுராணமுந் தேவாரமுங் கூறுமாற்றால் வெளிப்படை. இருவரும் தத்தம் தேவாரத்திலே அர்ச்சுனனுக்குச் சிவன் புரிந்த திருவருட்டிறத்தை இடையிடையே எடுத்துத் துதித்துப்போவது, அவர்கள் காலத்துக்கு ஆயிரம்வருஷங்களுக்கு முன்னே விளங்கிய அர்ச்சுனனுக்குச் சிவன் வேடவடிவங்கொண்டெழுந்தருளிச்சென்று அருள்புரிந்த பேரற்புத நிகழ்ச்சியை உலகம் கன்னபரம்பரையாக மறக்காமல் எடுத்துப் பாராட்டி வந்த சமீபகாலமேயாதல் பற்றியாம். பாரத யுத்தம்முடிந்த காலம் கலியுகாரம்பம். கலியுகத்திலிப்போது சென்றது ௫000 வருஷம். பாண்டவர்க்குத் துணையாயிருந்து போர்செய்த சோழனுக்குப் பின் முடிசூடியவன் நாகலோகஞ்சென்ற சோழன். அவனுக்குப் பின் முடிசூடி அரசுபுரிந்தவர் கோச்செங்கட்சோழரென்பது, கலிங்கத்துப்பரணி இராச பாரம்பரியத்துப் பதி

னேழாம் பதினெட்டாம் செய்யுள்களாற் பெறப்படும். கோச்செங்கட்சோழருடைய பெருமைகளைச் சம்பந்தரும் நாவுக்கரசரும் தத்தமது தேவாரத்திலே எடுத்துக் கூறலால் இருவருக்கும் அச்சோழர் சமீபகாலத்தவரென்பது நன்கு துணியப்படும்.

இரண்டாயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னேவிளங்கிய சங்கராசாரியர் தாம் செய்த சௌந்தரியலகரியிலே சம்பந்தரை எடுத்துத் துதித்தலாலே சம்பந்தர் அவருக்கு முன்னுள்ளவரென்பது பிரத்தியட்சம். இதுவும் அவர் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளவரென்பதற்கோராதாரமாகும்.

சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன் முதலியோர் சம்பந்தர்காலத்து விளங்கிய சமணாசாரியர்கள் என்பது அவருடைய தேவாரத்தாற் பெறப்படும் அவர்கள் பெயர்கள் இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்குட்பட்ட சமணசரித்திரங்களிலே கேட்கப்படாமையின் அவ்வாசாரியர்கள் முற்பட்டவர்களேயாதல்வேண்டும். ஆகவே சம்பந்தரும் முற்பட்டவரேயாதல்வேண்டும்.

திருமங்கையாழ்வார் தாம் பாடியருளிய பெரியதிருமொழியிலே கோச்செங்கட்சோழரைப் புகழ்ந்து கூறுதலாலும், நாலாயிரப்பிரபந்தத்திலே திருமங்கையாழ்வார் கலியுகம் நானூற்றறுபதின் மேலாகிய துன்மதி வருஷத்துக் கார்த்திகைமாதத்திலே திருவவதாரஞ் செய்தாரெனக் கூறப்படுதலாலும், திருஞானசம்பந்தரை அவ்வாழ்வார் கண்டபோது,

"வருக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதகிலோடப்

பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
  பிள்ளையார் சம்பந்தப் பெருமான் கேளீர்
அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
  வங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
  விவளையுமோர் பெண்ணாக்க லியல்பு தானே"

என்னும்பாடலைச் சொற்றனரென்றொரு கர்ணபரம்பரைக்கதை யுண்மையாலும், திருஞானசம்பந்தரைப்போலவே திருமங்கையாழ்வாரும் சமணசமய கண்டனஞ் செய்து வைதிகசமயஸ்தாபனஞ்செய்பத் திருவவதாரஞ் செய்தாரெனக் கூறப்படுதலாலும், திருமொழியிலே கூறப்படும் பல்லவன் முதலிய அரசர்கள் தேவாரத்திலுங் கூறப்படுதலாலும், இருவரும் ஏககாலத்தவர்களென்பதற்கையமில்லை. இதனாலும் திருஞானசம்பந்தர் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளவரென்பது நன்குநாட்டப்பட்டதாயிற்று.

இனித் திருஞானசம்பந்தராலே சுரநோய் தீர்த்தருளப்பட்ட கூன்பாண்டியன் காலத்தை நிச்சயிப்பாம். கூன்பாண்டியன் முடத்திருமாறன் எனவும்படுவன். அவன் இடைச்சங்கத் திறுதியிலும் கடைச்சங்கத்துத் தொடக்கத்திலு மிருந்தவனென்பது "வடவெறுகாட்சிநடுவட்சங்கத்து...............வெண்டேர்ச்செழியன் முதலாவிறல்கெழு, திண்டேர்க்கொற்றமுடத்திருமாறன்" எனவும் "பருங்கடைச்சங்கமிருந்தோர்யாரெனில்...........இடர்ப்படாதிவர்களைச்சங்கமிரீஇனர், முடத்திருமாறன் முதலாவுக்கிரப்-பெருவழுதியீறாப்பிறங்குபாண்டியர்கள்" எனவும் வரும் ஆன்றோராசிரியப்பாக்கூற்றாற் பெறப்படும். கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதி யீறாகச் சென்ற காலம் "எண்ணூற்கேள்வியரிருந்ததாயிரத்துத்-தொளாயிரத்தைம்பதுவருடமென்ப" என மேலே கூறப்

பட்ட ஆசிரியப்பாவினுள்ளே வருவதனால் ஆயிரத்துத் தொளாயிரத்தைம்பதுவருடங்களென்பது வெளிப்படை. உக்கிரப்பெருவழுதிமுதல் துலுக்கரால் வெல்லப்பட்ட பராக்கிரமபாண்டியனீறாக நாற்பத்துநான்கு பாண்டியர்கள் வழிவழியாசுபுரிந்தனர். ஒருபாண்டியனுக்கு முப்பதுவருஷமாகக் கொள்ளின் நாற்பத்து நால்வர்க்கும் ஆயிரத்து முந்நூற்றிருபது வருஷமாகும். பராக்கிரம பாண்டியனைத் துலுக்கர் வென்று அரசு கைக்கொண்டது இற்றைக்கு எண்ணூறு வருஷங்களுக்கு முன்னரென்பது இந்திய சரித்திரத்தானினிது விளங்கும். இம் மூன்று தொகையும் நாலாயிரத்தெழுபதாகும் ஆகவே கூன்பாண்டியன்காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்றாகத் துணியப்படும்.

இனித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பாக்களினது இயல்பாலும் அவருடைய காலத்தை நிச்சயிப்பாம்

இக்காலத்தில் இயற்றமிழொன்றுமே வழங்கி வருகின்றது. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயுள்ள கடைச்சங்க காலத்திலே இயல் இசை நாடகமென்னும் முத்தமிழும் வழங்கிவந்தனவென்பது கடைச்சங்கத்து நூல்களால் நிச்சயிக்கப்படும். ஆயினும் இடைச்சங்க காலத்தில் வழங்கிவந்த அத்துணையாகக் கடைச்சங்க காலத்தில் இசைத்தமிழ் வழங்கியதன்று. இற்றைக்கு ஆயிரத்து முன்னூறு வருஷங்களுக்கு முன்னிருந்த சிலப்பதிகாரவுரையாசிரியரும் தம்முடைய காலத்துக்கு முன்னே இசைநூலும் நாடகநூலும் அழிந்தொழிந்தன வென்பர்.

இசைத்தமிழிலக்கண நூல்களும் இலக்கியங்களும் இடைச்சங்க காலத்திலேயே மலிந்து கிடந்தன. அவ்வி

டைச்சங்கத்து இயற்றமிழ் நூல்களுள்ளே தொல்காப்பியமொன்றுமே இன்றுவரையும் நின்று நிலவுகின்றது. மற்றை இயற்றமிழ் இசைத்தமிழ் நூல்களெல்லாம், சில கடைச்சங்க காலத்திலும், பல அதற்கு முன்னுமாக அழிந்தொழிந்தன.

திருஞான சம்பந்தர் செய்தருளிய தேவாரங்களுள்ளே சிலபாக்கள் இயற்றமிழ் யாப்பின் வேறுபடுவன. அவற்றுட் சிலவற்றை இயற்றமிழ் யாப்பிலே அடக்குவது கூடுமாயினும், யாழ்முரி முதலிய சிலவற்றை அடக்குதல் கூடாது. இலக்கணவரம்பு கடந்தனவோவெனில், அன்னவுமன்று. பின்னர் அவைகளுக்கு இலக்கணநூல் யாதெனில் அவை இசையிலக்கண நூலமைதியுடையன வெனக் கொள்ளல்வேண்டும் அவை தேவபாணியாகாவோவெனில் அவை தேவபாணிக்கினமாவதன்றி அதுவாகா. தேவபாணி இயற்றமிழுக்குரியது. தேவாரம் இசைத்தமிழுக்குரியது என்பது சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையுரையிலே "இசைத்தமிழின்வருங்கால்முகநிலைகொச்சகம் முரியென்பன" என வருவதனாலும் பிறவற்றாலும் பெறப்படும்.

தேவபாணியைப் பண்ணிசை யறியாதாருமோதுவர். தேவாரத்தைப் பண்ணிசையறியாதாரோதல் கூடாது. ஆதலின் தேவாரம் இசைநுணுக்கமுதலிய விசைத்தமிழிலக்கணத்துக்கியையப் பாடியருளப்பட்டதாம்.

இனி அத்தேவாரம் எக்காலத்திற் செய்யப்பட்டதென நிதானிப்பாம் கடைச்சங்கத்தார் தமிழாராய்ந்தது அகத்தியமுந் தொல்காப்பியமுங் கொண்டேயாம் இடைச்சங்கத்தார் தமிழாராய்ந்தது அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் பூதபுராணம் இசைநுணுக்கம் என்னும் நூல்களைக் கொண்டேயாம். இவ்வுண்மை

இறையனுரகப்பொருளுரையாலும், மேலே சுட்டிய ஆசிரியப்பாவினுள்ளே "அந்நாளிலக்கண மகத்தியமதனெடு பின்னுட்செய்த பிறங்கு தொல்காப்பியம்" என வருவதனாலும் நன்கு விளங்கும்.

ஆகவே இசைத்தமிழிலக்கணம் கடைச்சங்கத்தார்க்குக் கருவிநூலாகவிருந்ததில்லையென்பதும் இடைச்சங்கத்தார்க்கே இசைநுணுக்கமுதலிய இசைத்தமிழிலக்கணநூல்கள் கருவியாகவிருந்தனவென்பதும் நிச்சயமாயின. 'இடைச்சங்கத்திறுதியிலும் கடைச் சங்கத்துத் தொடக்கத்திலுமிருந்த கூன்பாண்டியன் காலத்தைக் கூறவே, இடைச்சங்கமொழிந்த காலமும் இசைத்தமிழிலக்கணம் ஆட்சியிலிருந்தொழிந்த காலமும் தாமே பெறப்படும். கூன்பாண்டியன் காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது மேலே காட்டினும். ஆதலின் அத்தேவாரம் செய்தருளப்பட்ட காலமும் அதுவேயாமென்பது நன்றாகத் துணியப்படும். இதனாலும் திருஞானசம்பந்தர்காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நிச்சந்தேகமாம்.

இனி, சாக்கியர் புத்தர் என்னும் நாமங்கள் கபிலவாஸ்துவிலே பிறந்த புத்தருடைய காலமாகிய இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக் குட்பட்டனவேயாகவும், நாலாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட சம்பந்தருடைய தேவாரத்திலே எவ்வாறு வந்தனவோவென்னில், கௌதமர் ஆதிநாளிலே புத்தர் என்னும் பெயரோடு நாஸ்திகமதத்தைப் போதித்தாரென்றும், விஷ்ணுசினனுக்குப் புத்திரராகக் கலியுகாரம்பத்திலே யவதரித்துப் புத்தர் என்னும் பெயர் பூண்டு வைதிகமத விரோதமான ஒரு மதத்தை யுலகிற் பரவச்செய்வாரென்றும் முறையே ஸ்காந்தத்திலும் பாகவதத்திலுங் கூறப்படுதலால் அப்

பெயர்கள் கபிலவாஸ்துவிலே பிறந்த புத்தரைச் சுட்டிய வையல்லவென்க. அவை முன்னுள்ள புத்த சமயிகளைச் சுட்டியனவேயாம்.

கபிலவாஸ்துவிலே பிறந்த புத்தர் கௌதம புத்தரென்றும், சாக்கியபுத்தரென்றும் அடைகொடுத்து வழங்கப்படுவது கௌதமகோத்திரத்திலே சாக்கியர் குடியிலே பிறந்தமை பற்றியேயாம். அப்பெயர் வழக்குகள் தாமே முன்னும் புத்தர்களிருந்தார்களென்பதை நன்கு விளக்கும். இதனாலும் முன்னும் பௌத்தமதம் காலந்தோறும் தோன்றியழிந்ததென்பது இனிது பெறப்படும்.

இன்னும் தற்கால புத்தசமயிகளும் தமது புத்தர் முன்னும் பன்முறைகளிலே அவதாரம்பண்ணிப் பௌத்த மதத்தைப் போதித்தாரெனக் கூறுவார்கள். தேவாரத்திலே கௌதமபுத்தர் சாக்கியபுத்தர் என்னும் நாமங்கள் வருதலின்றி, வாளா சாக்கியர், புத்தரென்றே வருதலாலும், சாக்கியபுத்தநாமங்கள் பிந்திய புத்தராது கோத்திரத் தலைவர்க்கேயுரியன வாதலாலும், அத்தலைவர் காலம் கலியுகாரம்பமேயாதலாலும், சம்பந்தர் காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதேயாம்.

இன்னோரன்ன பிரபல நியாயங்கள் பலவுளவாகவும் சிலாசாசனங்கொண்டு சிலராற் செய்யப்பட்ட கால நிச்சயம் சிறிதும் அங்கீகாரயோக்கியமுடையதன்று. சேர சோழ பாண்டியர்களுடைய பெயர்கள் அவ்வப் பரம்பரையிலுள்ளார் பலர்க்குரியனவாய் வருதலின், ஒருகாலத்திலே ஓரரசனாலே செய்யப்பட்ட சாசனத்தைக் கொண்டு அவனுக்கு முன்னே அப்பெயரால் விளங்கிய அரசர் பிறரில்லையெனத் துணிந்து அச்சாசன காலத்துக்கு முன்னே நிகழ்ந்த சம்பவங்களை அச்சாசன காலத்

திலொட்டிக் காலநிச்சயம்பண்ணுதல் சிறிதும் பொருத்த முடையதன்று.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகத்தொகை பதினாறுயிரம். அவற்றுள் அழிந்தனபோக இப்போதுள்ளன முந்நூற்றெண்பத்துநான்கு. இவர்பாடிய முதற்பதிகம், சீர்காழியிலே சிவாலயத்தினுள்ளே யிருக்கின்ற தீர்த்தக் கரையிலே தந்தையார் இவரை இருத்திவிட்டுத் தீர்த்தத்திலே சங்கற்பஞ்செய்யப்போனபோது, சிறிது நேரஞ் சென்றபின் தந்தையாரைக் காணாது அம்மே! அப்பா! என்று அழ, சுவாமி பார்வதிதேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளித் தேவியாரைக்கொண்டு பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலூட்டி அழுகை தீர்த்து, மறையும் சமையத்தில் தந்தை மீண்டுவந்து யார்தந்த பாலை யுண்டாயென்று உறுக்க, அதற்கு உத்தரமாக,

"தோடுடையசெவியன்விடையேறி
 யோர்தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிபூசி
 யென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்
 பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய
 பெம்மானிவனன்றே"

என்பதை முதலாகவுடையது. இவருடைய பதிகங்களிலே பறப்பை, கொட்டம், சோடை, காயம், பச்சம், படக்கர் இவை முதலிய அருஞ்சொற்களனேகம் காணப்படும். இவ்வருஞ் சொற்களையெல்லாம் தேடித் தேவார நிகண்டென ஒன்று செய்வது பரோபகாரமாகும்.

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர்குலத்திலே புகழனாரென்பவர்க்கு மாதினியார் வயிற்றிலே பிறந்தவர். அவர் பிள்ளைத்திருநாமம் மருணீக்கியார். அவர் பல கலைகளையுங் கற்று நல்லொழுக்கமும் தருமப்பிரியமும் உடையராகி ஒழுகிவருநாளிற் பிரபஞ்ச வாழ்வு அநித்தியமெனக்கண்டு துறவறத்தையடைந்து சமண்சமயத்திற் பிரவேசித்து, அச்சமய நூல்களெல்லாவற்றையும் கிரமமாகக் கற்று அவைகளிலும் மகாபண்டிதராகிச் சமணாசாரியராற் றருமசேனனென்னும் பெயர்பெற்று அவருள்ளே அதிசிரேஷ்டராய் விளங்கி வருநாளில், அவர் வயிற்றிலே கொடிய சூலைநோயுண்டாகி வருத்த, சமணாசாரியர்கள் தமது மந்திரவித்தைகளையெல்லாம் பிரயோகித்தும், அதனால் அந்நோய் சிறிதுந் தணியாது முன்னையினுமதிகப்பட, அதனைக் கேள்வியுற்ற அவர் சகோதரியாராகிய திலகவதியார், அவரைத் தம்மிடம் வருமாறுசெய்து, அவருக்குப் பஞ்சாட்சரோபதேசஞ்செய்து அவருடைய சூலைநோயை நீக்க, அவர் இது பரமசிவனுடைய திருவருளெனக்கொண்டு சைவசமயப் பிரவேசஞ்செய்து சிவபத்தியிற் சிறந்தவராகி வீரட்டானேசுரரை யடைந்து, அவர் சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அற்புதமயமாகிய தமிழ்ச்செய்யுள் பாடுஞ் சக்தியுடையராகி, அத்தியற்புதமாகிய தேவாரங்களைப் பாடித் திருநாவுக்கரசனென்னும் பெயர் சிவனாலளிக்கப்பெற்றவர். அதனை அறிந்து சமணர்கள் அரசனாணை கொண்டு அவரைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலிட்டுப் போனபோது அக்கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறியதும், நீற்றறையிலிட்டபோது சாவாது பிழைத்திருந்ததும், விஷமூட்டியபோது அதனாலிறவாதிருந்ததும், பிறவுமாகிய

அநேக அற்புதங்கள் தம்மிடத்திலே விளங்கப்பெற்றவர். பெரியபுராணத்தி லெடுத்துக் கூறப்பட்டுள்ள அவருடைய சரித்திரம் முற்றும் உண்மையென்பது

"கல்லினோடெனைப்பூட்டியமண்கையர்
ஒல்லைநீர்புகநூக்கவென்வாக்கினால்
நெல்லுநீள்வயல்நீலக்குடியரன்
நல்லநாமநவிற்றியுய்ந்தேனன்றே"

என்னுந் தேவாரத்திலே சமணர்செய்த துன்பத்தைத் தமது திருவாயாற் கூறியதால் வியவஸ்தாபனமாம்

அவர் சாயுச்சியப்பேறு பெற்றபோது அவர்க்கு வயசு எண்பத்தொன்றென்பது,

"அப்பருக்கெண்பத்தொன்றருள்வாதவூரருக்குச்
செப்பியநாலெட்டினிற்றெய்வீகம்-இப்புவியிற்
சுந்தரர்க்குமூவாறுதொல்ஞானசம்பந்தர்க்
கந்தம்பதினாறறி".

என்னும் வெண்பாவால் நிச்சயிக்கப்படும். அவர் காலம் சம்பந்தர் காலமென்பது சம்பந்தர் தேவாரம். என்பதனுட் கூறினும். ஆண்டுக் காண்க.

அஃதாவது அவர் இற்றைக்கு நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னர் விளங்கினவர் என்பது ஆண்டுக் கூறிய நியாயங்களான் மாத்திரமன்று இடைச்சங்கத்திறுதிக்காலத்திலே நிகழ்ந்த பிரளயத்தைக் குறித்துக் கேள்வியுற்றபோது அவர் திருவாய்மலர்ந்தருளிய,

"வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையுந்
தானந்துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம்படிலென் விரிசுடர்வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே"

என்னுந் தேவாரத்தாலும் நிச்சயிக்கப்படும் இடைச் சங்கத்திறுதிக்காலத்தில் வந்துற்ற பிரளயத்தைக் குறித்துத் தமிழ் என்பதனுட் கூறினும்.

திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரங்கள் பத்திச்சுவைகால்வதோடு வேதோபநிஷதசாரங்களும் வித்தியாசாதுரிய கற்பனாலங்காரங்களும் பொழிவனவாதலின் அவருடைய செந்தமிழ்ப்புலமையின் அந்தமிலாற்றலெல்லாம் பிறவழியிலே செல்லாது சிவபத்தியிலும் சிவஞானத்திலுமே சென்றன. உலகியல் நெறிநிற்கும் சாமானிய வித்துவான்கள்போல, நிலையில்லாத உலகவின்பத்தைப் பெரிதெனமதித்து மயங்கிப் பெண்கள் முகத்தைச் சந்திரனுக்கும், கூந்தலை மேகத்துக்கும் பல்லை முத்துக்கும், நுதலைப் பிறைக்குமாக வின்னோரன்ன வுபமானங்களாலே புனைந்து மகிழ்கூராது, சிவத்தியானமும் சிவதரிசனமுமன்றி மற்றொன்றுமுள்ளத்திற்கொள்ளாராய், ஞானக் குறிப்பினையுடைய சிவன் திருமேனியையும், அம்மேனியினுள்ள ஞான பூஷணங்களையுமெடுத்து அவைகளுக்கே உவமை கற்பித்து மகிழ்கூர்வர். அவ்வுண்மை,

"செற்றுக்களிற்றுரிகொள்கின் றஞான்றுசெருவெண்கொம்
பிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிறைபாம்பதனைச் (பொன்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கு
நெற்றிக்கண்மற்றதன்முக்தொக்குமாலொற்றியூரனுக்கே"

என்பது முதலிய பாடல்களானுணரப்படும்.

திருநாவுக்கரசுநாயனார் தீவிரதரசத்திநிபாதமுடையராய்ச் சிவானந்தமேலிட்டுச் சீவன் முத்தராயிருந்தவர். சிவானந்தமேலிடப் பெற்றோர் ஆனந்தபரவசமும் ஆடலும் அநிசயானந்த ஞானப்பாடலுமுடையாராதல் இயல்பன்றோ. அதுபற்றியே அவருடைய பாமாலையெல்லாம்

செந்தமிழ்த்தேன் பிலிற்றிச் சிவஞானநறுமணங்கமழ்ந்து, பத்தியழகெறித்துக் கேட்டோரைப் புறம்பெயரவிடாது கவருமியல்பினவாய்க், காட்சிக்கரியராகிய பரம கருணாநிதியையும் எளியராக்கும் வலியுடையனவாயின. விரகமீதூரப்பெற்ற நாயகி தன்னெஞ்சத்திடையே கழிபேரன்பு காரணமாக நிகழும் பரவசத்தினாலே தனது நாயகன் புகழையெடுத்துப் பாடலும் இரங்கலும் தூதுபோக்கலும் கண்டாமன்றோ. அவ்வாறே சிவன்மேல் வைத்த வேட்கையினாலே அவரைப் பாடலும் இரங்கலும் எதிர்ப்பட்ட பொருள்களை நோக்கித் தூதுபோக்கலும் பிறவும் பரவசப்பட்ட பத்தர்க்கியல்பேயாம். அதுபற்றியே திருநாவுக்கரசுநாயனாரும் காமச்சுவை படவும்,

> "முன்னமவனுடையநாமங்கேட்டாண்
> மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்
> பின்னையவனுடையவாரூர்கேட்டாள்
> பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள்
> அன்னையையுமத்தனையுமன்றேநீத்தா
> ளகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
> தன்னைமறந்தாடன்னாமங்கெட்டா
> டலைப்பட்டாணங்கைதலைவன்றாளே"

என்பது முதலிய சில பாடல்களைப் பாடினர். இங்ஙனங் கற்பித்துப் பாவனைபண்ணிப் பாடல் மாணிக்கவாசகர் திருமூலர் முதலிய சீவன்முத்தர்க் கியல்பென்பது, திருச்சிற்றம்பலக்கோவையாராலும்,

> "இருட்டறைமூலையிலிருந்தகுமரி
> குருட்டுக்கிழவனைக்கூடநினைந்து
> குருட்டினைநீக்கிக்குணம்பலகாட்டி
> மருட்டியவனைமணம்புணர்ந்தாளே"

என்னும் திருமந்திரத்தானுங் காண்க. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த பாடல்களிலே வரும் வருணனைகளெல்லாம் அவ்வத் தலங்களுக் கியல்பாகவுள்ள சிறப்புக்களையே உள்ள உள்ளவாறெடுத்துரைக்குமன்றிக் கற்பித்துரையா. உள்ள உள்ளவாறுரைப்பதிலும் ஒவ்வோரதிசயமும் தத்துவக்குறிப்பும் ஆராமையும் தோன்றுமாறே கூறும். இன்னும் அவ்வருட்பாடல்கள், தத்துவஞானமும் பிரபஞ்சவைராக்கியமும் எடுத்துக் காட்டி, முத்திமேலிச்சையைக்கொளுத்துமாற்றல் பெரிதுமுடையனவென்பது எடுத்துக்காட்டவேண்டா. அவற்றை ஓதுந்தோறுங் கேட்குந்தோறும், பிரபஞ்ச வெறுப்பும் சிவத்தின்மேல் விருப்புமே தலைப்படுமன்றி அவை ஏனைய புராணேதிகாசங்கள்போல நுண்பொருளைப் புதைத்துப் பருப்பொருளை வெளிப்படக் காட்டி உலகத்தை மயங்க வைப்பனவல்ல. ஆனந்தம் அரும்பி அருள் மலர்ந்து முத்திக்கனி பழுக்கும் பெற்றியினையுடையன. கொடியரிற் கொடியனாகிய கூற்றுவன் சந்நிதிப்பட்டோர்க்கும் உறுதியும் அஞ்சாநிலையுந் தரத்தக்கது தேவாரமொன்றுமேயாம். அச்சிறப்பு மூவர் தேவாரத்துக்கு மொக்குமேயாயினும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் வாக்குப் பொலிவினானுஞ் சிறந்து விளங்குவது.

திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பாடல்கள் ஐந்துலட்சத்து முப்பத்தேழாயிரம். அவற்றுள் அழிந்தன போக எஞ்சியுள்ளன மூவாயிரத்து நானூற்றெழுபத்தாறு.

## மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம்.

அரிமர்த்தனபாண்டியனுக்காகக் குதிரை கொள்ளச் சென்ற வழியிலே சிவபெருமான் ஞானாசாரியராகவெழுந்தருளிவந்து உபதேசஞ்செய்தாட்கொண்டருளப் பட்ட

வரும், குதிரை வாங்கும்பொருட்டுக் கொண்டு சென்ற திரவியங்களையெல்லாஞ் சிவாலயத் திருப்பணிக்காக்கிய துணர்ந்து பாண்டியனுலொறுக்கப்பட்டு நின்றபோது சிவபிரான் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுபோய்க் கொடுத்தவழி அவராற் காத்தருளப்பட்டவரும், பரிகளெல்லாம் நரிகளாக மீளுதலும் பின்னரும் பாண்டியனொறுக்க, சிவன் வைகையைப் பெருகச்செய்து அதன்கரையையடைக்கக் கூலியாளாகிச் செல்லப் பெற்றவரும், அதுவாயிலாகப் பாண்டியன் பணியினின்றும் நீங்கிச் சீவன்முத்தராய் விளங்கினவரும், கேட்டோரை மனமுருக்கி முத்திநெறியிற் செலுத்துமியல்பினதாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் பாடியருளியவரும், புத்தரை வாதில் வென்று சைவசமயஸ்தாபனஞ் செய்தவருமாகிய சைவசமயாசாரியர். இவர் பூர்வாச்சிரமநாமம் வாதவூரர். இவர்க்குப் பாண்டியனுல் சூட்டப்பட்ட பட்டப்பெயர் தென்னவன் பிரமராயன். கல்லாடத்தில்

"வெடிவாற் பைங்கட் குறுநரி யினத்தினை
யேழிடந் தோன்றி யினனூற் கியைந்து
வீதி போகிய வாலுளைப் புரவி
யாக்கிய விஞ்சைப் பிறைமுடி யந்தணன்"

என்றும்,

"மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொற்றாளாகி
நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி"

என்றும் வருதலாலே, கடைச்சங்கப் புலவராகிய கல்லாடருக்கு முன்னுள்ளவரென்பது நிச்சயிக்கப்படும்.

சிவன் வலைவீசிய திருவிளையாடலை இவர் பன்முறை யெடுத்தெடுத்துத் திருவாசகத்திலோதுதலால் வலைவீசிய திருவிளையாடல் நிகழ்ந்த காலத்தையடுத்திருந்தவரென்பதும், எந்து, அச்சன், அச்சோ, பப்பு என்பன முதலிய மலையாளச் சொற்களை அத்திருவாசகத்திலே பிரயோகித்தலால் மலையாளத்திருந்துவந்து பாண்டிநாட்டிலே குடிகொண்டவரென்பதும் அநுமிக்கக் கிடக்கின்றன.

இச்சிவஞானச் செல்வர், சண்டேசுரரையும் கண்ணப்பரையும் தமக்கு முந்தினோராகவெடுத்துக் கூறி, அவர் பெருமையைப் புகழுவர். கன்றால்விளவெறிந்த கிருஷ்ணன் செயலும் திருவாசகத்திலெடுத்துக் கூறப்படுதலின் இவர் கிருஷ்ணன்காலத்துக்குப் பிற்பட்டவரென்பதற்கையஞ் சிறிதுமில்லை. திருநாவுக்கரசுநாயனாராலேயே தமது தேவாரத்திலே, நரியைக் குதிரைசெய்த அற்புதமெடுத்துக்கூறப்படுதலால் அவர்காலத்துக்கு இவர் முன்னுள்ளவரென்பதற்கும் ஆக்ஷேபஞ்சிறிதுமில்லை. திருநாவுக்கரசுநாயனார் காலம், முன்னே சம்பந்தர் தேவாரம் என்பதனுட் கூறப்பட்டபடி நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளது. அவர்க்கு இவர் முன்னுள்ளவராதலின் இவர்காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்கு துணியப்படும். அதுமாத்திரமன்று; திருவாசகத்தினுள்ளே பிற்காலத்திலே அறியப்படாத அனேக சரித்திரங்களும், க்ஷேத்திரங்களும் எடுத்தோதப்படலாலும், கண்ணப்பர் சண்டேசர்களைத் துதிப்பவர் திருஞானசம்பந்தர் முதலியோரைத் துதிக்காமையாலும், "சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்" என்னுந் திருவாசகத்திலே தேனித்தல் என்னுஞ் சொல்வழக்கும், உவலை முதலிய அரிய சொற்களும் பிற்காலத்து வழக்கன்மையாலும், திருவாசகம் தேவாரத்துக்கும் கடைச்சங்கத்து நூல்களுக்கும் முந்தியதென்பது நன்றாகத் துணியப்படும்.

இனித் திருத்தொண்டத் தொகையினுள்ளே எடுத்தோதப்படாமையின், மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பிற்பட்டவரெனச் சாதிப்பாருஞ் சிலருளர். அஃதறியாமையின் பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலியோரெல்லாம் சிவபத்தியினும் சிவயோகத்தினுஞ் சிறந்த மெய்யடியார்களாகவும் அவரையெல்லாம் திருத்தொண்டத்தொகையினுட் கூறாமை யாதுகாரணமோ, அதுவே மாணிக்கவாசகரைச் சேர்த்தோதாமைக்குங் காரணமாம். முன்னர் வெளிப்படாத அடியார் வரலாறுகளே சேக்கிழாருக்கு அருளிச்செய்யப்பட்டனவன்றி முன்னே வெளிப்பட்ட சரித்திரங்களல்ல. மாணிக்கவாசகசரித்திரம் முன்னே ஆலாசியத்திற் கூறப்பட்டது. அதுபற்றியே அவர் சரித்திரம் திருத்தொண்டத்தொகையினும் பெரியபுராணத்தினும் கூறப்படாதொழிக்கப்பட்டது. அவ்வாறே அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர்கள் சரித்திரங்கள் சிதம்பரமான்மியத்தினும் பிறவற்றினுங் கூறப்பட்டுக் கிடந்தமையின் அவையுமொழிக்கப்பட்டன. அற்றேல், சம்பந்தமூர்த்திநாயனார் சரித்திரம் ஆலாசியத்திற் கூறப்பட்டிருக்கவும் மீளவும் பெரியபுராணத்தினும் திருத்தொண்டத்தொகையினும் கூறப்பட்டது யாதுபற்றியோவெனின், ஆலாசியத்துள் அச்சரித்திரம் விரித்துரைக்கப்படாமையினென்க. இதுவே திருத்தொண்டத்தொகையினும் மாணிக்கவாசகர் எடுத்துக் கூறப்படாமைக்குக் காரணமாமெனக் கொள்ளுக.

அதுநிற்க, மாணிக்கவாசகர் இடையறாத சிவத்தியானமுஞ் சிவபத்தியுமுடையராய் விளங்கினரென்பதும், அவருடைய சரித்திரம் முற்றுமுண்மையென்பதும் அவர் திருவாக்குக்களே வெளிப்படப் பகர்கின்றன. வாசனை

யாற் புறத்தேகாணப்படும் எச்செயல்களையுஞ் சிவசம்பந் தப்படுத்தியே யெடுத்தோதுவர். திருவண்ணாமலையிலே இவர் தங்வாசஞ்செய்தகாலத்திலே அங்குள்ள பெண்கள் வைகறையிலே யெழுந்து சிவதோத்திரஞ் சொல்லிக்கொண்டு அயல்வீட்டுப் பெண்களை யெழுப்பி நீராடப் போதலைக் கண்டு, அச்செயலைச் சிவசத்திகள் சிருஷ்டியின் பொருட்டு ஒருவரையொருவர் எழுப்புவதாகப் பாவித்துத் திருவெம்பாவையைப் பாடியருளினர். இப்படியே புறத்தே நிகழுகின்ற செயல்களாகிய படையெழுச்சி, சாழல், பொற்சுண்ணம் முதலியவைகளையெல்லாம் சிவஞானச் செயலாகப் பாவித்துப் பாடியருளினவர்.

இவருடைய மனமுஞ் செயலுமெங்கேயழுந்திக்கிடந்தனவென்பது, "எங்கையுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க-கங்குல்பகலெங்கண் மற்றொன் றுங்காணற்க -விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே- லெங்கெழிலென் ஞாயிறெமக்கு" என்பது முதலிய திருவாக்கானுணரப்படும். பேரின்பக்கனியாகிய சிவத்தைக் கிடைத்தற்கரிய பெறும்பேறாக மதித்தார் என்பது,

"ஞானக்கரும்பின்றெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்தி"

என்னுந் திவ்வியவாக்கானுணரப்படும்.

இவருடைய பாடலெல்லாம் ஞானப்பொருள் குறித்த வுருவகங்களாமென்பதற்கு,

"வையகமெல்லா முரலதாக
மாமேருவென்னு முலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கே
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே"
என்னுந் திருவாக்குச் சான்ரும்.

இனி இவருடைய மெய்ஞ்ஞானபோத வாற்றலோ வென்ருல் அஃதெடுத்துரைக்குந் துணைத்தன்று. கல்லையுங் கனியவைக்குந் திவ்விய வாய்ச்சொல்லென்றுரைத்தலர்காதென்றே மாணிக்கவாசகமென்றிவ்வுலகந் தலைமேலேற்றி யோலமிடுவதாயிற்று.

"தாமேதமக்குச்சுற்றமும்
தாமேதமக்குவிதிவகையும்
யாமாரெமதார்பாசமா
ரென்னமாயமிவைபோகக்
கோமான்பண்டைத் தொண்டரொடு
மவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு
போமாறமைமின்பொய்நீக்கிம்
புயங்கனாள்வான்பொன்னடிக்கே"

இப்பரமோத்தம வாக்கு வேதோபநிஷதங்களெல்லாவற்றையுமொருங்கே யளக்குந் துணையதாம். இப்படியே ஒவ்வொன்றுமொவ்வொருபநிடதமாமன்றி வாளா இலக்கியமன்று. சிதம்பரத்திலே சிவத்தோடிரண்டறக் கலந்தபோது இவர்க்கு வயசு முப்பத்திரண்டு.

இனிக் கடைச்சங்கத்து நூல்களைப்பற்றி அறிந்தவரையிற் கூறுவாம்.

## கடைச்சங்கத்து நூல்கள்.

நற்றமிழ்ப்பாண்டி நன்னாட்டு நான்மாடக்கூடன்மாநகரில் அங்கயற்கண்ணியோடு அமர்ந்து வீற்றிருக்குந் திங்களங்கொழுந்தணிந்த சிவபிரானருளிய சங்கப் பலகை வீற்றிருந்து தமிழாராய்ந்த நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவரும் அவர்ப்பொருவுறாஉம் பிறரும் இயற்றியநற்றமிழ்நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,பதினெண்கீழ்க்கணக்கென்றிப்பாரில் வழங்கப்படும். நக்கீரர் முதலிய கடைச்சங்கப்புலவர் அகத்தியமென்னு முதனூலினையுந் தொல்காப்பிய முதலியவதன்வழிநூல்களையும் விழிகளாகக்கொண்டு முத்தமிழ் நன்குராய்ந்து செந்தமிழிலக்கியம் பல செய்திட்டார். அவரியற்றிய சங்கச் செந்தமிழிலக்கியங்கள் சொல்வளம் பொருள் வளந்துறுமிக் கற்போர்நெஞ்சங் கவர்ந்து மேனிலத்தோரும் விழையுநானிலச் செவியமிர்தாய் இகபரநல்கி மிகவிளங்குவன. பிற்காலத்துநானு முறையுந் தமிழுலகம் பெட்புறச்செய்து தமிழாசிரியர் பெருமை பெறுதற்குச் செந்தமிழ்ப் பிரமாண வரம்பாய் நிலவாநின்றன இந்தச் சந்தச் செந்தமிழிலக்கியங்களெனின்,—அவற்றின்றெய்வச் சொற்பொருட் சிறப்பு இப்பரிசிற்றென்று முற்றவெடுத்தியம்பல் எளிதன்று. (தி-பி-கை)

## பத்துப்பாட்டு.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டாம். திருமுருகாற்றுப்படை முதலிய இப்பத்தும், அறம் பொருள் இன்பம் வீடென்னு முறுதிப்பொரு

ணுன்கனு ளொரேரொன்று முதலியனவாயும், நல்லி சைப்புலவர் காட்டியனவாயும், அகவற்பாவிலக்கணமொத்தனவாயும், ஒற்றுமையுறுதலின் அவற்றைச் சங்கத்தார் பத்துப்பாட்டெனக் கோத்து ஒன்றாக்கினர். இவற்றுள், திருமுருகாற்றுப்படை உறுதிப்பொருணன்கனு ளிறுதிக்கண்ணதாய்ச் சிறந்த வீடுபேறு நுதலுதலின் அதனை ஏனையொன்பது பாட்டுக்குஞ் சிரத்தானமாக்கி முதற்கட் கோத்திட்டார். திருமுறை செய்தருளிய நம்பியாண்டார்நம்பி இது 'வீடுபேற்றுறுதிப் பெரும்பயன் கூறுந் தெய்வப்பாட்டாதலினைக்கிப் பதினொராந் திருமுறையிலெடுத்துக் கோத்துப் போற்றினர். இது கோத்தார் சங்கப்புலவரென்பது, நச்சினார்க்கினியர் மலைபடுகடாத்துள் "தீயினன்னவொண்செங்காந்தள்" என்னுந் தொடர்க்கு எழுதியவுரையானறிக.

திருமுருகாற்றுப்படை—இது குமரவேளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியருளியது; வீடுபேறுவேண்டினானொரிரவலனை வீடுபெற்றானொருவன் முருகக்கடவுள்பால் ஆற்றுப்படுத்தலைப் பொருளாகக் கொண்டது. முருகாற்றுப்படையென்பது முருகனிடத்து ஆற்றுப்படுப்பது என்றாம். முருகு என்னும் பண்புமொழி பண்பிமேனின்றது. ஆண்டை ஐ வினைமுதல் விகுதி. இது முருகக்கடவுடிருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, குன்றுதோறாடல், திருவேரகம், பழமுதிர்சோலை யென்னுமாறு படைவீடுகளினும் ஊரூர்கொண்டசீர்கெழுவிழவு முதலியவற்றினும் வீற்றிருப்பனெனக் கூறி அக்கடவுள்பால் ஆற்றுப்படுக்கும். இது புறத்திணையியலுள் "காவினல்லிசை" யென்னுஞ் சூத்திரத்துள்

"ஆற்றிடைக்காட்சியுறழத்தோன்றிப்

*பெற்றபெருவளம்பெறாஅர்க்கறிவுறீஇச்*
*சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும்"*

என்பதனாற் கந்தழியைப் பெற்றானொருவன், அதனைப் பெறல்வேண்டினா னொருவனுக்குப் பெறுமாறு வழிப்படுத்துக் கூறுமென்பது பற்றிச் செய்யுள் செய்தவாறு. கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங்கடந்தபொருள். அது "உற்ற வாக்கையினுறுபொருணறுமலரெழுதருநாற்றம்போற்-பற்றலாவதோர்பரம்பொருள்" என வருவதனையுணர்ந்தோர்கூறியவாற்றானுணர்க. மாயிருஞாலத்து மறைமுதற்கடவுள் பூசையின்மனம்பேதுற்ற ஒன்றொழிந்தவாயிரவரைமலைக்குகையிற் றொகுத்து அன்னதிறமுடையானின்னுமொருவனைத்தேடித் தம்மை அன்னனாகக் கண்டு ஆண்டவரோடு சிறைப்படுத்துப் பட்டினிதீர்ந்துண்ணநீராடுவான்புக்க, பூதத்திற்றப்பித் தாமும் பிறருமுய்யவேண்டி, நக்கீரனார் இத்திருமுருகாற்றுப்படையினைப் பாட, முருகக்கடவுள் இப்பாட்டுவந்துகொண்டருளிச் செவ்வேல்விடுத்து அப்பூதத்தினைச் செற்று நக்கீரருள்ளிட்டாரனைவரையுமுய்யச் செய்தருளினர். இவ்வரலாறு காளத்திமான்மியத்து நக்கீரச்சருக்கத்துக் காண்க. இதனைப் புறந்தூய்மை யகந்தூய்மை பேணிச் சிறந்துழியிருந்து முருகக்கடவுளைச் சித்தாசனத்திலேற்றி யப்பிரான்றிருவடிக்கட் பிரிவறப் பொருந்திய சித்தத்தோடு நிற்றலும் பாராயணஞ்செய்வார் பகையும், பிணியுமிடியும் பாற்றலும், கொழிதமிழ்ப் புலமைவளமுறக் கெழுமலும், பாசவைராக்கியம் பகரொணாஞானமாசறப்பெறுதலும், அம்முருகக்கடவுண் மலரடிக் கீழ்ப் பரமானந்தவாழ்வு தலைக்கூடுதலும், ஒருதலையாகவெய்துவர். இது தேவர் மக்கள் எனப் பகுத்த விருவகைப்பாடாண்டிணையுட் பிறப்பில் பெற்

றிமையுடைய கொடிநிலை கந்தழி வள்ளியென்ற மூன்றனுள், நடுநின்ற கந்தழியியல்பு கூறினமையின், தேவர் பகுதியான பாடாண்பாட்டென்றறிக. கொடிநிலை கீழ்த்திசையின்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் செஞ்சுடர் மண்டிலம். கந்தழியிலக்கண மேற்கூறப்பட்டது வள்ளிதண்கதிர்மண்டிலம். இம்மூவகைத் தெய்வமுந் தேவர்ப் பகுதியாய்ப் பாடாண்டிணைக்குரியவாமாறு,

> "கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்னும் புறத்திணையியற்சூத்திரத்தானறிக. வடுநீங்கு சிறப்பு பிறப்பிறப்பில்பெற்றி.

பொருநராற்றுப்படை—இது சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடியது; பரிசில் பெறல்வேண்டிய பொருநனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் சோழன் கரிகாற் பெருவளத்தானிடத்து ஆற்றுப்படுத்தலைப் பொருளாகவுடையது. பொருநர் ஏர்க்களம் பாடுவோர் போர்க்களம்பாடுவோர் பரணி பாடுவோரெனப் பல்திறத்தர். அவருள் ஈண்டுக் கூறியோன் போர்க்களம் பாடுவோன். இப்பாட்டுக் கரிகால் வளவன் கொடை, பிரதாபம், நாட்டுவளம், நதிவளங்களை மீக்கூறும். இப்பாட்டுள்

> "அறாஅயாணரகன்றலைப்பேரூர்ச்
> சாறுகழிவழிநாட்சோறுநசையுறாது
> வேறுபுலமுன்னியவிரகறிபொருந"

என முன்னிலையொருமையானெடுத்து,

> "வெண்ணிற்றாக்கியவெருவருநோன்றாட்
> கண்ணார்கண்ணிக்கரிகால்வளவன்

றாணிமுன் மருங்கிலணுகுபுகுறுகித்
தொழுதுமுன்னிற்குவிராயின்"

என முன்னிலைப்பன்மையான் முடித்தது.

"முன்னிலைசுட்டியவொருமைக்கிளவி
பன்மையொடுமுடியினும்வரைநிலையின்றே
யாற்றுப்படைமருங்கிற்போற்றல்வேண்டும்"

என்னுமெச்சவியற்சூத்திரவிதிபற்றியென்பது இங்ஙனம் பொருநர் பாணர் விறலியர் என்றிவரை யாற்றுப் படுத்தற்கு விதி

"கூத்தரும்பாணரும் பொருநரும்விறலியு
மாற்றிடைக்காட்சியுறழத்தோன்றிப்
பெற்றபெருவளம்பெறார்க்கறிவுறீஇச்
சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும்"

என்பது. இதன்கண்,

"ஆசிரியநடைத்தேவஞ்சி"

என்பதுபற்றி வஞ்சிமிகவும் வந்தன. இது பரிசில் வேண்டிய பொருநனைப் பரிசில்பெற்றானொருவன் அது வழங்குதற்குரியானின்னனென்று ஆற்றுப்படுத்தலின், மக்கட்பகுதியாகிய பாடாண்பாட்டென்றுணர்க.

சிறுபாணாற்றுப்படை—இது ஏறுமாநாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. பரிசில்பெறவேண்டிய பாணனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் பால் ஆற்றுப்படுத்துதலைப் பொருளாகக் கொண்டது. பாணனெனினும் பாடுவோனெனினுமொக்கும். பாணர் இசைப்பாணர் யாழ்ப்பாணர் மண்டைப்பாணர் எனப் பலதிறத்தர். இப்பாட்டிற்

"பொன்வார்ந்தன்னபுரியடங்குநரம்பி
னின்குரற்சீறியாழிடவயிற்றழீஇ
நைவளம்பழுநியநயந்தெரிபாலை
கைவல்பாண்மகன்கடனறிந்தியக்க
வியங்காவையத்துவள்ளியோர்நசைஇத்
துனிகூரெவ்வமொடுதுயராற்றுப்படுப்ப
முனிவிகந்திருந்தமுதுவாயிரவல"

என வருதலின் இவன் யாழ்ப்பாணனென வறிக. இப்பாட்டு நல்லியக்கோடன் விதரணமும், அவனகர்களின் வளமும், அவனரண்சிறப்பும், அவன் கொலுவீற்றிருப்பும், எழுவகை வள்ளல்களின் வரலாறும், பிறவும் மீக்கூறும். இது பரிசில்வேண்டிய பாண்மகனொருவனைப் பரிசில்பெற்றானொருவன் அது வழங்குதற்குரியனின்னனென்று ஆற்றுப்படுத்தலின் மக்கட்பகுதியான பாடாண்பாட்டென்றறிக.

பெரும்பாணாற்றுப்படை—இது தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. பரிசில்பெறவேண்டிய பாணனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் தொண்டைமானிளந்திரையனிடத்து ஆற்றுப்படுத்தியதைப் பொருளாகவுடையது. இவன் றொண்டைக்கொடியால் யாத்துவிடப்பட்டுத் திரையாற்றரப்படுதலின், தொண்டைமா னிளந்திரையன் எனப்பட்டான். அது

"இருநிலங்கடந்ததிருமறுமார்பின்
முன்னீர்வண்ணன்பிறங்கடையன்னோன்
றிரைதருமரபினுரவோனும்பல்"

என இப்பாட்டுள் வருதலானறிந்துகொள்க. புறங்கடையெனப் பாடமோதுவாருமுளர். இப்பாட்டுத்

தொண்டைமானிளந்திரையனுட்டு நானிலவைந்திணைப் பகுதிகளினீர்மையும், அவன் காஞ்சிநகர்வீற்றிருப்பும், வண்மையுமீக்கூறும். மேலதைச் சிறுபாணாற்றுப்படையென்று மிதனைப் பெரும்பாணாற்றுப்படையென்றும் வழங்கினர், அடிகளின் சிறுமை பெருமைநோக்கியென்க. இது பரிசில்வேண்டிய பாணமகனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் அது வழங்குதற்குரியனின்னனென்று ஆற்றுப்படுத்தலின் மக்கட் பகுதியான பாடாண்பாட்டென்றறிக.

முல்லைப்பாட்டு—இது காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. தலைமகள் பகைமேற்சென்ற தலைவன் வருங்காறுங் கற்பாற்றியிருந்தாட்குத் தலைமகன் வந்ததுகண்ட தோழி முதலிய வாயில்கடம்முட் கூறுதலைப் பொருளாக வுடையது. இது தலைவி தனித்திருக்கும் பெற்றியுங் கார்ப்பெற்றியும் பகைவர் துயர்ப்பெற்றியும் தலைமகன் விறலுமீக் கூறும்.

"செலவிடையழுங்கல்செல்லாமையன்றே
வன்புறைகுறித்தறவிர்ச்சியாகும்"

என்ற தொல்காப்பியர் கருத்திற்கேற்ப நப்பூதனாரிச் செய்யுள் செய்தாரென்றுணர்க. இது அன்புறு கற்பாட்டியான தலைவியை வன்புறை குறித்துப் பிரிதலொழுக்கங் கூறுதலின், கற்பென்னுங் கைகோண் மேலதாய் முல்லைபற்றியெழுந்த பாலைப்பாட்டென்றுணர்க.

மதுரைக்காஞ்சி—இது மாங்குடி. மருதனார் தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியனெடுஞ்செழியனைப் பாடியது; வீடுபேறு குறித்து நிலையாமை செவியறிவுறுத்தலைப் பொருளாகவுடையது. இது பாண்டியன்

முன்னோர் பெருமையும் பாண்டிநாட்டின்கணுள்ள நானில வைந்திணைவளனும் மதுரைமாநகர்ச் சிறப்பும் அவன் வீரமும் பிறவுமீக்கூறும். இது நெடுஞ்செழிய ற்கு வீடுபேறேதுவாகச்சான்றோர் பல்வேறுநிலையாமை அறைதலுணர்த்துதலின், பெருந்திணைப்புறனாயெழுந்த காஞ்சிப்புறப்பாட்டென்றுணர்க.

நெடுநல்வாடை—இது பாண்டியனெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது. கொற்றவையைப்பரவுவாள், செருவென்றபாண்டிய னெடுஞ்செழியனைத் தணந்து வருந்துந் தலைவிக்கு வருத்தந்தீரிய வுன்றலைவன் பகைவென்று விரைந்து வருகவென்று பாவுதலைப் பொருளாகவுடையது. இது கூதிர்க்கால வியல்புந் தமியளான தலைவி வருத்தமிகுதியும் படைவீட்டிற் றலைவனிருக்குமியல்புமீக்கூறும். இது நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின், முல்லைப்புறனாயெழுந்த வஞ்சிப்புறப்பாட்டென்றும் வஞ்சிக்குக் கொற்றவை நிலையுண்மையின் இதன்கட் கொற்றவையை வெற்றிப்பொருட்டுப் பரவினாளென்றுமுணர்க.

குறிஞ்சிப்பாட்டு—இது கபிலர் ஆரியவரசன் பிரகதத்தனைத் தமிழறிவுறுத்தற்குப் பாடியது. தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கியறத்தொடுநிற்றலைப் பொருளாகவுடையது. இது மலைவளனும் இல்லறநெறியுந் தம்பதி தம்முட்பேணுமன்பினீர்மையுங் கற்பின்சிறப்புமீக்கூறும். இது களவென்னும் கைகோள்பற்றி யெழுதலிற் குறிஞ்சிப்பாட்டென்றுணர்க.

பட்டினப்பாலை—இது சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. வேறு

புலஞ்சேறணுடிய தலைவன் றலைவியைப் பிரிந்துவாரே னென்று தன்னெஞ்சக்குச் செலவழுங்கிக் கூறுதலைப் பொருளாகவுடையது. இது சோழநாட்டினையுங், காவிரியையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் ஆண்டு வைகுங் கரிகாற் பெருவளத்தான் பெருவிறலையும் அவன் செங்கோலினையுஞ் சிறப்பித்துரைக்கும். இது அன்புறு கற்பாட்டியான தலைவியை வன்புறை குறித்துப் பிரிதலொழுக்கங் கூறுதலின் கற்பென்னுங் கைகோள் மேலதாயெழுந்த பாலைப்பாட்டென்றுணர்க.

மலைபடுகடாம்—இது இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவே ளன்னன்செய் நன்னனைப் பாடியது. இது பரிசில்பெறச் சமைந்த கூத்தனொருவனைப் பரிசில்பெற்றானொருவனன்னனிடத்து ஆற்றுப்படுத்தியதைப் பொருளாகவுடையது. இவ்வாற்றான் இதனைக் கூத்தராற்றுப்படையெனவும் வழங்குப. இது நன்னன் பாற்செல்லும் வழியினியல்பும், அவ்வழியிடத்துள்ள உணவின்றிறனும், அவன் மலையியல்பும், சோலையியல்பும், வண்மையும், ஆற்றலும், சுற்றத்தொழுக்கமும், நாளோலக்கமும், மற்றவனவிரமென்னு மலையில் வீற்றிருக்குங் காரியுண்டிக்கடவுண் மகிமையும், அவன் முன்னோர் பெருமையுமீக்கூறும். மலையை யானைக்கும், மலையோசையை அதன் கடாத்திற்கும் ஒப்பித்து, மலைபடுகடாம் என்று இப்பாட்டிற்குப் பெயர்கூறியவாறு, இதனுட்காண்க. இது பரிசில்பெறவேண்டிய பொருநனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் அது வழங்குதற்குரியானிவனென்று நன்னனிடத்து ஆற்றுப்படுத்தலின் மக்கட்பகுதியாகிய பாடாண்பாட்டென்றுணர்க.

பத்துப்பாட்டிற்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையியற்றினர். இவ்வுரை, பத்துப்

பாட்டின் பதப்பொருண் மிகத்தெளித்துப் பாட்டினுட் கோளினிது விளக்கிச் சிறப்புமிகவுறுகின்றது. பத்துப் பாட்டாசிரியர்கள், ஆண்டாண்டு மாட்டேற்றுறுப்பானி யாத்ததொடர்களை யுரையாசிரியர் யாற்றொழுக்காக்கிப் பொருள் புலப்படுத்தும் வித்தகங் கல்வித்துறை போய சொல்விற்பன்னர்கண் மிக வியந்தேத்தற்பாலது.

(தி-பி-கை)

## எட்டுத் தொகை.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகையாம்.

நற்றிணை—இது கபிலர் முதல் ஆலங்குடி வங்கனாிறுதி யாேனோரால் இயற்றப்பட்டது. இதன் கடவுள்வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள்வாழ்த்துளப்பட ஒன்றுதலையிட்ட நானூறு செய்யுளுடையது இது அகப்பொருட்பகுதிகளை மிகத் தெளித்துரைப்பது. இது தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன்மாறன்வழுதி.

குறுந்தொகை—இது திப்புத்தோளார் முதல் அம்மூவனாிறுதியானோரா லியற்றப்பட்டது. இதன் கடவுள் வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். கடவுள்வாழ்த்துளப்பட இரண்டு தலையிட்ட நானூறு செய்யுளுடையது. இது அகப்பொருட் பகுதிகளை மிகத்தெளித்துரைப்பது. இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகையின் முன்னூற்றெண்பத்திரண்டு செய்யுட்களுக்குப் பேராசிரியருரைகண்டாரென்பதும், ஏனை இருபது செய்யுட்களுக்கு நச்சினார்க்கினியருரைகண்டாரென்பதும்,

"நல்லறிவுடையதொல்போராசான்
கல்வியுங்காட்சியுங்காசினியறியப்
பொருடெரிகுறுந்தொகையிருபதுபாட்டிற்
கதுபொருளென்றவனெழுதாதொழிய
விதுபொருளென்றதற்கேற்பவுரைத்தும்"

என்னும் நச்சினார்க்கினியருரைச்சிறப்புப்பாயிரத்தா னறியப்படும்.

ஐங்குறுநூறு—இதன் கடவுள்வாழ்த்துச் செய்தார் பாரதம் பாடிய பெருந்தேவனார். முதனூறுசெய்தார் ஓரம்போகியார். இரண்டாநூறுசெய்தார் அம்மூவனார். மூன்றாநூறுசெய்தார் கபிலர். நாலாநூறுசெய்தார் ஒதலாந்தையார். ஐந்தாநூறு செய்தார் பேயனார். இது மருதமுதன் முல்லையீறான வைந்திணைகளையும் பொருளாகவுடையதென்பது,

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலர்—கருதிய
பாலையோ தல்லாந்தை பன்முல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு"

என்பதனாலறிக. இது தொகுத்தார் புலத்துறைமுற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தான் "யானைக்கட்சேய்மாந்தாஞ்சேரலிரும்பொறை".

பதிற்றுப்பத்து—இது பப்பத்தாக ஒவ்வொரு புலவர் சேரர்குலத்தாரைப்பாடியது. இதுபற்றியே இத்தொகை பதிற்றுப்பத்தெனவழங்கப்படுகின்றது.

பரிபாடல்—இது ஒருவகைப் பாவிசேடமாய் நூலுக்குப் பெயராயிற்று. இது எழுபது பாக்களை யுடையதாய் முறையே திருமால் செவ்வேள் கார்கோள் வையை

மதுரை மேலதாதல்; "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்தொருபாட்டுக் காரோர்க் கொன்று-மருவினிய, வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப, செய்யபரி பாடற் றிறம்" என்பதனானறிக.

கலித்தொகை—இஃதியற்றினார் ஆசிரியர் நல்லந்துவனார். அது "புரியுண்ட புணர்ச்சியுள்" என்னு நெய்தற்கலியுரையிற் "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொளியற்கை புல்லியகிளவி யெச்சமாகும்" என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம்பரறிவுதோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட்செய்தாரென்று நச்சினார்க்கினியரெடுத்தோதியவாற்றானறிக. இது நல்லந்துவனாரொருவராற்றானே யியற்றப்படினும், கலியின் பகுதிகள் ஒருவயிற் சேர்தலின், தொகையெனப் பட்டது. இது நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது. முறையே பாலை குறிஞ்சி முல்லை மருதநெய்தல் என்னு மைந்திணைப்பொருளு மறிவுறுப்பது. இதற்கு நல்லுரைகண்டார் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர், "ஒலித்திரை தலைத்தி லுணர்ந்தோ ருரைக்கும்,-கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்,-குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்,-தெள்ளிதிற்றெரிந்து திணைப்பொருட்கேற்ப,- வுள்ளுறை யுவமத் தொளிதத் பொருளைக்,-கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந்துணர்த்தி,— யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்,-திறப்படத் தெரிந்துசீர்பெறக் கொளீஇத்-துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி-முறைப்பட வினையை முடித்துக் காட்டிப் - பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்-பாற்பட நூலின்யாப்புற வுரைத்த-நாற்பெயர் பெயராநடப்பக் கிடத்திப்-போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பிய" மதிநுட்

பம், புலவருள்ளங்கவர்ந்து கொள்ளுமேதகவு மிக வுடைத்து.

*அகநானூறு*—இதன் கடவுள் வாழ்த்துப் பாடினார் பாரதம் பாடிய பெருந்தேவனார். ஏனைச்செய்யுட்கண் மாமூலனார் முதல் உலோச்சனாரீறானோரால் இயற்றப்பட்டன. ஒன்று தலையிட்ட நானூறு அகவற்பாக்களையுடையது. அகப்பொருட் பகுதிகளை மிகத்தெளித்துரைப்பது. இதன் முதற்கணுள்ள நூற்றிருபது பாக்கள் களிற்றியானை நிரையெனவும், இடைக்கணுள்ள நூற்றெண்பது பாக்கள் மணிமிடைபவளமெனவும், இறுதிக்கணுள்ள நூறுபாக்களை நித்திலக்கோவை யெனவும் வழங்கப்படும். இது தொகுத்தான் மதுரையுப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன். தொகுப்பித்தான் உக்கிரப்பெருவழுதி. இது அகமெனவும் அகப்பாட்டெனவும் நெடுந்தொகையெனவும் வழங்கப்படும்.

(தி-பி-கை)

## புறநானூறு

இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடினார் பாரதம்பாடிய பெருந்தேவனார். ஏனைச்செய்யுட்கள் செய்தார் முரிஞ்சியூர்முடி நாகராயர்முதற் கோவூர்கிழாரிறுதியாயுள்ளார். இது நானூறு அகவற்பாக்களை யுடையது இது புறப்பொருட் பகுதிகளை மிகத்தெளித்துரைப்பது. இது புறமெனவும் புறப்பாட்டெனவும் வழங்கப்படும்.

(தி-பி-கை.)

## கல்லாடம்.

இது கல்லாடனாராலியற்றப்பட்டு அப்பெயர்த்தாயிற்று. விநாயகக்கடவுள் வாழ்த்து முருகக்கடவுள்வாழ்

த்துளப்பட நூற்றிரண்டகவற்பாக்களுடையது. அகப் பொருட்பகுதிகளை மிகத்தெளித்துரைப்பது "கல்லாடர் செய்பனுவற் கல்லாடநூறு நூல், வல்லார் சங்கத்தில் வதிந் தருளிச்-சொல்லாயு, மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டு முடி, தாமசைத்தார் நூறு தரம்." என்னும் முன்னோர் செய்யுள் இதன் பெருமைக்குறு சான்றும். இந்நூற்கு மயிலேறும் பெருமாள்பிள்ளை யெழுதியவுரை முப்பத் தேழு அகவன்மாத்திரையின் விளக்கமுறுகின்றது. இன் னும் பெருந்தேவனார் பாரதந் தகடூர் யாத்திரை முதற் கடைச்சங்க விலக்கியம்பிறவுமுள.

(தி-பி-கை)

## திவாகரம்.

இது திவாகரமுனிவர் செய்த நிகண்டு இஃது அம் பர் நகரத்துச் சேந்தன் செய்வித்தமையினால் சேந்தன் திவாகரமெனப் பெயர்பெறும். பன்னிரண்டு தொகுதி களையுடையது. இந்நூல் சிற்றளவினவாகிய சூத்திரங்க ளால் யாக்கப்பட்டிருத்தலிற் கற்போர்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது. "கற்ற நாவினன் கேட்டசெவியினன், முற்ற வுணர்ந்த மூதறி வாளன், நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை, தேருங்காட்சிச் சேந்தன்" எனத் திவாகரத் துள்ளே வருங்கூற்றாற் சேந்தன் செய்வித்தோ னென்ப தும், "செங்கதிர் வரத்திற் றோன்றுந் திவாகரர்" எனவ ரும் வீரைமண்டலவன் நிகண்டுப்பாயிரத்தாலே திவாகரர் சூரியகுலவேந்தர் பரம்பரையில் வந்தோரென்பதும் நன் றாக நிச்சயிக்கப்படும். சேந்தன் கல்லாடராற் புறநானூற் றினுள்ளே பாடப்படுதலின் திவாகரர் கடைச்சங்ககாலத் தவரென்பது நன்கு துணியப்படும்.

## பிங்கலமுனிவர்.

இவர் திவாகர நிகண்டு செய்த திவாகரர் புத்திரனார். இவர் சோழமண்டிலத்தினுதித்தவரேயாயினுந்துறவு பூண்டு

தமிழ்நூலாராய்ச்சியிலே தமது காலத்தைப் போக்கியவர். இவர் செய்த நூல் பிங்கல நிகண்டு இவர் காலம் நச்சினார்க்கினியர் காலத்துக்கு முந்தியது.

## பதினெண் கீழ்க்கணக்கு.

பதினெண்கீழ்க்கணக்கின் வகை: "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்-பால்கடுகங் கோவை பழமொழி-மாமூல—மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே-கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்பதனாறிக. இந்நிலைசொல் காஞ்சியென்பதூஉம்பாடம். (தி-பி-கை).

## காவியவிலக்கியம்.

தமிழ்க்காவியஞ் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சூளாமணி, இரகுவம்மிசம், நைடதம் முதற்பலவுள. இக்காவியங்க டொல்காப்பிய வியல்வழிப்பாட்டு மேற்கூறிய சங்கத்தமிழ்ச் சொற்பிரயோகம் பெரும்பாலுமருவி நவரசங்களுட் சிலவும் பலவுந் தங்கணடங்கக் கொண்டுலகவியன்நீதி வைராக்கிய முதலியவைகளை நன்றறிவுறுத்துவன.

## சிந்தாமணி.

இது சைனகாவியம். இந்நூலாசிரியர் சைனமுனிவரான திருத்தக்கதேவர். இவர் சைவராயிருந்து ஆருகதராயினரென்பர் சிலர். அது பொருந்தாமை வைதிககாவியதூடணமறுப்பிற் காண்க. இக்காவியத்தலைவன் சீவகனென்னுங்குமாரசன். இக்காவியமவன் பிறப்பெழுவாயாகக் கதிகூடிய திறுவாயாகவுள்ள கதை கூறுவது. இது கடவுள்வாழ்த்து அவையடக்கம் பதிகமென்பவற்றோடு நாமகளிலம்பகம், கோவிந்தையிலம்பகம், காந்தருவதத்

தையிலம்பகம், குணமாலையிலம்பகம், பதுமையிலம்பகம், கேமசரியிலம்பகம், கனகமாலையிலம்பகம், விமலையிலம்பகம், சுரமஞ்சரியிலம்பகம், மண்மகளிலம்பகம், பூமகளிலம்பகம், இலக்கணையிலம்பகம், முத்தியிலம்பகமென்னும் பதின்மூன்றிலம்பகங்களுடைத்து.

கடவுள்வாழ்த்து—சித்தசரணம்அருகசரணம் சாதுசரணம் தன்மசரண நுதலுவது.

பதிகம்—சீவகன்கதையைத் தொகுத்துக் கூறுவது.

நாமகளிலம்பகம்—சச்சந்தன் ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்திலுதித்துச் செங்கோல் செலுத்தி விசையையென்னும் பட்டத்தரசி காமக்கடற்படிந்து கட்டியங்காரனென்னு மமைச்சனை அரசு நடாத்த நிறுவி அவனாற் கொலையுண்டதூஉம், சீவகன் அவனுக்கு அவன் மனைவி விசையைபாற்றோன்றித் தெய்வத்திறத்தானுய்ந்து வளர்ந்து பலகலைகற்று நிலவியதூஉம் கூறுவது. இது சீவகன் நாமகளைக் கூடிய வரலாறு தெரித்தலின், நாமகளிலம்பகமென்றாயிற்று. நாமகளைக் கூடினதென்றது அவன் கலைப் பயிற்சிதலைக் கூடியதென்றவாறாம்.

கோவிந்தையிலம்பகம் — சீவகனிரைமீட்டுப் புகழ்மாலைசூடித் தன்றோழன் பதுமுகனுக்குக் கோவிந்தையென்னும் நந்தகோபன் மகளைமணஞ் செய்வித்த வரலாறு கூறுவது.

காந்தருவதத்தையிலம்பகம்—சீவகன் வித்தியாதர வேந்தனான கலுழவேகன் மகள் காந்தருவதத்தையை வீணைவென்று அவள் மணமாலைசூடி அது பொறாத அரசரைப் போரிற் புறங்கண்டு அவளை மணந்த வரலாறுகூறுவது.

குணமாலையிலம்பகம்—சீவகன் பொழிலாட்டிற் குணமாலை சுண்ணம் புகழ்ந்து அவள் அசனிவேகமென்னுங் கட்டியங்காரன் பட்டக்களிறு கோட்பட்டுழி யதனெதிரேறிச் செருக்கடக்கி விலக்கி அவளை மணஞ்செய்த வரலாறு கூறுவது.

பதுமையிலம்பகம்—சீவகன் சுதஞ்சணனென்னுந் தேவனாற் கட்டியங்காரன் யாப்புறுத்த காவலிற்றப்பிப் பஃறேய யாத்திரை போந்து பல்லவதேயத்துச் சந்திராப நகர்க்கரசனான தனபதி மகள் பதுமையைப் பாம்புவிடமகற்றியவளன்பிற் கோட்புண்டு அவளை மணந்த வரலாறு கூறுவது.

கேமசரியிலம்பகம்—சீவகன் றக்க நாட்டிலுள்ள கேமமாபுரம்புக்கு அந்நகர் வணிகன் சுபத்திரன் மகள் கேமசரி ஆடவற்பேணாளை யாண்மையிற் பேதுறுத்து மணஞ்செய்த வரலாறு கூறுவது.

கனகமாலையிலம்பகம்—சீவகன் மத்திம தேயத்துஏமமாபுரமெய்தி அப்புராதிபனான தடமித்திரன் குமாரர்க்கு விற்கலைகற்பித்து, அவ்வித்தகங்காரணமாக அவன் மகள் கனகமாலையைக் கலியாணஞ் செய்த வரலாறு கூறுவது.

விமலையிலம்பகம்—சீவகன் றண்டகாரணியமெய்தித் தாய் விசையையைத் தரிசித்து அவள் வரம்பெற்றுத்தன்னகர் ஏமாங்கத நாட்டிராசமாபுரத்தினோர் பாற் செல்லுழி ஆண்டுள்ள சாகரதத்தன் மகள் விமலை கண்வலைப்பட்டு அவளை மணந்த வரலாறு கூறுவது

சுரமஞ்சரியிலம்பகம்—சீவகன் றன் சுண்ணம் பழித்தலிற் பரிந்து ஆடவற்சினந்து அவற் கூடலோம்பேன் என்று விரதஞ் சாதித்தாள் சுரமஞ்சரியை வேடமறைந்து

புக்குச் சீதநாடகங்காட்டி மயக்கி வதுவையாற்றிய வரலாறு கூறுவது.

மண்மகளிலம்பகம்—சீவகன் மறலியை வரவழைத்தல்போலத் தன்மாமனை வரவழைத்த கட்டியங்காரனையே கண்டு அவற்பொருது கோறற்கிது வாய்த்த பொழுதென்றெண்ணித் தம்பியர் தோழர் தம்மோடு கூடி நால்வகைப் படையமைந்து போந்து இராசமாபுரத்தோர்பாலணுகியதூஉம், மாதுலன் கோவிந்தன் சூழ்ச்சிவலையில் வந்தகப்பட்ட கட்டியங்காரனென்னும் மதக்களிற்றின்முன் சிங்கவேறுபோல வெளிநின்று அவன் படையறப்பொருது அவற்கொன்று மண்மகளுரிமை எய்தியதூஉம் கூறுவது.

பூமகளிலம்பகம்—சீவகன் இராசமாபுரவரண் மனை புகுந்து வேத்தவை சார்ந்து சிங்காதனமேறி மணிமுடி சூடி மண்பதை புரந்த வரலாறு கூறுவது.

இலக்கணையாரிலம்பகம் — சீவகன் காந்தருவதத்தை குணமாலை முதலிய தேவிமாரோடு பதுமை முதலிய தேவிமாரையும் இராசமாபுரத்தரண்மனையிற் றலைக்கூட்டித் தன் மாமன்மகள் இலக்கணையை மணந்து இம்மாதராரோடின்புற்றிருந்து அரசாண்டு தற்புரந்தார்க்கெல்லாம் வளனும் வரிசையுமுதவி அங்கண்மாஞாலமுவப்பச் செங்கோல் செலுத்திய வரலாறு கூறுவது.

முத்தியிலம்பகம்—சீவகன் றத்தை முதலிய வுத்தம பத்தினிமார் வயிற் சற்புத்திரர்ப் பெற்றுச் சோலை விளையாட்டின் மேவி ஆட்டயர்ந்திருப்புழிக், கடுவன் குரங்கு தன்காதன் மந்திக்குப் பொற்பிரவென்ன வயங்கும் பலாவினாற் சுவைமிகுதி நல்காநிற்பச் சோலை காப்பான் போந்தக் கனியைக் கவர்ந்து கடுவனை மந்திபோயோட்டிச் சிந்தைமகிழ்ந்துண்பது கண்டு, வெறுக்கையில் வெறுக்கை

வைத்துக், கைப்பூமிழந்த குரங்கு நாடுகாவலிழந்த கட்டியங்காரனை யொத்தது; இக்காவலன் அவனைக்கொன்று அரசினை யெய்திய வென்னை யொத்தான்; வலியார் வசத்ததாய் மாறி மாறிச் செல்லுமாண்பிற்றாய அரசுபோற்றேனென்று துறந்து அருகன் றிருவடியடையும் அறம் பேணிக்கதியடைந்த வரலாறு கூறுவது.

இதற்கு நல்லுரைகண்டார் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர். இவ்வுரை செய்யுட்களின் பொழிப்புத்திரட்டிச் சொன்முடிபு விளக்கி மேற்கோள் காட்டிப் பொருணுட்பந் தெளித்துக் கவியிருதயந்தோற்றிச் சிந்தாமணிக்கு நந்தாவிளக்காம்.

(தி-பி-கை).

## சிலப்பதிகாரம்.

இது முத்தமிழிலக்கியமான வோர் சைனகாவியம். கடைச்சங்கத் தமிழ்ப்புலவரான சீத்தலைச் சாத்தனாருளப் பாடு கொண்டு இளங்கோவடிகளியற்றி யவனைக் கேட்பித்த காவியமென்பது இந்நூற் பதிகத்தானுணரப்படும். காவியத்தலைவன் கோவலன். கோவலன் கண்ணகி யென்பாளை வேட்டு இல்லறஞ் செய்யுநாளின் மாதவி யென்னு நாடகக் கணிகை மயல்கோட்பட்டுச் செல்வமிழந்து தமரறிவுறாமே தன்மனைக் கிழத்தியாகிய கண்ணகியோடு மதுரைமாநகரை யெய்தி ஆண்டிருந்து பொருள்செயல் வேண்டிக் குடிமனைக்கிழத்தி யடிமணிச் சிலம்பு விற்பான் புக்கு ஆண்டைத் தட்டானொருவன் சூழ்ச்சிவலையிற்பட்டானாய்ப் பாண்டியன் காவன்மீளியர் வாளிற்கிலக்காகிய வண்ணமும், கண்ணகிதா தற்கொழுநன் வாளிற்கிலக்காகிய கடுந்துயரான் மதுரை தீயிட்ட வண்ணமும், கோவலனை மலைநாட்டுத்திருச்செங்குன்றிற்றெய்வவடிவிற்கண்டு தலைக்

கூடிச் சுவர்க்கம் புக்க வண்ணமும், செங்குட்டுவன் அவ்வதிசயங் கேட்டு அவட்குக் கோவில்கண்டு அவளுருப்பிரதிட்டை செய்து வழிபட்டவண்ணமும் பிறவும் கூறும். இக்கதை புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டமென மூன்றுவகைப் படுத்துக் கூறப்படும். இது சிலம்பை முக்கியவிடயமாகக் கொண்டெழுந்தகாவியமாகலின், சிலப்பதிகார மெனப்பட்டது. இதன் புகார் காண்டம்மதுரைக்காண்டங்கட்கு நல்லுரைகண்டார் அடியார்க்கு நல்லாரென்பவர். அடியார்க்கு நல்லார் முத்தமிழிலக்கண மரபுவழாது சொற்றிறம் பொருட்டிறம் விளங்கவுற்று நாடி யிதற்குரையுலகமுவப்ப வெழுதினர்.

(தி--பிளை).

## மணிமேகலை.

இது மதுரைக் கூலவாணிகன் சாத்தனரியற்றியவோர் பௌத்த காவியம். இக்காவியத் தலைவி மாதவி மகள் மணிமேகலை யாதலின் அப்பெயர்த்தாயிற்று. இது மணிமேகலை தந்தையாகிய கோவலற்குத் தாயாகிய கண்ணகிக்கு முந்தை யூழ்வினைப்பயன் விளைந்த முறைகேட்டு வைராக்கியமெய்தித் துறந்து தவத்திறம்பூண்டு புத்ததருமங்கேட்டுப் பவத்திறமறுகென நோற்றதைப் பொருளாக வுடையது இதுவிழாவறைகாதை, ஊரலருரைத்தகாதை, மலர்வனம் புக்ககாதை, பளிக்கறை புக்ககாதை, மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய காதை, சக்கரவாளக் கோட்ட முரைத்தகாதை, துயிலெழுப்பிய காதை, மணிபல்லவத்துத் துயருற்ற காதை, பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை, மந்திரங்கொடுத்த காதை, பாத்திரம் பெற்றகாதை, அறவணர்த்தொழுத காதை, ஆபுத்திரன் றிறமறிவித்த காதை, பாத்திரமரபு கூறிய காதை, பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதை, ஆதிரை பிச்சை

யிட்ட காதை, உலகவறவி புக்க காதை, உதயகுமரனம் பலம் புக்க காதை, சிறைக்கோட்ட மறக்கோட்டமாக் கிய காதை, உதயகுமரனை வாளாலெறிந்த காதை, கந் திற்பாவை வருவதுரைத்த காதை, சிறைசெய் காதை, சிறைவிடுகாதை, ஆபுத்திர நாடடைந்த காதை, ஆபுத்திர னோடு மணிபல்லவமடைந்த காதை, வஞ்சிமாநகர் புக்க காதை, சமயக்கணக்கர் தந்திரங்கேட்ட காதை, கச்சிமா நகர்புக்க காதை, தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை, பவத்திறமறுகெனப் பாவை நோற்றகாதை யெனமுப் பான் பகுதித்தாம். அற்றேலஃதாக; பொய்யடிமையில் லாத புலவரான சீத்தலைச் சாத்தனார் இவ்வைதிக பௌத் தபுறச் சமயப் பொருள்பற்றிக் காவியஞ் செய்ததென்னை யெனின், மணிமேகலை வண்ணங்கண்ட புலவராகலானும் அப்பொழுதைக் காவலரிது பாடியருளுகவென வேண்டு தலானும், மணிமேகலையாக்கை நிலையாமை மேலிட்டு வை ராக்கியந் தவம்பேணியவரலாறும் பிறவும்உலகுக்குணர்த் தல் வேண்டுமென்னுங் கருத்துத் தம்மைத் தூரத்தலி னும், சாத்தனாரிது யாத்தனரென்க. மற்றுச் சாத்தனார் பௌத்த மெய்யென்று காட்டல்வேண்டி இது யாத்தி லரென்பது. "நுதல்விழி நாட்டத்திறையோன் முதலாப்- பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறாக—வேறு வேறு சிறப் பின் வேறு வேறு செய்வினை—யாறறி மரபினறிந்தோர் செய்யுமின்" என்று சிவபரத்துவமு மிதனுட் சாத்தனா ரெடுத்தோதினர்.

(தி-பி-கை).

## குண்டலகேசி.

இது பௌத்தகாவியம். இந்நூற் செய்யுட்களிலொ ரோவொன்று சிவஞானசித்திப் பரபக்கவுரையிலும் பிற

ண்டும் உரையாசிரியர்கள் எடுத்தோதிடக் காண்கின்றா மன்றி நூன்முழுதும் வழங்கக் கண்டிலம்.

(தி-பி-கை).

## வளையாபதி.

இதில் ஒவ்வோர் கூறு மேற்கோளாய் முன்னோருரைகளில் வந்திடக் காண்கின்றாமன்றி நூன்முழுதும் வழங்கக் கண்டிலம்.

(தி-பி-கை).

## சூளாமணி.

இது சைனகாவியம். தோலாமொழித் தேவரியற்றியது. இக்காவியத்தலைவன் பயாபதி. இவன் சங்கவண்ணன் மேகவண்ணனென்னும் புத்திரரிருவரைப் பயந்த வரலாறும், இவருளிளையோனான திவிட்டனென்னு மேகவண்ணன் மாயச்சீயத்தை வதைசெய்த பராக்கிரம வரலாறும், இரத நூபுரவிஞ்சையர் வேந்தன் மகள் சயம்பவை யென்னும் பொற்கொடியை வேட்ட வரலாறும், அவன் அச்சுவகண்டன் முதலிய பகைமன்னரைப் போரிலடர்ந்து வென்றிமாலை சூடிய வரலாறும், தன் மகட்குச் சுயம்வர நாட்டிய வரலாறும், பயாபதி நிலையாமைநோக்கி யரசுரிமை துறந்து அருகனறநெறி தேர்ந்த வரலாறும், அருகசரணாகதி யெய்திய வரலாறும், இதுமீக் கூறும்.

(தி-பி-கை).

## திருவள்ளுவரும் திருக்குறளும்.

இவர் பிரமதேவனுடைய அமிசாவதாரராகப் பகவனென்பவருக்கு ஆதியென்பாள் வயிற்றிலே பிறந்து மயிலாப்பூரிலே ஒரு வள்ளுவன் மனையில் வளர்ந்து,

வேதசாஸ்திர நிபுணராகி, அவற்றின் சாரமாய திருக்குறளைப் பாடிச் சங்கப் பலகையேறி அரங்கேற்றினவர். கபிலரகவலின்படி கபிலர் ஔவை முதலாயினோர் இவர்க்குச் சகோதரர். இவ்வள்ளுவருக்குச் சங்கத்தார் சமாசனங் கொடுக்கப் பின்வாங்கின ரென்பதும் பின்னர் அசரீரிவாக்காலுடன்பட்டன ரென்பதும் "திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ-டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க-வுருத்திரசன்மர்..." என்னும் வெண்பாவாற்கொள்ளப்படும். திருவள்ளுவர் தாமே யெல்லாமோதி யுணர்ந்தவர். அவர் பிறர் எவரிடத்துங் கல்லாதவர். இவ்வுண்மை நக்கீரர் கூறிய "தானே முழுதுணர்ந்து" என்னும் வெண்பாவாற் பெறப்படும். இவர் திருக்குறளைக்கொண்டு போய்ச் சங்கத்தி லரங்கேற்றிய காலத்தில் அரசு வீற்றிருந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. திருக்குறளுக்குப் பாமாலை சூட்டினோர் ஐம்பதின்மருள் உக்கிரப்பெருவழுதியு மொருவன். திருவள்ளுவர் செய்தநூல் வைதிக சமயத்தினரால் மாத்திரமன்று, உலகத்துச் சமயிகள் யாவராலும் மெய்நூலெனக் கொண்டு மெச்சித்தலைவணங்கப்படும் நூலென்பது, கல்லாடர் "எப்பாலவருமியைபவே வள்ளுவனார் முப்பான் மொழிந்த மொழி" எனக் கூறியிருத்தலின், அக்காலத்தவர்களுக்கு மொத்ததுணிபாம். வள்ளுவர் நூலின்மேல் யாவர்க்கு மங்கீகாரமாகிய பொருட்சிறப்பும் இலக்கிய விலக்கண வனப்பு மமைந்து கிடத்தலினால் வள்ளுவர் காலத்திலேயே அது பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது. மலைவுவரு மிடங்கடோறும் இது வள்ளுவன் மொழியென்றால் அவ்வளவில் மலைவு நீங்கிவிடும். கண்ணுதல் கவியினுங் குற்றங்கற்பித்த நக்கீரரே தமது இறையனாரகப் பொருளுரையிலே குறளைப் பிரமாணமாக எடுத்தாண்டு போயினரென்றால் மற்றோர் கொள்வது புதுமையாகாது. சேரமான் பெருமா

ணையனார் வள்ளுவர் திருக்குறளைத் தமது நூலிலெடுத்தோதி யிருத்தலால் வள்ளுவர் சேரமான் பெருமாணாயனாருக்கு முன்னுள்ளவரென்பது நிச்சயிக்கப்படும். சிலர் ஒளவை சேரமான் பெருமாணாயனார் காலத்திருந்தமையால் திருவள்ளுவரும் சேரமான் காலத்தவரேயாதல் வேண்டுமென்பர். ஒளவையார் அதிகமான் கொடுத்த அற்புத நெல்லிக்கனியை யுண்டு ஆயுள் நீட்டம் பெற்றுப் பன்னூறாண்டுயிர் வாழ்ந்திருந்தவர். அவருடைய ஆயுட்காலத்திலொருவர்பின்னொருவராயெத்தனையோ வரசரிருந்து போயினர். ஆதலால் ஒளவையாருடையவார்த்திகதிசையிலிருந்தவர்களுடைய காலத்தைக் கொண்டு வள்ளுவர் காலத்தைநிச்சயித்தல் கூடாது. உக்கிரப்பெருவழுதிகடைச் சங்கத்துக் கடையரசன். கடைச்சங்கம் ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னரிருந்தது.

இற்றைக்கு ஆயிரத்தெழுநூற்றறுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே விளங்கிய கரிகாற் சோழன் காலத்து நூல்களாகிய மணிமேகலையினுள்ளுஞ் சிலப்பதிகாரத்தினுள்ளும் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட திருக்குறள் அவ்விரு நூல்களுக்கு முன்னர்த் தோன்றியதென்பதுதானேபோதரும். சிலப்பதிகாரநூற்காலம்ஆயிரத்தெழுநூற்றறுபத்தைந்துவருஷங்களுக்குமுற்பட்டதென்பது. மகாவமிசமென்னு நூலினுள்ளே வருங் கயவாகு காலத்தாற்றுணியப்படும். ஆகவே திருவள்ளுவர் காலம் ஆயிரத்தெண்ணூற்றைம்பதுவருஷங்களுக்கு முன்னுள்ளதென்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

இன்னும் இலங்கையை வெற்றிகொண்டு இற்றைக்கு இரண்டாயிரத்தறுபது வருஷங்களுக்கு முன்னர் அரசு புரிந்த சோழமண்டலத்தானாகிய ஏலேல சிங்கனுடைய பௌத்திர பௌத்திரனுக்குப் பௌத்திரனாகிய ஏலேல

சிங்கன் என்னும் பிரப்புவுக்குத் திருவள்ளுவர் நண்பினரென்றும், அப்பிரபுவினது கலமொன்று கடலோடிமீண்டு வந்து பாரிற்பொறுத்து மிதவாது கிடந்தபோது திருவள்ளுவர் "ஏலேலையா" வென்று கூறித் தொட்டபோது மிதந்ததென்றும், பாரமிழுப்போர் இன்றும் "ஏலேலையா" என்று சொல்லியிழுப்பது அன்று தொட்ட வழக்கென்றும் வரும் கன்ன பரம்பரையாலும் மேலேசெய்த கால நிச்சயம் வியவஸ்தாபனமாம். இரண்டாயிரத்தறுபதில் ஏலேலசிங்கனுடைய பிற்சந்ததி ஆறினுக்கும் இருநூறு வருஷம் வாங்க எஞ்சுவது ஆயிரத்தெண்ணூற்றறுபது. ஏலேலசிங்கன் இலங்கையை வெற்றிகொண்டகாலம் இரண்டாயிரத்தறுபது வருஷங்களுக்கு முன்னரென்பது மகாவம்சத்திற் காண்க. சிங்கன் என்னும் பட்டப்பெயர் சோழமண்டலத்திலுள்ள இவனுக்கு வந்தது தன்மரபினர் இலங்கையரசுபெற்ற காலத்தைப் பெயரோடு விளங்கினமையாற் போலும்.

யேசுசமயிகள் தமது சமயத்தவராகிய தாமசு முனிவர் மைலாப்பூரில் வந்திருந்தபோது திருவள்ளுவரென்னும் பெயரோடு விளங்கினரென்றும் அவர்காலம் யேசுவுக்குப்பின் ஐம்பதாம் வருஷமென்றுங் கூறும் வெளிற்றனுமானவுரையுமிந்நிண்ணயத்துக்கொரு சான்றாம். இனித்திருவள்ளுவ மாலையிற் கல்லாடராற் கூறப்பட்ட வெண்பாவும், கல்லாடமென்னு நூலிலே அவர் கூறிய அகவற்கூறும் ஒத்த கருத்தினவாதலின், திருவள்ளுவமாலை பிற்காலத்தாராற் பாடி யொட்டப்பட்டதென்பது அறியாமையின்பாலது. அவை வருமாறு:—திருவள்ளுவமாலையிற் கல்லாடர் கூறியது:—"......எப்பாலவரு மியைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி" கல்லாடம் "சமயக் கணக்கர் மதிவழி கூறா—துலகியல் கூறிப் பொ

ருளிது வென்ற— வள்ளுவன் றனக்கு வளர்கவிப்புலவர் முன்"

திருவள்ளுவர் உலகியல் நெறி வீட்டியல்நெறி இரண்டும் நன்முக விசாரித்துண்மையுணர்ந்தவர். மாந்தர்க்கு இல்லறம் துறவறமென்னும் இருவகையறங்களுமே உரியனவென்பதும், அவற்றுள் துறவறத்தை நோக்கியே இல்லறம் சாதிக்கத்தக்கதென்பதும் வீடு தேடுவார்க்குத்துறவறமும் உலகந்தேடுவார்க்கு இல்லறமு முரியனவென்பதும் அவர் சித்தாந்தம். இல்லறவியல்பு கூறப்புகுந்த திருவள்ளுவர் "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா—ரென்புமுரியர் பிறர்க்கு" என்னுந் திருக்குறளால் அன்பே அதற்குச் சிறந்த விலக்கண மென்றும், துறவுக்கிலக்கணங்கூறுமிடத்து,

"அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந்—தவா அப்பிறப்பீனும் வித்து" என்னுங் குறளால் அதற்கு அவாவின்மையே சிறப்பிலக்கணமென்றும், சித்தாந்தஞ் செய்திருத்தலை ஊன்றி நோக்கினுல் அவருடைய அற்புத தெய்வப்புலமையினுற்றல் நன்குபுலப்படும் திருவள்ளுவர் நூற்றுமுப்பத்துமூன்று விஷயங்களெடுத்து நூல்யாத்தனர். ஒவ்வொரு விஷயங்களுமெ எஞ்சாமற் கடைபோக. அவரால் விசாரித்து நிச்சயம் பண்ணப்பட்டிருத்தலின் எத்துணைப்புத்திநுண்மையாரும் ஒரு விஷயத்திலாயினும் ஒன்றைக் கூட்டவேனுங் குறைக்கவேனும் இடங்காணமாட்டார். திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட விஷயங்களுட்சிலவற்றைத் தாமாகவிசாரித்தபிறபாஷைப்புலவருட்டலையானோர் அவ்விஷயங்கள் மேற்கூறியவற்றையும்திருவள்ளுவர்கூறியவற்றையு மொப்பு நோக்குமிடத்துத் திருவள்ளுவர் கருத்துக்களை விஞ்சி நிற்றலின், அவரின் விஞ்சினோர் பிறரில்லை எனவே சித்தாந்தமாம். அதுபற்றியே

திருக்குறள் கிரேக்க பிராஞ்சிய லத்தீன் ஆங்கில முதலிய பாஷைகளிலே மொழிபெயர்க்கப்பட்டு அந்நேயங்களிலே சென்று வழங்குவதாயிற்று. திருவள்ளுவர்க்கு முன்னும், முனிவரும் புலவரும் அறம்பொருளின்பமென்னும் முப்பாற்பொருளு மொருவாறெடுத்துக் கூறினரேனும், அவரெல்லாம், திருவள்ளுவரைப்போலக் கேட்டார் நெஞ்சினுட்பாய்ந்து பதிகொள்ளுமாறு சொல்லுஞ் சொல்வன்மையுஞ் சாதுரியமு முடையரல்லர். “எழுத்து முதலாய விலக்கண மெல்லாம் பழுத்தினி துறங்கும் பள்ளி” என்று புகழப்பட்ட திருக்குறட் சிறப்பு எழுத்திலடங்குவதன்று.

திருவள்ளுவரை ஆருகதசமயியென்று சிலரும், சைவசமயியென்று பலரும் வாதிப்பர். ஆயினும் வைதிகாசாரங்களை மேற்கொண்டு நிற்குந் திருக்குறட்கருத்தை நோக்க அவரை ஆருகதரென்று சாதிக்கப் போந்த நியாயங் காண்கிலம்.

தமிழ்ப்பாஷைக்குச் சிரோரத்தினமாக விளங்கும் இத்திவ்விய நூல் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரற் செய்யப்பட்டது. அறம் பொருள் இன்ப மென்னும் முப்பாற் பொருளையும் எஞ்சாமல் எப்பாற் சமயத்தோர்க்கும் ஒப்பக்கூறும் அற்புதநூல். இதற்கிணையான நூல் உலகத்தில் மற்றெப் பாஷையினும் இல்லை. இதற்குரைசெய்தவர் தருமர் முதற் காளிங்கரீறாகிய பதின்மர் அவருட் பரிமேலழகருரையே வள்ளுவர் கருத்தை உள்ளவாறுரைப்பது. திருக்குறள் நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரமும் ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது திருக்குறளு முடையது. சங்கப்புலவர்களாலே அந்நூலைப்பாராட்டிச் செய்யப்பட்ட பாமாலை திருவள்ளுவமாலை யெனப்படும். அதற்குரைசெய்தவர் திருத்தணிகைச் சரவணப்பெருமா

ளையர். திருவள்ளுவமாலை யுரையோடு பரிமேலழகர் உரையை முதன்முதல் அச்சிட்டு வெளியிட்டவர் செந்தமிழ்க் கடலாகிய நல்லூர் ஆறுமுகநாவலர்.

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்.

சுந்தரமூர்த்திநாயனார் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். கைலாசத்திலே சிவபெருமானது அடியார்களு ளொருவராய் ஆலாலசுந்தரரென்னும் பெயரோடிருந்து உமாதேவியாரது சேடியர்கள்மீது மோகித்த காரணத் தாற் பூலோகத்திலே, திருமுனைப்பாடி நாட்டிலே திரு நாவலூரிலே சடையனாருக்கு இசைஞானியார் வயிற்றிலே அவதரித்தவர். அச்சேடியர்களும் பரவையார் சங்கிலி யார் என்னும் பெயரோடு முறையே திருவாரூரிலும் திரு வொற்றியூரிலும் அவதரித்தார்கள். ஆலாலசுந்தரர் கை லாசத்தை விட்டு நீங்குமுன் மனம் பரிதபித்தழக் கண்ட சிவபெருமான் கருணைகூர்ந்து "பூலோகத்திலுன்னை வந் தாட்கொள்வோம்" என்றநுக்கிரகித்தபடியே சுந்தரமூர்த் திநாயனார் மணப்பருவத்தை யடைந்து மணக்கோலத்து டன் மணப்பந்தரின் கீழிருக்குஞ் சமயத்தில் அச்சிவ பிரான் ஒரு கிழப்பிராமண வடிவங்கொண்டு ஒரு முறி யோலையோடவ்விடத்தை யடைந்து நாயனாரைத் தமக்கு அடிமையென அச்சபையிலுள்ளோர் ஒப்புமாறு நாட்டி, மணம்புகவொட்டாமற் றடுத்து அழைத்துப்போய்த் தம் மை இன்னரென்றுணருமாறு மறைந்தருளினர். அப் பொழுது நாயனார் பூர்வ வாசனையாற் சிவபத்தி மேலிடப் பெற்று அன்றுமுதல் அன்புமயமான அற்புதஞானப்பா டல்களைப் பாடிச் சிவஸ்தலங்கள்தோறுஞ் சென்று வண ங்கிவருவாராயினர். தமதுபிறவிக்குக்காரணமாகியபெண் ணவாவின் பயன் வந்து கூடுங்காலம் வந்தடுக்க, திருவா ரூரிலே சுவாமிதரிசனஞ் செய்து மீள்பவர் ஊழ்வலியாலே

பரவையாரைக் கண்டு மயங்கி அவர்பாற் சிவபிரானைத் தூதுபோக்கி அவரை இசைவித்து அவர் மெய்ந்நலநுகர்ந் தங்கிருந்தார். பின்னர்த் திருவொற்றியூரிற் சென்று அங்கு மூழ்கூட்டச் சங்கிலியாரையுங்கூடி அவ்வூழையும் புசித்தனர். அச்சங்கிலியார் பொருட்டுச் செய்த பொய்ச் சத்தியத்தின்பயனைப் பார்வையிழந்து சிலநாள் வருந்திப் பதிகம்பாடிப் பார்வைபெற்றார். சிவபிரானுக்குத் தோழர் என்னும் பெயர் பெற்றவராயிருந்தும் செய்தபிழையை அக்கடவுள் பொறுத்தருளாது அதற்காகச் சுந்தரமூர்த்தியைத் தண்டித்தலின் சிவபிரான் நடுநிலைதவறாத நீதியை யுடையரென்பதும், எவ்வினையும் அனுபவித்தன்றித் தீராதென்பதும், க்ஷமித்துப்பாவங்களைத் தீர்க்கும் அதிகாரம் கடவுளுக்கில்லையென்பதும் பெறப்படும்.

சுந்தரமூர்த்திநாயனாரது பெருமைகளை யெல்லாம் கேள்வியுற்ற சேரராசாவாகியசேரமான் பெருமாணாயனார் அவரை யழைத்துப்போய்த் தமதரமனையிலே விருந்திட்டுபசரித்து வைத்திருந்து அவரிடத்திலே போன்பும்பெரு நட்புமுடையராயிருந்தார்.

சுந்தரமூர்த்திநாயனார் பதினெட்டாம் வயசிலே திருவஞ்சைக்களத்திற் சுவாமிதரிசனஞ் செய்து மீண்டு கோபுரவாயிலை யடைந்தபோது கைலாசகிரியினின்று சிவகணங்களோடுமொரு வெள்ளையானையானது சிவாஞ்ஞையினாலே அவர் முன்னே சென்று நின்று சிவானுக்கிரகத்தையுணர்த்த ஆனந்த பரவசராய் அதன் முதுகின்மேற் கொண்டு சென்றார். சேரமான் பெருமாளும் அதனையுணர்ந்து தமது குதிரைமேற்கொண்டு அதன் செவியிலே ஸ்ரீபஞ்சாட்சரத்தை யோத அஃது அந்தரத்தெழுந்து பாய்ந்து சென்று சுந்தரருடைய யானையை வலம் வந்து முன்னே சென்றது. இருவரும் கைலாசத்தை யடைந்து சிவகணபதப்பேறு பெற்றார்கள்.

சுந்தரமூர்த்திநாயனாரிடத்திலே விளங்கிய அற்புதங்கள் முதலை விழுங்கிய புதல்வனை அம்முதலையை அழைத்து உமிழச்செய்து பிழைப்பித்தது; நென்மலைபெற்றது; அம் மலையைப் பூதங்கள் வாரிப்போய்ப் பரவையார் வீட்டிலும் திருவாரூரிலுள்ளார் வீடுகள்தோறும் குவைசெய்யப்பெற்றது; தலைக்கணையாக அடுக்கிப் படுத்திருந்த செங்கற்கள் உதயத்திலே பொன்னாயிருக்கப் பெற்றது; மணிமுத்தா நதியிலேயிட்ட பொன்னைத் திருவாரூர்க் கமலாலயக் குளத்திலே யெடுத்தது முதலியனவாம்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பதிகங்கள் முப்பத்தேழாயிரம். அவற்றுள் மறைந்தனபோக எஞ்சி இக்காலத்தில் நிலைபெறுவன நூறு பதிகங்களாம். சுந்தரமூர்த்திநாயனார் தடுத்தாட்கொள்ளப் பட்டபோது முதன்முதல் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், "பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா— யெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை—வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்—அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே" இத்தேவாரம் தம்மைத்தடுத்தாட்கொள்ளவந்த சிவபெருமானை எதிர்த்து வாதாடியபோது அவரைப் பித்தாவென்று இகழ்ந்தனர்; பின்பு சிவபெருமானுடைய திருவருட்படியே பித்தாவென்று தொடங்கி அன்று முதலாகத் தலங்கடோறுஞ் சென்று, கடன்மடை திறந்தாலொப்பக் கேட்டாருள்ள நெக்கு நெக்குருகப், பாடியருளினார். இவருடைய திருப்பதிகங்களும் இசைத்தமிழேயாம். இவர் பாடிய பதிகங்களெல்லாம்பத்தாம்பாட்டிலே இவர் பெயரைக்குறிப்பனவாயும் அவ்வப் பதிகத்தா லெய்தப்படும் பயன் இதுவென்பதை வெளிப்படுத்துவனவாயும் இருக்கும். இம்மையில் தமக்குத் துன்பம் வந்தவிடத்தும்

இன்பம் வேண்டியவிடத்தும் அவர் பாடிய பதிகங்களெல்லாம் அப்போது அவர்க்குச்சுவார்த்தமேயானாலும் அவை உற்றுநோக்குமிடத்துப் பரார்த்தமேயாம். ஆதலால் இப்பதிகங்களெல்லாம் தனித்தனி யொவ்வோர் பயன்குறித்தனவாய் உலகமுய்யுமாறு பரோபகாரமாகஅருளிச்செய்யப்பட்டனவாம். அவை இசையறிந்து பண்ணுடைமைத் துமெய்யன்புடையாராகி யோதுமிடத்துத் தப்பாமல் அவ்வப்பயனைத் தருவனவாகும்.

## ஆழ்வார்கள்.

தமிழ் மாதுக்குத் தேவாரங்கள் பாடியருளி அலங்காரமான பூஷணங்கள் புனைந்தவர்கள் சைவசமயாசாரியர்கள் மாத்திரம் அல்லர், திருவாய்மொழி பாடியருளிய ஆழ்வார்களும் புனைந்தவராவர். அவர்கள் பன்னிருவர். அவர்களுள் மூவர் மிகச்சிறந்த ஞானிகள். அம்மூவரையும் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில், வரந்தருவார்.

> "பாவருந்தமிழாற்பேர்பெறுபனுவற்பாவலர்பாதிநாளிரவின்,- மூவருநெருக்கிமொழிவிளக்கேற்றிமுகுந்தனைத் தொழுதநன்னாடு,-தேவருமறையுமின்னமுங்காணுச்செஞ்சடைக்கடவுளைப்பாடி,-யாவருமதித்தோர்மூவரிலிருவர்பிறந்தநாடிந்தநன்னாடு"

என்று எடுத்துப்பாராட்டுவர். மூவராவர் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்னும் இவர். இவருள் முந்தினவர் காஞ்சீபுரத்திலும் நடுநின்றவர் மகாவலிபுரத்திலும் மற்றையவர் மைலாப்பூரிலும் அவதரித்தவர். இம்மூவரும் திருக்கோவலூரில் விஷ்ணு தரிசனஞ்செய்துகொண்டு ஒருவர் பின்னொருவராய் மீழ்வாராயினர். அப்பொழுது காரிருள் மூடி ஒருமழை பொழிந்தது. பொய்கையாழ்வார் ஒரு மடத்தில் ஒருசிற்றறையில் ஒதுக்கிடங்

தேடியிருந்தனர். அதன்பின்னர்ப் பூதத்தாழ்வாரும் அங்கேபோய் இடமுண்டோஎன்று வினவப், பொய்கையாழ்வார் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம் என்றனர். அதன்பின்னர் மற்றவரும் அங்கேசென்று இடமுண்டோ என்று வினவ, அப்பொய்கையார் ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்றனர். அவ்வாறே மூவரும் அங்கேபோய் நிற்பாராயினர். அப்பொழுது கண்ணபிரான் தம்முடைய அநுக்கிரகத் திருவிளையாடலைக் காட்டும் பொருட்டு அம்மூவருக்கிடையே தாமுஞ்சென்று அவர்களை நெருக்கினர். ஆழ்வார் மூவரும் முன்னில்லாத நெருக்கம் இப்பொழுதுண்டாயது என்னை என்று திகைத்தனர். பொய்கையாழ்வார் "வையந் தகழியாய் வார்கடலே நெய்யாக—வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய- சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை—இடராழி நீங்குவேனென்று" என்னும் முதற்றிருவந்தாதியால் சூரியனை விளக்காக ஏற்றிப் பார்க்க, பூதத்தாழ்வார் "அன்பே தகழியா யார்வமே நெய்யாக—வின்புருகும் சிந்தை யிடுதிரியாய்—நன்புருகி- ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு—ஞானத் தமிழ்புரிந்த நான்." என்னும் இரண்டாந் திருவந்தாதியால் ஞானத்தீபத்தை ஏற்றிப்பார்க்க, இவ்விரண்டானும் இருளற்றமையால், பேயாழ்வார் திருமாலை உள்ளபடி கண்டு, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் றிகழும்- அருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்-பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக்கண்டேன்—என்னாழி வண்ணன்பா லின்று." என்னும் மூன்றாந்திருவந்தாதியை அருளிச்செய்தார். அப்பொழுது கண்ணபிரான் திருவருளால் ஞானசோதி தோன்ற அப்பெருமானைப் பிரத்தியட்சமாகக்கண்டு மேலும்பாடித் துதித்துப் பரவசரானார்கள். இவர்கள் மூவரும் அந்தாதி யொவ்வொன்றுக்குந் தனித்

தனி நூறு செய்யுளாக முந்நூறு செய்யுள் செய்தனர். நாலாயிரத்தில் முந்நூறு போக எஞ்சிய மூவாயிரத்தெழு நூறும் மற்றைய ஆழ்வாரர் ஒன்பதின்மராலும் பாடப்பட்டன. தேவாரங்கள்போல இந்த நாலாயிரப்பிரபந்தமும் கேட்போர் மனத்தை உருக்கிப்பரவசப்படுமாறு செய்யும் இனிமையும் பத்திச்சுவையும் பெரிதுமுடையன.

## திருமங்கையாழ்வார்.

இவர் கலியுகம்நானூற்றறுபதின்மேல் திருநகரியிலே நீலனென்னுமொரு சூத்திரனுக்குப் புத்திரராகப் பிறந்தவர். இவரே ஸ்ரீரங்கத்துக் கோபுரத் திருப்பணி செய்த விஷ்ணுபத்தர். இவர் பத்தினியார் குமுதவல்லி. இவர் விஷ்ணுபத்தராவதற்கு முன் ஆறலைக்குங் கள்வர். துறவு பூண்டபின் ஆழ்வார் பன்னிருவருள் இவரே சிறந்தவர். நாலாயிரப் பிரபந்தத்துட் பெரியதிருமொழி இவர் திருவாய் மலர்ந்த தேன்பாமாலை.

## திருமூலநாயனாரும் திருமந்திரமும்.

நந்திதேவர் மாணாக்கராகிய சிவயோகியாரென்பவர். அகஸ்தியரைக் காணும்பொருட்டுத் தெற்கு நோக்கிச் செல்லும்வழியிலே திருவாவடுதுறையில் மூலனென்னுமோரிடையன் இறந்துகிடக்க, அவன் மேய்த்த பசுக்கள் நின்று கதறி அழுதலைக்கண்டு பரிவுற்று அவன் காயத்திற் பிரவேசித்து, அவனைப்போல அவைகளை மேய்த்து ஆற்றிவிட்டுத் திரும்பிவந்து தமது சரீரத்தைத்தேடி அதனைக் காணாமையால் அம்மூலன் சரீரத்தோடுதானே அங்கிருந்து மூவாயிரம் வருடம் யோகஞ் சாதித்த இவர் வருடத்துக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்களை அருளிச் செய்தவர். அவற்றின்றொகுதி திருமந்திர மெனப்படும்.

அண்டபிண்டங்களின் தத்துவசொரூபத்தை அநுபவப் பிரத்தியட்சமாக வுணர்ந்து உலகத்துக்கு வெளியிட்ட மகா ஞானிகளுள்ளே இவர் தலைமைபெற்றவர். அவருடைய உபதேசமெல்லாம் பெரும்பாலும் ரூபகமும் பரிபாஷையுமாகவே யிருக்கும். சித்தின்றிச்சடமும் சடமின்றிச் சித்தும் இல்லையென்பது அவர் சித்தாந்தமாம்.

"அணுவுளவனுமவனுளணுவுங்-கணுவறநின்ற கலப்பஃதுணரார்— இணையிலியீசனவனெங்குமாகித் —தணிவறநின்ற சராசரந்தானே" சீவனுக்கு வடிவுகூறிய திருமந்திரம் வருமாறு:—"மேவிய சீவன் வடிவது சொல்லிடிற் கோவின்மயிரொன்று நூறுடன் கூறிட்டு—மேவியகூறது வாயிரமாயினு—லாவியின் கூறுநூ றாயிரத்தொன்றே" பஞ்சேந்திரியங்களையும் அடக்குதல் கூடாதென்பதும், அடக்குங்கால் அறிவில்லாத சடத்தின் கதியாமென்பதும் அவை தாமே யடங்குமுபாயமறிவதே அறிவு என்பதும் அவர் கூறிய, "அஞ்சுமடக்கடக்கென்பரறிவிலா—ரஞ்சுமடக்குமமரமிங்கில்லை-யஞ்சுமடக்கிலசேதனமாமென்றிட்டஞ்சுமடக்காவறிவறிந்தேனே" என்னுந் திருமந்திரத்தானறிக. அவர் கூறும் ஞானபூசை வருமாறு:—"உள்ளம் பெருங்கோயிலூனுடம் பாலயம்— வள்ளற்பிரானார்க்கு வாய்கோபுரவாயில்—தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்—கள்ளப்புலனைந்துங் காளாமணிவிளக்கே." இன்னோரன்ன திவ்வியோபதேசங்கள் திருமந்திரத்தினுள்ளே அளவிலவாதலின் அவற்றைச் சமுத்திரகலச நியாயமாக வெடுத்துக் காட்டல் எளிதன்றாம்.

## ஔவையார்.

சோழியப் பிராமணராகிய பகவனுரென்பவருக்கு ஆதியென்பவள் வயிற்றிலேபிறந்து காவிரிப்பூம்பட்டினத்திலே பாணர் சேரியிலே வளர்ந்து தமிழ்ப்புலமையுடை

யராய் விளங்கிய மாதுசிரோமணியார். பகவனும் ஆதியும் தம்முட் செய்துகொண்ட சங்கேதப்படி, பிறக்கும் பிள்ளைகளையெல்லாம் அஃததுபிறக்குமிடத்திலே வைத்துவிட்டுச் செல்வாராயினர். ஔவையைப்பெற்றவுடனும் தாய், "இச்சிசுவை யெவ்வாறு விடுத்துப் போவேன்" என்றிரங்கி நின்றாள். அப்பொழுது ஔவையாராகிய அச்சிசு தாய்முகத்தைநோக்கி, "எவ்வுயிருங் காப்பதற்கோ ரீசனுண்டோ இல்லையோ—அவ்வுயிரில் யானுமொன்றிங் கல்லேனோ—வவ்வி- அருகுவது கொண்டிங் கலைவானே னன்னாய்—வருகுவது தானே வரும்" என்னும் பாடலை அற்புதமாகக் கூறத் தாய் அதுகேட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினாள். ஔவையாருக்கு அதிகமான் திருவள்ளுவர், கபிலர் என மூவர் சகோதரரும், உறுவை, உப்பை, வள்ளி யென மூவர் சகோதரிகளுமுளர். ஔவையார் தமிழ்ப்புலமையோடு மதிநுட்பமு முடையவர். இல்லறவொழுக்கத்தை விரும்பாது தவத்தையே பாரமார்த்திகமாகக் கொண்டொழுகினவர். சிறிதுகாலம் மதுரையிலும், சிலகாலம் சோழநாட்டிலும், சிறிதுகாலம் சேரநாட்டிலும், நெடுங்காலம் அதிகனிடத்திலும், எஞ்சியகாலம் முனிவர் வாசங்களிலும் வசித்தவர். அரசரையும் பிரபுக்களையும் பாடி அவர் கொடுக்கும் பரிசுகளைப் பெற்றுக் காலங்கழித்தவர். இவராற் பாடப்பட்டோர் அதிகன், சேரமான் வெண்கோ, தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், உக்கிரப்பெருவழுதி, இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளி முதலியோர். தமது தேகமெலிவைக் கண்டிரங்கி அதிகன்கொடுத்த கருநெல்லிக்கனி யாவர்க்குமெளிதிற் கிடைப்பதொன்றன்று. உண்டவர்க்குத் திடகாத்திரமும்தீர்க்காயுளுந் தருமியல்பினது. அத்தகைய அற்புதநெல்லிக்கனியைத் தானுண்டுநலம்பெறாது இவர்க்குக் கொடுத்த அதிகன் வண்மையன்றோ வண்மை. "பெரு

மலைவிடரகத்-தருமிசைக்கொண்ட - சிறியிலைநெல்லித்தீங் கனிகுறியா-தாதனின்னகத்தடக்கிச் சாதனீங்கவெமக்கீந் தனையே” எனப் புறநானூற்றில் வரும் ஔவையார் பாடலால் இவ்வுண்மை புலப்படும். இது ஔவையார் பாடியதென்பது “அமிழ்துவிளைதீங்கனியெளவைக்கீந்த-வுரவுச் சினங்கனலு மொளிதிகழ்நெடுவே - லரவக்கடற்றானை யதிகன்” எனச் சிறுபாணாற்றுப்படையில் வருவதாற் பெறப்படும். அவ்வதிகன்மாட்டுத் தாங்கொண்ட பேரன்பினால் அவனுடைய தூதாகத் தொண்டைமானிடஞ் சென்றவர். தொண்டைமான் தனது வலியையுணர்த்தும்பொருட்டுத் தன் ஆயுதசாலையைத் திறந்து காட்ட, “இவ்வாயுதங்களெல்லாம் நெய்யிட்டு மாலைசாத்திப் பூசிக்கப்படுவனவாய்க் கதிர்கான்று விளங்குகின்றன. அதிகனுடைய ஆயுதங்களோ பகைவரைக் குத்தித் தினந்தோறும் பிடியும் நுதியும் சிதைந்து கொல்லனுடைய கம்மியசாலையின் கண்ணவாம்.” என்னும் கருத்துற்ற பாட்டைக் கூறித் தொண்டைமானைத் தலைகுனிவித்த மதிநுட்பமுடையவர். இவர் உக்கிரப்பெருவழுதி காலமுதல் கம்பர்காலம் வரையும் சீவித்தவரெனப்படுதலால் அவர்க்கு வயசு எண்ணூற்றின் மேற்பட்டதாதல் வேண்டும். கருநெல்லிக்கனியுண்டு காயசித்தி செய்துகொண்டமையே இவ்வர்யுள் நீட்டத்துக்கேதுவாம்.

திருமூலர் தினமொன்றுக்கு இயல்பாகவெழுகின்ற 21, 600 சுவாசங்களையும் 730 ஆகவடக்கி மூவாயிரம்வருஷமுயிரோடிருந்தாரன்றோ. இவ்விஷயம் யோக சாஸ்திரம் வல்லார்க்கன்றி மற்றோர்க்கு எளிதிலுண்மையாகமாட்டாது. அதுவுமன்றி மாந்தர்க்கு வயது நூறல்லதில்லையென்று வரையறுக்குந் தமிழ்ப்புலவர்கள் தாமே சிறிதுங் கூசாது ஏதுவுங்கூறிச் சங்ககாலத்திருந்த ஔவையார்

கம்பர்காலத்து மிருந்தாரெனக் கூறுந் துணிவொன்றோ இதற்குப் போதிய சான்றும். எங்ஙனங் கொள்ளினும் திருவள்ளுவர் சகோதரியாராகிய ஔவையார் கடைச்சங்க காலத்தில் விளங்கினவர் என்பது கபிலபரணர்களது பாடல்களால் நன்கு நிச்சயிக்கப்படும். ஆத்திசூடி, வாக்குண்டாம், நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை முதலிய திவ்விய அறநூல்களும் இவர் செய்தனவேயாம். இவரைப்பற்றிய சிறுகதைகள் அனேகமுள. ஔவையாரென்னும் பெயர் இவர்க்கு இயற்பெயரன்றிக் காரணத்தாலிடப்பட்டதன்று. பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும் "ஔவைபாடலுக்கு நறுநெய்பால்" என்னுஞ் செய்யுளிலே இவருடைய வாக்குப் பலித்ததை வியந்து போயினர். இவருடைய வாக்குகள் சாபாநுக்கிரகமுடையனவாயிருந்ததை பற்றியே இவர் தமிழ்நாடெங்கும் வியாபித்த புகழும் நன்கு மதிப்புமுடையராயினர். ஆயிரத்தெண்ணூறு வருடங் கடந்தும் இன்றும் ஔவையாரென்றால் சிறுவரும் பெருமதிப்புக் காட்டுவர். பண்டைக்காலத்துப் புலவர்களுள்ளே இவர் ஒருவர் பெயரே கல்வியறிவில்லாத சாமானியர் வாயினுங் கேட்கப்படுவதாயிற்று.

இங்ஙனம் நடைபெற்றுவந்த கடைச்சங்கம், உக்கிரப் பெருவழுதியென்னும் பாண்டியன் இறத்தலோடும் நிலைதளர்ந் தொடுங்கிற்று. அச்சங்கத்திலே சமணர்களும் சைவர்களும் வைஷ்ணவர்களுமிருந்து விளங்கினரென்பது அக்காலத்து நூல்களாலினிது விளங்கும். பலசமயிகள் மாத்திரமன்று நான்குவருணத்தாருமே சங்கப் புலவர்களாய் விளங்கினரென்பதும் நன்கு புலப்படுகின்றது. கடைச்சங்கமொழிந்த பிற்றைஞான்றும், சிலகாலமாகப் பாண்டியர்கள் தமிழை அபிமானித்துப் புலவர்களுக்குப் பரிசில் கொடுத்து வந்தார்கள். அதன் பின்னர்

ஆருகதசமயத்துப் புலவர்களும் அவர்கள் சமயமும் மேலோங்குங் காலமாயிற்று. முன்னர்ச் சம்பந்தமூர்த்திநாயனார்காலத்தி லொடுங்கிய ஆருகதர் கடைச்சங்க மொடுங்கிய பின்னர் மெல்ல மெல்லத் தலைநிமிர்வாராகி வடமொழியிலிருந்து தஞ்சமயநூலும் பொதுநூலுமாக அநேக நூல்களை மொழிபெயர்த்தார்கள். அவை: சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூடாமணிநிகண்டு முதலியன. அவர்க்கு மாறாகச் சைவவித்துவான்களும் வைஷ்ணவ வித்துவான்களும் தலைநிமிர்ந்து, வடமொழியிலிருந்து புராணங்களும், இதிகாசங்களும், சமயசாஸ்திரங்களும் மொழிபெயர்த்துத் தமிழ்மாதுக்கு அணிகலன்களாக்கினார்கள். சைனவித்துவான்களுள்ளே பிரபலமுற்றோர் திருத்தக்கதேவர் முதலியோர். சைவவித்துவான்களுள்ளே பிரசித்திபெற்றோர் கச்சியப்பர், நச்சினார்க்கினியர் முதலியோர்; வைஷ்ணவ வித்துவான்களுள்ளே கம்பர் பரிமேலழகர் முதலியோர்.

இப்படியிருக்குங் காலத்திலே துருக்கர் அரசுகைக்கொண்டார்கள். தமிழ்மாதும் சைவவைஷ்ணவசமண சமயங்களும், ஆலயங்களும், வித்தியாமண்டபங்களும் அவர்கள் சந்நிதியிலே உயிர்ப்பிச்சைவேண்டுங் கதியிற் புகுந்தன. அரும்பெரும் நூல்களெல்லாம் அம்மிலேச்சராலே அக்கினிக்கூட்டப்பட்டன. அவ்வக்கினிக்குத் தப்பின நூல்கள் கிராமாந்தரங்களிற் பதுங்கிக் கிடந்தன சிலவேயாம். துருக்கரைக் கர்வபங்கஞ் செய்த மகாராஷ்டிர அரசர் காலத்திலும் தமிழ்வித்துவான்கள் சிறிது தலைநீத்து அநேக நூல்கள் செய்தார்கள்.

## நாலடியார்.

இந்நூல் செய்தவர்கள் சமணமுனிவர்கள். அவர்கள் எண்ணாயிரவர். எண்ணாயிரவருந் தனித்தனி ஒவ்வொன்றாக எண்ணாயிரஞ் செய்யுள் செய்தனர். அவற்றுள்

நானூறே ஒருகாலத்தில் தொகுக்கப்பட்டன. எஞ்சியன சிதைந்தனவென்பர். அம்முனிவர் பாண்டியன் சமஸ்தானத்தை விட்டகன்றபோது ஒவ்வொருவரும் ஒவ்வோரேட்டில் ஒவ்வொரு செய்யுள் எழுதி வைத்து நீங்கினரென்றும், அவர் நீங்கியபின்னர் அம்மடத்தைச் சுத்திசெய்யப் புகுந்தோர் அவ்வேடுகளைத் திரட்டிக் கொண்டுபோய்ப் பாண்டியனுக்குக் காட்ட, அவன் அவைகளுட்சிலவற்றை வாசிக்கக் கேட்டுத் தன்னை முன்னிலையாகக் கொண்டு பாடியிருப்பக் கண்டு; "நங்குற்றங்களையெடுத்துக் கூறினர்போலும்" என்றையுற்று அவைகளை வையையிலிடக் கட்டளையிட்டான் என்றும், இட்டபோது நானூறுசெய்யுட்கள் நீரோடுமுகமாய்ச் செல்லாது எதிர்முகமாக நாலடித்தூரஞ் சென்றனவென்றும் அவற்றைத் திரட்டி அக்காரணத்தால் அதற்கு நாலடியாரெனப் பெயரிட்டு வழங்குவித்தானென்றும் ஒருசாரார் கூறுவர்.

நாலடியார் இன்னது செய்ய இன்னது பயன் எனச் சிறிது விரித்து நான்கடி வெண்பாவாற் கூறுவது. அதுவுந் திருக்குறள்போல நீதிகளைக் கேட்போர் மனத்தே பதியச் சொல்லும் சிறப்புடைமையால் திருக்குறளுக்கு இரண்டாவதாக மதிக்கப்படுவது. அதுபற்றியே "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி" என்றும் ஆன்றோர் பாராட்டுவர்.

## இறையனாரகப்பொருள்.

கடைச்சங்கத்திறுதிக் காலத்திலே பாண்டிநாட்டிற் பன்னிரண்டு வருடம் மழைபெய்யாதொழிந்தது. அது கண்டு அரசன் புலவர்களையெல்லாம் அழைத்து எனது நாடு பெரிதும் வருந்துகின்றது. ஆதலால் நீவிர் வேற்று நாட்டிற் சென்று காலங்கழித்து நமது நாடு செழித்த பின் வருகவென்று அவர்களை அனுப்பிவிட்டான். அவர்க

ளும் அவ்வாறு சென்று நாடுசெழித்தபின் மீண்டு வந்து கூடினர். அப்பொழுது பொருளதிகாரம் வல்லார் மாத்திரம் இல்லாமல் சங்கம் நடைபெறுவதாயிற்று. அக்காலத்தில் அச்சங்கத்தார்க்கு நூலாயிருந்த பொருளதிகாரமும் அகப்படாதொழிந்துபோனும். அதுகண்டு அரசன் ஆலவாயினவிர்சடைக்கடவுள்பாற் சென்று தனது குறையைக் கூறித் தவங் கிடந்தான். அதுகண்டு இரங்கி எம்பெருமான் செப்பேட்டில் அறுபது சூத்திரங்களை எழுதிப் பீடத்தின் கீழிட்டார். அதனை ஆசாரியர் எடுத்துப்போய் அரசனிடங் கொடுத்தார். அரசன் அதனை ஏற்றுப் பேரானந்த மடைந்து சுவாமியைப் பன்முறை வணங்கித் தோத்திரஞ்செய்து அச்செப்பேட்டைச் சிரமிசைத் தாங்கிப் போய்ச் சங்கத்தாரிடங் கொடுத்தான். இதுவே இறையனாரகப்பொருளெனப்படுவது. இதற்குச் சங்கத்தாரெல்லாந் தனித்தனி ஒவ்வொருரை செய்தனர். உருத்திரசன்மர் நக்கீரருரையை மாத்திரம் அங்கீகரித்து மற்றோர் செய்த உரைகளையெல்லாம் நிராகரித்தனர். ஆதலின் இந்நூலுக்கு நக்கீரர் செய்தவுரையே வாய்ப்புடையதாயிற்று. இவ்வுரை மிக்க திட்பமும் நுட்பமும் உடையதாய்க் கேட்போருக்கு அற்புத ஆனந்தம் பயப்பதொன்றும். ஒவ்வொரு விஷயங்களையு மெடுத்துப் பல்வகை ஆட்சேபங்களையுமெழுப்பி அவற்றுக்கெல்லாம் சமாதானங்கூறி முடிவில் உண்மைப் பொருளை எடுத்துச் சித்தாந்தஞ் செய்வதில் நக்கீரருக்கிணையாவார் முன்னும் பிறந்திலர் பின்னும் பிறந்திலர். செந்தமிழ்மொழியின் சுவையையும் அக்காலத்துப் புலவர்கள் உரைசெய்யும் ஆற்றலையும் முறையையும் உணர விரும்பும் வித்தியா விநோதர்கள் இவ்விறையனாரகப் பொருளுரையைத் தப்பாது ஆராய்தல் வேண்டும்.

### நக்கீரர்.

சங்கப்புலவர்களுள்ளே கீரனென்னும் பெயரால் பலர் விளங்கினர். இவ்வுண்மை, மோசிகீரனார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பொருந்திரிளங்கீரனார் குட்டுவன் கீரனார் முதலியோர்பெயர்களால் நன்கு துணியப்படும்.

தருமிகொண்டு சென்ற பாடல் சிவபெருமான் அருளிச்செய்த தென்றறிந்த வழியும்குற்றம் குற்றமேயென்று சாதித்த நக்கீரனார், வங்கிய சேகர பாண்டியனும் அவன் மகன் சண்பகமாறனும் இருந்தகாலத்தில் விளங்கியவர். மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார், இறையனாரகப் பொருளுக்கு உரைசெய்தவர். இவரே திருமுருகாற்றுப் படையும் நெடுநல்வாடையும் இயற்றினவர். இவர் கடைச் சங்க காலத்திருந்தவர். முந்தியவர் இடைச்சங்க காலத் திருந்தவர். பிந்திய நக்கீரருடைய இறையனாரகப்பொரு ளுரையால் அவருடைய அளப்பருங் கல்வித்திறமும் அக் காலத்திலே தமிழ்ப்பாஷைக்குண்டாகிய அபிவிருத்தியும் ஆற்றலும் இத்துணைய வென்பது நன்கு புலப்படுகின்றது மேலே கூறப்பட்ட தருமியின் சரித்திரம்.

> "மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட்கென் றும்,
> விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையோன்
> காண், நன்பாட்டுப் புலவனுக்காய்ச் சங்கமேறி, நற்
> கனகக் கிழி தருமிக் கருளினோன்காண்"

என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தால் நன்கு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

### கம்பராமாயணம்.

சோழமண்டலத்திலே திருவழுந்தூரிலே பிறந்து சடையப்ப முதலியாரால் ஆதரிக்கப்பட்டு விளங்கிய தமிழ்க் கவிச் சக்கரவர்த்தி. இவர் சடையப்பமுதலியார் வேண்டு

கோளின்படி ராமாயணத்தைப் பாடிச் சோழன்சபையில் அரங்கேற்றினவர். இவருடைய கவிகள் வெண்சொல்லும் புதை பொருளும் உடையனவாய் எத்துணை வல்லாரையும் முதல் மயக்கிப் பொருள் வெளிப்பட்டவிடத்துப் பேரானந்தமுறச் செய்யுமியல்பின. இவர்காலம் இற்றைக்கு ஆயிரத்துப்பதினைந்து வருஷங்களுக்கு முன்னையது. கம்பர் காலத்தைச் சிலர் தக்க நியாயமின்றி நானூறு ஐஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னுள்ளதாகக் கூறுவர். ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் கம்பர் காலத்தவர் என்பது தொண்டைமண்டல சதகத்தால் யாவர்க்கு முடன்பாடேயாம். புகழேந்தி வச்சிராங்கத பாண்டியனுடைய சமஸ்தான வித்துவான். உறையூரிலிருந்த குலோத்துங்க சோழனுக்குப்பெண் கொடுத்தவன் இப்பாண்டியனே. இவன் துலுக்கரால் வெல்லப்பட்ட பராக்கிரம பாண்டியனுக்கு முன்னர் அரசுபுரிந்தவன். பராக்கிரமபாண்டியன் நாற்பத்தைந்து வருஷமரசு புரிந்தவன். துலுக்கர் வென்றது இற்றைக்கு எண்ணூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னரென்பதும் யாவர்க்கு முடன்பாடாம், ஆகவே எண்ணூற்றெழுபதும் நாற்பத்தைந்தும் அதற்குமுன் ஓராறுபதுமாகச் சென்ற வருஷங்களைத் தொகைசெய்யுமிடத்து; "எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின் மேல்.....கவியரங்கேற்றினானே" என அரங்கேற்றுக்காலங் கூறுஞ் செய்யுள் இழுக்காகமாட்டாது அக்காலத்தில் அவ்வரங்கினுடனிருந்து கேட்டவைஷ்ணவாசாரியர் ஸ்ரீமந்நாதமுனிவர். அவர்க்குப்பின் ஆசாரிய பரம்பரையாக வந்தோர் இப்பொழுதிருப்பவரை யுள்ளிட்டு நாற்பத்து மூவராவர். ஒருவர்க்கு இருபத்தைந்து வருஷமாக வைத்துத் தொகைசெய்யினும் ஆயிரத்தெழுபத்தைந்து வருஷங்களாகுமே. எவ்வழியானும் எல்லாமொத்தலின் கம்பர் காலம் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ளதேயாம்.

ராமாயணம் என்பது ஸ்ரீராமருடைய வரலாறு கூறுமோரிதிகாசம். இது வடமொழியிலே வான்மீகி பகவானாற் கூறப்பட்டது. இது ஆதிகாவியமெனவும்படும். இது பாலகாண்டம் அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், லங்காகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம், என ஏழுகாண்டமும் இருபத்து நாலாயிரங் கிரந்தமு முடையது. ஒவ்வோராயிரத்து முதற் சுலோகத்து முதற்பாதம் காயத்திரி மந்திரத் தொவ்வோரெழுத்தாற் றொடங்குதலின், இக்காவியம் காயத்திரிரூபமெனப்படும்.

இவ்விராமாயணத்தைத் தமிழ்க்காவியமாக மொழி பெயர்த்தவர், கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர். இவர் சாலிவாகன சகம். ௮௦௭. ல் விளங்கிய புலவர். கம்பர் வான்மீகிராமாயணத்தையே மொழி பெயர்த்தாரென்பது "தேவபாடையி னிக்கதை செய்தவர்மூவரானவர் தம் முளுமுந்திய—நாவினானுரையின்படி நான்றமிழ்ப்—பாவி னாலிதுணர்த்திய பண்பரோ" என்னுங் கம்பர் வாக்கா லுணரப்படும். முதலிற் செய்தவர் வான்மீகி. அதன்பின்னர்ச் செய்தவர் வசிட்டர். அதன்பின்னர்ச் செய்தவர் போதாயனர். கம்பராமாயணத்துச் சரித்திரம் பெரும்பாலும் வான்மீகிராமாயணப்படியே யாயினும் வர்ணனை யெல்லாம் கம்பருடையனவேயாம். கம்பர் லங்காகாண்ட மென்பதைச் சுந்தர காண்டமெனப் பெயரிட்டு வழங்குவர். கம்பராமாயணத்துச் செய்யுள் பதினாயிரம். எஞ்சிய ஈராயிரமும் ஒட்டக்கூத்தர்பாடல்.

கம்பர்பாடிய ராமாயணத்திலே செய்யுள் வன்மையும், சொற்சாதுரியமும், சந்தவின்பமும், பொருட்கம்பீரமும், சிருங்காரம், சோகம், வீரம், முதலிய ரசங்களும்பயின்று வருதலால், அது தமிழிலேயுள்ள இலக்கியங்களை யெல்

லாங்கடந்து தமிழ்க்கலை விநோதர்களை வசீகரிக்கும் பெருஞ் சிறப்பினையும் மதிப்பினையுமுடைய பெருங்காவியமாயிற்று.

கம்பர் வாக்கெல்லாம் பெரும்பாலும் ஊன்றி நோக்குமிடத்து ஒருபொருளும், வெளிப்படையிலொரு பொருளும் பயப்பனவாய்க் கற்போர்க்கு அதிசயமும் ஆர்வமையுமுண்டாக்குமியல்பின. அவர்சாதுரியத்தை மேல்வரும் கவியாலளவிட்டுணர்க.

"இந்திரன் சசியைப்பெற்று .னிருமூன்று வதனத்தோன்றன், றந்தையுமுமையைப்பெற்றான் றாமரைச்செங்கணனுஞ், செந்திருமகளைப் பெற்றான் சீதையை நீயும்பெற்று, லந்தரம் பார்க்கினன்மை யவர்க்கில்லை யுனக்கேயையா"

இக்கவியிலே "நன்மை அவர்க்கில்லை, உனக்கே" நன்மை என்பதாகத் தொனிக்கினும், பின்னர் நிகழப்போவதை நோக்குமிடத்து, "நன்மை அவர்க்கு, இல்லையுனக்கு" என்பது தோன்ற வமைத்தனர். இக்கவியில் மாத்திரமன்று. அடுத்த இரண்டு கவிகளிலும் இவ்வாறே அநிஷ்டப்பொருட்குறிப் பமையப்பாடியிருத்தல் காண்க.

"பாகத்திலொருவன் வைத்தான்" என்னுஞ் செய்யுளிலே, "நீயெங்ஙனம் வைத்து வாழ்தி" என்று வினவியதற்கு, நீ எவ்விடத்திலிருத்தி வாழப்போகின்றாய்? என்றும், நீயெப்படி வைத்து வாழ்வாய் வாழமாட்டாய் என்றும், பொருள்படுமாறு அமைத்தனர். மற்றச் செய்யுளிலே, "பிள்ளைபோற் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்" என்பதற்கும், சீதையைப் பெற்றபின் அவள் இஷ்டத்துக்கு மாறாக யாதுஞ் செய்பமாட்டாய்" என்

ஞெரு பொருளும், "அவளைப் பெற்றால் இறப்பாய்" என்று மற்றொரு பொருளும் கொள்ளவைத்தனர். இவ்வாறே அவர் சாதுரிய சாமர்த்தியங்கள் ஊன்றி நோக்குந்தோறும் ஊற்றாய்ப் பெருகும். மேலே எடுத்துக்காட்டிய செய்யுட்கள் மாரீசன் வதைப் படலத்திலே சூர்ப்பநகை கூற்றாக வருவன.

இனி வான்மீகிபகவான் வைதிகப் பொருளையெல்லாம் லௌகிகப்பொருண்மேல் வைத்துக் கூறுங்கருத்தினையுடையராய் ராமசரித்திரத்தினையே வாயிலாகக் கொண்டு வெளிப்படையிலே லௌகிகத்திற் குரிமையும் இனிமையும் பயக்கவும், குறிப்பிலே வைதிகபோதமும் தத்துவங்களும் விளங்கவும், இப்பார காவியத்தை இயற்றிப்போயினர். இவ்வுண்மை மேலேயெடுத்தோதிய காயத்திரியக்ஷரக் குறிப்பினால் நன்கு துணியப்படும்.

ராமாயண கதாநாயகராகிய ஸ்ரீராமபிரான் சக்கிரவர்த்தி திருமகனாராக அவதரித்தும், தந்தையார் வாக்கைக் காக்குமாறு காட்டுக்கேகிய பெருந்தகைமையும், சத்தியம், பொறுமை, அறிவு, ஆண்மை, நீதி திறம்பாமை பேரருளுடைமை, நன்றிமறவாமை, அடைந்தவரைக் காக்கும் பேராற்றல், சகோதரவொற்றுமை, முதலிய உத்தம குணங்களுக்கெல்லாம் முறைவிடமாக வுள்ளவர். அவருடைய இல்லறவொழுக்கச்சிறப்புச் சூர்ப்பநகைக்கு எடுத்தோதிய நன்மதியுரைகளால் விளங்கும். ஸ்ரீராமரைப் பாலியப்பருவத்தில் வீதியிலே விளையாட்டயரும் வேளையிலே கண்டு உச்சிமோந்து கட்டித்தழுவிச் செல்பவனாகிய ஒரு பிச்சைக்காரன், அவர் காட்டுக்கேகி மீண்டு வந்து பட்டாபிஷேகம் பண்ணிக்கொண் டெழுந்தருளியிருக்கும் அவ்வமயத்திலே அச்சபை முன்னே வந்து, "அடா ராமா! எங்கடா போயிருந்தாய். உன்னைக்கா

மல் என் கண்கள் மிக வருந்திவிட்டனவே" யென்று பேராராமையோடு கூவியழ, அவர் சிங்காசனத்தை விட்டெழுந்து "யானும் உம்மைக்காணப் பேராசை யுற்றேன் வருக என் சிறியதந்தையே" என்றிருகையும் நீட்டியழைக்க, அச்சபையிலிருந்த அரசர் முனிவர் பெரியோரெல்லா மதிசயித்தெழுந்து வழிவிட, பிச்சைக்காரனாகிய முதியோன் சென்று அவரைத்தழுவி மோந்து போயினன். அவனுடைய அழுக்குடையும் நாறுகின்ற சரீரத்தையும் நோக்காது பேரன்பாற் கட்டுண்டுமயங்கியராமன் பெருந்தகைமைக்கு எல்லையுமுண்டோ! இத்துணைச்சிறந்த பெரியோனது சரித்திரத்தைக் கேட்டலும் கற்றலும் உலகுக்குப் பெரும்பயனைத் தராமற் போகுமா! இப்பெருமையெல்லாம் நோக்கியே இதனைத் திவ்வியநூலென்று பெரியோர் கொண்டாடுவர்.

## கந்தபுராணம்.

இது செய்தவர் காஞ்சிபுரத்துக் குமரகோட்டத் தருச்சகரும் சுப்பிரமணியக் கடவுளது திருவருள் பெற்றபுலவர் சிகாமணியுமாகிய கச்சியப்பசிவாசாரியர். இது வடமொழிக் காந்தபுராணத்துச் சங்கரசங்கிதையிலுள்ள அறுமுகக் கடவுள் சரித்திரமோதுதலின் கந்தபுராணமெனப்பட்டது. இது உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், என ஆறுகாண்டங்களுடையது. இது பன்னீராயிரஞ் செய்யுளுடையது. இது அறுமுகக்கடவுடிருவவதாரவரலாறும், சூரபன்மன் காசிபமுனிவற்கு மாயைபாற்றோன்றி வீரவேள்வி செய்து சிவபிரான்பால் ஆயிரத்தெட்டண்டம் நூற்றெட்டுகங்காறும்ஆளும் பெருவரம்பெற்றுத் தேவரைச் சிறைசெய்து அரசு புரிந்தவாறும், அவனை அறுமுகக்கடவுள் பொருதுவென்று ஆட்

கொண்ட வரலாறும், தேவர்சிறைநீக்கி அவரை விண்குடி யேற்றிய வரலாறும், ஆறுமுகக்கடவுள் தெய்வயானை வள்ளிநாயகி திருமணம் புரிந்தருளிய வரலாறும், இந்திர குமாரனை சயந்தனுக்கு வியாழப்புத்தேள் அசுரர்சிறைப் பட்டதற்குக் காரணங் கூறிய வரலாறும், பிறவுங் கூறும். இது அறுமுகக்கடவுண் மகிமையெல்லாமங்கை நெல்லிக் கனிபோல எடுத்துவிரித்துரைக்குந் திவ்வியபுராணமாய்த் தமிழ்ப்பெருங் காப்பியமாய் நிலவுவது. இதன் செய்யுட் கள் திராட்சகதலி இட்சுநாளிகேரபாகங்கள்கொண்டன. கந்தபுராணம்போலும் சொல்வனப்புஞ்செய்யுள் ஒழுக்கும் பொருள் இனிமையும் கேட்போர் மனத்திற்பதியச் செய் யும் ஆற்றலும் வேண்டிய வேண்டிய இடங்கடோறும் வேதாகம சாத்திரப்பொருள்களை எளிதில் விளங்கும்படி தந்துகூறும் உபாயமும் உடைய நூல் பிறிதில்லையென்றே கூறலாம். பத்திச்சுவையும் வீரம்முதலிய மற்றைச்சுவை களும் சமப்படக் கூறுவது இதைவிடப்பிறிதில்லை. இவ ருடைய செய்யுட்கள் எதுகைச் சிறப்பும் தொடைச் சிறப்பும் பெரிதுமுடையனவாய்ச் செவிக்குப் பேரின்பம் பயப்பதோடு எளிதிலே மனனம் பண்ணத்தக்க செம் பாகமு முடையன. இந்நூல் திரிசொற்களாலும் காடின் னிய பதங்களாலும் செவிக்குக் கர்க்கசமான புணர்ச்சி களாலும் இக்கடினமெல்லாந் தாண்டிக் கற்கப் புகுந்த விடத்தும் பொருணயஞ் சிறிதும் பயவாமையாலும் விளக்கமடைந்துள்ள போலிநூல்கள் போல்வதன்று. இந்நூலைக் கச்சியப்பசிவாசாரியர் சாலிவாகன சகாப்தம் எழுநூற்றில் இயற்றி யரங்கேற்றினர். இந்நூலை அக் காலத்தில் மடாலயங்கள் சிவாலயங்களிலே கிரமமாகப் படித்து யாவருக்கும் பயன்படுமாறு பொருள்சொல்லித் தத்துவார்த்தங்களையும் எடுத்துபதேசித்து வந்தார்கள். இக்காலத்தில் அவ்வழக்கம் அருகி வருகின்றது. கேட்

பாருஞ் சிலராயினர். சித்தாந்தவுண்மையையும் சிவபத்தி சுப்பிரமணிய பத்திகளையும் இந்நூல் தரத்தக்கது. ஆதலால் இந்நூலை யாவரும்போற்றி யோதுதல் வேண்டும். கச்சியப்பசிவாசாரியருடைய புலமைத்திறம் மேல்வருஞ் செய்யுளால் இனிதுணரப்படும்.

"இரவி கம்மியன் சுட்டுறு கோல்கதி ரெரிதீ
மருவு செந்தரை பொறிமணிகொள்களம்வறுங்கான்
கரிக ளேகரிகாற்குழ றுதிக்கைநீர் கானல்
புரி தரும்பணி வெந்திடும் பணிக்குலம் போலும்"

இவருடைய சித்தாந்த சாத்திரவன்மையும் மேல்வருஞ் செய்யுளாற் பெறப்படும்.

"பாசங்கொண் டாவி பலவும்பிணிப்போனும்
நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வோனும்
ஈசன் சிவனென் றியம்புமறை நீயிழைத்த
வாசொன்று மித்தீமையார் தவிர்க்க வல்லாரே"

## ஒட்டக்கூத்தர்.

ஆயிரத்திருபது வருஷங்களுக்கு முன்னே குலோத்துங்கசோழன் சமஸ்தானத்திலே விளங்கிய ஒரு தமிழ்ப் புலவர். இவர் பாடிய ராமாயணத்தில் உத்தரகாண்டம் மாத்திரமே சர்வாங்கீகாரமாகிக் கம்பராமாயணத்தோடு சேர்க்கப்பட்டது இவர் ஜாதியிற் கைக்கோளர்.

## புகழேந்தி.

ஒட்டக்கூத்தன்காலத்திலேபாண்டியன் சமஸ்தானத்து வித்துவானாக விளங்கிய ஒருதமிழ்ப்புலவர். இவர் செய்த நூல்கள் நளவெண்பா முதலியன. வெண்பாப் பாடுவதில்

இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. இவருடைய கவித்திறமையைக் கண்ட ஒட்டக்கூத்தன் அவருக்குப் பலதுன்பங்கள் செய்யப் புகுந்தும் ஈற்றில் அவருடைய இனிய குணங்களினால் அவரோடு கலந்து நண்பனாயினான்.

## காளமேக கவி.

ஸ்ரீரங்கத்திலே வைஷ்ணவப் பிராமணராக அவதரித்த இவர், சம்புகேசுரத்திலே ஒரு தாசிவலையிலகப்பட்டு, அவள் பொருட்டாக அங்குச்சென்று கோயிலினுட்பிராகாரத்திலே அவள் வரவை எதிர்நோக்கி இருக்கையில் நித்திரைவர அங்கே படுத்து நித்திரை போயினார். தாசி இவரைத்தேடிப் பார்த்துக் காணாமையால் தன்வீடு போய்ச்சேர்ந்தாள். அதன்பின்னர்க் கோயிலுந்திருக்காப்பிடப்பட்டது. அப்பொழுது அந்தப் பிராகாரத்திலொரு பக்கத்தில் சரஸ்வதியை நோக்கி ஓரந்தணன் தவங்கிடந்தான். சரஸ்வதி அதற்கிரங்கிப் பிரசன்னராகித் தமது தம்பலத்தை அந்தணன் வாயிலுமிழப்போக அவன் அதை அநுசிதமென்று வாங்காது மறுத்தான். அதுகண்ட சரஸ்வதி அத் தம்பலத்தோடு வைஷ்ணவன் கிடந்த இடத்தை யடைந்து அவனை யெழுப்பித் தம்பலத்தை நாவினாற் கொடுக்க வைஷ்ணவன் தன் தாசியே தம்பலங் கொணர்ந்தாளென்றெண்ணி அதனை நாவினாலேற்றான். அவ்வளவில் சரஸ்வதி மறைந்துபோக, வைஷ்ணவன் அதனை யேற்றமாத்திரத்தில் சகலகலைகளும் வல்லபண்டிதனாகிச் சூற்கொண்ட காளமேகம்போலத் தமிழ்க்கவிமாரி பொழியத் தொடங்கினான். அன்றுமுதல் அவனுக்குக் காளமேகமென்னும் பெயருண்டாவதாயிற்று. இவன் திருமலைராயனென்னும் அரசன் சமஸ்தான வித்துவானாகிய அதிமதுரகவிராயனுக்கு மாறாகி அவ்வரசன் சபையிலே இருந்த புலவர்களெல்லோரும் பிரமிக்கும்படியாக

யமகண்ட விதானப்படி ஆசுகவிகள் பொழிந்தவன். இவன் காலம் சாலிவாகனவருஷம் ஆயிரத்திரு நூறு: அதிமதுரகவிராயன் காளமேகப்புலவருடைய வாக்குவன்மையறியாது தனது ஆற்றலையெடுத்து அவருக்கு முன்னே கூறிய கவிவருமாறு:—

"மூச்சு விடுமுன்னே முந்நூறு நானூறும்
ஆச்சென்றா லஞ்ஞூறு மாகாதா—பேச்சென்ன
வெள்ளைக்கவி காள மேகனே யுன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு."

அதற்குக் காளமேகம் சொன்ன எதிர்க்கவி வருமாறு:—

"இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம் பாட் டாகாதா—சும்மா
இருந்தா லிருப்பே னெழுந்தேனே யானால்
பெருந்தாரை மேகம் பிளாய்."

அதிமதுரகவி காளமேகப்புலவருடையவரலாற்றையறிந்து வருமாறு விடுத்த தூதனுக்குக் காளமேகஞ்சொன்ன கவி வருமாறு:—

"தூதைந்து நாழிகையி லாறுநாழிகைதனிற் சொற் சந்தமாலை சொல்லத், துகளற வந்தாதியேழுநாழிகை தனிற் றொகைபட விரித்துரைக்கப்—பாதஞ்செய் மடல்கோவை பத்துநாழிகைதனிற் பரணியொரு நாண்முழுதுமே, பாரகாவியமெலா மோரிருதினத்திலே பகரக்கொடிக்கட்டினேன்—சீதஞ்செயுந் திங்கள்மரபினனீ டுபுகழ் செய்யதிரு மலைராயன்முன், சீறுமாறாகவே தாறுமாறுகள்சொற் றிருட்டுக்கவிப் புலவரைக்—காதங்கறுத்துச் செருப்பிட்டடித்துக் கதுப்பிற் புடைத்து வெற்றிக், கல்லணையினொடு கொடிய கடிவாளமிட்டேறு கவி காளமேகநானே."

ஆசுகவிகள் பாடுவதில் இவருக்கிணையாவார் ஒருவருமிலர். இவர் பாடிய தனிச்செய்யுள்கள் அனேகம். இவர் வேறு பெருநூல் செய்ததாகக் காணப்படவில்லை. சரசுவதியந்தாதி மாத்திரம் இவர் பெயரால் வழங்குகின்றது. அவ்வந்தாதியும் திருமலைராயன் சமுகத்திலே இவர் சென்றபோது, அவன் சமாசனங் கொடுக்காது அவமானஞ் செய்தமையால் அங்கிலேயிலே நின்று சரசுவதியை நோக்கித், தமக்குச் சமாசனம் தரும்படி அருள்புரியுமாறு பாடப்பட்டது. காப்புச்செய்யுள் பாடியவுடனே அவருக்குச் சமாசனங் கிடைப்பதாயிற்று. அச்செய்யுள் வருமாறு:—

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி னரசரோ டென்னைச்
சரியா சனத்துவைத்த தாய்."

## இரட்டையர்.

ஒருவர் அந்தகராகவும் மற்றவர் முடவராகவும் பிறந்த சகோதரராகிய புலவர் இருவர் இப்பெயர்பெறுவர். இவர்கள் காஞ்சிபுரத்திற் பிறந்து தமிழ்க்கல்வியில் மிக்க வல்லவராகி முடவரை அந்தகர் தோள்மேல் ஏற்றிக்கொண்டு முடவர் வழிகாட்ட ஊர்கடோறுஞ் சென்று கவிபாடிப் பெருங்கீர்த்திபெற்றவர்கள். இவர்கள் செய்த நூல்கள் தைவீகவுலா தில்லைக்கலம்பகம், கச்சிக்கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம் முதலியன. இப்புலவர்களை நாலுமறிவோன் அவளும் பொய்சொல்லாள் என்னும் பழமொழியை வெளிப்படுத்தித் தாமாராயாத விஷயங்களையும் சரஸ்வதி அருளால் செய்யுள் வாயிலாக ஆங்காங்கும் வெளியிட்டு வந்தவர்கள். திருவாமாத்

தூர்க்கலம்பகம் பாடியபொழுது பம்பையாற்றுக்கு மேல் கரையில் "திருமால் துயர்தீர்த்தானுக்கு ஓராலயமுள" தென்று முதற் செய்யுளிற் கூறினர். அந்நூலை யரங்கேற்றக்கேட்ட சபையாரெல்லாரும் "இரட்டையர் இல்லதையும் பாடும் வல்லமையுடையர்" என்று பரிகசித்து எழுந்து போயினர். அன்றிரவு பெருமழை பொழிந்து ஆறுபெருகி மேல்கரையை அழித்தது. மண்ணேறிட்டிருந்த அவ்வாலயம் மற்றைநாள் உதயத்தில் நன்றாக வெளிப்பட்டது. அது கண்டியாவரும் அதிசயித்து இரட்டையரைத் திவ்வியஞானமுடையவரென வியந்து அவரைப் பாராட்டினர் இதனாலும் அவர்கள் சரசுவதியினுடையபேரருள்பெரிதும்பெற்றவர்கள் என்பது நன்குபுலப்படுகின்றது.

இரட்டையர் திருவாரூருக்குப் போனபொழுது அந்தச் சிவாலயத்து மதிற்சுவரிலே "நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங்கற்சாபம்" என்றமுதலடியை யெழுதி இவ்வூரிலே செந்தமிழ்ப் புலமை நிரம்பிய புலவர்கள் பலர் இருத்தலால் இவ்வெண்பாவைப் பூர்த்திசெய்பவர்கள் யாவரென யாமிங்கு மீண்டு வரும்பொழுது அறிவோமெனக் கூறிப்போயினர். அவர்கள் சிலகாலங்களித்து மீண்டபொழுது அவ்வெண்பாவை "பாணந்தான் மண்டின்ற பாணமே—தானும்வே,- சீராரூர் மேவுஞ் சிவனே நீயெப்படியோ-நேரார் புரமெரித்த நேர்" என்று எழுதியிருப்பக்கண்டு அது செய்தார் காளமேகமென அறிந்து, அப்பெருந்தகையாரைத் தரிசிக்கவிரும்பி அவரிருக்குமிடத்தைநாடிச்சென்றனர். அங்கே காளமேகம் இறந்து அவருடம்பு சுடுகாட்டிலே தகனிக்கப்படுதலைக் கண்டு, அவரைக்கண்டு பாராட்டும் பாக்கியம் பெற்றிலேமே, யென்றிரங்கிச் சொன்னவெண்பா வருமாறு:—

"ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசுபுகழ்க் காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழல்வாய்வேகுதேயையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்."

காளமேகஞ் சொன்ன "மண்டின்றபாணம்" என்ற அடியை, தாம்பிற்காலத்திலே பாடிய அம்மானைப்பாடலில் அமைத்துப் பாடினர். அச்செய்யுள் வருமாறு:—

"நாலெண்ணன்று னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணங்கா ணம்மானை
பாணந்தான் மண்டின்ற பாணமே. யாமாயின்
சேனூர் புரமெரித்த சேவகமே தம்மானை
சேவகத்தைச் சொல்லச் சிரிப்பல்லோ வம்மானை"

இவர் பாடிய அம்மானைப் பாடல் முழுதும் சொற்சாதுரியமும் விநோதமும் அநேக சரித்திரக்குறிப்புக்களும் உடையன.

## அதிவீரராமபாண்டியர்.

இவர் பாண்டியர் வழியிற்றோன்றிய வோரரசர். தமிழில் நைடதம் காசிகாண்டம் லிங்கபுராணம் கூர்ம புராணம் திருக்கருவைப்பதிற்றுப்பத் தந்தாதி திருக் கருவை வெண்பா வந்தாதி கொக்கோகம் முதலிய நூல்கள் இவராற் செய்யப்பட்டன நைடதம் நளனுடைய சரித்திரத்தைத் தமிழிற் கூறுவது. 'நிஷதராசனாகிய நளனுடைய சரித்திரத்தைக் கூறுதலின் இப்பெயர்த்தாயிற்று இது இருபத்தொன்பது படலங்களும், ஆயிரத்து நூற்றெழுபத்தாறு செய்யுட்களுமுடையது. பொருளாழமும் கற்பனாலங்காரமும் செஞ்சொற்றொடையும் ஒழுகிய

சந்தமும் உடையது. இதன் முற்பகுதி சிற்றின்பரசம் தேங்கப்பெற்றுள்ளது. பெரும்பாலும் ஒவ்வொருசெய்யுளும் அணியிலக்கண மமையப் பாடப்பட்டன. இந்நூலுக்குத் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் சிறந்தவுரையொன்று எழுதியிருக்கின்றனர். காசிகாண்டம், இரண்டாயிரத்திருநூற்றறுபத்தைந்து செய்யுளுடையது. லிங்கபுராணம், சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. கூர்மபுராணம் வடமொழியிலிருந்து மூவாயிரத்தெழுநூற்றுப்பதினேழு செய்யுளாற்றமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. கொக்கோகம் வடமொழியிலுள்ள மதனநூலின் மொழிபெயர்ப்பு. இது ஆறுகாண்டமும் முந்நூற்றுமுப்பத்தைந்து செய்யுட்களுமுடையது.

அதிவீரராமபாண்டியர் "வாய்ந்தமின்னை மடந்தையராக்கிவிண்- போந்திடாமலன்றோ மலர்ப்புங்கவன்-சாந்தமூழ்குதமனியப் பொற்பென--வேந்துவெம் முலைப்பாரமியற்றினன்." என்ற நைடத செய்யுளை யரங்கேற்றும்போது, சபையிலிருந்த ஒரு புலவர் "மின்னற்கொடியிலே தமனியப்பொற்பை வைத்த தெப்படியென்று ஆட்சேபிக்க, அதற்கு வகைசொல்ல வியலாது அதிவீரராமபாண்டியர் 'நாளைக்குச் சமாதானம் கூறுவோமென்று சொல்லிப்போய்த் தமது தேவியிடம் நிகழ்ந்ததைக்கூற, அத்தேவியார் "தனக்காம்பெண்ணும் ஆணியினால் இறுக்கப்பட்டிருக்கின்ற" தென்றுகூற, அதுகேட்ட அதிவீரராமபாண்டியர் மகிழ்ந்து மற்றைநாள் அச்சமாதானத்தையே சென்று கூறினர். ஆட்சேபித்த புலவரும் சபையோர்களும் மகிழ்ந்து பாராட்டினர்.

## வரதுங்கராமபாண்டியர்.

இவர் அதிவீரராமபாண்டியரின் சகோதரர். இவர் பாடிய நூல் பிரமோத்தரகாண்டம். இது வடமொழியி

லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது பஞ்சாட்சரமகிமை, சிவராத்திரிமகிமை, உருத்திராட்சமகிமை, பிரதோஷமகிமை, விபூதிமகிமை, ஸ்ரீருத்திரமகிமை, முதலியபல அரிய விஷயங்களை எடுத்துக் கூறுவது.

## வரகுணராமபாண்டியர்.

இவராற்றமிழிலே வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துப் பாடப்பட்டது வாயுசங்கிதை. இதிற் சிவபரத்துவம் முதலிய அரிய விஷயங்கள் நன்கெடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இது பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களுடையது. இது சைவசமயிகள் யாவராலும் நன்காராயத்தக்கது.

## பொய்யாமொழிப்புலவர்.

துறையூரிலே வேளாளர் குலத்திலே அவதரித்துத் தமிழ்ப்புலமையும்சாபானுக்கிரகமும் பெரிதுமுடையராய் விளங்கியவர். அழிந்துபோன தமிழ்ச்சங்கத்தை மீளவும் அமைத்து வளர்த்தல் வேண்டும் என்னும் பேரவாவுடையராய் வணங்காமுடிப் பாண்டியன்பாற் சென்றனர். அவன் இவர் கருத்தை யுசாவியுணர்ந்து சங்கங்கூட்டுங் கருமத்தைப் பின்னர் யோசிப்பாம். இப்போது நமது சிவாலயத்தினுள்ளே ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் சங்கப் புலவர்களது விக்கிரகங்களெல்லாம் தலைதுளக்கும்படி பாடும் பார்ப்போமென்றான். உடனே இவர், "உங்களிலே யானொருவனொவ்வேனோ வல்லேனோ—திங்கட்குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்—பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ ஏடவிழ்தா ரேழெழுவீ ரே" என்னும் வெண்பாவைக் கூறுதலும் அவ்விக்கிரகங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்தன. இவ்வற்புதத்தைக்

கண்டு மப்பாண்டியன் இவர் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தானாயினான். அதுகண்டு புலவர் தமது சோணாட்டை நோக்கிப் பல்லக்கேறி மீண்டார். அப்பொழுது பாண்டியன் மனைவியார் தமது பல்லக்கேறித் தொடர்ந்து போயிறங்கி இவருடைய பல்லக்குச் சுமப்போருளொருவராயினர். அஃதுணர்ந்த புலவர் நீ நமக்குப் பல்லக்குத் தாங்கப்புகுந்த கருத்தை யுணர்ந்தோம். நாம் வெகுண்டு அரசனை முனிவாமல்லேம். அஞ்சற்கவென்று அவ்வுத்தமியைத் தடுத்து,

"உமையாளு நீயு மொருங்கொப்பே யொப்பே
உமையாளுக் கங்குண்டோ வூனம்—உமையாடன்
பாகந்தோய்ந்தாண்டான் பலிக்குழன்றான் பாண்டிய
ஆகந்தோய்ந் தாண்டா னரசு" [னின்

என்று வாழ்த்திப் போயினர்.

இவர் சோழராசாவினது மந்திரியாகிய சீநக்கராயனுக்குப் பிரியா நட்பினர். ஒருநாள் சீநக்கராயன் சயனிக்குங்கட்டிலிலே அவனும் புலவருமாக விருந்து பொழுது போயபின்னர் நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருக்கையில் புலவர் தமக்கு நித்திரை வந்ததென்று கூறி ராயனைப் போசனத்துக்குப் போகுமாறு செய்து அக்கட்டிலிற்றானே ஒருபக்கமாக நித்திரை போயினர்.

ராயன் போசனம் முடித்துக்கொண்டு நிலாமணி மேடையிற் சென்று சிறிதுநேரம் போக்கி மீளுமுன்னே ராயன் மனைவியும் அக்கட்டிலிற் படுத்துறங்குகின்றவரைத் தன்கணவனென்றெண்ணி ஒருபக்கத்திற்படுத்து நித்திரை போயினாள். அதன்பின்னர் ராயனும் போய்ப் படுத்துறங்கினான். வைகறையிலே புலவர் முதலிலே யெழுந்தார். அவ்வரவங்கேட்டு அரசனும் எழுந்தான்.

புலவர் தம்மருகே ராயன் மனைவி படுத்து நித்திரைபோத லைக்கண்டு துணுக்குற்று ராயனைநோக்கி என்செய்தாய்! என்செய்தாய்! என்றனர். ராயன் அவரை நோக்கி "அஞ்சாதீர், இப்போ தெழுந்திருக்க வேண்டாம், செல்லக் கிடமின்" என்றான். மனைவி அவ்வொலிகேட்டுப் பதைத் தெழுந்தோடி அந்தப்புரஞ் சென்றாள்.

ராயன் புலவரைநோக்கி என்மனையாளை மாத்திர மன்றுஉலகத்துப் பெண்களெல்லோரையும்மாதாவெனக் கொண்டு போற்றுகின்ற உம்பக்கத்திலே என் மனையாள் படுத்துறங்கியதைப் பெரும்பாக்கியமாகக் கொண்டேன் என்றான். அன்றுமுதலாகப் புலவரும் ராயனும் ஈருடலும் ஓருயிரும் போன்றொழுகினர். இவர் சீனக்கராயன் இறந்தபோது சோழன் தடுக்கவுங் கேளாமல் மேல்வருங் கவிகளைக்கூறி உடன்கட்டை யேறினர்.

"வாழி சோழவென் வாய்மொழி கேண்மோ
ஊழி நிலவெறி மாழிகை யின்வயிற்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றறி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமி னெனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் றனிச்செல் பவனோ
நானு மேகுவ னற்றுணை யவற்கே.

அன்றுநீ செல்லக் கிடவென் றுயிழைபோ
டின்றுநீ வானுலக மேறினாய்—மன்றல்கமழ்
மானைக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட."

இப்புலவர் பெருந்தகைமைய தஞ்சைவாணன் கோவை யென்னும் பிரபந்தம் பாடியவர். அக்கோவையினது

சொல்லாற்றல் பொருளாற்றல்கள் தமிழ்ப்புலவர்களைப் பிரமிக்கச் செய்வனவென்றால் மற்றினிக் கூறுவதென்னை.

இவர் தொண்டைநாட்டிலுஞ்சிறிதுகாலம் வசித்தவரென்பதும், அக்காலத்திலேயே முருகக்கடவுள் வாயால், "விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும்" என்னும்வெண்பாப் பாடப்பெற்றவரென்பதும் தொண்டைமண்டலசதகத்தால் விளங்குகின்றது. இவர் அதிவீரராமபாண்டியன் காலத்துக்குச் சற்றுமுன்னே யிருந்த வணங்காமுடிப் பாண்டியன் காலத்தவராதலின் இவர் காலம் சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முற்பட்டது.

## வில்லிபுத்தூராழ்வார்.

இவர் திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே வைஷ்ணவப் பிராமண குலத்திலே வீரராகவாசாரியர்க்குப் புத்திரராகவவதரித்தவர். இவர் தமிழிலும் வடமொழியிலும் மிக்கவல்லவர் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவியும் பாடவல்லவர். இவருடைய புகழ் தமிழ்நாடெங்கும் வியாபித்தது. வரபதியாட்கொண்டானென்னும் அரசன் இவரைத் தமது சமஸ்தான பண்டிதராக்கி இவரைக்கொண்டுமகாபாரதத்தைத் தமிழிலே பாடுவித்தான். அது பாடிமுடிந்தபின்னர் தம்முடைய கல்வித்திறமையைத் தமிழ்நாடெங்கும் நாட்டவேண்டித் திக்குவிஷயஞ்செய்யப் புறப்பட்டார். புறப்பட்டுச் சேர சோழ பாண்டிய நாடெங்கும் தம்முடைய திறமையை நாட்டித், தம்மைக்கண்டு அடிபணியாதெதிர்த்த புலவர்களைத் தமதுகையிலிருந்த தோட்டியாற் செவியை ஊறுபடுத்தி மானபங்கஞ் செய்து மீண்டு செல்லுகின்றவர் திருவண்ணுமலையை யடைந்தார். அங்கே அருணகிரிநாதர் இவருடைய கல்விச்செருக்கை யடக்கக்

கருதி அவரைநோக்கி நான் புதிதாகப்பாடும் கந்தரந் தாதிக்கு உரைசொல்லி முடிப்பீராயின் உமது கல்வித் திறமையை யொப்புக்கொள்வேன் என்றார். அதற்கு வில்லிபுத்தூராழ்வார் இசைதலும் அருணகிரிநாதர் ஒவ் வொரு செய்யுளாகப்பாடிப் போயினர். அவரும் ஒவ் வொரு செய்யுளுக்கும் உரைசொல்லிப் போயினர். ஐம் பத்துநான்காஞ் செய்யுளாகிய "திதத்தத்தத்தித்தத்தி" என்னுஞ் செய்யுளைப் பாடியபோது பொருள் சொல்ல மாட்டாது திகைத்து அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ் கரித்தார் அருணகிரிநாதர் அவர் காதைக்குடையாது அவரைப் பொறுத்து விடுத்தனர். அவ்வளவில் வில்லி புத்தூராழ்வார் கர்வபங்கம் அடைந்தவராய் அருணகிரி நாதரைத் துதித்துக்கொண்டு தமது ஊருக்கு மீண்டனர். இவர் பாடியமகாபாரதத்தில்விநாயகருக்கு நாந்திச் செய் யுளாக முதலில் இரண்டு செய்யுள் கூறித் தற்சிறப்புப் பாயிரத்திலே "ஆக்குமாறயனும்" என்னுஞ் செய்யுளால் திரிமூர்த்திகளையும் அவர்களுக்கு மேலாகிய பரப்பிரமத் தையும் வணங்கி, அப்பாற் சருக்கங்கள்தோறும் திரு மாலுக்கும் வணக்கங் கூறியிருக்கின்றார். இவர் சமயத் தில் வைஷ்ணவரேயாயினும் சிவஸ்தோத்திரமாக அனேக செய்யுட்களை இடையிடையே பாடிப்போயிருக்கின்றனர். வில்லிபுத்தூரர் பாரதத்தில், வடமொழிப் பாரதத்தி லுள்ள முதற் பத்துப் பருவமே பாடப்பட்டன. மற்றை யெட்டுப் பருவங்களும் பாடப்படவில்லை. பாண்டவர்கள் முடிசூடிய சரித்திரம் வரையில் பாடிமுடித்தனர்.

வில்லிபுத்தூரர் தாம்பாடியபாரதத்தில் வடமொழிப் பதங்களை மிக எடுத்தாண்டிருக்கின்றார். "புராதனுகம வேதகீதபுராணரூபம், சலதரசஞ்சலசாலம், எனவும்; மாதவயாதவ வாசவகேசவ" எனவும் இவ்வாறேஅனேக

வடமொழித்தொடர்களை இடையிடையே காணலாம். தமிழிலே இவர் வடமொழிகளை யெடுத்துப் பிரயோகித்த அளவு முன்னுள்ள நூலாசிரியர் ஒருவரும் பிரயோகிக்க வில்லை. சங்கத்தார் காலத்துக்குப்பின் இருந்த புலவ ரெல்லாம் வடமொழிச்சொற்களை மிகச் சுருக்கமாகவே எடுத்து வழங்கினர். இவரும் இவருக்குப்பின் வந்த புலவர்களும் வடமொழிப் பதங்களை அளவின்றிவழங்கி யிருக்கின்றார்கள். இவருடைய நூலில் சொல்லணி பொ ருளணி சந்தம் என்னும் மூன்றும் மலிந்து கிடத்தலைப் பரக்கக் காணலாம். "கோவல் சூழ் பெண்ணைநாடன் கொங்கர்கோன் பாகை வேந்தன்—பாவலர் மானங்காத் தான் பங்கயச் செங்கையென்ன - மேவலரெமரென்றுமல் வெங்களந்தன்னில் நின்ற—காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி." இவ்வாறே தமது தாதாவாகிய ஆட்கொண்டானுடைய பெருமைகளை எடுத்து இடை யிடையே புகழ்ந்து பாராட்டித் தமதுபாரதம் உலகத்தில் நின்று நிலவும் வரையும் அவன் புகழும் அழியாது நின்று நிலவுமாறு செய்தனர். வில்லிபுத்தூராழ்வார் பாரதத் தில் பத்துப்பருவங்களும் ஐம்பது சருக்கங்களும் நாலா யிரத்துமுந்நூற்றைம்பத்தொரு செய்யுட்களும் உள்ளன. இவர்காலம் சாலிவாகனசகம் ஆயிரத்திருநூறு என்பர்.

## சித்தாந்த சாத்திரங்கள்.

"உந்தி களிறுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

என்னும் வெண்பாவால் சித்தாந்தசாத்திரங்கள் இவையெ ன்பது இத்தனை என்பது முறைக. திருவருட்பயன், சங்கற்ப

நிராகரணம், வினாவெண்பா, கொடிக்கவி, போற்றிப்பஃறொடை, சிவப்பிரகாசம், நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், என்னும் இவ்வெட்டும் உமாபதிசிவாசாரியர்செய்தன. உண்மைவிளக்கஞ் செய்தவர் திருவதிகை மனவாசகங்கடந்தார். சிவஞானசித்தியும் இருபாவிருபஃதும் செய்தவர் அருணந்தி சிவாசாரியர். சிவஞானபோதஞ்செய்தவர் மெய்கண்டதேவர். திருவுந்தியார் செய்தவர் உய்யவந்ததேவநாயனார். திருக்களிற்றுப்படியார் செய்தவர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார். இவர் திருவுந்தியார் செய்தவருடைய சீடர். இச்சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கும்சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிதுவிளக்குந் தமிழ்நூல்களாம். இவை ஐஞ்ஞூற்றெண்பத்தைந்து வருஷங்களுக்குமுன்னே பாடியருளப்பட்டனவென்பது சங்கற்ப நிராகரணஞ் செய்த உமாபதி சிவாசாரியர் தாமே அந்நூலிலே சாலிவாகனவருஷம் ஆயிரத்திருநூற்றுமுப்பத்தைந்தில் அதனைச்செய்ததாகக் கூறலால்நிச்சயிக்கப்படும் உமாபதிசிவாசாரியர் அருணந்தி சிவாசாரியர் சீடர். அருணந்தி மெய்கண்டசிவாசாரியரது சீடர். சிவஞானபோதஞ் செய்யப்பட்டகாலம்சாலிவாகன சகவருஷம் ஆயிரத்திருநூறளவிலுள்ளது. உமாபதிசிவாசாரியராற்பாடப்பட்ட சேக்கிழார் எழுநூற்றெழுபதுவருஷங்களுக்கு முன்னுள்ளவர். வேதத்தின் ஞானகாண்டப் பொருளையுள்ளபடியறிவிக்குந் தமிழ்நூல்கள் தேவாரமுந் திருவாசகமுமாம். இவையிரண்டும்தமிழ்வேதமெனப்படும். இச்சித்தாந்தசாத்திரங்கள்தமிழிலே வெளிவருதற்குமுன்னுள்ளகாலத்திலே பக்குவர்கள் குருவைத்தேடியடைந்து உபதேசமுகமாகச் சமையவறிவைப்பெற்றுக் கொள்வார்கள். இக்காலத்திலோ நூல்களை யாவர்க்கும் குருவாயின. ஆகியும் உண்மையறிவு தலைப்பட்டார் மிகச்சிலரே. அக்காலத்தில் அறியாதார் பலர் இக்காலத்தில் அறிந்துமறியாதாரே பலர்.

## சிவஞானபோதம்.

இது வடமொழியிலே நந்திபகவானாலும் தமிழிலே மெய்கண்டதேவராலுஞ் செய்யப்பட்டது. தமிழ்ச்சைவ சித்தாந்தசாத்திரம் பதினான்கிற்கும்முதனூலாகவுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. இதற்குச் சிவஞானமுனிவர் பாஷியமுஞ் சிற்றுரையுஞ்செய்தனர் சிவஞானமுனிவர் வடமொழியிலேசிவாக்கிரயோகிகள்செய்த பாஷியத்தையேமொழிபெயர்த்தனர். "வேதம் பசுவதன்பால் மெய்யா-கமநால்வ ரோதுந் தமிழ்வேதமுள்ளூறு நெய்—போதமிகு-நெய்யினுறு சுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்—செய்த தமிழ் நூலின்றிறம்" என்னும் ஆன்றோர் வாக்கே சிவஞானபோதத்தின் மாட்சிமையைத் தெரிவிக்கும்.

## சிவஞானசித்தி.

அருணந்தி சிவாசாரியர் செய்த பதிசாத்திரம். அது சைவசித்தாந்தசாஸ்திரங்கள்பதினான்கனுளொன்று. அது சிவஞானபோதத்திற்கு வழிநூல். அது பரபக்ஷம் சுபபக்ஷம் என இருபக்ஷங்களையுடையது. பதி பசு பாச வியல்புகளை ஐயந்திரி பறுத்தடைவிடைகளால் விளக்குவது. இது பௌத்தம் லோகாயதமுதலிய சமயங்களைக் கண்டித்துச் சுவபக்கம் நாட்டுவது. ஆன்மவிசாரணை செய்யப்புகுவார்க்கு இதுபோலச்சிறந்த நூல் மற்றில்லை. அதற்கு மறைஞான சம்பந்தர் சிவாக்கிரயோகிகள் முதலியோர் உரைசெய்தார்கள்.

## சேக்கிழார்.

தொண்டைநாட்டிலே குன்றத்தூரிலே சேக்கிழார் மரபில் அவதரித்த அருண்மொழித்தேவர் அவருக்குச்

சேக்கிழாரென்பது அம்மரபை விளக்கினமையாலுண்டாய பெயர். அவருடைய கல்வியறிவொழுக்கங்களை அறிந்த அநபாய சோழமகாராசா அவரைத்தமக்கு மந்திரியாராக்கி அவருக்கு உத்தம சோழப்பல்லவரென்னும் வரிசைப்பெயரையுங் கொடுத்தான். அவர் சைவசமயிகள் புறச்சமயக்காப்பியமாகிய சீவகசிந்தாமணியைச் சொற்சுவை பொருட்சுவைகளைமாத்திரம் விரும்பிக் கற்றுத்தங்கள் வாழ்நாளை வீணாளாகக் கழிப்பது கண்டு மனங்கசிந்து இம்மைமறுமையின்பங்களையொருங்கேதந்து முத்திக்குச் சாதனமாயுள்ள சிவனடியார் சரித்திரமாகிய பெரியபுராணத்தைப் பாடியருளினர். அப்பெரியபுராணம் சிதம்பரத்திலே சபாநாயகர் சந்நிதியிலே திருவருளாலெழுந்த அசரீரி வாக்காகிய "உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்" என்னுமடியைமுதலாகக்கொண்டு ஆயிரக்கான்மண்டபத்திற் பாடிமுடிக்கப்பட்டது. பத்திரசம் பெருகப்பாடுஞ் சத்தி இவரிடத்திலே பெரிதுமுண்டு. கர்ணபாரம்பரியத்திலே கிடந்த அடியாருடைய சரித்திரங்களைச்சேக்கிழார் உள்ளவுள்ளவாறு கேட்டாராய்ந்து பாடிமுடித்துச் சபாநாயகர் சபையிலேயே அரங்கேற்றினர். அநபாயசோழ மகாராஜா அவருக்கு கனகாபிஷேகம்பண்ணி அவரையும் பெரியபுராணத்தையும் யானைமேலேற்றித் தானுமேறியிருந்து அவருக்குச் சாமரம் வீசிக்கொண்டு வீதிவலஞ் செய்வித்தான். அரசன் அதன்பின்னர்ப் பெரியபுராணத்தைச் செப்பேட்டிலெழுதுவித்து அவ்வாலயத்திலே வைத்தான். சேக்கிழார் அது நிகழ்ந்தபின்னர் ஞானமுடிசூடி அத்தலத்திற்றானே யிருந்து சிலகாலஞ்சென்றபின்னர்ச்சிவபதமடைந்தனர். அநபாயசோழமகாராசாவினது காலம் சாலிவாகனசகம் ஆயிரத்து நாற்பதுவரையிலுள்ளது. ஆதலின் சேக்கிழார் காலம் எழுநூற்றெழுபதுக்கு முன்னுள்ளதாதல்வேண்டும்

## பரிமேலழகர்

இவர் காஞ்சிபுரத்திலே வைஷ்ணவப் பிராமணகுலத்திலே அவதரித்து வடமொழி தென்மொழி யிரண்டிலும் வல்லுநராய் விளங்கித் திருவள்ளுவர் குறளுக்குரையியற்றிய ஆசிரியர். இவரைப் பாண்டிநாட்டிற்பிறந்தவரென்பாருமுளர். அது பொருந்தாமை, "வள்ளல் சிலைப்பெருமாணச் சர்சாத்தர் வழுதிமுதற்—றள்ளுவனுர்க்குந் தலையான பேரையுந் தன்னுரையை—விள்ளுவனுர்க்குந் திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் — வள்ளுவனுர்க்குவழி காட்டினன்றொண்டைமண்டலமே "என்னுந்தொண்டைமண்டலசதகத்தானுணர்க. வள்ளுவர் குறளுக்கு உரை செய்தவர்கள் பதின்மர். அவருள்ளே சிறந்தவர்கள் நச்சினர்க்கினியரும் இவருமேயாவர்கள். அவ்விருவருள்ளும் இவரே தம்முரையாற் சிறந்தார். பதின்மர் உரையையு மொருங்குகற்று ஒப்புநோக்கிய ஆன்றோர் ஒருவர் கூறிய:——பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள—நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்-பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன் — றெரித்தவுரையாமோ தெளி; என்பதனுல் அவ்வுண்மை பெறப்படும். நச்சினர்க்கினியர் இவர் காலத்தவரேயாயினும் அவர் வயசால் முதிர்ந்தவர். இவர் வைஷ்ணவரென்பது "அரிமேலன்புறா உமன்பமையந்தணன்" என்னும் ஆன்றோருரையாற்றணியப்படும் இவர் வைஷ்ணவரேயாயினும் சைவாகமவுணர்ச்சியு முடையவரென்பது வள்ளுவருரையிலிடையிடையெடுத்துரைக்குமாற்ருல் விளங்குகின்றது. வள்ளுவருக்குரை செய்த பதின்மருள் முற்பட்டவராகிய தருமர் ஆருகதர். அவரை ஆருகதர்கள் தருமசேனரென்பர். அவருரைத்த்வுரையிலே பெரும்பாலும் ஆருகதமதக் கொள்கைகளே பிரசங்கிக்கப்பட்டன. இவ்வாறே மற்றைமோரும் தத்தஞ்சார்புபற்றியுரைத்தார்கள். அவருள்

ளே நச்சினார்க்கினியர் ஒருவரே திருவள்ளுவரைப் பொது நூலெனக்கொண்டு நடுநிலைகலங்காதுரைசெய்தார். ஆயினும் அவ்வொன்பதின்மர் உரையும்மெய்யுரையல்லவெனக் கண்டே பரிமேலழகர் தாம் உரைசெய்யப்புகுந்தார் பரிமேலழகர். யோகப்பயிற்சி யுடையரென்றும், ஒவ்வொரு சொல்லுக் குஞ்சமாதியிருந்தே மெய்ப்பொருள் கண்டாரென்றும், பூர்வம் வைஷ்ணவராயிருந்து பின்னர்ச் சுப்பிரமண்யோ பாசகராயினரென்றும் ஒருகர்ண பரம்பரையுளது. மற்றைய சரித்திரம் எவ்வாறாயினும் ஒவ்வொரு சொற்குஞ்சமாதியிருந்தே மெய்ப்பொருள் கண்டாரென்பது அவருரையையூன்றி நோக்குந்தோறும் நம்பத்தக்கதாகின்றது.

இவர் உரையிலே பொருள்வன்மையும், செஞ்சொற்சிறப்பும், இலக்கணங்கூறும் சாதுரியமும், விசேடவுரைதெரிக்குமாற்றலும், மேற்கோளெடுத்துச்சித்தாந்தஞ்செய்யுமுபாயமும், பிறர்க்கெல்லாம் பலவசனங்களானன்றியமையாத விஷயங்களைச் சிலசொற்கொண்டு தெற்றெனக்காட்டும் பேராண்மையும், வடமொழிப்பதங்களைச் செந்தமிழ்மொழியாக்கும் அற்புதசாமர்த்தியமும், சொன்முட்டுற்று வடமொழிப்பதங்களை யெடுத்தாளும் நல்குரவுடையார்போலாது செந்தமிழ்ச்சொற் செல்வமுடைமையும், வேதாகமவியாகரண சாஸ்திர புராணேதிகாசஸ்மிருதிகாவியாலங்காராதி வடநூற்பயிற்சியோடு முத்தமிழ்ப்பரப்பெலா முற்றவுணர்ந்த நுண்புலமையும் நன்குபெறப்படுகின்றன.

இவர் வைதிக சமயவுணர்ச்சியிற் றமக்கிணையில்லாதவரென்பது, "யாதுமெய்யென நிகழுமையத்தினையோக முதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர்வார்" என்றும் "நிலமுதலுயிரீறாகிய தத்துவங்களின் றொகுதியெனவுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங்கார

ணங்களிலொடுக்கிக்கொண்டுசென்றாற், காரணகாரியங்களிரண்டுமின்றி முடிவாய் நிற்பதை யுணர்தலாம்" என்றும், "வீடாவது நிரதிசயவின்பம்" என்றும், "தோற்றக்கேடுகளின் மையின் நித்தமாய், நோண்மையாற்றன்னை யொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி யெஞ்ஞான்றுமொருதன்மைத்து" என்றும், "துன்பங்களாவன பிறப்பு அநாதியாய்வருதலின் உயிரான் அளவின்றி யீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்தவுடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்தவுடம்பான் முகந்துநின்றனவுமொழியப் பின்னும் அனுபவிக்கக்கடவனவாய்க்கிடந்தன. அவை விளக்கின் முன்னிருள் போல் ஞானயோகங்களின் முன்னர்க்கெடுதலான்" என்றும் "பரம்பொருளையுணரப் பிறப்பறும்" என்றும் வரும் விசேடவுரைகளாற்றுணியப்படும்.

இவர் தம்முரையிலே தமக்குடன்பாடாயுள்ள உரையாசிரியர்களுடைய மதங்களையெடுத்துக்காட்டித் தழுவுவதோடு தமக்குடன்பாடில்லாத மதங்களையுமெடுத்துக் காட்டி ஏதுக்கூறி மறுத்தலுஞ் செய்வர்.

நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் ஒரேகாலத்தவரென மேலே கூறினுமன்றோ. பரிமேலழகர் திருவள்ளுவருக்கு உரையொன்றியற்றி அதிலே தமதுரையைச் சிற்சிலவிடங்களிலெடுத்து மறுத்திருக்கின்றாரென்று கேள்வியுற்ற நச்சினார்க்கினியர் பரிமேலழகர்பாற் சென்று அவ்வுரையைத் தமக்குக்காட்டுமாறு வேண்டினர். பரிமேலழகர் அவரை உபசரித்து அவ்வுரையைக்காட்டினர். அதனை நச்சினார்க்கினியர் இருகையாலுமேற்றுத்தமக்குச்சந்தேகமாகவிருந்த குறட்பாக்கள் சிலவற்றை எடுத்து நோக்கிச் சென்றனர். நோக்கிச்சென்றபோது, "குடம்பை தனித்

தொழிய" வென்னுந் திருக்குறளிலே, "குடம்பை" என்ப தற்குத் தாங்கூடென்றுரைத்திருக்கப் பரிமேலழகர் அத ற்கு "முட்டை" யென்று பதவுரையும், "கருவுந்தானு மொன்றாய்ப்பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றலாலஃதுடம்பிற் குவமையாயிற்று" என்றும், "அத னுள்வேற்றுமையின்றி நின்றே பின்பு காமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று" என்றும் விசேடமுரைத்து, கூடு புள்ளுடன் றோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும் உடம்பிற்கு உவமையா காது" என்று மறுத்திருக்கக்கண்டு தாமுரைத்ததைக் கண்டித்தாரென்று வெருளாமலுர் நாணுமலும் "மெய்ப் பொருள் மெய்ப்பொருள்" என்று பாராட்டி உச்சிமே லேற்றிக்கொண்டாடினரென்பது ஆசிரியகன்னபரம்பரை. இவ்வாறே தருமர் முதலியோரதுரைகளையு மோரோ விடங்களிலெடுத்து மறுப்பர். அவையெல்லாமெடுத்து விரிப்பிற் பெருகும்.

இனி இவர்காலம் கந்தபுராணம் கம்பராமாயணமுத லிய நூல்களினின்றும் உதாரணமெடுத்துக் காட்டாமை யால் அந்நூலாசிரியர்களுக்குமுற்பட்டதென்பதும்,போச ராசன் பெயர் இவர் செய்தவுரையிலே வருதலால், அவ னுக்குப் பிற்பட்டது என்பதும் நன்றாக நிச்சயிக்கப்படுத லின் ஆயிரத்திருநூறு வருஷங்களுக்கு முற்பட்டதாகவே துணியப்படும்.

## சேனாவரையர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரை யம் என்னும் உரைசெய்த ஆசிரியர். வடமொழி தென் மொழி யிரண்டினும் மிக்க வல்லுநர். குசாக்கிர விவேக முடையவர். அவர்க்கிளையரான வுரையாசிரியர் அவர்க்

குப்பின் இன்றளவும்பிறந்திலர். அவர்நச்சினார்க்கினியர்க்கு முந்தியகாலத்திலுள்ளவர் என்பது நச்சினார்க்கினியர் தாமியற்றியவுரையினுள்ளே ஓரோவிடத்துச் சேனாவரையர் மதத்தை மறுத்துத் தம்மதங் காட்டலாலினிது புலப்படும். அவருடைய ஜன்மநாடு பாண்டிநாடென்றும் ஜாதியினால் அந்தணர் என்றுங் கூறுவார்கள். அவர் இளம்பூரணருரையை இடையிடைமறுத்தலால் இளம்பூரணர் முந்தியவர். ஆதலாற் சேனாவரையர் இற்றைக்கு ஆயிரத்திருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னுள்ளவராதல் வேண்டும்.

## நச்சினார்க்கினியர்.

மதுரையிலே பாரத்துவாச கோத்திரத்திலவதரித்த அந்தணர். சிவபத்தியிற் சிறந்தவர். தமிழாராய்ச்சியிலே தமக்கு ஒப்பாருமிக்காருமில்லாதவர். தொல்காப்பியமென்னு மிலக்கணக்கடலைக் கரைகாண்பது இவர்செய்தருளிய உரைத்தெப்பமில்லையாயின் எத்துணை வல்லார்க்கு மரிதாம். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, சிந்தாமணி, கலித்தொகை, குறுந்தொகையிருபது, என்னும் பழைய நூல்களை இறந்தொழியாமற் காத்து நிலைநிற்கச்செய்தது அந்நூல்களுக்கு இப்பெருந்தகை செய்தருளிய வுரையேயாம். இவர் பிறந்திலராயின் அகத்திய முதலிய நூல்களைப் போலவே இந்நூல்களும் கற்றற்கமையாவாய்க் காலன் வாய்ப்பட்டேவிடும். இவர் இந்நூல்களுக்குரையியற்றினாரென்பது "பாரத்தொல்காப்பியமும் பத்துப்பாட்டுங் கலியும், ஆரக்குறுந்தொகையுளைஞ்ஞான்குஞ்-சாரத் திருத்தகுமாமுனிசெய் சிந்தாமணியும்-விருத்திநச்சினார்க்கினியமே" என்பதனாலுணர்க. இவர் முத்தமிழ்நூல்களினும் வித்தகரென்பது அவர் உரைகளால் நன்கு புலப்படுகின்

றது. இவர் காலமும் பரிமேலழகர் காலமும் ஒன்று. கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாசாரியர் காலத்துக்கும் கம்பர்காலத்துக்கும் முன்னுள்ளவரென்பது அவர் நூல்களினுதாரணங் கொள்ளாமையாலும் வேறு சிலவேதுக்களாலும் நன்றாகத்துணியப்படும். ஆதலின் இவர் ஆயிரத்திருநூறுவருஷங்களுக்கு முன்னுள்ளவர். இவர் கலித்தொகைக்குச் செய்த வுரை மிகவும் அற்புதமானது.

## பேராசிரியர்.

இவர் திருச்சிற்றம்பலக்கோவை யாருக்குரை செய்தவர். நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பிய வுரையில் பேராசிரியருடைய கொள்கைகளை எடுத்துக்காட்டிப் போவதால் அவர் இவருக்குமுற்பட்டவராதல் வேண்டும். பேராசிரியருடைய உரை மிக்க சுருக்கமும் விளக்கமுமுடையது. திருச்சிற்றம்பலக்கோவையாருரை நச்சினார்க்கினியர் உரையென்று சிறிதுகாலத்துக்குமுன் கொள்ளப்பட்டது. இப்போது ஆராய்ச்சியில் பேராசிரியர் உரையென்றுவெளிப்பட்டது. தொல்காப்பியத்துக்கும் குறுந்தொகைக்கும் இவரும் உரை செய்ததாகத் தெரிகின்றது. இவர் மதுரை யாசிரியரெனவும் படுவர். இவர் இளம்பூரணருக்கு வித்தியாகுரு நச்சினார்க்கினியர்க்கு இளம்பூரணர் வித்தியாகுரு. நச்சினார்க்கினியர் தமது குருவாகிய இளம்பூரணரை ஆசிரியர் என்றும், தமதுகுருவுக்குக் குருவாகிய மதுரையாசிரியரைப் பேராசிரியரென்றும் வழங்குவாராயினர். அவ்வழக்குப் பற்றி இவர்க்குப் பேராசிரியர் என்னும்பெயர் நிலைப்பதாயிற்று

## அடியார்க்கு நல்லார்.

இவர் சிலப்பதிகாரவுரை யாசிரியர். சிலப்பதிகாரத்துக்கு அரும்பதவுரையொன்று இவருக்கு முற்காலத்திற்

செய்யப்பட்டது. இவர் அவ்வுரையைத் தழுவியும் ஓரோரிடத்து மறுத்தும் பதவுரையாகவும் வேண்டிய விடத்துப் பொழிப்புரையாகவும் விசேட வுரையாகவும் இலக்கணமும் மேற்கோளும் எடுத்துக்காட்டி மிக விரிவாக உரைசெய்திருக்கின்றார். ஆயினும் இவருடைய உரை சிலப்பதிகாரத்துக்கு முழுதும் அகப்படவில்லை. சிலப்பதிகாரம் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் விரவ இயற்றப்பட்டமையால் இதற்கு உரை முத்தமிழும் வல்லோராலன்றி ஏனையோரால் இயற்றுதல் கூடாது. இவர் முத்தமிழும் வல்லவரென்பது இயல் இசை நாடக லக்கணங்களினின்றும் எடுத்துக்காட்டிய மேற்கோள்களால் நன்கு புலப்படுகின்றது. இவருடைய கொள்கைகளிற் சிலவற்றை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுவதால் இவர் நச்சினார்க்கினியர்க்கு முற்பட்டவர் என்பது ஒருதலை. இவர்பதங்களுக்குப் பகுதியெடுத்துக் காட்டிப் பொருள் கூறுவதில் மிகச்சதுரர். பொதியில் என்பதைப் பொது-இல் எனப்பிரித்து உகரவீறு இகரமாய்த்திரிந்து உடம்படுமெய்யும் பெற்று "கிளந்தவல்ல" என்னும் அதிகாரப் புறனடையால் முடிந்தது, என்று இவ்வாறு சொற்களை முடித்துக்காட்டியும் போவர். 'கொன்றையன்சடைமுடி'— ஆகுபெயரான் இறைவன், தாங்கொண்டபொருளுக்குஇயையஇன்னபெயர்என்றுங் கூறிப்போவர். சிலசெய்யுட்களில் அடிசீர் முதலியவற்றில் சந்தேகம் வருமிடத்துச் செய்யுளிலக்கணமு மெடுத்துக் கூறிப்போவர். இப்படிப் பலவகையாலும் தமதுரையை விளக்கமுற எழுதும் இயல்புடையோர். இவர் யாழ்ப்பாணத்தி லரசு செய்த குலபூஷணசிங்கையாரிய சக்கிரவர்த்திக்கு மந்திரியாக விளங்கினவரென்பதும், அவர் தம் பெயரால் ஒரு பெருந்திருக்குளம் அமைத்தவரென்பதும் அத்திருக்குளம் இன்றும் அவர் பெயரால் வழங்குகின்ற

தென்பதும், அவர் தொண்டைநாட்டினின்றும் சென்று யாழ்ப்பாணத்திற் குடிகொண்டவரென்பதும், அக்காலம் கண்ணகிக்கு ஆலயங்களும் விழாவணிகளுஞ்சிலப்பதிகார படனமும் வகுக்கப்பட்ட காலம் என்பதும், அதுபற்றியே இவரும் சிலப்பதிகாரத்துக்கு உரை செய்தாரென்பதும் யாழ்ப்பாணச் சரித்திரத்தாலறியக் கிடக்கின்றன.

## பரஞ்சோதி முனிவர்.

இவர் மதுரையில் துறவு பூண்டிருந்த ஓரந்தணர். சமஸ்கிருதம் தமிழ் இரண்டும் வல்லவர். சிவனுடைய திருவிளையாடல்களையே யாவருக்கும் எடுத்துக் கூறி ஆனந்த பரவசராயிருப்பர் அவற்றைக் கேட்ட பெரியோர் அவரைப்பணிந்து திருவிளையாடற் சரித்திரங்களைத் தமிழிலே பாடித் தந்தருள வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்ய, அவ்வாறே நாலுகாண்டமும் அறுபத்தெட்டுப் படலமும் மூவாயிரத்துமுந்நூற்றறுபத்துமூன்று செய்யுளும உடையபதாகப் பாடியருளினர். இவர் ஆகம சாத்திரங்கள் மாத்திரமன்று, தமிழிலே இலக்கிய விலக்கணமெல்லாம் நிரம்பக்கற்ற வல்லுனர் என்பது அவர் பாடல்களால் நன்கு விளங்குகின்றது. நாட்டுச் சிறப்பிலே, மழைவருஷிக்க எழுந்தமேகத்தை எடுத்துச் சிறப்பித்துக் கூறும்போது, தமது மனத்திலே பதிந்துள்ள சிவபெருமானதும் அம்மையாரதும் திருமேனியின் வண்ணமும், அருள்வண்ணமும் உவமையாக எடுத்துக்கூறிய சிறப்பு மிகவும் வியக்கத்தக்கது. அச்செய்யுள் வருமாறு:—

"தெய்வநாயகனீறணி மேனிபோற் சென்று
பௌவமேய்ந்துமை மேனிபோற் பசந்து பல்லுயிர்
எவ்வமாற்றுவான் சுரந்திடுமின்னருளென்னக் (க்கும்
கௌவைநீர் சுரந்தெழுந்தன கணைகுரன் மேகம்."

## வீரகவிராயர்.

தமிழிலே அரிச்சந்திரபுராணம் பாடியபுலவர். இவர் நல்லூர் நகரத்தில் நானூறு வருஷங்களுக்கு முன்னே விளங்கியவர். அரிச்சந்திரபுராணம் பன்னிரண்டு காண்ட முடையது. இந்நூலிலுள்ள செய்யுட்களெல்லாம் செம் பாகமும் நவரசங்களும் பொருந்தியனவே யாயினும் சோகரசத்தில் மிகச் சிறந்தது.

கடைச்சங்க மொழிந்த பிற்றை ஞான்றும் சிலகால மாகப் பாண்டியர்கள் தமிழை அபிமானித்துப் புலவர் களுக்குப் பரிசில் கொடுத்து வந்தார்கள். அதன்பின்னர் ஆருகத சமயத்துப் புலவர்களும் அவர்கள் சமயமும் மேலோங்குங் காலமாயிற்று. முன்னர்ச் சம்பந்தமூர்த்தி நாயனார் காலத்திலொடுங்கிய ஆருகதர் கடைச்சங்க மொடுங்கிய பின்னர் மெல்ல மெல்லத் தலைநிமிர்வாராகி வடமொழியிலிருந்து தஞ்சமயநூலும் பொதுநூலுமாக அனேக நூல்களை மொழிபெயர்த்தார்கள். அவை சிந்தா மணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூடாமணி நிகண்டு முதலியன. அவர்க்கு மாறாகச் சைவவித்துவான்களும் வைஷ்ணவ வித்துவான்களும் தலைநிமிர்ந்து வடமொழியி லிருந்து புராணங்களும், இதிகாசங்களும், சமயசாத் திரங்களும் மொழிபெயர்த்துத் தமிழ்மாதுக்கு அணி கலன்களாக்கினார்கள். சைனவித்துவான்களுள்ளே பிர பலமுற்றோர் திருத்தக்க தேவர் முதலியோர். சைவ வித்துவான்களுள்ளே பிரசித்திபெற்றோர் கச்சியப்பர். நச்சினார்க்கினியர் முதலியோர். வைஷ்ணவ வித்துவான் களுள்ளே கம்பர் பரிமேலழகர் முதலியோர்.

இப்படியிருக்குங் காலத்திலே துருக்கர் அரசு கைக் கொண்டார்கள். தமிழ்மாதும் சைவ வைஷ்ணவ சமண

சமயங்களும், ஆலயங்களும், வித்தியாமண்டபங்களும், அவர்கள் சந்நிதியிலே உயிர்ப்பிச்சை வேண்டுங் கதியிற் புகுந்தன. அரும்பெரும் நூல்களெல்லாம் அம்மிலேச்சராலே அக்கினிக்கூட்டப்பட்டன. அவ் வக்கினிக்குத் தப்பின நூல்கள் கிராமாந்தரங்களிற் பதுங்கிக் கிடந்தன சிலவேயாம். துருக்கரைக் கர்வபங்கஞ்செய்த மகாராஷ்டிர அரசர் காலத்திலும் தமிழ்வித்துவான்கள் சிறிது தழைத்து அநேக நூல்கள் செய்தார்கள்.

அதன்பின்னர்ச் சிற்றரசராலும் மடாதிபதிகளாலும் தமிழ் பரிபாலிக்கப்பட்டு வருவதாயிற்று. அதுவும் பின்னர் நாளிலே தளர்ந்தது.

## பவணந்தி.

இவர் தொண்டைநாட்டிலே சனகாபுரியிலே சன்மதி முனிவருக்குப் புத்திரராயவதரித்துத் தமிழ்ப்புலவராய் விளங்கிய ஒரு சமணமுனிவர். சீயகங்கன் கேள்விப்படி தொல்காப்பியத்தைச் சுருக்கிப் பாணினீய வியாகரண அடைவுப்படி நன்னூல் என்னும் இலக்கணஞ் செய்தவர். அந்நூற் சூத்திரங்கள் மிக்க திட்பமு நுட்பமு முடையன வென்பது சர்வாங்கீகாரம். "மொழிமுதற் காரணமாமணுத்திரளொலி யெழுத்து" என்று ஒலியெழுத்திற்கிலக்கணங் கூறிய அவர் சாதுரியம் பெரிதும் வியக்கற்பாலது. குற்றெழுத்து வல்லெழுத்து மெல்லெழுத்திடையெழுத்துக்களுக் கெல்லாம் எண்கூறி வரையறுத்தவர். ஐயும் ஔவும் எல்லாவிடத்தும் நெட்டெழுத்தாகாவென்பது உய்த்துணர வைக்கும்பொருட்டு நெட்டெழுத்திற்கு மாத்திரம் "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்" என்று வாளா சூத்திரஞ் செய்த குசாக்கிர புத்தியினது ஆற்றல் அத்தியற்புதம். இவ்வாறே ஒவ்வொரு சூத்திரமு மொவ்வோ

ரதிசயமுடையனவாம். இவ்வகை நுட்பமுஞ் சுருக்கமுமுடைய இலக்கணநூல் மற்றெப்பாஷையிலுமில்லை. இன்னும் "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள்—ணன்னூலார்தமக் கெந்நூலாரு—மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" என்றார் இலக்கணக் கொத்துச் செய்த ஈசான தேசிகரென்னும் சுவாமிநாத தேசிகரும் அதுநிற்க, இவர் இற்றைக்குத் தொளாயிரம் வருஷங்களுக்கு முன்னே யிருந்தவரென்பது சில ஏதுக்களாற் றுணியப்படும்.

நன்னூல் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என்னும் இரண்டதிகாரங்களும் ஒன்பது இயல்களும் நானூறு சூத்திரங்களும் உடையது. இது நெடுங்காலமாக விரும்பிக்கற்கப்படாத நூலாக விருந்தது. அதனைப் பிற்காலத்தார் கற்றற்கெளிய சிறிய நூலென்று விரும்பிக் கற்பாராயினர். தொல்காப்பியமே பண்டுமுதல் இன்றுவரையும் பிரபல பிரமாண நூலாக நின்று நிலவுகின்றது. உரையாசிரியர்களெல்லாம் தொல்காப்பியத்தையே பிரமாணமாக எடுத்துக்காட்டுவர்.

## வீரசோழியம்.

இது பொன்பற்றியூர்ப் புத்தமித்திரனார் செய்த இலக்கணநூல். இது எழுத்துச்சொல் பொருள்யாப்பு அணி என்னும் ஐந்து பகுதியும் நூற்றெண்பத்தொரு செய்யுளும் உடையது. கந்தபுராணம் அரங்கேற்றுங் காலத்தில் "திகடசக்கரம்" என்ற செய்யுளில், திசம்—தசம்=திகடசம் எனப் புணர்ந்தமைக்கு விதியாதென்று ஆட்சேப நிகழ்ந்தபொழுது, கந்தபுராண நூலாசிரியர் அதற்கு விடை நாளைக்கூறுதும்என்று சொல்லியெழுந்து போய்க்குமரகோட்டத்தில் வரங்கிடந்தபோது குமாரக்

கடவுள் கனவிற்றோன்றி அதற்குப் பிரமாணம் நாளைக்குச் சபையிற் காட்டப்படுமென்று அநுக்கிரகித்தருளினர், என்றும் அவ்வாறே மறுநாட்சபையில் ஓரந்தணனுயக் குமாரக்கடவுள் இந்நூலைக்காட்டி மறைந்தருளினர். என்றும் ஒருகதையுளது. அதற்குப் பிரமாணம் தொல்காப்பியச் சூத்திரத்தாற் கொள்ளக்கிடக்க, வீரசோழியத்திற் பிரமாணங் காட்டியது மிகையாமாதலாலும், வீரசோழியம் கந்தபுராணத்துக்குப் பிற்பட்ட நூலாதலாலும் அக்கதை நம்பத்தக்கதன்று. இந்நூல் வீரசோழனுற் செய்விக்கப்பட்டமையின் வீரசோழியம் என்றாயிற்று.

## குமரகுருபரசுவாமிகள்.

இவர் பத்துவயதாங்காறு மூமைப்பிள்ளையாயிருந்து திருச்செந்தூர்ச் சுப்பிரமணியக்கடவுள் ஆலயத்திலே தந்தை தாயராற் கொண்டுபோய் விடப்பட்டபோது ஊமைத்தன்மை நீங்கி, அற்புதகவிப் பிரபந்தங்கள்பாடுஞ் சத்திபெற்று விளங்கின புலவர். இவரிடத்திலே புலமையோடு அற்புதங்களும் விளங்கின. இவர் காசியாத்திரைக் கெழுந்து சென்றபோது, வேங்கடகிரிக்குச் சமீபத்திலே வழியருகே யிருந்து துன்பஞ் செய்துவந்த புலியை அழைத்து அதனை வாகனமாகக்கொண்டு சென்று காசியையடைந்தனர். அதுகேட்ட "ஆக்பா" என்னுந் துருக்க சக்கரவர்த்தி இவரைச்சென்று கண்டு உபசரித்துத் துறவியாதலின் என்மாளிகையிலும் வந்து விருந்துகொண்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான். சுவாமிகள் கொள்வோமென்ன, சக்கரவர்த்தி அதற்கு வேண்டுவன வெல்லாம் அமைத்துத் தன்மதாசாரியர் ஒருமருங்கிருக்கச் சுவாமிகளைத் தன்னருகே தலைப்பந்தியிலிருத்தினன். மாமிசபதார்த்தங்களோடு கூடியவுணவை

யாவர்க்கும் படைக்கப்பட்டன. சுவாமிகள் தமக்கு அசமாமிசமும் பன்றிமாமிசமும் சமமே யென்று கூற, சக்கரவர்த்தி முதலியோர் யாவரும் பன்றி யென்னுஞ் சொற் கேட்டமாத்திரத்திலே நிஷேத மென்றுகூறி யெழுந்தார்கள். அதுகண்ட சுவாமிகள் அவர்களை யிருக்கும்படி கையமர்த்தி உங்கள்கலங்களிலே படைக்கப்பட்டிருப்பன என்னவென்று பாருங்கள் என்றார். அவர்கள் தங்கள் கலங்களிலே யிருந்த அன்னங்கறிகளெல்லாம் போய் அதிரம்மியமான தீங்கனி வகைகளை யிருப்பக் கண்டு அதிசயித்துச் சுவாமிகளோடுதாமும்யிரூரவுண்டார்கள் அவ்வற்புதத்தைக்கண்ட சக்கரவர்த்தி சுவாமிகளிடத்தில் மிக்க பத்தியும் அபிமானமு முடையராகி, யிவர்கள் கேள்விப்படி சைவ சமயிகளுடையனவாயிருந்து பின்னர்த்துருக்கராற்கவரப்பட்ட கங்கைக்கரையின்கணுள்ள தீர்த்தத் துறைகளையும், விசுவநாதசுவாமி கோயிலுக்கும் அனேகமானியங்களையும் சைவத்துறவிகளுக்காக அனேக மடாலயங்களையும்கொடுத்தான். சுவாமிகளுடையபுலமை ஒப்புயர்வில்லதென்பது அவரியற்றிய நூல்களால் நிச்சயிக்கப்படும். அவராற் செய்யப்பட்ட நூல்கள் கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நீதிநெறிவிளக்கம், சிதம்பரச்செய்யுட்கோவை, மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம் முதலியன. இவர் காலம் இருநூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னுள்ளது.

## வீரைமண்டலவர்

இவர் வீரைநகரத்தில் இருந்த ஒரு சைனர். விஜயநகரத்திலே அரசு செய்திருந்த கிருஷ்ணராயன் காலத்தவர். இவர் செய்த சூடாமணிநிகண்டு திவாகரத்துக்கும் பிங்கலத்துக்கும் வழிநூல் இவர் இந்நூலை விருத்தப் பாவினாற் செய்தனர். வீண் அடை சொல்லின்றிப் பாடு

வதில் இவர் மகா சதுரர். இந்நூல் இலக்கிய நூலுணர்ச் சிக்கு இன்றியமையாத தாதலின் கருவிநூலெனப்பட் டது. நிகண்டும் இலக்கணமுங் கற்றே இலக்கிய நூல் களை ஆராயத் தொடங்குதல் வேண்டும். இதுவே முன் னோர் அநுசரித்துவந்த முறையாம். இதனை இக்காலத்து மாணுக்கரும் அநுசரித்து வருவாராயின் இலக்கியப் பயிற்சியிலிடர்ப்படாது கற்றுத்தேறுவர். இந்நூல் பன் னிரண்டு தொகுதியும் ஆயிரத்துநாற்றுத்தொண்ணூற்று நான்கு செய்யுட்களுமுடையது.

## அரசகேசரி.

ஈழமண்டலத்திலே சாலிவாகனசகம் ஆயிரத்துநா னூற்றின்மேல் அரசுபுரிந்த பரராசசேகரன் மருகன். இவ்வரசகேசரியே காளிதாசன் வடமொழியிலியற்றிய காவியமாகிய இரகுவமிசத்தைத் தமிழிலே 2500 விருத் தப்பாவினுற் பொருணயம் சொன்னயம் கற்பனுலங்கார முதலிய நூல்வனப்புக்கள் அமையப்பாடித் திருவாரூரிற் சென்று அரங்கேற்றியவன்.

## ஞானப்பிரகாசசுவாமிகள்.

ஈழநாட்டிலே திருநெல்வேலியிலே வேளாளர் குலத் திலே பிறந்து உரியகாலத்திலே கௌடதேசஞ் சென்று சமஸ்கிருதங்கற்று வல்லராகி மீண்டு திருவண்ணுமலையை யடைந்து அங்கு மடாதிபதிபாற் காஷாயம்பெற்று அங் கிருந்துபௌஷ்கராகமத்துக்குச்சமஸ்கிருதத்திலேசிறந்த வியாக்கியானமும், சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை முதலிய அநேக நூல்களுஞ் செய்து பிரசித்தியுற்றவர். இவர் சித்தியாருக்குத் தமிழிலுமோருரையியற்றினவர். இவர் தம்முரையிலே சிவசமவாதம் நாட்டுவர். முந்நூற்

றிருபது வருஷங்களுக்கு முன்னுள்ளவர். இவர் பரம்பரையிலுள்ளோர் இன்றுமுளர். இவர் அமைத்த திருக்குளம் சிதம்பரத்திலே இன்றும் இவர் பெயரால் விளங்குகின்றது.

## வைத்தியநாதநாவலர்.

இற்றைக்கு இருநூற்றறுபது வருஷங்களுக்கு முன்னே திருவாரூரிலே அபிஷேகத்தார் மரபிலே அவதரித்துத் தமிழ்க்கடல் குடித்துத் தமிழ்மாரி பொழிந்து விளங்கிய பண்டிதசிகாமணி. இவரே இலக்கண விளக்கஞ் செய்தவர். அந்நூலுக்குரையும் இவர் தாமே யெழுதினர். தொல்காப்பியத்துக்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்களுள்ளே இந்நூல் மிகச்சிறந்தது. இவர்காலத்திலே இவரோடு வாதம்புரியும் வன்மையில்லாதவராயிருந்து பின்னர் வன்மை படைத்த சிவஞானமுனிவர் இலக்கண விளக்கத்தைக் கண்டித்து, இலக்கண விளக்கச் சூறாவளியென வொருநூலியற்றினர். அதனால் அது மறைந்தொழியாது இன்னும் ஒளிபெற்று நிலவுகின்றது சூறாவளி இலக்கண விளக்கத்தை மறுப்படுத்தாமல் தன்னை இயற்றிய சிவஞானமுனிவரென்னும் கலாசந்திரனுக்கே களங்கமாயிற்று வைத்தியநாதநாவலர்க்குத் தொண்டைமண்டலசதகம் பாடிய படிக்காசுப்புலவர் மாணாக்கர். ஒருதுறைக்கோவை பாடிய அமிர்தகவிராயர் ஒரு காலத்தவர். வைத்தியநாதநாவலரைச் சுவாமிநாத தேசிகரே "தமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன்" என்று புகழ்வரென்றால் இவர் பெருமைக்கு வேறுசான்று வேண்டா.

## சிவஞானமுனிவர்

நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னர்த் திருவாவடுதுறை மடத்திலிருந்த ஒரு தம்பிரான். இவர் வட

மொழி தென்மொழி யிரண்டினும் வல்லவர். சிவஞான போதத்திற்குத் திராவிடமகாபாஷியமும், சிவஞானசித்தியார்க்குப் பொழிப்புரையும், சிவஞான போதத்திற்குச் சிற்றுரையும், தொல்காப்பியமுதற் சூத்திரவிருத்தியும், செய்தவர். சமஸ்கிருத நூல்களைத் தமிழிலே வசனரூபமாகவும், செய்யுள்ரூபமாகவும் மொழி பெயர்ப்பதில் இவர்க்கிணையாயினோர் பிறரில்லை. அன்னம்பட்டீயம் சிவதத்துவ விவேகம் முதலியன இவர்செய்த மொழிபெயர்ப்புக்கள். தமிழ் இலக்கணவுணர்ச்சியும் தர்க்க சாஸ்திரவாராய்ச்சியும் நிரம்பியவராதலால் அவர் செய்த நூல்களெல்லாம் சிரோரத்தினங்களாக விளங்குகின்றன. பிறர் நூல்களிலே குற்றந்தெரித்தலில் நக்கீரரும் அவர்க்கிணையாகார். பாஷியமொன்றேனுமில்லாத பாஷையென்று வடமொழியுடையோர் தமிழை இகழ்ந்து வந்த குற்றத்தை நீக்கினது அவர்செய்த திராவிடபாஷியமே. அதற்கு முன்னே நாலாயிரப்பிரபந்த பாஷியம் உண்டென்றாலும் அது இத்திராவிடபாஷியம் போலச் சிறந்த தன்று.

## தாயுமானவர்.

இவர் இற்றைக்கு நூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னே திருச்சிராப்பள்ளியிலே அரசுசெய்த விஜயரங்க சொக்கநாத நாயகர்க்குச் சம்பிரதியாகவிருந்த கேடிலியப் பிள்ளைக்கு அருந்தவப் புதல்வராக அவதரித்தவர். இவர் சிவயோகியாகி அற்புதபத்திரசங்கான் றொழுகுவதாகிய அனேக பாக்களைப் பாடியவர். அப்பாக்கள் தாயுமானவர் பாடலெனப்படும். அந்நூலிலே சமஸ்கிருதச் சொற்கள் மிகமலிந்து கிடத்தலின் அவர் வடமொழியிலும் வல்லுநரென்பது நன்கு துணியப்படும். இவருடைய பாடல்கள் தோத்திரரூபமாக வுள்ளன. இசையோடு ஓதப்படுமிடத்துக் கன்னெஞ்சையுங் கரையச்செய்யு மியல்பின. தமது

மனம் ஒருவழிப்பட்டு இடையறாச் சிவத்தியானத்தில் நிற்கவில்லையே யென்றிரங்கிக் கூறும் விண்ணப்பரூபமாகிய பாடல்கள் கேட்போர் மனத்தைக் கவரும்இயல்பின. அச்செய்யுள்களிலொன்று வருமாறு:—

"கல்லேனு மையவொரு காலத்திலுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையோ
கருணைக்கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்கவொரு கடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை
வாழ்விப்பதுன் பரங்காண்
பொல்லாதசேய்யெனிற் றாய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோதிருவருட்கயலுமாய்ப்
புன்மையே னுவனந்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மாவிருக்க வருள்வாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே."

இவருடைய பாடல்கள் இக்காலத்தில் தமிழ்நாடெங்கும் தோத்திரப்பாவாக ஆலயங்களிலும் வீடுகளிலும் மடாலயங்களிலும் ஓதப்பட்டு வருகின்றன. சங்கீதகாலக்ஷேபங்களில் இவருடைய பாடல்கள் ஒன்றிரண்டாயினும் கேட்கப்படாமற் போவதில்லை. பக்திஞானங்களைச் சாமானியரிடத்தும் வளர்க்கத்தக்க பாடல்கள் இவருடைய பாடல்களே.

## சிவப்பிரகாசசுவாமிகள்.

இவர்பிரபுலிங்கலீலை, திருக்கூவப்புராணம், சித்தாந்த சிந்தாமணி, வேதாந்த சூடாமணி, சிவப்பிரகாச வியாசம், சிவநாம மகிமை, தர்க்கபாஷை, சோணசைலமாலை, நன்னெறி, நால்வர் நான்மணிமாலை, வெங்கையுலா, வெங்கைக் கோவை முதலிய நூல்கள் செய்தவர். காஞ்சீபுரத்திலே பிறந்து சிந்துபூந்துறையிலே வெள்ளியம்பலத் தம்பிரானிடம் பாடங்கேட்டவர். இலக்கண இலக்கியங்களில் மகாசதுரர். கற்பனைக்களஞ்சியம் சாதியில் வீரசைவர். இவர் இற்றைக்கு இருநூற்றிருபது வருஷங்களுக்கு முன்னர் விளங்கியவர்.

## சிவாக்கிரயோகி.

இவர் தஞ்சாவூரிலே சரபோஜிமகாராசாவுடைய சபையிலே மணவாளமாமுனியென்னும்வைஷ்ணவசிரேஷ்டரோடு பதினேழுநாள் வரையில் அவர் கடாவிய வினாக்களுக்கெல்லாம் ஏற்றவாறு விடையளித்துச் சிவபாத்துவம் நாட்டிவரும்போது பதினேழாநாளிரவு மணவாள மாமுனிவர் பக்ஷத்தார் சிவாக்கிரயோகி எழுந்தருளியிருந்த மடத்திற் றீக்கொளுவினார்கள். அம்மடம் முழுதுஞ் சாம்பராகியும் சிவாக்கிரயோகி சிறிதும் வருந்தாது நிஷ்டையிலிருந்தனர். அதனைக் கேள்வியுற்ற சரபோஜி அம்மடத்திற்குத் தீயிட்டவர்களை யெல்லாம் ஓரறையிற் சேர்த்து அக்கினிக்கிரையாக்கினான். சிவாக்கிரயோகிகள் செய்த நூல்கள் சிவஞானபோதபாஷியம், சித்தாந்த தீபிகை, தத்துவதரிசனம், பாஞ்சராத்திரசபேடிகை என்பவைகளாம்.

## ஒழிவிலொடுக்கம்.

இது செய்தார் கண்ணுடைய வள்ளல். இது பொது விலுபதேசம், சத்திநிபாதத்துத் தமமொழிவு, யோகக் கழற்றி, கிரியைக்கழற்றி, சரியைக்கழற்றி, விரத்திவிளக் கம், துறவு, அருளவத்தைத் தன்மை, வாதனைமாண்டார் தன்மை, நிலையியல்பு எனப் பத்தியல்களுடையது. இது ஆன்மாப் பாசோபாதியினீங்கிபருளி லழுந்தித் தூய்மை யுறுதற்குக் கருவியான ஒருஞானநூல் மேவதாந்தசித்தா ந்தமிரண்டையுந் தம்முண்முரணுதவாறு அவ்விரண்டன் பொருள் பெரும்பான்மை யாளொருப்படுத்துரைப்பது. இது அறுவகை யகச்சமயங்களுள் வைத்துச் சிவாத்து விதம் போதிப்பது.

## ஒப்பிலாமணிப்புலவர்

இவர் தஞ்சை ராச சமஸ்தானத்தில் விளங்கிய ஒரு சிறந்த தமிழ்ப்புலவர். இவரே தமிழில் சிவரகசியஞ்செய் தவர். இந்நூல் வறக்குறைய நாலாயிரஞ் செய்யுளு டையது. இந்நூலின்கே சிவபூசாமகிமை, விபூதிமகிமை பஞ்சாட்சரமகிமை, சரியை கிரியை யோக ஞான விஷ யங்கள் முதலியன மிக விரிவாகக்கூறப்படும்

## அபிராமிப்பட்டர்.

இவ்வந்தணர் நூற்றறுபதுவருஷங்களுக்கு முன்னே திருக்கடவூரிலே பிறந்து தமிழும் சமஸ்கிருதமும் நன்கு கற்றுத் தமிழ்ப்புலமை நிரம்பியவராய்த் தேவிபூசையே அதிசிரத்தையோடு செய்பவராயொருநாளிலே தஞ்சை மாநகரஞ்சென் றரசனைக்கண்டு அவன்பாற்றமது கல்விச் சாதுரியத்தைக் காட்டி அங்கே சிலநாள் வசித்தார். ஒருநாள் அரசன் அவரை நோக்கி இற்றைத் திதியென்ன

வென்று வினவ, அவர் அற்றைநாள் அமாவாசை யாகவும் மறவிபற்றிப் பூரணைநாளென்றார். அரசன் சிலேஷார்த்த மாக, "இதுமதிகெட்டதினம்" என்றுகூற, பட்டர் அவன் குறிப்பையுணர்ந்து, தாம் கூறியதைத் தாபிக்க வெண்ணி பூரணைதான் என்று வலியுறுத்துரைத்துச் சூரியாஸ்த மயனவேளையில் வந்து காட்டுவேனென்று விடைபெற்றுப் பூசைக்குச் சென்றார். அரசனும் அஸ்தமயன காலம் எப்போது வருமென ஆவலோடு காத்திருந்தான். பட்டர் குறித்த நேரத்திலே அரசன் சமூகஞ்செல்ல; இருவரும் உப்பரிகை மேற்சென்று கிழ்த்திசைநோக்கியிருந்தார்கள். இச்சமாசாரத்தைக் கேள்வியுற்ற நகரத்துச் சனங்கள் எல்லோரும் அவ்விடத்திற் சென்று கூடினார்கள். மாலைக்காலமும் வந்தடுத்தது. பட்டர் சர்வாண்டங்களையு மீன்று காக்கின்ற உலகமாதா தம்மையும் காப்பாளென் னும் பேருறுதியுடையராய் அரசனை நோக்கி, ராஜகெம் பீரா! என்வாக்கு என்வாக்காயிற் பொய்க்கும். என்வாக் கெல்லாம் தேவிவாக்கேயாதலின் மெய்வாக்கேயாம். காட்டுவேன் காண்பாயாக வென்றுகூறி, அபிராமியம் மையார்மீது அன்புமயமாகிய ஓரந்தாதி பாடத்தொடங் கிப் பத்துக்கவிசொல்ல, பூரணகலையோடு கூடிய தண்ணளிய சந்திரன் கிழ்த்திசையிலே யுதித்து யாவருங் கண்டு கண் களிகூர மேலெழுந்தது பட்டர் தாமெடுத்த அந்தாதியை அவ்வளவிலே நிறுத்தாமலும் மனம் பேதுறாமலும் உளங் கனிந்து நூறுபாவற்பாடி முடித்தனர். அதுகண்ட அரசன் அதிசயமும் ஆநந்தமும் பேரச்சமு முடையனாகி அவரை வீழ்ந்து நமஸ்கரித்துத் தாமிரசாசனத்தோடு சிலமானியங்கள் கொடுத்தான். இன்றும் அவர் பரம் பரையில் வந்துளோர் அச்சாசனமும், மானியமு முடை யராய்த் திருக்கடவூரில் வசிக்கின்றார்கள். (இற்றைக்கு இருபது வருஷங்களுக்குமுன் யாம் திருவிடைக்கழிக்குச்

சென்றபோது அச்சாசனத்தைக் கண்ணாரக் கண்டோம்) பட்டர் முறுகிய அன்போடு பூசித்துவந்த உலகமாதாவாகிய உமாதேவியார் சிலம்பேசந்திரனாகி அரசன் முதலியோர்க்குத் தரிசனங்கொடுத்துச் சிறிதுநேரத்தில் மறைந்தருளிற்றென்பர்.

## ஆறுமுகநாவலர்.

இவர் யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே வேளாளர் குலத்திலே சாலிவாகனசகம் ஆயிரத்தெழுநூற்றுநாற்பத்தைந்தாம் வருஷத்திலே கந்தப்பிள்ளையென்பவருக்குப் புத்திரராக அவதரித்தவர்.

இவர் தமிழ் சம்ஸ்கிருதம் ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளையுங் கற்று, அப்பாஷைகளிலே வியவகாரசத்தி வந்தபின்னர், தமிழையே முற்றக்கற்கும் பேரவாவுடையராயினார். அதனால் இவர் அக்காலத்திலே பிரபலவித்துவான்களாய் விளங்கிய சரவணமுத்துப் புலவர் முதலியோரிடத்துச் சில இலக்கண விலக்கியங்களைப் பாடங்கேட்டுத் தமக்குப்பாடஞ்சொன்ன ஆசிரியர்களும் நாணத்தக்க நுண்ணிய புலமையும், கூர்ந்த விவேகமும், வாக்குவன்மையும், ஒப்பற்ற ஞாபகசக்தியும், ஆசாரசீலங்களும், நற்குணநற்செய்கை களும், சிவபக்தியும், சமயாபிமானமும், சபையஞ்சா ஆண்மையும், பெரிதுமுடையராய் விளங்கினார்.

பாடசாலைகளுக்கு உபயோகமாகும்படி வசனநடையிலே பாலபாடங்கள் எழுதி அச்சிடுவித்தார். எவருக்கும் உபயோகமாகும்படி பெரியபுராணம் முதலிய நூல்களை வசனமாக்கினார். கந்தபுராணம், வில்லிபுத்தூரார்பாரதம், திருக்குறள் பரிமேலழகருரை; திருக்கோவையாருரை;

முதலிய அரும்பெரும் நூல்களையெல்லாம்வழுக்களைந்து சுத்தபாடமாக்கி, அச்சிட்டு உலகத்துக்குபகரித்தார். அவற்றுள், திருக்குறள் பரிமேலழகருரையும், திருக்கோவையாருரையும்; இராமநாதபுரத்து மகாராசாவினது மந்திரியாராகிய பொன்னுச்சாமித் தேவர் இவரைத் தமது நாட்டிற் சந்தித்தபொழுது, "இந்நூல்களை ஆராய்ச்சிசெய்து சுத்தபாடமாக்கி அச்சிடவல்லார் தங்களையன்றிப் பிறரொருவரையும் காண்கிலேம்" என்று கூறி அதற்கு வேண்டும் பொருள் கொடுத்து இவரைக் கொண்டுதிருத்தி அச்சிடுவிக்கப்பட்டன.

திருக்குறள், திருக்கோவையார், நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சொல்லதிகாரம், சேனாவரையருரை முதலிய நூல்கள் இவராற்றிருத்தி, அச்சிடப்படாதிருக்குமாயின், இந்நாளிலும் அவற்றைநாம் ஓலைப்புத்தகங்களிலேயே படித்துச் சங்கடப்பட்டு மலையவேண்டியவர்களாவேம். இந்நூல்களைச் சுத்தபாடமாக்கித் தரும்பொருட்டு இவர் அவதாரஞ்செய்தாரென்றே நாம்கொள்ளுதல் வேண்டும். இவர் அவதாரஞ்செய்திலரேல், அவற்றைநாம் இக்காலத்திற் காண்பதுமில்லையாம். இவர் தமிழபிவிருத்தியின்பொருட்டும். சைவசமயாபிவிருத்தியின் பொருட்டும் தம்மாயுட்காலமுழுவதையும் போக்கியவர். இவர் தாமீட்டியசெல்வத்தை யெல்லாம் ஒரு சிறிதும்புறத்தே போகாவண்ணம் இவ்விரண்டற்குமே யாக்கிவைத்தார். இவ்விரண்டையும் பரிபாலிக்கும் பொருட்டே தஞ்சுற்றத்தாருடைய தொடர்பை முற்றத் துறந்தார்.

ஏனைய கல்விமான்களைப் போலச் சைவசீலங்களைப் பேச்சளவிற் காட்டாமல் தம்மொழுக்கத்தாலும் எடுத்து நாட்டினவர். இறக்கும்போது இவருக்கு வயசு ஐம்பத்தேழு. இவர் எவ்விஷயங்களையும் ஐயந்திரிபற வெடுத்து

மாணவர்க்குப் போதிப்பதிலும், சமயவிஷயமேயாயினும் பொது விஷயமேயாயினும் ஒன்றையெடுத்துத் தீரவிசாரித்துத் தர்க்கமுறையாகப் பிரமாணத்தோடு எப்பெருஞ் சபையிலும் எத்துணைப் பெருமாற்றலுடையோரும் மற்றெத்திறத்தினரும் அங்கீகரிக்கும் வண்ணம் நாட்டிப் பிரசங்கிக்கும் சாதுரியத்திலும், கேட்போருள்ளத்தைப் புறஞ்செல்லவிடாது தம்மாட்டுக் கவரும் வாக்குவன்மையிலும், கடன்மடைதிறந்தாலொப்பச் *சொற்பஞ்சமின்றி வாக்குமழை பொழியும் அற்புத ஆற்றலிலும், இவர்க்கிணையாவாரொருவரை நாம் இன்னுங் காண்கிலேம்.

## சரவணப்பெருமாளையர்.

இவர் திருத்தணிகையிலே வீரசைவர் குலத்திலவதரித்துச் சென்னையிலே யிருந்து தமிழ்க்கலை வளர்த்து இற்றைக்கு முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னே அருவுடம்பு கொண்டவர். நாலடியார், நன்னூல், நைஷதம், திருவள்ளுவமாலை, நன்னெறி முதலிய நூல்களுக்குரையும், பூகோளதீபிகை, பாலபோத இலக்கணமுதலிய நூல்களும் செய்தவர் இவரே. இவர்செய்த திருவள்ளுவமாலையுரை மிக்க நிட்பநுட்ப மமைந்து புலவோருள்ளத்திற்கு அதிசயானந்தம் பயப்பது.

இவர் செய்த நைஷதவுரை முற்றுப்பெற்றிருக்குமாயின் அதற்கிணை பிறிதொன் றெக்காலத்து முளதாகாது.

## மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

இவரும் ஆறுமுகநாவலரும் ஒரேகாலத்தவர்கள். இவர் மகா வித்துவான் என்னும் பட்டாபிதானம் பூண்டவர். இவர் பாடும் வன்மையிலே கம்பரினுஞ் சிறந்தவ

றென்னலாந் தகுதி வாய்ந்தவர். இவர் பாடிய பாடல் களுக்குக் கணக்கில்லை.

இவர் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால் வகைக்கவியும்பாடவல்லவர். இவர் நாகைக்காரோணபுரா ணம் மாயூரபுராணம், குடந்தைப்புராண முதலிய ஐம் பது நூல்கள் பாடினவர். இவர் திரிசிரபுரத்திலே பிறந்து திருவாவடுதுறைமடாலயத்திலே கலைபயின்றுஅம்மடத்து ஆதீனவித்துவானாகி அனேக மாணாக்கரைச் சேர்த்துத் தமிழ்க்கலை பயிற்றி அவர் மூலமாகத் தென்னாடெங்கும் தமிழ்ப்பயிர் வளர்த்தவர்.

இதுகாறும் சைவவைஷ்ணவ சமயப் புலவர்களையும் அவர்கள் செய்த நூல்களையும் சமணசமயப்புலவர்களை யும் அவர்கள்செய்தநூல்களையும் எடுத்துக் கூறினாம். இற் றைக்குச் சற்றேறக்குறைய நானூறு வருஷங்களுக்கு முன்னே தமிழைத் தமது தாய்மொழியாகவுடைய சோ னகர் சிலர் தமிழ்கற்றுப் பாண்டித்தியம் பெற்று விளங்கு வாராயினர். அக்காலத்திலே ஐரோப்பிய தேசத்திலி ருந்து வந்த "பெஸ்கி" யென்பவரொருவர் தமிழ்கற்று வல்லுநராகித் தமிழ் முனிவர்களைப்போல உடைநடை யுடையவராய் விளங்கினர். அவரை அவர் சீடர்கள் வீர மாமுனி யென்னும் பெயரால் கொண்டாடுவர்.

தமிழ்ப்புலமை படைத்த சோனகருள், வண்ணக் களஞ்சியப்புலவர், வண்ணங்கள் பாடுவதில் மிக்கவன்மை யுடையவர். இவர் மதுரைமடத்துத் தம்பிரானொருவர் பால் தமிழ்கேட்டவர். இவர் பாடிய பெருநூல் முகிவித் தீன்புராணம், இப்புராணத்தைத் தமது சமயிகள்பொ ருட்டு இயற்றிச்சென்று நாகூரில் அரங்கேற்றினர். இவ ருடைய சாமர்த்தியத்தைக் கண்ட நாகூர்த் தனவந்த

ரான ஒரு சோனகப் பிரபு தமது புத்திரியை இவருக்கு மணம்முடித்துக்கொடுத்தனர். இவர் செய்யுள்பாடுவதில் மிக்க விரைவுடையவர். சோனகருள் தமிழ்ப்புலமையில் சிறந்தவராக எடுத்துக் கூறத்தக்கவர் இன்னுமொருவர் உளர். அவர் உமறுப்புலவர் என வழங்கப்படுவர். இவர் தம் சமயநூலாகச் செய்த பெரிய சீறாப்புராணம். இது சொன்னயம் பொருணயங்களால் மிகச்சிறந்தது. கிறிஸ்தவராகிய வீரமாமுனிவர் செய்தநூல்கள் தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி, அவிவேகபூரணகுருகதை முதலியன. இவர் இற்றைக்கு நூற்றெழுபது வருஷங்களுக்கு முன் இருந்தவர்.

---

# அநுபந்தம்.

## 1 நச்சினார்க்கினியருடைய வசனநடை.

அங்கிலேமருங்கின முதலாகிய, மும்முதற்பொருட்கு முரியவென்ப என்பதனானுணர்க. இக்கருத்தானே வள்ளுவநாயனாரு முப்பாலாகக்கூறி மெய்யுணர்தலானிமித்தங் கூறினார். செந்தமிழ் செவ்வியதமிழ். முந்து நூல், அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன. எழுத்துச் சொற்பொருள் யாப்பும்சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலும் சோதிடமுங் காந்தருவமும் கூத்தும் பிறவுமாம். புலமென்ற திலக்கணங்களை, பனுவலென்ற தவ்விலக்கணங்களெல்லாமகப் படச் செய்கின்றதோர் குறி. அவையிதனுட் கூறுகின்ற வுரைச் சூத்திரங்களானு மரபியலானு முணர்க. பாண்டியன் மாகீர்த்தி யிருபத்துநாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலினவனு மவனவையிலுள்ளோரு மறிவு மிக்கிருத்தலினவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கு விடைகூறினர். அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி நீர் தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்கவென்று கூறுதலானுந் தொல்காப்பியனாரும் பல்காலுஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமென்று கூறுதலானு மிவ்விருவரும் வெகுளாமலிந்நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக் கருதியவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலினரிறபவென்றார் அவர் கேளன்மினென்றற்குக் காரணமென்னையெனின் தேவரெல்லாரும் கூடி யாஞ்சேர விருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்ததிதற்கு அகத்தியனாரே யாண்டிருத்தற்குரியரென்றவரை வேண்டிக் கொள்ளவவருந் தென்றிசைக்கட்போதுகின்றவர். கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை யவர் கொடுப்ப நீரேற்றிரீஇப் பெயர்ந்துவாரவதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்

ணல் வழிக்கண்ணரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையு மருவாளரையுங் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்திராவணனைக் கந்தருவத்தாற் பிணித்திராக்கதரை யாண்டியங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீர்சென்று குமரியாரைக் கொண்டுவருகவெனக் கூற வவருமெம் பெருமாட்டியை யெங்ஙனங் கொண்டு வருவலென்றார்க்கு முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளமகலநின்று கொண்டு வருகவென்றார்க் கவருமங்ஙனங் கொண்டு வருவழிவையை நீர் கடுகிக் குமரியாரை யீர்த்துக்கொண்டு போயவழித் தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்றோர் வெதிர்ங்கோலை முறித்துநீட்ட வதுபற்றி யேறினாரது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பியனாரையுஞ் சுவர்க்கம் புகாப்பிரெனச் சபித்தார் யாங்களொரு குற்றமுஞ் செய்யாதிருக்க வெங்களைச் சபித்தமை யானெம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பிரென வகத்தியனாரையுஞ் சபித்தாரதனானவர் வெகுண்டாராதலினவன் செய்தநூலைக் கேளற்க வென்றார். நான்கு கூறுமாய் மறைந்த பொருளு முடைமையானும் மறையென்றார் அவை தைத்திரியமும் பௌடிகமுந்தல் வாகாரமுஞ் சாமவேதமுமாம் இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமுமென்பாருமுளர். அது பொருந்தாது இவரிந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூறாகச் செய்தாராதலின், முற்கூறிய நூல்கள்போல வெழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமு மயங்கக் கூறாது வேறோரதிகாரமாகக் கூறினானென்றற் கெழுத்து முறைகாட்டி யென்றார். வரைப்பின்கண்ணே தோற்றி சிறந்தவெனக. இந்திரனாற் செய்யப்பட்ட தைந்திரமென்றாயிற்று. பல்புகழாவன—ஐந்திரநிறைதலுமசத்தியத்தின் பின்னிந்நூல் வழங்கச்செய்தலு மகத்தியனாரைச் சபித்த பெருந்தன்மையு மைந்திநாப்பணிற்றலு நீர்நிலை நிற்றலும் பிறவுமாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம். படிமை-தவவேடம். வடவேங்கடந் தென்குமரியென்பதுகட்டுரைவகையானெண்ணொடு புணர்ந்த சொற்சீரடி. ஆயிடையென்பது—வழியசை புணர்ந்த சொற்சீரடி. தமிழ்கூறு நல்லுலகத்தென்பது—முற்றடியின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடி. இங்ஙனஞ் சொற்சீரடியை முற் கூறினார். சூத்திரயாப்பிற் கின்னோசை பிறத்தற்கு—பாஅவண்

ணஞ் சொற்சீர்த்தாகி நூற்பாற்பயிலு மென்றலின்) ஏனையடிக ளெல்லாஞ் செந்தூக்கு. வடவேங்கடந் தென்குமரியெனவே யெல்லையும், எழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி யெனவே நுதலிய பொருளும் பயனும் யாப்பும், முந்துநூல் கண்டெனவே வழியும், முறைப்பட வெண்ணியெனவே காரணமும், பாண்டியனவையத் தெனவே காலமுங் களனும், அரிறபத்தெரிந்தெனவே கேட்டோரும், தன்பெயர் தோற்றியெனவே யாக்கியோன் பெயரும், நூற்பெயரும் பெறப்பட்டன. தொல்காப்பியமென்பது மூன்றுறுப் படக்கிய பிண்டம். பொருள்கூறவே யப்பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமு மடங்கிற்று. நூறு காணங் கொணர்ந்தானென் றாலவை பொதிந்த கூறையுமவையெனவடங்குமாறுபோல இனி யிவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாருமுளராலெனின் வேங்கடமுங் குமரியுமெல்லையாகவுடைய நிலத்திடத்து வழங்குந் தமிழ் மொழியினைக் கூறுநன்மக்கள் வழக்குஞ்செய்யுளு மென்றுற் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டினும் வழங்குந் தமிழ் மொழியினைக் கூறுவாரை நன்மக்களென்று ரென்று பொருடருதலானு மவர் கூறும் வழக்குஞ் செய்யுளுங் கொண்டெழுத்துஞ் சொல்லும் பொருளுமாராய்தல் பொருந் தாமையானு மவர் கூறும் வழக்குஞ் செய்யுளுமாகிய விருகாரணத் தானு மெழுத்துஞ் சொல்லும் பொருளு மாராய்ந்தாரெனின் அகத்தியர்க்கு மாறாகத்தாமு முதனூல் செய்தாரென்னும் பொருடருதலானு மங்ஙனங் கொடுந்தமிழ் கொண்டிலக்கணஞ் செய்யக் கருதிய வாசிரியர் குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ் வளக் கையு முந்துநூலையு மாராய்ந்து முறைப்பட வெண்ணினரெனப் பொருடருதலானுமது பொருளன்மை யுணர்க. இன்னு முந்து நூல்கண்டு முறைப்படவெண்ணி யென்றதனானே முதல்வன் வழிநூல்செய்யுமாற்றிற் கிலக்கணங் கூறிற்றிலனேனு மந்நூல் செய்த முறைமை தானே பின்பு வழிநூல் செய்வார்க் கிலக்கண மாமென்பது கருதியிவ்வாசிரியர் செய்யுளியலினு மரபியலினு மந்நூல் செய்யு மிலக்கணமு மதற்குரையுங் காண்டிகையுங் கூறு மிலக்கணமுங் கூறியவதனையே மீண்டுங் கூறினனென்றுணர்க. அவையவ்வோத்துக்களானுணர்க.

## அடியார்க்கு நல்லாருடைய வசனநடை.

இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பியமா தலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தன வாத லானும் அந்நூலின் முடிபே இதற்குமுடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமும் என நான்கினை க்கி அப்பாவினைத் தொகைவகையறை யான் இரண்டென வடக் கியும், விரிவகையறையான் ஆறெனை விரித்தும், அவற்றை அறம் பொருளின்பத்தாற் கூறுகவென்றுங் கூறிப்பின்பு அம்மைமுதலிய எட்டு வனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறியவர், "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியானடிநிமிர்ந் தொழுகினும்" என்பதனாற் குவிந்து மெல் லென்ற சொல்லானும், பரந்து வல்லென்ற சொல்லானும் அறம் பொருளின்பம் பயப்ப வீடென்னும் விழுமியபொருள் பயப்ப ஓர்கதைமேற் கொச்சகத்தானும், ஆசிரியத்தானும், வெண்பா வெண்கலிப்பாவானும், மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர்நிலைச் செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலையென வுணர்க.

முந்துநூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப் பெயரின் றேனும் ஆசிரியர், "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத் தொடுபுணர்ந்த சொல்லாகும்மே" என்றார். 'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணரற் பாலதனை மாணாக்கன் ஐயந்தீர்தற் கன்றே பின்னும் "சிதைந்தனவரினு மியைந்தன வரையார்" என் றாரெனக்கொள்க. அன்றியும் பெரியதனைப் பெருங்காப்பிய மென்றே கூறி மறுக்க வேண்டுதலானும், சான்றோர் செய்யுட் களிலும், "கூத்தியரிருக்கையுஞ் சுற்றியதாகக், காப்பியவரசனைக் கலந்தவை சொல்லி" என இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத் தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தி யாகிய நிலந்தருதிருவிற் பாண்டியனவைக்களத்து அகத்தியனாருந் தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழிமோசியாரும், வெள்ளூர்க் காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரை யாசிரியன் மாறனாரும், துவரைக்கோமானும், கீரந்தையாருமென்

றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மருள்ளிட்ட மூவாயிரத் தெழுநூற்றுவர். தம்மாற் பாடப்பட்ட கலியும், குருகும், வெண்டாளியு முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள்ளும், "கருதுவதங்கொன்றுண்டோ காப்பியக்கவிகள்காம, வெரியெழ விகற்பித்திட்டார்" எனச் சிந்தாமணியுள்ளும் "நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" என மணிமேகலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கூறினமையானும், சொற்றொடர் நிலை பொருட்டொடர் நிலையென்னுந் தொடர்நிலைச் செய்யுட்குங் காப்பியமென்று பெயர் கூறுதலும் ஆசிரியர் க்ருத்தென வுணர்க. இதனுள் முற்கூறிய வனப்பென்பது பெரும்பான்மையும் பலவுறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலிற் பலசெய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலைச்செய்யுட்கு இவ்வெட்டும் அலங்காரமாயின; ஆகவே இக்காப்பியத்திற்கும் தோலென்பது ஓர் சொல்லலங்கார மாகவே யுணர்க. இனி இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின், ஆசிரியம் வெண்பா வெண்கலிப்பா வென்னும் இவற்றோடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கி வருதலானும், காண்டமெனக் குறிபெறுதலானும் இதனைக் கதையென்றல் வலியுடைத் தென்பார்க்கு, அற்றன்று; கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக்கூறுவது; என்னை? "கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத்தானுங் கொண்டான்" என்றமையானும், வழக்கினுள்ளும் இஃது ஒரு கதையென்பவாகலானும், "நாடகக் காப்பியம்" என்றலானும் கதையென்பதல்லது. இனி அது நல்ல புலவராற் பொருளொடு புணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டுவருவதாகலின், இஃது அவ்வாறன்றி யோனி யென்னும் நாடகவுறுப்பும் நாடகமுந்தழுவி உள்ளோன் றலைவனாக உள்ளதோர் பொருண்மேற் சித்திரிக்கப் படாது பாட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்.

இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்தியமுதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒருசாரார்

சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதிகாணு மையின், அவையும் இறந்தனபோலும். இறக்கவே வரும் பெருங் கலமுதலிய பிறவுமாம். இவற்றுட் பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிருசாணும், வணரளவுசாணும், பத் தரளவு பன்னிருசாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும், திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்தியல்வது; என்னை? "ஆயிரநரம்பிற் றாதி யாழாகு, மேனையுறுப்பு மொப்பன கொளலே, பத்தரதளவுங் கோட்டினதளவு, மொத்தவென்ப விருமூன்றிரட்டி, வணர்சாணொழித்தென வைத்தனர் புலவர்'' என நூலுள்ளும், "தலமுதலூழியிற் றானவர் தருக்கறப், புலமகளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத்தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவுமுறை யெல்லாஞ் செல்கையிற் றெரிந்து, மற்றையாழுங் கற்று முறை பிழையான்'' எனக் கதையினுள்ளுங் கூறினாராகலாற் பேரியாழ் முதலிய எனவும் இறந்தனவெனக் கொள்க.

இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்டமாணாக்கர் பன்னிருவருட் சிகண்டியென்னும் அருந்தவமுனி, இடைச்சங் கத்து அநாகுலனென்னும் தெய்வப் பாண்டியன், தேரொடு விசும்புசெல்வோன் திலோத்தமையென்னுந் தெய்வமகளைக்கண்டு தேரிற் கூடினவிடத்துச்சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையின் சாரகுமாரனென அப்பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச்செய்த இசை நுணுக்கமும், பராசைவமுனி வரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார்செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார்செய்தபரதசேனாபதீயமும், கடைச்சங்க மிரீஇயபாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்தமுதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகியபுகழ்க் கூத்தியன்றமதிவாணர் நாடகத்தமிழ்நூலுமெனவைந்தும் இந்நா டகக்காப்பியக்கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடையொப்பு மைகொண்டு முடித்தலைக்கருதிற்று இவ்வுரையெனக்கொள்க.

## பரிமேலழகருடைய வசனநடை

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில்லின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோராலெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொ

ருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம் வழக்குத் தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார். அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன்கோடன் முதற் பதினெட்டுப்பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினாரை அந்நெறிநிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக வொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறிநிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற்சிறப்பிலவாகலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வுமிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றையொழித்து, ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகைநிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்குமொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகைநிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோ

டுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட்கூறுவான்றொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கியமினிதுமுடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக்கூறுகின்றார்.

## கடவுள் வாழ்த்து.

அஃதாவது கவிதான்வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்டபொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளையெனவறிக: என்னை? சத்துவமுதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான், அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக்கூறினாரெனவுணர்க.

## நக்கீரருடைய வசனநடை I.

அக்காலத்துப்பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசி கடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என்தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான் என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழைபெய்தது. பெய்தபின், அரசன் இனி நாடுநாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப்பக்கமும்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத்தலைப்பட்டுக் கொணர்ந்து. பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவைபெற்றும் பெற்றிலேம்" எனச்சொல்லாசிற்ப; மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்கு கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடைய தாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று. இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்டபிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர்கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர்தெளித்துப், பூவிட்டுப், பீடத்தின் கீழ் என்று மலகிடான் 'அன்றுதெய்வத்தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ்போந்தன. போதரக், கொண்டுபோந்து நோக்கினார்க்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று காட்டப், பிராமணன் சிந்திப்பான்: அரசன் பொருளதிகாரமின்மையிற் கவல்கின்றானென்பது கேட்டுச்செல்லாநின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச்செய்தானாகும் என்று, தன் அகம் புகுதாதே கோயிற்றலைக் கடைச்சென்றுநின்று கடைகாப்பார்க்குணர்த்தக், கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன் புகுதகவென்று பிராமணனைக்கூவச், சென்று புக்குக்காட்ட, எற்றுக்கொண்டு நோக்கிப், "பொருளதிகாரம், இது நம்பெருமான் நமதிடுக்கண்கண்டு அருளிச்செய்தானாகற் பாலது" என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டுநின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டு போய்ப்பொருள் காண்மின்." என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கனமாப்பலகை எறியிருந்தாராய்வழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒரு தலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத்தரல் வேண்டுமென்று, கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது. பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக்காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச்சென்றார். அரசனும் எதிர்சென்று, "என்னை, நூலுக்குப்பொருள் கண்டீரோ?" என, "அஃது காணுமாறு எமக்கோர் காரணிகனைத்தரல்வேண்டும்." எனப் "போமின் நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவர் ஒருவர் இம்மையினின்றே." என்று அரசன் சொல்லப், போந்து கனமாப் பலகையின் எறியிருந்து' அரசனும் இது சொல்லினான் காரணிகனைப் பெறுமாறு என்னை கொலென்று சிந்திப்புழிச், சூத்திரஞ் செய்தான். ஆலவாயில் அவிர்சடைக்கடவுளன்றே! அவனையே காரணிகனைத்தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்துமென்று வரங்கிடப்ப; இடையாமத்து "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவா

ன். உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக்கீழிருந்து சூத்திரப்பொருளுரைத்தாற், கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்துவாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் தோன்றினான்." என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடி கிழாருழைச் சங்கமெல்லாஞ்சென்று, இவ்வார்த்தையெல்லாஞ்சொல்லி, ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக்கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கனமாப்பலகையேற்றிக், கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப; எல்லாரும் முறையே உரைக்கக்கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவிடத்துக்கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப்பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரைபெற்றாம் இந்நூற்கென்றார்.

II

இனிக் காமப்புணர்ச்சியென்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினான்றி வேட்கைமிகலினாற் புணர்வதென்பது. ஆயின் இவர் மேற்பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளுமென்றமையான், அவனுங் கற்கந்தும் எறிபோத்துங் கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் கருவரையும் இருநிலனும் பெருவிசும்புமனையார் ஆளிமொய்ம்பினர் அரிமான்றுப்பினர் பற்பனாருயிரவர் கூர்வேலிளையர் தற்சூழ்ச் செல்வனென்பது முடிந்தது. இவளும் உடன்பிறந்து உடன்வளர்ந்து நீர் உடனாடிச் சீர் உடன்பெருகி ஓல் உடனாட்டப்பால் உடனுண்டு பல் உடனெழுந்து சொல்லுடன் கற்றுப் பழமையும் பயிற்றியும் பண்பும் கண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பனாருயிரவர் கண்ணனுமனமுங் கவரும் ஒண்ணுதன்மகளிர்தற் சூழத்தாரகைநடுவட்தண்மதிபோலச் செல்வாளென்பது முடிந்தது.

முடியவே, தமியராய்ப்புணர்ந்தார் என்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது; என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டுவிருப்பினாற் பிரியும். என்னை பிரியுமாறெனின், ஒருவர் ஒருவரின் முன்னர்த் தழைவிழையத்தக்கன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்துமென்றும், போதுமேதக்கனகொய்துமென்றும், மயிலொடுமாறாடுதுமென்றும், குயிலொடு மாறு கூவுதுமென்றும், அருவியாடி அஞ்சுனை குடைதுமென்றும், வாசமலர்க்கொடியில் ஊசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார்கொல்லோவென்றும்இவ்வகைநினைத்துப் பிரிபவென்பது.

இவ்வகை அவளைத் தமியளாய்ப்பிரியவெனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங்குலத்தனளல்லளாகலானும் பான்மை அவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிபவென்பது. ஆயின் இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாட்பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான்பயின்ற இடந்தன் ஆயத்தினோடொக்குமாகலாவென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகும்கோங்கும்வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமுந்திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்தபொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடு முகைசிறந்துவண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்களிசைபாடத், தண்டென்றல்இடைவிராய்த்தனியவரைமுனிவுசெய்யும்பொழிலதுநடுவண் மாணிக்கச்செய்குன்றின்மேல் விசும்புதுடைத்துப் பசும்பொன்பூத்து வண்டுதுவைப்பத்தண்டேன் துளிப்பதோர் வெறியுறுநறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல்களிகூர்ந்து தன் செம்மலர்ச்சீறடிமேற்சிலம்புகிடந்துசிலம்புபுடைப்ப. அம்மலரணிக் கொம்பர்கடை கற்பதென நடந்துசென்று, நறைவிரிவேங்கைநாண் மலர் கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணிவிளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லிமண்டபத்துப்போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திகொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்து வந்திழிதரும் அருவிபொன்கொழித்து மணிவரன்றி மாலைக்கத்தொடுவெனவீழ்முந்தி அணியினருவி ஆடகப்பாறைமேல்அதிர்குரன் முழங்கின் கண்பட்ட,

வண்டுந்தேனும் யாழ்முரல,வரிக்குயில்கள் இசைபாட்த், தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறைமணித்தலத்துமிசைநீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன்கோலக்கலாவங் கொளவிரித்து முளையிளஞாயிற்று இளவெயில்எறிப்ப ஓர் இளமயில் ஆடுவதுகண்டு நின்றாள். அப்பாற் றலைமகனும் பற்பன்னூறாயிரவர் கூர்வேலிளை யாரோடு குளிர்மலைச்சாரல் வேட்டம்போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின் பின்னோடிக், காவலிளையவரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற்கானியாற்று நிற்கப்பணித்துத், தொடுகழல் அடியதிரச் சுருளிருங்குஞ்சி பொன் ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணிமேற்கொண்டு வண்டு மணமயர அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலை ஒரு கணை ஏந்தி வடிவுகொண்டகாமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புகும், அஃதியாங்ஙனமோவெனின், வடகடலிட்ட ஒருநுகம் ஒருதுளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போலவும் வெங்கதிர்க்கனலியும் தண்கதிர்மதியமுந் தங்கதிவழுவித் தலைப்பெய்தாற் போலவுந் தலைப்பெய்து ஒருவரொருவரைக்காண்டல் நிமித்தமாகத் தமியராவர்.

தமியராதலென்பது தம்முணர்வினரல்லராதல். தம்முணர்வினரல்லராதலென்பது என்னோவெனின், தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்புக்கடைப்பிடி என்பன குணம். அறிவென்பது என்னோவெனின், "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருண்மெய்ப் பொருள்காண்பதறிவு." என்றாராகலின் எப்பொருளாயினும் அப் பொருட்கண்ணின்று அம்மெய்ம்மையை உணர்வது அறிவு. நிறையென்பது என்னோவெனின், காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பென்பது ஒரு பொருளை ஆராய்ந்துணர்த லென்பது. கடைப்பிடியென்பது கொண்டபொருள்மறவாமை. இந்நான்கையுந் தலைமகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப் புனலோடு வழிப்புற்சாய்ந்தாற்போலச் சாய்ந்துகிடப்பது.

இனித் தலைமகட்கு நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாக உள தொருதன்மை. மடமென்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. அச்சமென்பது பெண்மயிற்றான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது· பயிர்ப்பென்பது பயிலாத

பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. இந்நான்மையும் புன
லோடு வழிப்புற்சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூரப்பட்டுச்
சாய்ந்து கிடக்கும்.

வேட்கையென்பது என்னோவெனின், ஒருவரொருவரை இன்
றியமையாமை. அவ்வின்றியமையாது நின்றவேட்கை எல்லா
வுணர்வினையும் நீக்கித்தானேயாய் காண்வழிக்காசுபோலவும் நீர்வழி
மிதவைபோலவும் பான்மைவழியோடி இருவரையும் புணர்விக்கும்
என்பது. ஆதலாற் றமியராய்ப்புணர்தல் தலைமையோடு மாறுகொ
ள்ளாதென்பது.

*இது காமப்புணர்ச்சி என்பது. இதனை ஓராசிரியன் உள்ளத்
தானே புணர்ந்தாரென்னும்: என்னை? மெய்யுறுபுணர்ச்சி பொரு
விறந்தாரென்பதனோடு மாறுகொள்ளும்; யாங்ஙனம் மாறுகொள்ளு
மெனின், ஏகதேசத்துப் பிறர்க்குரிய பொருளை வெளவினானைப்
பெருமை சொல்லப்படாது. அதுபோல இவனுங் கொடுப்ப அடுப்ப
எய்தற்பாலான் ஏகதேசத்து எதிர்ப்பட்டுச் சென்றெய்தி முயங்கினா
மையின்; என்னை? பிறர்க்குரிய பொருள் எளிதாகச்செய்யப்படா
மையினும் பெரியனாய்ச்சென்றது. அங்ஙனமாகில் உலகத்துப்பன்
மக்களெல்லாம் பெரியர் சீராதபொழுது பிறருடைமைகொள்ளாது
சீர்த்தபொழுது வெளவுதலால்.

இனி இவளுங் குரவரது பணியாற் சென்றுஅவனை வழிபடற்
பாலாள் ஏகதேசத்துத் தலைப்பட்டமையாற் பெருமையிலள்; என்
னை? தேர்ந்துகாணாது உள்ளம் ஓடின வழியோடுதலான். உள்
ளத்தான் வேட்கைப்படாத பொருளில்லை; அவ்வேட்கைப்பட்டவற்
றுக்கணெல்லாம் அறத்தின் வழுவாமையும் பொருளின் வழுவா
மையுந் தனக்குத்தகவும் ஆராயாது உள்ளம் ஓடினவழி ஓடுவித்தல்
தக்கதின்றென்பதனால் அது மாறு கொள்ளுமென்பது.

மற்றென்னையோ உரைக்குமாறெனின், அவர் தம்முண் மெய்
யுற்றுப் புணர்ந்திலர்; இருவர் தங்காமமுமே தம்முட் புணர்ந்தன,
என்றிங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி; இது பிற
ரொருவருணர நெடுங்காலம் புணர்தலாகாதென நீங்குநீக்கம்பிரிவு;
அப்பிரிவின்கட்சொல்லுவது மெய்யுறுபுணர்ச்சிக்குச் சொல்லுவன.

எல்லாஞ் சொல்லாமையுமாம். பாங்கற் கூட்டத்தின் கண்ணுந் தோழியிற்கூட்டத்தின் கண்ணுமெல்லாம் அதுவே. வரைந்தெய்திய ஞான்று மெய்யுறுபுணர்ச்சியுண்டாவதென்ப. அது பொருந்தா தென்று மெய்யுறுபுணர்ச்சிவேண்டுவார் சொல்லுவது; மெய்யுறு புணர்ச்சி தக்கின்றென்றாகாதே உள்ளப்புணர்ச்சி வேண்டியது, அவ்வனங்கருதிற் பிறர்க்குரிய பொருண்மேல் உள்ளத்தை ஓடவிடு தல் தக்கின்றென்று நீட்க அமையாதோவென்பது. அல்லது உம், உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றாராயிற்று. அ தன்கண் இருபுடைகருதி யாகாதே; ஆகவே, இவட்குக் கற்பழியும் பிறரொருவர் வழிபட; இனி உள்ளஞ்சென்றபொழுதே அமைந்து இரண்டாவதில்லையென்றுகருதினானேயெனினும்மெய்யுறவேஃகுற் றமென்றோவென்பது. அல்லதூஉம் மெய்யும் மொழியுமென்பன உள்ளத்தின் வழியவன்றே? அஃதிறந்தபின்னை இறவாது நின்ற தென்றோ என்பது. அல்லதூஉம், பார்ப்பான் பாதகமாயிற்றொ ன்று நினைக்குமாயிற் பிராயச்சித்தியத்திற்கு உரியனும்; அதனாற் செய்கையும் நினைப்புமொக்கும் என்பது. அல்லதூஉம், மெய்யு றுவதாகாதென்றுந் தெரிந்துணர்ச்சியுண்டாயிற் றமியனென்பத னொடுமாறுகொள்ளுமென்பது.

அல்லதூஉங், கந்தருவர் உள்ளத்தாற் புணர்ந்தாராயின் இவ ரும். உள்ளத்தாற் புணர்பவென்பது; என்னை? கந்தருவ வழக் கத்தோடொக்குமென்றமையினென்பது. அல்லதூஉம் தெரிந்து ணர்வுண்டாமேயெனின் அன்பினன் நிறைந்தாரென்பது அமை யாது. என்னை? நிறைந்திருந்தோர் கொள்கலம் பிறிதொன் றிற்கு இடங்கொடாததுபோலவென்பது. இவர் உத்தமராகலான் உள்ளத்தானே புணரப் போகம் முடியுமெனிற், பின்னையும் எஞ் ஞான்றும் மெய்யுறவு வகைகூடாதாம். புத்திரலாபத்திற்கு மெய் யுறுபவேயெனிற், கருமப்பொருட்டன்றி வேட்கையில்லை என்ப தனால் உள்ளப்புணர்ச்சி உரையன்று, மெய்யுறுபுணர்ச்சி வேண்டு மென்பது.

இனி ஒருசாரார் உரைக்குமாறு: மெய்யுறுபுணர்ச்சி தக்கதும் இன்சொல்லுங் கூற்றமின்றிப் பசுப்போலப் புணர்ந்தாரென்ப தாகாது. சொற்படுகோன் முறைமைபான் நிகழ்ந்து புணர்தல் தக

வுடைத்து. அவையாவையோவெனின், காட்சி ஐயந்தெளிதல் தேறலென இவை.

அவற்றுட் காட்சியென்பது இருவருந்தம்முட் கண்ணுறுவது. அதற்குச் செய்யுள்:—

பூமருகண்ணிணைவண்டார்ப்புணர்மென்முலையரும்பாத்
தேமருசெவ்வாய்தளிராச்செருச்சென்னலத்தைவென்ற
மாமருதானையெங்கோன்வையைவார்பொழிலேர்கலந்த
காமருபூங்கொடிகண்டேகளித்தவெங்கண்ணிணையே.

ஐயமென்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது. எங்ஙனமோ வெனின், வரையாமகள் கொல்லோ வானரமகள் கொல்லோ நீரா மகள் கொல்லோ இத்துணை மேதகவுடையாள்; அன்றி மக்களுள் ளாள் கொல்லோ என்று ஐயப்படுவது. அதற்குச் செய்யுள்:—

உரையுறைதீந்தமிழ் வேந்தனுசிதன்றென்னாட்டொழிசேர்
விரையுறைபூம்பொழின் மேலுறைதெய்வங்கொலன்றிவிண்
வரையுறைதெய்வங்கொல்வானுறைதெய்வங்கொனீர்மணந்த
திரையுறைதெய்வங் கொலையந்தருமித் திருநுதலே.

என இங்ஙனம் ஐயப்படுவது. இவளும் இவனை ஐயப்படும். கடம்பமர் கடவுள் கொல்லோ இயக்கன் கொல்லோஅன்றி மக்க ளுள்ளான் கொல்லோவென்று இங்ஙனம் ஐயப்படும்.

இவ்வகை நினைத்தபின்னைத் தெளிவு வருமாறு: ஆடைமா சுண்டலானுங் கால்நிலந் தோய்தலானுங் கண் இமைத்தலானுஞ் சாந்து புலர்தலானுமென்று இங்ஙனம் தெரியும் தெரிந்தபின்னைத் துணியுமென்பது. அதற்குச் செய்யுள்:—

வடியாணைப் பராங்குசன் பாழிப்பகை தணித்த
தூவடிவேன்மன்னன் கன்னித்துறைச்சுரும்பார்குவளைப்
பூவடிவாளொடுங் கண்ணுமிமைத்தன பூமிதன்மேற்
சேவடிதோய்வகண்டேன் றெய்வமல்லளிச் சேயிழையே.

இவளும் இவனைஇவ்வாறே தெரிந்து மக்களுள்ளானென்பது தெரியும். தெரிந்தபின்னை இருவர்க்கும் வேட்கை மிகத்தம்மிற் கூடுவது. இவ்வாறு புணரப் பெரிதும் வனப்புடைத்தாய்க் காட்டு மென்பது, இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், இதுகைக்கிளையிலக்கணம். தெய்வங்கொல்லோ மகடூஉக்கொல்லோ எனஐயமுற்ற ஐயநிலையுந் தெய்வவிலக்கணந் தீண்டாவாகலின் ஐயந்தெரிந்து மகடூஉவாதல் துணிவர உணர்ந்த அத்துணிவு நிலை மையுமெனக் கைக்கிளையிலக்கணமாகச் சொல்லப்பட்டமையின். ஈங்கத்திணையுள்ள துரைப்பது திணைமயக்கமாகலின் மேலதே பொருள். காமப்புணர்ச்சி யென்றமையிற் காமத்தின் வேறு புணர்ச்சியாகல் வேண்டும்பிற, வாளாற்கொண்ட கொடியென்றது போலவெனின்; அற்றன்று, பொன்னாற்செய்த மஞ்சிகை மண் ணாற்செய்த குடமென்பதுபோல வேறன்றி நிற்புழிக்கொள்க. இஃது இயற்கைப் புணர்ச்சி யெனப்படும், புலவராற் கூறப்பட்ட இயல்பினாற் புணர்ந்தாராகலானுங் கந்தருவ வழக்கத்தோடொத்த இயல்பினாற் புணர்ந்தாரர்கலானு மென்பது.

இனித் தெய்வப் புணர்ச்சி யெனவும்படும், இருவருந் தெய் வத்தன்மையாற் புணர்தலினென்பது. அல்லதூம், முயற்சியும் உளப்பாடுமின்றி ஒருவற்கொருமங்கை கூடினவிடத்துத் தெய்வத் தினான் ஆயிற்றென்பது. அதுபோல இவர்க்கு முயற்சியும் உளப் பாடுமின்றிப் புணர்ந்தமையானுந் தெய்வப்புணர்ச்சி யெனப்பட் டது. இதுவே முன்னுறு புணர்ச்சி யெனப்படும்; இவள்நலம் இவ னானே முன்னுற எய்தப்பட்டமையானும் இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானு மென்பது.

இனித் தெய்வப் புணர்ச்சி முன்னுறு புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சியென அவற்றுளொன்று சொல்லாது காமப்புணர்ச்சி யென்றே கூறியகாரண மென்னையெனின், இவற்றுளொன்றே சொல்லினு மொக்கும்; அல்லாதவையெல்லாம் அன்பினானே நிகழுமாகலிற் காமப்புணர்ச்சி யென்றாரென்பது. பலகாரணத்தி னாயபொருளை ஒரு காரணத்தினாற் சொல்லுவது சிறப்புடைமை நோக்கி; என்னை? நிலனும் நீருங் காலமும் வித்துமென இவற்றி னது கூட்டத்தினாய முளையை நென்முளையென்ப. நென்முளைக்கு

நெற்சிறப்புடைக்காரணம், நிலனும் நீரும் முதலாகவுடையன பொதுக்காரணம், அவை பயற்றுமுளை முதலாயுடையன வற்றிற்குங் காரணமாகலான், அதுபோல விளங்குந் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுககாரணமுங், காமஞ்சிறப்புக்காரணமுமாகலாற் காமப்புணர்ச்சி யெனப்பட்டது.

இனி இருவயினொத்தல் என்பது என் சொல்லியவாறோ வெனின், புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமென்றவாறு. ஆயின் உலகினோடொவ்வாது பிற உலகினிற் புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்த பின்றைத் தவிர்தலானும் உண்ணாத முன்னின்ற வேட்கை உண்ட பின்றைத் தவிர்தலானு மென்பது என்றார்க்கு: அறியாது சொல்லுதி, இஃது உலகத்துள்ள பான்மை முன்னே கேட்டாயன்றே, இல்லதினியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதென்பது. நூல் எடுத்துக் கோடற்கண்ணே சொல்லிப் போந்து இனியொருகாலும் உலகினோடொவ்வாதெனில் வேண்டுமோ வென்பது. ஆயின் உலகினுள் அன்பன்றாகப் புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமெனிற் புணர்ச்சியினாய பயமில்லையாம் பிற: உண்ணாதமுன்னின்ற வேட்கை உண்டபின்றையும் அப்பெற்றியே நிற்குமாயின் உண்டதனானாய பயமில்லை, அதுபோல என்றார்க்கு: அதுவன்று; புணராதமுன்னின்ற வேட்கை புணர்ச்சியுட் குறைபடும். அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கட் தம்முட்பெற்ற செய்குணங்களாய அன்பு நிறைவிக்கும்; பின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறைபடும், அதற்கிடையின்றியே குணத்தினாய அன்பு நிறைவிக்கும்; நிறைவித்தபின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறையாது எஞ்ஞான்றும் ஒருபெற்றியேயாய் நிற்குமென்பது.

இனி அவ்வகை புணராதமுன்னும் புணர்ந்தபின்னும் ஒத்த அன்பினனாய் நின்றதலைமகன் பிரியுமென்றுமோ? பிரியானென்றுமோ? பிரியுமென்றுமே யெனின், அன்பிலனாயினான்; என்னை பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப் பிரியானேயெனினும், அன்பிலனாயினானும்; என்னை? பிரியாதிருப்ப இவ்வொழுகலாறு பிறர்க்குப் புலனாமாக இவள் இறந்துபடும், அவள் இறந்து

பாட்டிற் பிரியானாயினும். ஆகவே மூன்றாவது செய்யப்படுவது இல்லையாமேலோவெனிற் பிரியுமென்பது. ஆயின் அன்பின்மை தங்காதோ வெனிற் தங்காது. பிரிவும் அன்பினானே நிகழுமாறு சொல்லுதும்.

## ஆறுமுகநாவலருடைய வசனநடை.

பெரியபுராணத்திலே சொல்லப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்கள் திருவவதாரஞ் செய்தற்கு முன்னரே அவர்களுடைய சரித்திரம் பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அமிசத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனம் சொல்லியருளினவர், எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவனுக்கிரகமுமுடைய பரமபதியாகிய சிவபெருமானே. அதனைக்கேட்டவர் அவருடைய அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பார்வதிதேவியாரே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராய்த் திருவவதாரஞ்செய்து மற்ற நாயன்மாரைத் துதித்துத் திருத்தொண்டத்தொகை பாடியருளினவர், சிவபெருமானுடைய பிரதிவிம்பமாய்த் தோன்றினவரும், பிரமவிட்டுணுக்களாலும் அணுகலாற்றாத ஆலாகலவிஷத்தைத் தமது உள்ளங்கையிற் கொண்டவருமாகிய ஆலாலசுந்தரரே. அவருக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்பொருட்டு அடியெடுத்துக் கொடுத்தருளினவர் வன்மீககாதராகிய சிவபெருமானே.

அச்சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானால் அனுப்பியருளப்பட்ட வெள்ளையானைமேற் கொண்டு பிரம விட்டுணுக்கண் முதலாயினோர் சேவிப்பத் திருக்கைலாசமலையை அடையும்பொழுது, அவரைத் தூரத்தே வணங்கி அவருடைய சரித்திரத்தையும் அவருடைய திருத்தொண்டத்தொகையிலே துதிக்கப்பட்ட மற்றை நாயன்மார்களுடைய சரித்திரத்தையும் இருடிகளுக்குச் சொல்லியருளினவர், சிவபெருமான் சிதம்பரத்திலே கனகசபையிலே எல்லாருக்கும் ஆநந்த நிருத்தந் தரிசிப்பித்தற்கு மூலகாரணராயுள்ள வியாக்கிரமபாத மகாமுனிவருடைய திருக்குமாரரும், சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்

கடவையுண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷைசெய்து சிவபூசை யெழுந்தருளப்பண்ணிக் கொடுத்த சைவாசாரியருமாகிய உபமன்னிய மகாமுனிவரே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைத் திருவந்தாதியாகப் பாடும்பொருட்டு நம்பியாண்டார் நம்பிக்குத் திருத்தொண்டத்தொகையின் பொருளை அருளிச்செய்தவர் திருநாரையூரில் எழுந்தருளி யிருக்கும் விநாயகக்கடவுளே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைப் பெரிய புராணமாகச் செய்யும்பொருட்டு, தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், எழுநூறு திருமடத்து முதலிகளும், மாகேசுரர் நாற்பத்தெண்ணாயிரவரும், திருக்கோயிற் றிருத்தொண்டுசெய்யும் திருவடியார் எழாயிரத்துத்தொளாயிரவருங் கேட்கும்படி, கனகசபையிலே சேக்கிழார் நாயனாருக்கு அடியெடுத்துக் கொடுத்தருளினவர் சபாநாயகரே. அப்பெரியபுராணத்தைக் கேட்கும்பொருட்டு அநபாய சோழமகாராசாவுக்கு எல்லாருங்கேட்க ஆஞ்ஞாபித்தருளினவரும் அச்சபாநாயகரே.

பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனார்மீது புராணஞ் செயதருளினவரும், பெரியபுராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராணசாரஞ் செய்தருளினவரும், தில்லைவாழந்தணர்களுள் ஒருவராயும், சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்—குடியாற் கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசைப்—பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து—முத்திகொடுக்கமுறை" என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பானுக்கு உடனேமுத்திகொடுத்தருளினவராயும், அப்பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அதனுண்மையை வெளிப்படுத்தி அவர்களையத்தை ஒழித்தற்பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தருளினவராயும் உள்ள உமாபதிசிவாசாரியரே.

இவைகளெல்லாம் இப்படியிருக்க. இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அவ்வறுபத்துமூன்று நாயன்மாரை வழிபடக்கூசுகிறார்கள்; அவர்களுடைய உற்சவங்களிலே வேதபாரா

யணஞ் செய்யாது மறுக்கின்றார்கள்; அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவு அதிபாதகம்! அநபாய சோழமகாராசா பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாரை யானைமீதேற்றித் தாமே வெண்சாமரம்வீசி நகர்வலஞ் செய்வித்தபொழுது, தில்லைவாழந்தணர்கள் வேதபாராயணஞ் செய்துகொண்டு வந்தார்கள் என்று உமாபதிசிவாசாரியர் சேக்கிழார் புராணத்திற் கூறியிருக்கின்றாரே. அங்ஙனமாகவும், அப்பெரிய புராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழிபாவங்கட்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோரறியாமை!

மங்கலியத்தைத் தரித்துக்கொண்டு தங்கள் நாயகருக்குத் துரோகஞ்செய்து இல்லொழுக்கிறந்த பெண்டிர்கள்போல, விபூதி ருத்திராட்சங்களைத் தரித்துக்கொண்டு அச் சின்னங்களுக்குரிய சிவபெருமானோடு பசுக்களைச் சமமெனக்கூறியும் சிவனாக்ஞாகிய சிவாகமங்களை நிந்தித்தும் அச்சிவபெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக் கூசுவார்கள்! ஐயையோ! இச்சிவத்துரோகிகளை நம்முடைய சைவசமயிகள் வணங்குதலும், இவர்களிடத்தே புசித்தலும், இவர்களை விவாகம் சிராத்த முதலிய கருமங்களிலே தானபாத்திரமாகக்கொண்டு, தாம் வருந்தித் தேடிய பொருள்களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலும் எவ்வளவு அறியாமை!

ஓ சைவசமயிகளே சைவசமயிகளே, உங்களெதிரே அறுபத்துமூன்று நாயன்மார்களை நிந்திக்கும் ஸ்மார்த்தர்களைக் காணுந்தோறும் இந்த ஐந்து வினாக்களைக் கேட்டு, அவர்களைத் தலைகுனிவித்து அவர்கள் வாயை அடக்குங்கள். அவ்வினாக்கள் இவை.

க. ஓ ஸ்மார்த்தர்களே, உங்கள் மத தாபகராகிய ஆசாரியர் சங்கராசாரியரோ அன்றோ?

உ. சௌந்தரிய லகரியும் சிவானந்த லகரியும் சிவபுசங்கமும் உங்கள் சங்கராசாரியர் செய்த கிரந்தங்களோ அன்றோ?

௩. அறுபத்துமூன்று நாயன்மார்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரைச் சௌந்தரிய லகரியினும், கண்ணப்பநாயனாரை சிவானந்தலகரியினும், இயற்பகை நாயனாரையுஞ் சிறுத்தொண்டநாயனாரையும் சண்டேசுர நாயனாரையும் சிவபுசங்கத்தினும் உங்கள சங்கராசாரியர் துதித்திருக்கின்றாரோ அன்றோ?

௪. உங்கள் குருவாகிய சங்கராசாரியராலே துதிக்கப்பட்ட நாயன்மார்களை நீங்கள் நிந்தித்தலினாலே, அச்சங்கராசாரியரிடத்திலே அறியாமையையேற்றிக் குருநிந்தகர்களானீர்களோ அன்றோ?

௫ அறுபத்துமூன்று நாயன்மார்களை வணங்கும் பிராமணர்கள் பதிதர்களாவார்களெனச் சொல்லும் நீங்கள் அவர்களைத் துதிக்கும் சங்கராசாரியரைப் பதிதரெனச் சொல்லாது சொல்லி, அவரை நீங்கள் வணங்குதலாற் பதிதரிற் பதிதர்களாயினீர்களோ அன்றோ?

சைவசமயிகளே, நீங்கள் பெறுஞ் சமயதீக்ஷை முதலிய தீக்ஷைகளையும் நீங்கள் அநுட்டிக்கும் சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கிரியைகளையும் உங்களுள் இறந்தவர்கள் பொருட்டுச் செய்யப்படும் அந்தியேட்டி முதலிய கிரியைகளையும் நீங்கள் சேவிக்குந் தேவாலயங்களிற் கிரியைகளாகிய கர்ஷணாதிப் பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி யுற்சவாந்தம்உற்சவாதிப் பிராயச்சித்தாந்தம்என்னும் பரார்த்தக்கிரியைகளையும் விதித்த நூல்கள் சிவாகமங்களே. அச்சிவாகமங்களினுயர்ச்சியும் அவைகளில் விதிக்கப்பட்ட சிவதீக்ஷை சைவானுட்டான முதலியவைகளின் உயர்ச்சியும் ஸ்மார்த்தர்களாலே உண்மை நூல்களெனக் கொள்ளப்படும் புராண முதலிய நூல்களிலே பலவிடங்களினும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வுண்மையை அறியாமையினாலும், அறிந்தவழியும் தங்களுக்கு முனிவர்களாலே கிடைத்த சாபத்தினாலும், அச்சிவாகமங்களையும் சைவசமய தாபகர்களாய்ச் சிவமாந்தன்மை பெறும் பேறு பெற்ற உண்மைநாயன்மார்களையும் அவர்கள் உலகமுய்யும் பொருட்டு அருளிச்செய்ததமிழ்வேதமுதலியவற்றையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர்களை, அச்சிவாகமங்கள் உண்மை நூல்களெனக்கொண்டு

அவற்றின்வழி ஒழுகப்புகுந்த நீங்கள், யாவர்களாகக் கொண்டு ஒழுகல் வேண்டும். இதனை நன்றாக ஆராய்ந்து அறிந்துகொள்ளுங்கள்.

சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி யுத்தி அனுபவமூன்றுக்கும் முழுமையுட விரோதம், உலகத்துச் சாதி பேதம்போலச் சற்சமயமாகிய சைவ சமயத்தினும் முதற்சாதி இரண்டாஞ்சாதி மூன்றாஞ்சாதி நாலாஞ் சாதி நீசசாதியெனச் சமயநடைபற்றி ஐந்துசாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்குபாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும்பேறுபெற்ற சீவன்முத்தர் சிவமே யாவர். இனிச் சிவஞானிகள் முதற்சாதி; சிவயோகிகள் இரண்டாஞ்சாதி; சிவக்கிரியாவான்கள்மூன்றாஞ்சாதி சிவசரியாவான்கள் நாலாஞ்சாதி; இந்நெறிகளில் வாராதவர்களும், இவர்களையும் இவர்கள் சாத்திர முதலியவற்றையும் நிந்திப்பவர்களும், இந்நெறிகளிலே முறைபிறழ்ந்து நடக்கின்றவர்களும், இந்த நடைகளை விட்ட பதிதர்களும், சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி. சிவசரியை கிரியை முதலியவைகளினாலே பொருள்தேடி உடம்பை வளர்ப்பவர்களும், அப்பொருளைப் பாசத்தாருக்குக கொடுத்து இன்புறுவோர்களும், கோயிலதிகாரிகளாய்த் தேவத்திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப்பொருட்டு ஆசாரியாபிஷேகம் முதலியன செய்துடையோர்களும், விருத்திப்பொருட்டுச் சிவவேடந்தரித்தவர்களும், விருத்திப்பொருட்டுத் துறவறம்பூண்டோர்களும், சிவஞான நூல்களைச் சொல்லிப் பொருள்வாங்கி வயிறுவளர்ப்பவர்களும் பிறரும் பதிதர்களுள் அடங்குவார்கள்.

இங்கே சொல்லிய முறையன்றி. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருலிங்க சங்கமமென்னும் மூன்றினிடத்தும் ஆசையும் பணியும் வழிபாடும் கொடையும் அடிமைத்திறமும் உரிமையுமுடையவர்கள் எந்தக் கருமஞ் செய்தாலும் முதற்சாதியெனக் கொள்ளப்படுவார்கள். அத்துவசுத்தி செய்யப்பட்டுச் சிவஞான நூல்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களை ஓதி அவைகளின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த உயிரிலே சிவா

சனமூர்த்தி முதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு, தேகாதிப்பிரபஞ்சத்தை விடுத்துச் சிவசம்பந்தமுற்றவரே சங்கமம். சிவஞானிகள் பாவனையுற்றதே சிவலிங்கம்.

யாவரும் தமக்கு மேன்மேற் சமயிகளைத் தரிசித்து வணங்கிப் பணிசெய்தலும், கீழ்க் கீழ்ச் சமயிகளை நோக்கி இவர்களிவ்வளவில் வந்தார்களே என்று இரங்கி விதித்தன சொல்லி விலக்கியன ஒழிவித்தலுமே நீதி. இப்படியன்றி ஒருவருக்கொருவர் கலாம் விளைத்தல் நீதிகேடு, தத்துவாதீத சொரூபசிவப்பேறுடையவரை ஈசசதாசிவசாந்த பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும். இவ்விருதிறத்தாரையும் கந்தசண்டகணேச பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும். இம்மூன்று திறத்தாரையும் வசுருத்திராதித்த பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும். இந்நான்கு திறத்தாரையும் இவரிற்றாழ்ந்த பிராகிருதர் வணங்கி வழிபடல் வேண்டும். மேலோர்களாயுள்ள ஈச சதாசிவசாந்த பதப்பேறுடையவர்களும் கந்தசண்டகணேச பதப்பேறுடையவர்களுமாகிய சைவர்கள் கீழோர்களாகிய வசுருத்திராதித்த பதப்பேறுடையவர்களாகிய ஸ்மார்த்தர்களை வணங்குதலும் அவர்களைச் சிரார்த்த முதலியவற்றில் வரித்துப் பூசித்தலும் நீதியா! இதைச் சிந்தியுங்கள்.

சைவசமயிகளே, நீங்கள் இவவுண்மைகளெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து, சிவபெருமானிடத்தும் உண்மை நாயன்மாரிடத்தும் சிவாகம விதிப்படி பத்தி செய்தொழுகக் கடவீர்கள். இவ்வுண்மை நிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தக்கடவீர்கள். அது கூடாதாயின், அவர்கள் செய்யும் சிவாகம நிந்தை குருநிந்தை சங்கமநிந்தை முதலியவற்றைக் கேட்டு எரிவாய் நரகத்துக்கு இரையாகாவண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்துவிடக் கடவீர்கள். இப்படிச் செய்யாது மதிமயங்கி அவ்வதிபாதகர்களைப் பெரியோர்களெனக்கொண்டுவழிபட்டொழுகுவது பாவம்பாவம்.!

# அட்டவணை.


| விஷயம். | பக். |
|---|---|
| அகத்தியம் | 5 |
| அகஸ்தியர் சூத்திரம் | 19 |
| அகத்தியத்துக்கு முதனூல் | 5 |
| அகத்தியர் வரவு | 4 |
| அடியார்க்கு நல்லார் | 138 |
| அடியார்க்குநல்லாருடைய வசனநடை | 162 |
| அதிவீரராமபாண்டியர் | 122 |
| அபிராமிப்பட்டர் | 151 |
| அரசகேசரி | 146 |
| அரசு | 3 |
| ஆழ்வார்கள் | 100 |
| ஆறுமுகநாவலர் | 153 |
| ஆறுமுகநாவலருடைய வசனநடை | 176 |
| இசைநுணுக்கம் | 48 |
| இடைச்சங்கம் | 25 |
| இரட்டையர் | 120 |
| இறையனாரகப்பொருள் | 108 |
| எட்டுத்தொகை | 79 |
| எழுத்து | 4 |
| ஒட்டக்கூத்தர் | 117 |
| ஒப்பிலாமணிப்புலவர் | 151 |
| ஒழிவிலொடுக்கம் | 151 |
| ஔவையார் | 103 |
| கடல்கொண்ட நாடுகள் | 1 |
| கடைச்சங்கம் | 27 |
| கடைச்சங்கத்துநூல்கள் | 70 |
| கந்தபுராணம் | 115 |
| கம்பராமாயணம் | 110 |
| கல்லாடம் | 82 |
| களரியாவிரை | 6, 46 |
| காக்கைபாடினியார் | 24 |
| காய்சினவழுதி | 5 |
| காவியவிலக்கியம் | 84 |
| காளமேககவி | 118 |
| குண்டலகேசி | 90 |
| குமரகுருபரசுவாமிகள் | 144 |
| குருகு | 49 |
| சம்பந்தர் தேவாரம் | 49 |
| சரவணப்பெருமாளையர் | 155 |
| சித்தாந்தசாத்திரங்கள் | 129 |
| சிந்தாமணி | 84 |
| சிலப்பதிகாரம் | 88 |
| சிவஞானமுனிவர் | 147 |
| சிவஞானபோதம் | 131 |
| சிவஞானசித்தி | 131 |
| சிவப்பிரகாசசுவாமிகள் | 150 |
| சிவாக்கிரயோகி | 150 |
| சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் | 97 |
| சூளாமணி | 91 |
| சேக்கிழார் | 131 |
| சேனாவரையர் | 136 |
| ஞானப்பிரகாசசுவாமிகள் | 146 |
| தமிழ் இலக்கங்கள் | 10 |
| தமிழ் எண் | 9 |
| தமிழ் என்னுஞ்சொல் | 20 |
| தமிழ்ச்சொற்பகுதிகள் | 15 |
| தமிழ்நாட்டார் அறிந்த தேயங்கள் | 30 |
| தமிழ்நாட்டுப்பகுதி | 2 |
| தமிழ்நிலத்துமொழி | 2 |
| தமிழர் ஆரியரே | 41 |
| தலைச்சங்கத்துப்புலவர் | 6 |
| தாயுமானவர் | 148 |
| திவாகரம் | 83 |

| விஷயம். | பக். | விஷயம். | பக். |
|---|---|---|---|
| திருவள்ளுவரும்திருக்குறளும் | 91 | பூதபுராணம் | 48 |
| திருமங்கை யாழ்வார் | 102 | பூர்வசமயநிலை | 32 |
| திருமூலநாயனாரும் திருமந்திரமும் | 102 | பூர்வஎல்லை | 1 |
| திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் | 60 | பூர்வவிவாகவழக்கம் | 16 |
| தெய்வவழிபாடு | 4 | பெருங்கலித்தொகை | 48 |
| தேசவிருத்தி | 7 | பேராசிரியர் | 138 |
| தொல்காப்பியம் | 35 | பொய்யாமொழிப்புலவர் | 124 |
| தொல்காப்பியர் | 23 | மக்கள்தொழில்வாழ்க்கை | 3 |
| நக்கீரர் | 110 | மகேசுவர சூத்திரம் | 21 |
| நக்கீரருடைய வசனநடை | 166 | மணிமேகலை | 89 |
| நச்சினார்க்கினியர் | 137 | மாபுராணம் | 47 |
| நச்சினார்க்கினியருடைய வசனநடை | 159 | மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம் | 64 |
| நாலடியார் | 197 | மீனாட்சிசுந்தரம்பிள்ளை | 155 |
| நிலப்பகுதி | 3 | முதற்சங்கம் | 5 |
| பத்துப்பாட்டு | 70 | முதுகுருகு | 6,47 |
| பதினெண்கீழ்க்கணக்கு | 84 | முதுநாரை | 6,46 |
| பரஞ்சோதிமுனிவர் | 140 | வடசொற்கள் | 8 |
| பரிபாடல் | 6, 46 | வரகுணராமபாண்டியர் | 124 |
| பரிமேலழகர் | 133 | வரதுங்கராமபாண்டியர் | 123 |
| பரிமேலழகருடைய வசனநடை | 164 | வளையாபதி | 91 |
| பரியாயப்பெயர்கள் | 11 | வியாழமாலை | 49 |
| பவணந்தி | 142 | வில்லிபுத்தூராழ்வார் | 127 |
| பிங்கலமுனிவர் | 83 | வீரகவிராயர் | 141 |
| புகழேந்தி | 117 | வீரசோழியம் | 143 |
| புறநானூறு | 82 | வீரைமண்டலவர் | 145 |
| | | வெண்டாளி | 49 |
| | | வேளிர்வரவு | 4 |
| | | வைத்தியநாதநாவலர் | 147 |

# சுத்திபத்திரம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 7 | அமச்சியல் | அமைச்சியல் |
| 28 | 3 | தொழாயிர | தொளாயிர |
| 32 | 10 | மருத | மருதம் |
| 36 | 18 | நாநூற் | நானூற் |
| 50 | 20 | தொழாயிர | தொளாயி |
| 54 | 25 | மூன்னூறு | மூந்நூறு |
| 66 | 12 | விழவெறிந்த | விளவெறிந்த |
| 74 | 16 | ஆசியனடை | ஆசிரியநடை |
| 75 | 26 | முன்னீர் | முந்நீர் |
| 77 | 20 | பிரகதத்தன் | பிரதத்தன் |
| 86 | 22 | விசையை | விசயை |
| 90 | 27 | மையிலாப்பூர் | மயிலாப்பூர் |
| 93 | 10 | திசை | த்சை |
| 98 | 22 | கையிலாச | கயிலாச |
| 108 | 12 | நாநூறு | நானூறு |
| 120 | 9 | உதைய | உதய |
| ,, | 20 | களித்து | கழித்து |
| 125 | 15 | உமையாழு | உமையாளு |
| 126 | 17 | மாழிகை | மாளிகை |
| 127 | 22 | திக்குவிஷயம் | திக்குவிசயம் |
| 130 | 28 | சமைய | சமய |
| 131 | 7 | பாஷ்ய | பாஷ்ய |
| 139 | 11 | ஒருதலை | ஒருதலை |
| 145 | 18 | மடாலைய | மடாலய |
| 149 | 4 | கவரு | கவரு |
| 149 | 14 | யெளில் | யெனில் |
| 160 | 26 | கையாருளை | கையாருழை |
| 151 | 30 | துவாரவதி | த்வாராவதி |
| 160 | 19 | தவ்வாகார | தலவகார |
| ,, | 28 | மசத்தி | மகத்தி |
| 161 | 24 | வளக் | வளக |
| ,, | | இறையவா | இறையவர் |
| ,, | 2 | பாராசைவ | பாரசைவ |
| 165 | | ஒரு | ஒரு |
| 167 | 12 | எற்று | ஏற்று |
| ,, | | எற்று | எற்று |
| 168 | 4 | றிகழாது | றிகழாது |
| 169 | 15 | மருதனுள் | மருதனில் |
| 170 | 32 | பெணமயி | பெண்மையி |
| 173 | 14 | தென்னாட்டொழி | தென்னாட்டொளி |
| ,, | 25 | வடி | பாவடி |
| 174 | 19 | அல்லதும் | அல்லதூஉம் |
| 176 | | கையிலா | கைலாச |
| 178 | | அறி | அறு |